இலங்கை

புதுமை இலக்கியம்

சிறப்பு மலர்

1962

எவரடி மினிமக்ஸ்

ரேடியோ பட்டரிகளையே

உபயோகியுங்கள்

இன்றே வாங்குங்கள்!

↓

மாஸ்கோ பதிப்பகத்தின்
தமிழ் நூல்கள்

		பக்கம்	ரூ. ச.
1.	சோவியத் இன மொழிச் சிறுகதைகள்	(413)	1-75
2.	வெற்றியாளர்கள் — நாவல்	(357)	1-50
௩.	விடிவெள்ளி ,,	(215)	1-0
4.	துப்பறியும் அதிகாரியின் குறிப்புகள்	(314)	1-50
5.	அவன் விதி	(102)	-50
6.	கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை — மார்க்ஸ் — ஏங்கல்ஸ்	(153)	-60
7.	சோவியத் யூனியனில் சுகாதாரப் பாதுகாப்பு	(194)	-50
8.	சோவியத் யூனியனது அரசியல் திட்டம்	(128)	-35
9.	ஆசியாவும் ஆபிரிக்காவும்		-50

9 புத்தகங்களடங்கிய 'செட்டின்' விலை ரூபா 7/-

தபாற் செலவு இனம்.

ரூபா 7/- போஸ்டல் ஓடர் அல்லது மணியோடர் அனுப்பலாம்

கிடைக்குமிடம்:

மக்கள் பிரசுராலயம்

249, 1-ம் டிவிஷன் மருதானை, கொழும்பு-10.

அல்லது

மக்கள் பிரசுராலய புத்தகசாலை

124, குமாரன் ரத்தினம் வீதி, கொழும்பு-2.

இராஜேஸ்வரி பிராமணாள் ஹோட்டல்

நியூஸ் ஏஜெண்டும், புத்தக வியாபாரிகளும்

69, நொரிஸ் ரோட், கொழும்பு-11.

பூபாலசிங்கம் புத்தகசாலை

கிரான் பஸார், யாழ்ப்பாணம்.

எந்த வைபவமாக இருந்தாலும்

மலிபன் பிஸ்கட்டுகளையே

கேட்டு வாங்குங்கள்

விட்டமின் சத்து நிறைந்த உயர்ந்த பொருட்களும்
சுத்தமான தாவர நெய்யும் சேர்த்து சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்டவை

மறவாதீர்கள்! **மறவாதீர்கள்!**

அறிவே நிறைவு…………………
ரசனைக்காக வாசியுங்கள்!
அறிவை அடையுங்கள்!

"ஒரே கல்லில் இரண்டு பட்சிகள்"
என்ற பழமொழியை இது நிரூபிக்கிறது.

இந்த அருமையான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்
எங்களிடம் வாருங்கள் — உங்களுக்குத் தேவையான மிகச் சிறந்த நூல்களை
நீங்கள் தெரிந்தெடுக்க உங்களுக்கு உதவ நாங்கள் எப்பொழுதும்
தயாராக இருக்கின்றோம்

M. D. குணசேன அன் கோ. லிமிட்டட்.,
கொழும்பு — காலி — கண்டி — நீர்கொழும்பு.

கடந்த அரை நூற்றுண்டுக்கு மேலாக மிக உயர்ந்த தரமும் பெறுமதியுமுள்ள லீவர் உற்பத்திப் பொருட்கள் இலங்கையிலுள்ள குடும்பப் பெண்களுக்குக் கிடைத்து வந்துள்ளன. சகல பொருட் களினதும் உற்பத்தி மிகவும் கடினமான பரீட்சைக்குள்ளாகுவதாலும் தரத்தின் மீது தளராத, முன்னேற்றகரமான கண்காணிப்புப் பேணப் படுவதாலும் ஏற்படும் விளைவே இந்த உயர்ந்த தரம். விஞ்ஞானியும் தொழில் நுட்ப வல்லுனரும், நிர்வாகியும் தொழிலாளியும் மிகச் சிறந்ததை உற்பத்தி செய்யவே முனைகிறுர்கள். தமது அனுபவம், அறிவு, ஆற்றல் ஆகியவற்றின் பயன்களைக் குடும்பப் பெண்களுக்கு அளிக்கிறுர்கள்.

என்றுலும் தேசிய வளர்ச்சிக்கான எமது சிரத்தை காரண மாக இன்னுமொன்றைச் சொல்லித்தான் ஆகவேண்டும். மூலப் பொருட்கள் முதல் மனித சக்திவரை தேசிய வளங்களை நாங்கள் பூரணமாகப்பயன்படுத்தவிரும்புகிறேம். லீவர் உற்பத்திப் பொருள் என்றுல் இலங்கையின் உற்பத்திப் பொருள் என்பதே அர்த்தம் ஒரு குடும்பப் பெண் லீவர் பொருட்களை வாங்கும் பொழுது, உயர்ந்த தரத்திற்கான உத்தரவாதத்தை அவள் பெற்றுக்கொள் கிறுள். அதுமட்டுமல்ல அவள் வாங்குவது—இலங்கை.

லீவர் பிரதர்ஸ் (சிலோன்) லிமிட்டட்.

எழுத்தாளர் கீதம்

கவீந்திரன்

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்
நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்
நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்

*

சங்கு முழங்குது! சங்கு முழங்குது
சங்கு முழங்குது கேள் — புதுமைச்
சங்கு முழங்குது கோர்

எழுத்தெனும் சங்கம் ஒழித்திடுகின்றது.
உழுத்திடும் உலகம் ஒழித்திடவே
— சங்கு முழங்குது

*

சுரண்டல் மிகுந்தது, சூழ்ச்சி நிறைந்தது
இருண்ட இச் சமுதாயம்!
வரண்டு கிடந்திடும் மக்களின் துன்ப
வதைகள் ஒழித்திடுவோம்!
திரண்டிவன் எழுவீர் பேனு மன்னர்
தீரமுடன் நீரே — கலைச்
சிற்பிகளே! எம் எழுத்தாற் பற்பல
அற்புதம் செய்திடுவோம்! — புது
அமைப்பும் நிறுவிடுவோம்
—சங்கு முழங்குது

*

கம்பன் – வள்ளுவன் - காளமேகம் வழி
வந்தவர் நாமன்றோ?
கீரன் - ஔவை - இளங்கோ பெற்ற
கீர்த்தி நமதன்றோ?
நாவலன் – பாரதி – சோமசுந்தரன்
நமது இனமன்றோ? — இவர்
யாவரும் காட்டும் வழியே நமது
இலக்கிய நல்வழியாம்! அவ்
வழியே சென்று ஒளிசேர் தமிழை
விழிபோற் காத்திடுவோம்
— சங்கு முழங்குது

*

வானவில் வர்ணம் ஏழு
வளைவதைக் கண்டிடுவீர்!
கானகத்தில் கனிகள் ஆயிரம்
காற்றில் அசைவதைப் போல்
பூங்கா வனத்தில் ஆயிரம் ஆயிரம்
பூக்கள் மலர்வதைப்போல்
புத்தம் புதிய கருத்துக்கள் ஆயிரம்
நித்தம் பெருகவென
— சங்கு முழங்குது

*

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோராதிருத்தல்

அவன் அறிவது அவசியம்

விஞ்ஞான சாதனைகள் மிகுந்த இந்த நவீன யுகத்தில், புதிய கருத்துக்களை, மாணவருக்கும் பொதுமக்களுக்கும் புகட்டுவதற்கான சாதனங்கள், முன்னெப்பொழுதையும் விட இன்று அதிக முக்கியம்வாய்ந்து விளங்குகின்றன. இலங்கையின் சமூக, தொழில் துறை, பொருளாதார, விருத்திகளுடன் கைகோத்து, தகவல், விளக்கம் ஆகியவற்றிற்கான உத்தி முறையும் விருத்தியடைந்து வருகிறது.

ஷெல் ஸ்தாபனம், தனது திரைப்படங்சள், காட்சிப் பொருட்கள், பிரசுரங்கள், விரிவுரைகள், மற்றும் வழி வகைகள் மூலமாக, எண்ணெயின் ஆச்சரியகரமான வரலாற்றையுப், சமுதாயத்துக்கு அதன் மூலம் அதிகமாகக் கிடைத்து வரும் நலன்களையும் உணர்த்தி வருவது, இலங்கை மக்கள் எவ்வாறு நவீன முன்னேற்றங்களை உடனுக்குடன் தெரிந்து வருகிறார்கள் என்பதற்கு, உதாரணமாக விளங்குகிறது.

SHELL

இலங்கையின்
அபிவிருத்தியில் ஷெல்



Presented to Shri: [illegible]
[illegible]
20.9.62

வணக்கம்

ஈழத்து எழுத்தாளர்களின் வரலாற்றில் முதல் தடவையாக நடைபெறும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின் சிறப்பு மிகு மலராக 'புதுமை இலக்கியத்'தை வெளியிட வேண்டுமென்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீர்மானித்தது. இத்தீர்மானத்தின் செயலுருவம்தான் உங்கள் கரங்களில் தவழும் இம் மலர்.

மலரை வெளியிட எண்ணிய பொழுது, ஈழத்துக் கலை, இலக்கியத் துறைகளில் இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சியை எடுத்துக்காட்டும் முறையிலும், இத்துறைகளில் சாதிக்கப் பெற்றுள்ளவற்றைக் கணக்கெடுக்கும் முறையிலும் மலர் அமைதல் வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

இத்தகைய முறையில் மலரைத் தயாரிப்பது எளிதான வேலையல்ல என்பது ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்டது.

ஈழத்தில் இதுவரை கலை, இலக்கியத் துறைகளில் எத்தனையோ சாதனைகள் நிலைநாட்டப் பெற்றுள்ளன. எத்தனையோ படைப்புகள் வெளிவந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கூடியவரை விட்டுப்போகாதவாறு சேகரித்துத் தொகுக்க வேண்டும். இவை சம்பந்தப்பட்ட விவரங்களையும், தகவல்களையும் அலசி ஆராய்ந்து உண்மையானவற்றை இனம் கண்டு நிர்ணயிக்க வேண்டும். அப்போதுதான் மலரின் நோக்கம் ஓரளவாயினும் நிறைவேற முடியும்.

இதை நினைக்கும்போது ஒரு மலைப்புத் தோன்றியது. எனினும் பயன் தரத்தக்க இப்பணியை எவ்வாறாயினும் செய்தே தீரவேண்டும் என்ற துடிப்பும் ஆர்வமும் சுடர்விட்டுக் கொண்டிருந்தன. போதிய அவகாசத்துடனும், எதிர்ப்படும் சிரமங்களையும், சங்கடங்களையும் சமாளித்துக் கொண்டும் மலரைத் தயாரிப்பது என்று ஆசிரியர் குழு தீர்மானித்தது. இதற்கேற்ப இம்மலரில் எழுதியுள்ள கட்டுரையாளர்கள் மகாநாடு நடைபெறுவதற்கும், மலர் தயாராவதற்கும் பல மாதங்களுக்கு முன்னதாகவே தமது வேலையை ஆரம்பித்துவிட்டனர். இதன் காரணமாக மலர் தயாராகி,

மகாநாடு நடைபெறும் இடைக்காலத்திற்குள் பிரசுரமான ஈழத்துக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய கர்த்தாக்கள், நூலாசிரியர்கள் ஆகியோரின் படைப்புகள் பற்றிய குறிப்புக்கள் இக்கட்டுரைகளில் இடம்பெருது போய்விட்டன. அண்மையில் கலை, இலக்கிய உலகில் பிரவேசித்து ஆக்கப் படைப்புகளில் ஈடுபட்டுள்ள சிலரின் பெயர்களும், மலரில் இடம் பெற இருந்த இன்னும் சில கட்டுரைகளும் விடுபட்டுப்போய்விட்டன. தவிர்க்க முடியாத நிலையில் இக்குறைபாடு ஏற்பட்டுள்ளதால் மலரின் நோக்கம் பூரணமாக நிறைவேறவில்லையே என்ற வருத்தம் ஆசிரியர் குழுவிற்கு இருக்கத்தான் செய்கிறது. எனினும் இக் குறை அடுத்த மலரில் நிவர்த்தி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலரின் நோக்கத்தை விளக்கி அதற்கேற்ப கட்டுரைகள் எழுதித் தரவேண்டுமென்று 'புதுமை இலக்கியத்தின்' ஆசிரியர் குழு விடுத்த வேண்டுகோளைப் பொறுப்புணர்ச்சியுடன் ஏற்று, தாம் எழுதும் கட்டுரைக்காக முயன்று உழைத்து, இப்பணியை இயன்ற வரை முழுமையாக்கித் தந்த கட்டுரையாளர்கள் அனைவருக்கும், இம்மலர் சிறப்பான முறையில் உருவாகுவதற்கு விளம்பரங்கள் தந்து உதவிய வணிக நிறுவனங்களுக்கும், ஏனைய சக எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கும், மலரைச் சிறப்புற அச்சாக்கித் தந்த லங்கா அச்சகத்தாருக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இம் மலரை எமது அருமைத் தாயகமான ஈழத்தின் சார்பாக தமிழ் கலை, இலக்கிய உலகுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

— ஆசிரியர் குழு.

சிறுகதை

க. கைலாசபதி

"இப்படி எத்தனை காதலர்கள், கிராமங்களிலே, நகரங்களிலே தோன்றி மறைந்து விடுகின்றார்கள். அவர்களுடைய காதலைக் காவியத்தில் நிரந்தரமாக இடம்பெறச் செய்துவிட ஒரு சரத்சந்திரர், ஒரு வ. வே. சு. ஐயர் அல்லது ஒரு ஷேக்ஸ்பியர் இனி எங்கே தோன்றப் போகிறார் என்றெல்லாம் நான் நினைத்தேன்..."

காலஞ்சென்ற சிறுகதையாசிரியர் இலங்கையர்கோன் "கடற்கரைக் கிளிஞ்சல்" என்னும் கதையிலே ஒரு பாத்திரவாயிலாகத் தெரிவித்த ஏக்கம் இது. ஈழத்துக் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் மக்களின் இன்ப துன்பங்களை அமர சிருஷ்டிகளாகத் தீட்டும் சரத்சந்திரர்களும், வ. வே. சு. ஐயர்களும், ஷேக்ஸ்பியர்களும் நம்மிடையே வாழ்கிறார்களோ என்னவோ தெரியாது. ஆனால் வாழும் இலக்கியம் படைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் சிலராவது இருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. இந்த ஒரு துணிவுடனும் நம்பிக்கையுடனுமே ஈழத்தில் சிறுகதை வளர்ச்சியைப் பற்றிச் சில கருத்துக்களை இங்கு கூறலாமென எண்ணுகிறேன்.

இலக்கிய வரலாற்றாசிரியர் ஒப்புக்கொள்வதுபோலச் சிறுகதையென்பது மேனாட்டார் தொடர்பினால் தமிழிலே வந்து புகுந்த ஓர் இலக்கிய வடிவம். எப்படிப் பார்த்தாலும் அதன் வரலாறு அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேற்படாது. இன்றுள்ள தமிழிலக்கிய வடிவங்களிலே [காலத்தால் பிந்தியதும் வயதில் இளையதும் சிறுகதைதான். மூர்த்தி சிறியதென்றாலும் கீர்த்தி பெரியதென்பர். அதைப்போலவே காலத்தால் பிந்திய சின்னஞ்சிறு துறையான சிறுகதை, நவீன தமிழ் உரைநடையிலக்கியத்தின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இது தமிழ் கூறும் நல்லுலகத்துக்குப் பொருத்தமான உண்மையாகும். அவ்வுண்மைக்கேற்ப நாடகம், கவிதை, நாவல், கட்டுரை முதலிய இலக்கிய உட்பிரிவுகளை உற்று நோக்கும் பொழுது, ஈழத்திலும் சிறுகதையே பரப்பாலும் தரத்தாலும் சிறந்துகாணப்படுகின்றது. இதை நிரூபிப்பதற்காக நீண்ட பட்டியல் நீட்ட நான் விரும்பவில்லை. அட்டவணை தரித்து இலக்கியக் கணக்கெடுக்கும் இரசிக விமர்சகருக்கு அத்திருப்பணியை விட்டுவிட்டு, பல எதிர்ப்போக்குகள், வசதிக் குறைவுகள் முதலியவற்றிக்கூடாக மெல்ல மெல்ல வளர்ந்து 'இலக்கிய அங்கீகாரம்' பெற்று வரும் சிறுகதையை உந்தி இயக்கிய சக்திகளை அடிநிலையாகக் கொண்டு, அவற்றை உணர்ந்தோ உணராமலோ தமக்கனுசரணையாகக் கைப்பற்றி எழுத்துலகில் உலாவும் சில எழுத்தாளர்களைத் தொட்டுக் காட்டி அவர்கள் மூலமாகப் பிறரை இனங்கண்டு கொள்வதே எனது நோக்கமாகும்.

தென்னிந்தியாவிலே சிறுகதையிலக்கிய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுபவர்கள் "1930-ம் வருஷத்துக்குப் பின் உப்புச் சத்தியாக்கிரகத்தின் இலக்கிய அலையாக ஒரு புது வேகம் இலக்கியத்தில் ஏற்பட்டது" என்றும் "1930–40-ம் ஆண்டுகளுக்கிடையில் சில நல்ல சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினார்கள்" என்றும் கூறுவது மரபு. உண்மையும் கூட. ஏறத்தாழ அதே காலப்பகுதியில் ஈழத்திலே டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்ததன் பயனாகவும், சர்வஜன வாக்குரிமையின் விளைவாகவும் அரசியல் அரங்கிலே மக்கள் நடமாட்டம் அதிகரித்தது. படித்தவர் மத்தியில் எழுச்சி காணப்பட்டது. இதன் விளைவாகக் கலை, இலக்கியம், சமயம் முதலாய துறைகளிலும் எதிரொலி கேட்டது. சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினார்கள். அரசியல் சமூகப் பிரச்சினைகளை ஆராயத் தொடங்கப்பெற்ற சஞ்சிகைகள் வார இதழ்கள் ஆகியவற்றிலே இலக்கியப் பகுதியும் – இடம் பெறலாயிற்று. சிறு

கதை என்று நாம் இன்று கூறும் பூரணத்துவம் பெற்ற இலக்கிய வடிவத்தின் தோற்றம் இங்கேயே காணப்படுகிறது. அதற்கு முன்னர் ஈழத்திலே கதைகள் எழுதப்பட்டன; சில கதைத் தொகுதிகளும் வெளியிடப்பட்டன. தென்னிந்தியாவிலே செல்வகேசவராய முதலியார் எழுதியதைப் போல ஈழத்திலும் பழைய மரபுக் கதைகள் எழுதப்பட்டன. அவ்வளவுதான். அவை சிறுகதை என்னும் வடிவு வரம்புக்கு உட்படாதன.

1930-ம் ஆண்டளவிற்குப் பின்னர் தோன்றிய கதாசிரியர்கள் டொனமூர் அரசியல் திட்டத்திரையினுல் எறியப்பட்டவர்கள். ஆனுல், டொனமூர் திட்டம் நடுத்தர வகுப்பினரிடையே சலசலப்பு ஏற்படுத்திய அரசியல் திட்டமாகும். எந்தவிதமான அரசியல் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் கிளறிவிடவில்லை, அரசியல் திட்ட உருவத்திலேயே மாறுதல் காட்டியது; அரசியல் சித்தாந்தமோ, சமுதாயக் கொள்கையோ வலியுறுத்தப்படாத "இரண்டும் கெட்டான்" திட்டமது. இவை யாவற்றையும் அன்றையச் சிறுகதை ஆசிரியர்கள் பூரணமாக உணர்ந்திருந்தனர் என்ருே அவர்கள் இலக்கியத்தில் இவை பிரதிபலிக்கின்றன என்ருே நான் கூறமுற்படவில்லை. ஆனுல், இன்று பின்னேக்கிப் பார்க்கும் பொழுது சிறுகதையின் வடிவத்திற்கும் உருவ அமைதிக்கும் அன்றைய சிறுகதை எழுத்தாளர் ஏன் முதலிடமும், முக்கியத்துவமும் அளித்தனர் என்பதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது. சிறுகதை இலக்கியமானது பூரணத்துவம் பெற்ற வடிவ அமைதியுடனேயே இங்கு வந்து சேர்ந்தது. வ. வே. சு. ஐயர், பாரதியார் முதலிய ஆரம்பகாலச் சிறுகதையாசிரியர் ஆங்காங்கு சிறுகதையைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைப் பார்க்கும் போது அதன் உருவம், அல்லது வடிவத்தைப் பற்றி எத்துணை சிந்தித்துள்ளனர் என்பது புலனுகிறது. ஈழத்திலும் ஆரம்பகாலச் சிறுகதையாசிரியர் புதிதாகவந்த இலக்கிய வடிவத்தின் மேனியழகில் மெய்மறந்தனர் என்று கூறின் அது தவருகாது. "தமிழிலும் சிறுகதை எழுதவேண்டும்" என்னும் ஆசையில் அது உள்ளுறையாகக் கிடக்கின்றது. உருவம் என்று நான் கூறும்போது உருவ வேறுபாடுகள், உத்திகள் முதலியவற்றையும் சேர்த்தே கூறுகின்றேன். ஆரம்பகாலச் சிறுகதையாசிரியர் ஈழத்திலே இவ்வாறிருக்கும் போது தான் தென்னிந்தியாவிலே மணிக்கொடி தோன்றியது.

"...ஒரு பேரலை எழுந்தது; அதில் தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது; இதைச் சிறப்பாக மணிக் கொடி யுகம் என்று சொல்லவேண்டும்; இக்காலத்திலேதான் சிறுகதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது"

மணிக்கொடியுகத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான புதுமைப் பித்தன் கூற்றே இது. அவர் கூற்றிலே இரு கருத்துக்களை நாம் கவனிக்கலாம். சிறுகதையின் வடிவத்திற்கிருந்த மதிப்பு; அதற்கு ஏற்பட்டு வந்த இலக்கியத்தகுதி. ஈழத்திலே அன்று எழுதத் தொடங்கியிருந்த சிறுகதையாசிரியருக்கு இவ்விருபண்புகளும் ஏற்றனவாக இருந்தன. அது மட்டுமன்று; அவர்களை மணிக்கொடி எழுத்தாளருடன் ஆத்மார்த்தமாகப் பிணிக்க உதவின. மானஸிக ஒருமைப் பாட்டை அளித்தன. மணிக்கொடி எழுத்தாளர் யாவருமே ஒரே தரமும், தகைமையும், இரசனையுமுடையவராயிருந்தனர் என்று எவரும் கூறமாட்டார்கள். வ. ரா., கு. ப. ரா., பிச்சமூர்த்தி, சிதம்பரசுப்பிரமணியன், பி. எஸ். ராமையா, சிட்டி, புதுமைப்பித்தன் முதலிய சிலரை எடுத்துக்கொண்டாலே அன்றும் அதற்குப் பின்னரும் அவர்கள் வெவ்வேறு போக்கிலே போனது தெளிவு. கு. ப. ரா., சிட்டி, பிச்சமூர்த்தி, சிதம்பரசுப்பிரமணியன் முதலியோர் வடமொழிச் சார்பு, காவிய ரசனை, வடிவஅமைதி, மனேதத்துவ ஈடுபாடு முதலிய சில பொதுப் பண்புகளை உடையராயிருந்தனர். வ. ரா., புதுமைப்பித்தன், பி. எஸ். ராமையா முதலிய சிலர் ஓரளவு "வாழ்வை, உண்மையை நேர் நின்று" நோக்கி எழுதும் மனேபாவம் பெற்றிருந்தனர். ஈழத்து எழுத்தாளர் முன்னவர்களைச் சார்ந்தவராயிருந்தனர். அந்த மரபைச் சேர்ந்த சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சோ. சிவபாத சுந்தரம் முதலியவர்கள் புதுமைப்பித்தனை விடக் கு. ப. ராஜகோபாலனையே தமக்கு அணித்தானவராய்க் கருதினர். இன்றும் கருதிவருகின்றனர். சி. வைத்தியலிங்கமும் இலங்கையர்கோனும் உறவினர்; ஏறத்தாழ ஒரே காலத்தில் எழுதத் தொடங்கியவர்கள். இவர்களுடன் சற்றுப் பின்னர் கதையுலகில் அடியெடுத்து வைத்த சம்பந்தனையுஞ் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கு. ப. ரா. பிச்சமூர்த்தி ஆகிய இருவரையும் போலவே இலங்கையர்கோனும் ஆண் பெண் உறவு சம்பந்தமான பொருளில் அதிகம் ஈடுபாடுள்ளவராயிருந்தார். சுந்தரர் பரவையைப் பற்றி எழுதினாலென்ன, மேரிமக்தலேனா' மேனகை, மாதவி, அனுலா முதலிய பெண் பாத்திரங்களைப்பற்றி எழுதினாலென்ன 'தசையின்' துடிப்பு அதிலிருக்கும். "பூரண சுகம் தசையுடன் தசை சேரும் பொழுதுதான் ஏற்படுகிறது: மிதுனங்களின் சேர்க்கையே எல்லாவற்றிற்கும் ஆதார சுருதியாக இருக்கிறது" என்பது இலங்கையர்கோன் தத்துவம். சி. வைத்தியலிங்கமோ தேசிகவிநாயகம்பிள்ளையைப் போல மென்மை, பெண்மை, கனிவு, அழகு, இனிமை முதலிய பண்புகளை விரும்புபவர்; இலக்கியம் அவற்றைப் பிரதிபலிக்க வேண்டும் என்று நம்புபவர். கவிதையின் கனிவும், வடமொழி இலக்கியத்தின் பெருமிதமும் துலங்க வேண்டும் என்று வற்புறுத்துபவர். அந்தளவில் சிதம்பரசுப்பிரமணியனுடன் கருத்தொற்றுமையுடையவர். சம்பந்தனோ மனக்குகைக்குள் குடைந்து குடைந்து உணர்ச்சிகளை அருபமான உணர்வாக்க முனையும் 'மௌனி'யைப் போன்றவர். மனோதத்துவ அடிப்படையில் தன்னுணர்வில் தானே அமிழ்ந்துபோகும் பாத்திரங்களைப் படைப்பவர். ஆக இம் மூன்று பேரும் மணிக்கொடிப் பரம்பரையின் ஒரு பகுதியினரோடு கருத்தாலும் உணர்வாலும் ஒற்றுமையுடையவராயுள்ளனர்.

"தாகூருடைய இயற்கைப் பாடல்கள் என்னைக் கவர்ந்தன; காளிதாசனின் நாடகங்களும் காவியங்களும் என் மனதைத் தொட்டன. உணர்ச்சி மயமான ஆங்கில இலக்கியங்கள் பல என் மனதைக் கொள்ளை கொண்டன. எனினும் உண்மையில் நாங்கள் கிராமவாசிகளே. நகர வாழ்க்கையில் நான் என்றுமே ஒன்றியது கிடையாது. நான் எழுதிய "புல்லுமலை" என்னும் கதை உண்மையில் கிராமத்தின் அழைப்புக் குரலாகும்" என்று ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறினார் சி. வைத்தியலிங்கம். வைத்தியலிங்கம் உளப்பாட்டுத்தன்மைப் பன்மையில் கூறியது முற்றிலும் பொருத்தமாகாது. எனினும் இன்று நாம் கருதும் "யதார்த்த" இலக்கியம் பற்றி அவர்கள் அதிகம் சிரத்தை கொண்டிருக்கவில்லை என்பதுறுதி. ஆனால், நமது நம்பிக்கையின் அடிப்படையிலே சிறந்த ஆக்கங்களைப் படைத்தனர் என்பதில் ஐயமேயில்லை. அந்தத் தலைமுறையைச் சேர்ந்த இருவர் மணிக்கொடியினராலும் "தம்மவராக" ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளனர்.

பிற்காலத்திலே இலங்கையர்கோன் பேச்சுத் தமிழையும் கைக்கொண்டு சமூகச் சிறுகதைகள், ஓரங்க நாடகங்கள் முதலியன படைத்துள்ளார். எனினும் ஆரம்ப காலத்தில் அவரும் சி. வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோரைப் போல காவியரசனைப் போக்கும் இலக்கிய நயமுஞ் செறிந்த கதைகளையே அதிகம் எழுதியுள்ளார். மணிக்கொடி பரம்பரையினருடன் பல ஒற்றுமைகள் இருந்ததன் காரணத்தாலேயே தமிழ் நாட்டில் அல்லையன்ஸ் கம்பெனியார் வெளியிட்ட கதைக்கோவைத் தொகுதிகளிலே அன்றைய ஈழத்து எழுத்தாளர் சிலரின் கதைகள் இடம் பெற்றன. தென்னிந்தியச் சிறுகதையாசிரியருக்குச் சமதையாக ஈழத்திலும் இலக்கிய கர்த்தாக்கள் இருக்கின்றனர் என்னும் உண்மை நிலை நாட்டப்பெற்றது. அந்த வகையிலே அன்றைய எழுத்தாளர் மதிப்புக்குரியவராய் விளங்குகின்றனர்.

1930-40 :ம் ஆண்டுவரை இந்த நிலைமை நீடித்தது. ஈழத்திலே இளைஞர் பலர் இலக்கிய ஆர்வம் பெற்றனர். தென்னிந்திய இலக்கிய வேகம் இங்கும் பலரை இலக்கியப் பரிசீலனைகளில் இறங்கத் தூண்டியது. மணிக்கொடியின் மின்வெட்டைத் தொடர்ந்து கலாமோகினி, சந்திரோதயம், கிராம ஊழியன், பாரததேவி முதலிய சிறு சஞ்சிகைகள் இலக்கியப் பரிசீலனைக்கு வடிகால்களாய் விளங்குகின்றன. ஈழத்து எழுத்தாளர் சிலர் அச் சஞ்சிகைகளுக்குக் கதை, கட்டுரை, கவிதை முதலியன அனுப்பி வெளியிட்டனர். இரண்டு மூன்று பேர் எழுதிய இடத்தில் சற்றுப் பரவலாகப் பலர் எழுதலாயினர். அவர்களில் பெரும்பாலானோர் இலட்சிய வெறிமிக்க இளைஞர். அ. ந. கந்தசாமி, தி. ச. வரதராசன், அ. செ. முருகானந்தன், சு. வே. இராஜநாயகன், கனக—செந்திநாதன் முதலியோரைப் பல காரணங்கள் பற்றி இப்பிரிவிற்குள் அடக்கலாம். முந்திய தலைமுறையினரில் வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர்கோன், முதலியோரும் பின்னர் வந்து கலந்த இராஜ அரியரத்தினம் போன்றோரும் கலைமகள் மாசிகையிலே அவ்வப்போது எழுதிவரலாயினர்.

எனினும் அன்றைய நிலையிலேயே பழமைக்கும் புதுமைக்கும் 'வேற்றுமை'' தோன்றத் தொடங்கிவிட்டது. இச் சந்தர்ப்பத்திலே பழமையையும் புதுமையையும் ஒட்டவைக்க முயன்று அதில் பெருமளவு வெற்றியும் கண்ட ஈழகேசரியைப் பற்றி நினைவு கூருதலாகும். இரண்டாவது காலப் பகுதியைச் சேர்ந்த பல இளைஞர் ''ஈழகேசரிப் பண்ணையிலே முளைத்தவர்கள்'' என்று கூறிக் கொள்வது இப்பொழுது மரபாகிவிட்டது.

இரண்டாவது காலப் பிரிவினரில் பெரும்பாலர்னோர் வயதிற்கேற்ற இலட்சியப் பற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்தோம் அவர்கள் உலகம் முற்றுக முழுதாக இலக்கிய உலகம் என்றே கூறிவிடலாம். எழுதுவது இரசிப்பது பரிசீலனை செய்வது வெளியிடுவது என்ற வட்டத்திற்குள்ளே நின்று ''எதிர்காலம் எமதே'' என்று துடித்தவர்கள். யாழ்ப்பாணத்தின் பல்வேறு கிராமப்புறங்களிலிருந்து கருத்தால் சங்கமித்த அவ்விலக்கியக் கூட்டத்தினர் எழுத்துக்களிலே யாழ்ப்பாணக் கிராமிய வாழ்க்கையும் காட்சிகளும் மெல்ல மெல்ல இடம்பெறலாயின. அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, கனக—செந்திநாதன் முதலியோரது எழுத்துக்கள் இதற்குச் சான்ருகின்றன. ''வாலிபத்தின் வைகறையிலே, பள்ளிமாணவனுக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்து விட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகை வண்டியில் செல்லுகையில் சில சமயம் தன்னந்தனியாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்பொழுது என் கண்கள்—வயல் வெளிகளையும் தூரத்துத் தொடுவானையும் உற்று நோக்கும்; ... உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம். உலகையே என் சிந்தனையால் அளந்துவிட வேண்டுமென்று பேராசை கொண்ட காலம்.'' அன்றைய இளைஞன அ. ந கந்தசாமி இன்று கூறும் நினைவலைகள் இவை. பலருடைய பழைய நினைவுகள் இவ்வாறுதானிருக்கும் என்று துணிந்து கூறலாம். ''காண்பதெல்லாம் புதுமையாகவும், அழகாகவும், வாழ்க்கை ஒரு வானவில் போலவும் தோன்றிய'' வயதிலேதான் சில இளம் எழுத்தாளர் சேர்ந்து மறுமலர்ச்சி என்னும் இலக்கிய இதழைத் தாபித்தனர்.

மறுமலர்ச்சி என்னும் இதழ் ஈழத்தின் மணிக்கொடியாகத் திகழவேண்டும் என்ற பேரவாவுடனேயே வெளியிடப்பட்டது. புதுமை அதன் தாரகமந்திரம். இலக்கிய வட்டாரம் களிப்புற்றது. கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், நாவல் முதலிய துறைகளிலும் மறுமலர்ச்சிக் குழுவினர் விழுந்தடித்துக் கொண்டு வேட்டையாடினர். சில நல்ல புதிய எழுத்தாளர் தோன்றினர் என்பது உண்மையே. எனினும் தொடக்கத்திலிருந்தே மறுமலர்ச்சி குறுகிய ஓர் இலக்கிய வட்டாரத்தின் குரலாக அமைந்துவிட்டது. வாசகர் பலமோ, மூலதன பலமோ இன்றி வெளியிடப்பட்ட அவ்விதழ் ''மறுமலர்ச்சிக் குழுவினர்'' என்று பிற்காலத்தில் சொல்லிப் பெருமைப்படச், சிலருக்கு வாய்ப்பளித்ததோடு சென்று தேய்ந்திருந்தது. இன்று பார்க்கும் போது மறுமலர்ச்சியின் முடிவு தவிர்க்க முடியாததாயிருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. மணிக்கொடிக் கூட்டத்தினரிடம் காணப்பட்ட குறைந்த பட்சக் கருத்தொற்றுமையோ, உணர்வு ஒருமைப்பாடோ மறுமலர்ச்சிக் குழுவினரிடம் இருந்தது என்றும் கூறுவது கடினமாகவிருக்கிறது. சமுதாய உணர்வும் குறைவாகவே இருந்தது. அரசியல் கண்ணேட்டம் அரிதாகக் காணப்பட்டது. ஈழகேசரிக்கும் அதன் சமகாலத்தைய பிற சஞ்சிகைகளுக்கும் இடையேயிருந்த முக்கிய வேறுபாடு அதுதான். ஈழகேசரியின் பண பலம் தனித்தன்மை வாய்ந்ததாயிருந்தது என்பதை சுட்டிக்காட்டத் தேவையில்லை.

இலங்கை சுதந்திர நாடாகிய ஈழத்தமிழிலக்கியத்திலே குறிப்பிடத்தக்க மாற்றமெதனையும் தோற்றுவித்தது என்று கூறமுடியாது. ஆனால் அதனைத் தொடர்ந்து அரசியல் அரங்கில் வகுப்புவாதம் வலுத்தது; தமிழர் பிரச்சினையும் தோன்றியது. இன உரிமை, இன வேற்றுமை, தமிழர் தனித்துவம் முதலிய குரல்கள் ஆங்காங்கு கேட்கத் தொடங்கின. இவை வெகுஜன இயக்கங்களாக மாருவிட்டாலும் படித்தவர் மத்தியில் பரபரப்பையுண்டுபண்ணின. இதே காலகட்டத்தில் தென்னிந்தியாவில் தி. மு. க. இலக்கியப்பண்ணையிலிருந்து நூற்றுக்கணக்கான பிரசுரங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்திலும் பகுத்தறிவு, அறப்போர், பார்ப்பனீயத் துவேஷம் முதலியன மாணவர் பேச்சுக்களிலே அடிபட்டன. சமூக—அரசியல் துறைகளிலே ஓரளவுக்கு உணர்ச்சி தலைகாட்டத் தொடங்கியது. 1950-ம் ஆண்டிற்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இலக்கியத் துறை

யில் புகுந்து பெரும்பாலானோர் ஏதோவொரு காலகட்டத்தில் தி. மு. க. நூல்களை முகர்ந்தவர்களே.

தி. மு. க. ஏடுகளிலே ஊறித் திளைத்த சில எழுத்தாளரையும் வேறு சிலரையும் கொண்ட தமிழர் குரலாகச் சுதந்திரன் வெகு விரைவில் மாறிவிட்டது. 'மறுமலர்ச்சி'க் காலத்தில் பிரபல்யம் பெற்ற அ. ந. கந்தசாமி போன்ற சிலர் சுதந்திரனில் உழைக்கலாயினர். தி. மு. க. மூலமாகவும், யாழ்ப்பாணத்திலே கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாகவும் அரசியல் சமூக பொருளாதார போதம் பெற்ற சில இளைஞர் சாதிவேற்றுமை, தீண்டாமை, உயிர்ப்பலி முதலிய பிரச்சினைக்குரிய பொருள்களை எழுதத் தொடங்கினர். ஆரம்ப காலத்தில் தி. மு. க., பொதுவுடமை என்னும் நுண்ணிய வேறுபாடின்றிச் சுதந்திரன் இதழிலே பல கதைகள் வெளிவந்தன. "பொன்னி" முதலிய தி. மு. க. சார்புள்ள ஏடுகளிலும் சிலர் தமது படைப்புக்களை வெளியிட்டனர். தி. மு. க. வைத் தாண்டி "முதிர்ந்தவர்" பலர்! சிலர் அந்தப்படியிலேயே பின்தங்கிவிட்டனர். எனினும் இலக்கியத்தைப் பற்றித் திட்டவட்டமான வரையறையோ, சித்தாந்தமோ அப்பொழுது தோன்றவில்லை. கனவுலகின் மயக்கத்திலே "மின்னலோடு உரையாடவும், தென்றலோடு விளையாடவும்" விரும்பிய மறுமலர்ச்சி இலக்கிய கர்த்தாக்களுக்குப் பின் வந்த இவர்கள், சமுதாயச் சீர்திருத்தம், தமிழர் பெருமை ஆகிய "யதார்த்தப்" பிரச்சினைகளை நோக்கத் தொடங்கியதும் சமுதாய உணர்வு வலுவடையத் தொடங்கியது. இந்தப் புதிய சூழலிலே பலர் எழுத்துலகிற்கு இழுக்கப்பட்டனர். எஸ். பொன்னுத்துரை, என். கே. ரகுநாதன், "பித்தன்" "இளவல்" "கதைப்பித்தன்" டொமினிக் ஜீவா, கே. டானியல், வ. அ. ராசரத்தினம், தேவன், சில்லையூர் செல்வராஜன், சொக்கன், கசின், தாழையடி சபாரத்தினம், செ. கணேசலிங்கன், முதலிய பலர் இக்காலப் பகுதியில் இலக்கிய உலகில் பிரவேசித்தனர். அன்று வெளிவந்த எல்லா இலக்கிய இதழ்களிலும் எழுதினர். இக்காலப் பகுதியிலே எழுதத் தொடங்கியவர்கள், பழைய 'அந்தக் கால' எழுத்தாளர் அபிமானித்த தென்னிந்திய இதழ்களுக்கு எழுதமுடியாமற் போனது, அவற்றின் இலக்கியப் நோக்கு இப்புதிய பிரச்சினைகளுக்கு ஏற்றதாயில்லாமலிருந்ததே காரணம். சுருங்கக் கூறின் இப்புதிய எழுத்தாளருக்குந் தென்னிந்திய இலக்கிய உலகத்திற்கும் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது முக்கியமானது. ஏனெனில் காரணகாரியத் தொடர்புடன் அமைந்தது.

ஈழத்துப் பிரச்சினைகள் இலக்கிய சிருஷ்டிகளில் அதிகமாக இடம்பெறவும் தென்னிந்தியப் பெருஞ் சஞ்சிகைகள் அவற்றை ஏற்க முடியாது ஒதுக்கின; அவ்வாறு ஒதுக்குவது ஈழத்து எழுத்தாளரிடையே கசப்பை ஏற்படுத்தியது; வளர்த்தது. எனினும் இந்தக் கசப்பானது நெஞ்சில் புகைந்துகொண்டிருந்தது. வெளியே கனலாகத் தெரியவில்லை.

இத்தகையதொரு சூழ்நிலையிலேதான் 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் ஈழத்து அரசியல் புதிய வேகம் பெற்றது. தேசியப் பண்பு தலைதூக்கியது. பொருளாதாரப் பிரச்சினைகளும் சமூக முரண்பாடுகளும் வலுத்தன. இதன் தருக்க ரீதியான விளைவாக தேசிய முற்போக்குச் சக்திகள் தெளிவாகின. அவற்றைப் பிரதிபலிக்கும் எழுத்தாளர் முற்போக்கு எழுத்தாளர் என்று "பிரிய" வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதே சமயத்தில் தென்னிந்தியாவுடன் இருந்த பொதுவான ஆத்மார்த்தத் தொடர்பும் பலவீனமடையத் தொடங்கியது. ஈழத்திலும் சொந்தமான—சுயமான—முற்றிலும் தேசியப் பண்பு பொருந்திய இலக்கியம் படைக்கவேண்டும் என்னும் உணர்வு பிறந்தது. உருவ அழகால் கவரப்பட்டு 1930-ம் ஆண்டளவில் எழுதத் தொடங்கிய ஈழத்து எழுத்தாளரின் வாரிசுகள் உள்ளடக்கத்தைப் பற்றிக் காரசாரமான வாதப் பிரதிவாதங்களில் இறங்கினர். அதற்குப் பற்றுக்கோடாகத் தேசியப் பண்பு உதவியது.

இந்தத் தேசியப் பின்னணியின் வலு'வோடு தமிழர் பிரதேசங்களின் "மண்வாசனை" கமழும் மொழிநடையும் பழக்கவழக்கங்களும் புதிய அழுத்தத்துடன் இலக்கிய மதிப்பிற்குப் போட்டியிட்டன. காவலூர் ராசதுரை, அ. முத்துலிங்கம், பொ. தம்பிராஜா, ஈழத்துச் சோமு, நீர்வை பொன்னையன், இ. நாகராஜன், க. சா. அரியநாயகம், அபுதாலிப் லத்தீஃப், அகஸ்தியர் முதலிய எழுத்தாளர் மண்வளத்தைக் காட்ட முனைந்தனர். முதற்காலப் பகுதிக்குரிய இலங்கையர் கோன், அடுத்த காலப் பகுதியைச் சேர்ந்த அ. ந. கந்தசாமி, வரதர்,

சொக்கன் மூன்றுவது தலைமுறையைச் சாரும் வ. அ. ராசரத்தினம் முதலியோர் தொடர்ந்து எழுதிவந்துள்ளனர். காலத்தோடு தாமும் வளரும் சக்தி தம்மிடம் உண்டென்பதை நிரூபித்தும் விட்டனர். மிகச் சமீபத்தில் செ. கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, காவலூர் ராசதுரை, வரதர், நீர்வை பொன்னையன் முதலிய சிலர் தமது சிறு கதைகளை நூல்வடிவாக்கியுள்ளனர். எனினும் இவைநேற்றையநிகழ்ச்சிகளாகும்.

ஆரம்பத்திலிருந்து தென்னிந்திய இலக்கிய இயக்கங்களுடன் கைகோர்த்துக் கொண்டு வந்த ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி அண்மையில் தென்னிந்தியாவைவிடத் துரித நடையிலே போவதாகச் சில ஈழத்து எழுத்தாளர் கருதுவர். அதன் உண்மை பொய் எவ்வாருக இருப்பினும் தென்னகத்தில் கடந்த பத்தாண்டுகளுக்குள் மூன்று நான்கு சிறந்த எழுத்தாளரே தோன்றியுள்ளனர். அங்கு ஒருவிதமான மந்தநிலை காணப்படுகிறது எனக் கூறத் தோன்றுகிறது. ஆனல், ஈழத்திலே நன்கு பிரகாசிக்கக்கூடிய திறமைசாலிகள் அரும்பியுள்ளனர்.

தேசியப் பின்னணியில் வளரும் சமுதாயத்தின் போக்கை அனுசரித்து வாழ்க்கைக்கு கலைவடிவம் கொடுக்கவும் சரித்திரத்தின் தன்மையை உணர்ந்து அதற்கு ஈடுகொடுக்கவும் திறமையிருந்ததால் சிறந்த-உலக இலக்கியத்தில் இடம்பெறத்தக்க உயர்ந்த சிறுகதைகளைப் படைக்க எமது எழுத்தாளரால் முடியும் என்றே நம்புகிறேன்.

பொழுதுபோக்கிற்காக எழுதுவதா அல்லது பொதுநலத்திற்காக எழுதுவதா என்னும் முக்கியமான கேள்வி இன்றைய எழுத்தாளர் பலரையும் எதிர்நோக்கி நிற்கிறது. இது புதிய கேள்வியன்று. வெவ்வேறு வடிவத்திலும் உருவத்திலும் இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களை விழித்துப் பார்த்த கேள்விதான். ஆனல், இன்று மிக நெருக்கடியான நிலையிலே இக் கேள்வி எழுத்தாளரை நோக்கிக் கேட்கப்படுகிறது. ஈழத்துச் சிறுகதையாசிரியர்கள் தமது கலாச்சாரப் பாரம்பரியத்தையுணர்ந்து நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலையெய்தவும் முட்டும் அன்புக் கனலோடு எழுத முடியுமா முடியாதா என்பதைப் பொறுத்திருக்கிறது எதிர்கால இலக்கிய வாழ்வும் தாழ்வும்.

ஈழத்து பூதந்தேவனர் முதல், இரகுவமிசம், பரராசசேகரம், செகராச சேகரம் முதலிய அறிவு நூல்களை இயற்றிய பரோபகாரிகளும், 'அந்தமில் மறையெல்லாம் அடிதலை தடுமாறிச் சிந்திய" காலத்தில் செந்தமிழும் சிவநெறியும் காத்த சிவநேசச் செல்வர் ஆறுமுக நாவலரும், தனது வாழ்நாட் காலத்திலே காவியரசனையிலே ஒப்பாருமிக்காருமின்றித் திகழ்ந்த வித்துவசிரோமணி பொன்னம்பலப் பிள்ளையும் அவர்கள் வழிவந்த அநேக அறிஞரும் சிருஷ்டிகர்த்தாக்களும் போற்றி வந்த ஈழத் தமிழ் மரபைப் பேணிச் சத்துப் பெற்றுச் சிறுகதையாசிரியர் சிறப்பான எதிர் காலத்தை வகுத்துக்கொள்வர் என்று நம்பலாம். அதற்கான அறிகுறிகள் தென்படாமலில்லை. ★

"மனிதர்கள் தாம் இருக்கின்ற நிலையிலிருந்து இன்னும் உயர்ந்து திகழவே ஆசைப்படுகின்ருர்கள். மனிதரின் இந்த ஆசையைத் தூண்டி அவர்கள் உயர் நிலை பெறுவதற்கு, முன்னேறுவதற்குத் துணைபுரிவதுதான் இலக்கியத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்."

—கார்க்கி

கவிதை

அ. ந. கந்தசாமி

எந்த மொழியை எடுத்துக் கொண்டாலும் முதலில் செய்யுள் தோன்றியே பின்னர் வசனம் தோன்றியிருக்கிறது. தமிழிலக்கியமும் இதற்கு விலக்கல்ல. வள்ளுவர், கம்பர், இளங்கோ வளர்த்த கவிதைத் தமிழின் மடியிலே பிறந்தது தான் இன்றைய வசனத் தமிழ்.

தென்னகத்தைப் போலவே ஈழத்திலும், வசன இலக்கிய முயற்சியின் முன்னோடியாக பல நெடுங்காலம் கவிதைத் தமிழ் முழங்கி வந்திருக்கின்றது.

வசன இலக்கியம் நேற்றுப் பிறந்த பிள்ளை. அதன் சரிதம் கைப்பிடிக்குள் அடங்கும் மிகச் சுருங்கிய சரிதம். ஆனால், இலக்கிய உலகின் அரசியாகிய கவிதைத் தேவியோ நீண்ட காலம் வாழ்ந்தவள். காவியத்தின் சரிதை, காலச் சேற்றில் ஆழப் புதைந்து கிடக்கிறது. நீண்ட அதன் சரித்திரத்தை நிமிர்த்தி நிறுத்திக் கணக்கிடுவது இலகுவான காரியமல்ல. கடினமான அப்பணியை எதிர்காலத்தில் யாராவது நிறைவேற்றுவார்கள். இக்கட்டுரை அப்பணியின் முன்னோடியாகும்.

செந்தமிழின் பொற்காலம் என்று புகழப்படும் சங்க காலத்தில் கூட, ஈழத்துக் கவிதையின் நன்மணம் கடல் கடந்து பரவியிருந்தமைக்குப் போதிய சான்றுகள் உள்ளன. தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதிலும் நடைபெற்ற இலக்கிய முயற்சிகளின் போக்கை எடுத்து விளக்க நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு, கலித்தொகை போன்ற கவிதைத் திரட்டுகளைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. இவற்றில், குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் ஈழத்துப் பூதந்தேவனார் எழுதிய அழகிய பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

ஈழத்துப் பூதந்தேவனார் காலத்தைக் கடந்து நிற்கிறார். தமிழிலக்கியத்தின் சுவையறிந்து போலும் அவாமேலிட்டு நீலக்கடல் அதனைப் பெரும்பாலும் உட்கொண்டு விட்டது! பெரியதோர் கவிஞர் பட்டியலில், எஞ்சியிருக்கும் ஒரு சில நூற்றுவரில் பூதந்தேவனார் ஒருவர். ஆனால் அவர் மட்டுந்தானா முன்னாளில் தமிழ்க் கவிதைச் சங்கூதிய பெருமகன்? இன்னும் பலர் இருந்திருக்கலாம். ஆனால் அவர்களைப் பற்றி நாம் இன்று ஒன்றும் அறிய முடியாதிருக்கிறது.

இன்றைய ஈழத்தில் தமிழின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணம், ஒரு கவிவாணனின் கவிதையில் மலர்ந்த நாடு என்று கர்ணபரம்பரை கூறுகிறது. 'மணற்றி' என்ற பெயருடன் விளங்கிய இப்பிரதேசம், அந்தகக் கவி ஒருவனுக்கு அரசனொருவனால் அளிக்கப்பட்ட அன்பளிப்பு. எனவே தமிழ் ஈழத்தின் தந்தை ஒரு கவிஞனென்று இலங்கைத் தமிழர்கள் பெருமைப்படலாம்.

சிங்கள நாட்டில் தமிழனொருவன் அரசாட்சி நடத்திக்கொண்டிருந்த காலத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. அவ்வரசன் பெயர் ஏலேலசிங்கன். இவனையே எல்லாளன் என்றும் அழைப்பர் போலும்! வீரராகவன் என்னும் இந்த யாழ்ப்பாணன் தென்னிந்தியாவில் வறுமையால் வாடி இலங்கை வந்தடைந்தான்; ஏலேலசிங்கன் சபைக்கும் இவன் அனுமதிக்கப்பட்டான். ஆனால் அந்தகனைக் காண்பது அரசர்க்கு ஊனம் என்ற பழங் கொள்கை அக்காலத்தில் நிலவி வந்தமையால் ஏலேலன் கவிஞரைச் சந்திக்கும் போது இடையிலே திரையிட்டிருந்தான்.

இதை உணர்ந்த கவிஞன் மனமுடைந்து பின்வரும் கவியைப் பாடினன்:

நரைகோட்டிளங்கன்று நல்வளநாடு
நயந்தளிப்பான்
விரையூட்டு தாற்புயல்வேற் பீழமன்னன்
என்றேவிரும்பி
கரையோட்டமாக மரக்கலம் போட்டுனைக்
காணவந்தால்
திரைபோட்டிருந்தனையோ ஏலேலசிங்க
சிரோன்மணியே!

இக்கவியைக் கேட்ட புவிராசன் கவிராசனுக்கு வளநாடும் நரைகோட்டிளங்கன்றும் பரிசாக அளித்தானென்று வரலாறு கூறுகிறது. இவ்விதம் கவிதையில் பூத்த நாடு யாழ்ப்பாணமாகும்.

மேலே கூறியவை மிகப் புராதன காலத்தில் நம் நாட்டில் நிலவிய கவிதை பற்றிய குறிப்புகளாகும்.

இதன் பின்னுள்ள காலத்தில் ஈழத்துக் கவிதை எங்கிலேயில் இருந்தது? இக்கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க முடியாதிருக்கிறது. முற்றிலும் இருள் சூழ்ந்த பல நூற்றுண்டுகள் இவ்வாறு கழிந்து போக, அரசகேசரி என்ற குறுநில மன்னன் காலத்திலே மீண்டும் மின்னலடித்தது போல் ஒளி வீசுகிறது. அவ்வொளியிலே நாம் ஒரு பார காவியத்தைக் காண்கிறோம். அப்பாரகாவியத்தின் பெயர் "இரகு வம்சம்". காளிதாசனை முதநூலாகக் கொண்டு புலவனும் புரவலனுமாகிய அரசகேசரியே இதனைத் தமிழுலகத்திற்கு யாத்தளித்தான். அருகிவரும் இந்நூலைத் தமிழன்பர்கள் யாராவது மீண்டும் பதிப்பிக்க முன்வர வேண்டும்.

அரசகேசரிக்குப் பிந்திய காலத்தில் ஈழத்தில் பல கவிஞர்கள் தோன்றிப் பல நூல்களை எழுதினர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பருளை விநாயகர் பள்ளுப்பாடிய சின்னத்தம்பிப் புலவர், கனகி புராணம் பாடிய சுப்பையாப் புலவர், "மேக தூதம்" "இராச மோதந்தம்" பாடிய சுன்னுகம் குமாரசாமிப் புலவர் முதலியவர்களாம், இவர்களைத் தாண்டியதும் நாம் நமது பரம்பரைக்கே வந்துவிடுகிறோம்.

★

இலங்கையின் கவிதை வளர்ச்சியில் இக்காலத்தைப் பற்றித்தான் நாம் தெளிவாகப் பேசக்கூடியதாயிருக்கிறது. இப்பரம்பரையின் பிரதிநிதிகளாக மூன்று கவிஞர்களை நாம் முக்கியமாக எடுத்துக் கொண்டால் இவ்வளர்ச்சியின் போக்கை அளவிடுதல் நமக்குச் சுலபமாயிருக்கும். நவாலியூர் ஸ்ரீ சோமசுந்தரப் புலவர்—மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனுர் என்றழைக்கப்படும் ஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியார்—நவாலியூர் சோ. நடராஜன் என்ற மூவருமே இவ்விதக் கண்ணோட்டத்துக்குப் பெரிதும் உதவுவார்கள் என்று நான் நம்புகிறேன். இம்மூவரும் தமிழ்க் கவிதையின் மூன்று திசைகளில் சஞ்சரிப்பவர்களாவர்.

இவர்களில் இருவர் இன்று காணுவுலக வாசிகளாகிவிட்டனர். ஒருவர் ஜீவந்தராயிருக்கிறுர். இம்மூவரில் ஈழத் தமிழகம் முழுவதும் பெயர்பெற்று விளங்கியவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களே.

நவநீத கிருஷ்ண பாரதியார் பண்டிதர்கள் மட்டும் விளங்கக்கூடிய கடின நடையில் தமது கவிதைகளை அமைத்தார். சங்க இலக்கியங்களில் ஊறித் திளைத்த அவர் சங்கக் கவிதானோ என்று பார்த்தோர் மயங்கும்படியான கவிதைகள் எழுதினுர். இவர் எழுதிய நூல்களில் "உலகியல் விளக்கம்" பெரிய நூல். இதற்கு பண்டித மயில்வாகனனுர் என்னும் சுவாமி விபுலானந்தர் விரிவுரை எழுதியுள்ளார். "பாலை" இவர் எழுதிய சிறு நூல். இந்நூலை எழுதியமையால் இவர் பாலை பாடிய வெண்ணெய்க் கண்ணனுர் என்று புகழ்ந்துரைக்கப்படுவதுண்டு.

ஸ்ரீ சோமசுந்தரப் புலவர் பழமையின் மடியில் பிறந்து அக்கவிதை மரபில் முழுகித் திளைத்தவரானுலும் புதுமைப் புயலும் அவர் கவிதைப் பூங்கொடி மீது படிந்து சென்றிருக்கிறதென்பதை அவர் எழுதிய சில கவிதைகளேனும் நன்கு காட்டுகின்றன. இவர் பாடிய சில குழந்தைப் பாடல்கள் இன்று இந்நாட்டின் தமிழ்க் குழந்தைகள் யாவராலும் பாடப்பெற்று வருகின்றன. "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை" "கத்தரித் தோட்டத்து மத்தியிலே நிற்கும் காவலா" என்ற இவரது இரு பாடல்கள் மிகவும் பிரசித்தி வாய்ந்தனவாகும்.

இவர் பள்ளு, அந்தாதி, கும்மி, மாலை, பதிகம், நாடகம், பதிற்றுப்பத்து ஆகிய பலவிதக் கவிதை நூல்களையும் யாத்துள்ளார். "உயிரிளங் குமாரன்" இவர் எழுதிய கவிதை நாடகம். இது சைவ சித்தாந்தக் கருத்துக்களை உருவகக் கதையாகச் சித்திரிக்கிறது. இவரது பாடல்கள் ஓசை நயமும் தெளிவும் கொண்டவையாக இருப்பதால் இவர் வெண்ணெய்க் கண்ணனுரிலும் பார்க்க மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்று விளங்குகிறுர்.

இவர்களின் பின்னல் தோன்றியவரே இன்று ஜீவந்தராயிருக்கும் சோ. நடராஜன். இவர் நவாலியூர்ப் புலவரின் புதல்வர். தந்தையின் நிழ

வில் கவியாக்க ஆரம்பித்த தனயன். எனினும் இவர் சென்ற பாதை வேறு. ரவீந்திரர், காளிதாசன் கவிதைகள் இவரைக் கவர்ந்தன. பாரதியாரின் குயிலிசை அவரை மயக்கியது. தேசிக விநாயகன் தேனிசையில் அவர் சொக்கினர். யோகியாரின் கவியின்பம் அவர் கவியுள்ளத்தைத் தொட்டது. மேலே கூறிய கவிஞர்களின் காவிய மந்தமாருதம் சுற்றிலும் மெல்லென வீசி நின்ற சூழ்நிலையிலே நடராஜனின் கவிதை பிறந்தது.

இவரிடம் நாம் காண்பது முதிர்ந்த புதுமை—இனிய சொல்லாட்சி. இயற்கையான கவியின் தன்னம்பிக்கையுடன் தமது கவிதைகளை இவர் எழுதுகின்ருர். இவர் தம் காவிய சிருஷ்டியின் வைகறையிலே ''மருதக் கலம்பகம்'' என்ற சிறு காவியத்தைச் செய்யத் தொடங்கினர். இது நல்ல கவிதை: ஆனல் முற்றுப்பெறவில்லை. முற்றுப்பெறின் ஒரு நல்ல சிறு காவியம் தமிழுக்குக் கிடைக்கும்.

இவர் இதுவரை வெளியிட்ட நூல்கள் இரண்டு. ஒன்று ''மேகதூதம்'' மற்றது ''கீதாஞ்சலி''. இரண்டும் மொழி பெயர்ப்புகளே. அழகுக் கவி மன்னர்களான காளிதாசனும் தாகூரும் எழுதிய இவ்விரண்டு நூல்களும் மணமகள் போல் அலங்கார சோபனம் பெற்றவை. இவற்றை மொழி பெயர்த்து நடராஜன் இரு உயிருள்ள காப்பியங்களைத் தமிழ் மொழிக்களித்துள்ளார்.

நடராஜன் அரசாங்க ஊழியராக இருப்பதனல் அவர் விரும்பினலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி அழகுக் கவிஞராகவே தாமும் வாழ வேண்டியிருக்கிறது. புரட்சிக் கருத்துக்களை தம் கவிகளில் அவர் புகுத்த முடியாது. இறக்கை வெட்டுண்ட நிலையில் இன்று அரசியற் சேவைக் கூட்டுக்குள் சிக்கிக் கிடக்கும் பல தமிழ் எழுத்தாளர்கள் நிலையிலேயே அவரும் இருக்கிருர். எதிர்காலத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறுவார். அப்பொழுது அவர் கவிதை ''விட்டு விடுதலை''யாகி நிற்கும்; வானம்பாடி போல் அவர் கவிப்பண்ணைக் கட்டற்றிசைக்கும் அக்காலத்தை ஈழத்தமிழகம் எதிர்நோக்கி நிற்கிறது.

இதுவரை இன்றைய இலங்கைத் தமிழ்க் கவிதையின் மூன்று போக்குகளை நான் சுட்டிக் காட்டினேன். ஆனல் இம்மூவரும் தான், நமது காலத்தில் கவிதைகள் படைத்தார்கள் என்பதில்லை. இன்னும் பலர் பாடியிருக்கிருர்கள்; பாடிவருகிருர்கள். அவர்களின் சிருஷ்டிகள் யாவற்றையும் எடைபோடுவதற்கு இக்கட்டுரை இடந்தராது. கவிதைப் பணியில் இன்று ஈடுபட்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்கள் வரிசையில் பகவத்கீதை பாடிய மட்டக்களப்புப் பெரியதம்பிப் புலவர், சகுந்தலை வெண்பா பாடிய தமிழறிஞர் சு. நடேசபிள்ளை (இவர் நூல் முற்றுப் பெறவில்லை) காதலியாற்றுப்படை பாடிய கலாநிதி கணபதிப்பிள்ளை, வள்ளி பாடிய மகாகவி, முருகையன், தமிழரசின் தேசீய கீதம் பாடிய பரமஹம்சதாசன், ''சிலம்பொலி'' பாடிய நாவற்குழியூர் நடராஜன், அசோகமாலா பாடிய கே. கணேஷ், க. இ. சரவணமுத்து, வித்துவான் வேந்தனர், சோ. வேலாயுதபிள்ளை, ''ஆனந்தத்தேன்'' படைத்த சச்சிதானந்தன், புத்தர் சரிதை பாடிய சிதம்பரநாத பாவலர், வி. கே. ராஜதுரை, மாலைக்கு மாலை பாடிய யாழ்ப்பாணன், குழந்தைக் கவிஞர் மா. பீதாம்பரன், திமிலைத் துமிலன், தில்லைச்சிவன், நீலாவணன், புதிய வண்டுவிடு தூது பாடிய அல்வாயூர் மு. செல்லையா முதலியோரைக் குறிப்பிடலாம். இருது சங்காரம் பாடிய சதாசிவ ஐயரும், மரதனஞ்ச லோட்டம் பாடிய புலவர் நல்லதம்பியும் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள்.

காளமேகம் முன்னைய முடியாட்சிக் காலத்தின் அங்கதக் கவியாக விளங்கினர். இலங்கையில் இப்பொழுது சில்லையூர் செல்வராசன் ஜனநாயக காலத்தின் அங்கதக் கவியாகக் கவி எழுதி வருகிருர். ''தான்தோன்றிக் கவிராயர்'' என்ற பெயரில் இவர் எழுதும் நையாண்டிக் கவிகள் எல்லோராலும் விரும்பி வாசிக்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள தமிழ்க் கவிஞர்கள் சிறந்த நூல்கள் பலவற்றைச் சிருஷ்டித்தளிக்காவிட்டாலும் ஒரு சிறந்த கவிதைப் பத்திரிகையைத் தமிழ் கவிஞர் உலகிற்கு அளித்தனர். ''தேன் மொழி'' என்ற பெயருடன் வரதர்—மகாகவி கூட்டு முயற்சியாக வெளிவந்த இக் கவிதைச் சஞ்சிகையை நாம் என்றும் மறக்க முடியாது. இச்சஞ்சிகை ஆறு இதழ்களுடன் அழிந்து போயிற்று. இது இன்னும் சில காலம் நீடித்திருக்குமேல் பல சிறு காவியங்களைத் தமிழுலகத்திற்கு அளித்திருக்கலாம். ஈழத்துக் கவி

ஞர்கள் செத்த ''தேன் மொழிக்''கு மீண்டும் புத்துயிர் கொடுப்பார்களா?

இலங்கையிலுள்ள கவிஞர்கள் முன்னர் ஈழ கேசரி, மறுமலர்ச்சி, பாரதி, ஆனந்தன் முதலாம் பத்திரிகைகளில் எழுதினர். இன்று சுதந்திரன், தினகரன், வீரகேசரி, கலைச் செல்வி, ஈழநாடு ஆகியவற்றில் எழுதி வருகிருர்கள். நாவற்குழி யூர் நடராஜன் என்ற இளங் கவிஞர் இலங்கை வாஞெலியில் பதவியேற்றபின் வாஞெலியும் தமிழ்க் கவிதை வளர்த்தது. வாஞெலியில் பல கவியரங்கங்களை நடத்தியதோடு வாஞெலிக் கவிதை நாடகம் என்ற புத்தம் புதிய காவிய முயற்சிக்கும் அவர் அடிகோலினர். இவரது முயற்சியால் பல கவிதா நாடகங்கள் இலங்கை வாஞெலியில் அரங்கேறியுள்ளன. அவற்றை யாராவது திரட்டி நூல் வடிவில் வெளியிடுவார்களா?

உலகப் படத்தில் ஒரு சிறு புள்ளியாக விளங்கும் இலங்கையில் சிறுபான்மையராக விளங்குபவர்கள் இலங்கைத் தமிழர்கள். இவர்கள் வசிக்கும் தமிழ்ப் பிரதேசம் மிகக் குறுகிய எல்லையைக் கொண்டது. இந்நிலையில் இவர்கள் தமிழ் மீது கொண்டிருக்கும் ஆர்வமும் தமிழில் கவிதைகளை ஆக்குவதில் கொண்டிருக்கும் ஊக்கமும் அதிசயிக்கத்தக்கனவாகும்.

ஈழத்துக் கவிஞர்கள் இதுவரை சாதித்த தென்ன என்று கேட்டால் அவர்கள் இயற்றிய பல சிறு நூல்களை நாம் சுட்டிக் காட்டுவதோடு உலக மகா கவிஞன் காளிதாசனைத் தமிழில் மொழி பெயர்த்தளித்ததையும் குறிப்பிடலாம். அரசகேசரி அளித்தது ''இரகுவம்சம்''; குமாரசாமிப் புலவரும், சோ. நடராஜனும் அளித்தது ''மேகதூதம்'' (இருவரும் இருநூலியற்றினர்). ''இருது சங்கார''மளித்தது சதாசிவ ஐயர். இவைமட்டுமல்ல நோபல் சங்கப் பலகையில் பரிசு பெற்ற தாகூரின் கீதாஞ்சலியைத் தமிழாக்கியது நடராஜன். இன்னும் பல நூல்கள் எதிர் காலத்தில் இலங்கையிலிருந்து வெளிவரும் என்பதிலும் ஐயமில்லை.

பூதந்தேவஞர் தொடக்கம் நடராஜா, மகாகவி வரை வாழையடி வாழையாக தமிழ் வளர்த்த கவிஞர் பரம்பரை வாழ்க! வாழ்க!

ஏடுகள் சொல்லும் கதை

'' ஏட்டுச் சுவடிகள் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தாலன்றே தெரியவரும். ஏட்டை எடுக்கும் போது ஓரம் சொரிகிறது. கட்டை அவிழ்க்கும் போது இதழ் முறிகிறது. ஏட்டைப் புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது.''

— சி. வை. தாமோதரம் பிள்ளை

★ ★ ★

நாவல்

வாழ்க்கையில் நடக்கும் போராட்டத்தின் சித்திரமே நாவல். நாவலிற் கதை உண்டு. மனித வாழ்க்கையே கதைதான். வாழ்க்கை இன்றிக் கதை இல்லை. கதா பாத்திரங்களின் கோவையாக, கதை நிகழ்ச்சிகளின் கோவையாக அமைந்திருப்பது நாவல்.

— கலாநிதி க. கணபதிப்பிள்ளை

கட்டுரை

சொக்கன்

ஆங்கில மொழியின் சேர்க்கையால் தமிழ் பெற்ற நற்பயன்கள் பல. அவற்றுள் கட்டுரை இலக்கியமும் (Essay) ஒன்ருகும். கட்டுரையாவது எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாயும், சுருக்கமாயும் பலபட வகுத்துரைத்தலாம். கதை, நவீனம், நாடகம் முதலிய இலக்கியப் பிரிவுகளில் உணர்ச்சி உரை நடையே (Emotive Prose) பெரும்பாலும் இடம் பெறும். கட்டுரையிலே அறிவியல் உரைநடையே (Scientific Prose) அதிகமாக இடம் பெறும்.

கற்பனையாற்றல், அழகுறச் சொல்லும் திறன், உணரும் வன்மை முதலான பண்புகள் வாய்க்கப்பெற்றவன், சிறந்த கதாசிரியனுகவோ, கவிஞனுகவோ, நாடகாசிரியனுகவோ வருதல் எளிது. ஆனுல், அவன் சிறந்த கட்டுரையாசிரியனுவது எளிதன்று. ஏனெனில், ஒரு கட்டுரையாசிரியனுக்கு, பல நூல்களையும் தெளிவுறக்கற்ற பரந்த அறிவும், தருக்க ஞானமும், தான் எடுத்துக்கொண்ட பொருளை ஒழுங்குபடத் தொகுத்துக்கூறும் பண்பும் இன்றியமையாதவை. இச்சிறப்பாற்றல்கள் எம் நாட்டவருக்கு (ஈழத்தமிழருககு) முதுசொமாய்க் கிடைத்தவை எனலாம். கடந்த நூற்றுப்பத்தாண்டுகளில், (1850—1960) நம் நாட்டில் வாழ்ந்த தமிழறிஞர் பலரும், இவ்வுண்மையைச் செயற்படுத்தியுள்ளனர். அவர்கள் கட்டுரை இலக்கியத்தை வளஞ்செய்த வகையை ஆராய்வதே, இக்கட்டுரையின் நோக்கமாகும், இது ஒரு முழுமையான கட்டுரையன்று. கட்டுரையாளனின் அறியாமையால், பல நல்லறிஞரின் தொண்டுகள் இங்கு இடம் பெருதிருத்தலும் கூடும். அவ்வாருயின், அப்பிழையை அறிஞர்கள் பொறுப்பார்களாக.

நிற்க, யாழ்ப்பாணத்தில் கட்டுரை இலக்கியத்தைத் தொடக்கி வைத்த பெருமை, 'வசன நடை கைவந்தவல்லாளர்' என்ற புகழுக்கு உரியவராய் வாழ்ந்த நாவலர் பெருமானையே (1822—1879) சாரும். அவர் வாழ்ந்த காலத்தில் செய்யுள்களே பெருந்தொகையாய் வெளியாயின. தம் சமயத்தைப்பரப்ப முனைந்து நின்ற பாதிரிமாரே வசனநடையைக் கையாண்டதோடு, தம் சமயச்சார்பான பிரசாரக் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டனர். இந்த நிலை கண்டு மனம் நொந்த நாவலர் சைவசமயக் கொள்கைகளைப் பரப்ப உரைநடையைப் பயன்படுத்திப் பல கட்டுரைகள் வரைந்தார். அக் கட்டுரைகள் தெளிவும், நேர்மையும் கொண்டவை. 'கூறியது கூறல், மயங்கிக்கூறல், வழுஞ் சொற்புணர்த்தல்' முதலான குற்றங்களை அச் சுக் கட்டுரைகளில் காணல் இயலாது. அவர் எழுதிய நான்காம் பாலபாடம், சைவதூஷண பரிகாரம் (1854) நாவலர் பிரபந்தத் திரட்டு என்பவை நல்ல கட்டுரைகளுக்கு இலக்கியங்களாய் அமைந்துள்ளன. நிறுத்தக் குறிகளை (Punctuations) முதன் முதல், தமிழில் பயன்படுத்தியவரும் இப்பெரியாரே. இவர் காலத்திலும் சிறிது பின்பும் இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, நீர்வேலிச் சங்கரபண்டிதர் (சைவப் பிரகாசனம்), ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை (செந்திருக்கம், வெள்ளைத்துரைமார்), உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, சுன்னுகம் அ. குமாரசாமிப்புலவர் முதலானேர் இலக்கியத்தோடும், சமயத்தோடும் தொடர்புடைய சில சிறந்த கட்டுரைகளை எழுதினர் என்று அறிகிருேம்.

பின்னர், யாழ்ப்பாணத்துக் கோப்பாயைச் சேர்ந்த சபாபதி நாவலர் என்ற அறிஞர் தமிழின் தொன்மை, அதன் இலக்கண இலக்கிய வளங்கள் என்பவை பற்றிய சில கட்டுரைகளை எழுதி 'திராவிடப் பிரகாசிகை' என்னும் ஒரு நூலை வெளியிட்டார். அத்தொகுதியிலே உள்ள விடயங்கள்பற்றி, இன்று வாழும் அறிஞர்கள் வேறுபட்ட கருத்துக்கொண்டுள்ளனர் என்பது உண்மையே. எனினும் மொழி வரலாற்றுக் கட்

டுரைகள் எழுதுவதற்கு இவரின் கட்டுரைகள் வழிகாட்டிகளாயின என்பதை மறுத்தல் இயலாது.

ஆறுமுகநாவலர் காலம் தொடங்கிச் சிறிது பிற்பட்ட காலம்வரை, வெளிவந்த கட்டுரைகள் பெரும்பாலும் சமயச் சார்புடையனவாகவே உள்ளன. இருபதாம் நூற்றுண்டின் தொடக்க காலத்தும் பின்பு சரித்திரம், (History) (திருவாளர்கள் ஆ. முத்ததம்பிப்பிள்ளை, முதலியார் இராஜநாயகம் முதலியோர் எழுதிய 'யாழ்ப்பாணச் சரித்திரங்கள், இம்முயற்சிக்குச் சான்றுகளாகும்), மொழியியல் (Plilology) (இத்துறையில் சுவாமி ஞானப்பிரகாசர் அருந்தொண்டு செய்துள்ளார்) முதலிய துறைகளில் சில கட்டுரை முயற்சிகள் நடந்தனவேனும், இவற்றிற்கான தொடக்க அறிகுறிகளை நாவலர் காலத்தில் காணல் இயலாததாயிற்று. பெருகி வந்த பரசமய வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துதலே அக்கால அறிஞர்களின் ஒரே குறிக்கோளாய், இருந்தமையால், எந்தக் கட்டுரையை எழுதினுலும், அதில் சமயவிடயங்கள் கலப்பதை, அவர்களால் தவிர்க்கக்கூடவில்லை.

கண்டனங்கள் எழுதுதலும் நாவலர்கால அறிஞர்களின் சிறப்பியல்புகளுள் குறிப்பிடத் தகுந்த ஒன்றுகும். நாவலரவர்களே பெருங் கண்டனப் புலியாய் விளங்கினர். வடலூர் இராமலிங்கசுவாமிகளது 'அருட்பா'வை மறுத்து அது மருட்பாவே என நிறுவிய அந்தப் பேரறிஞரின் ஆழ்ந்த அறிவும், தருக்கிக்கும் திறமையும் வியக்கத்தக்கன.

பரசமய வெள்ளம் அணைக்குள் அடங்கியதும், இலக்கண, இலக்கியக் கட்டுரைகளின்பால் தமிழறிஞர்களின் கருத்து செல்லத் தொடங்கியது. இவர்கள் எழுதிய கட்டுரைகளை, மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் வெளியிட்ட 'செந்தமிழ்ச் செல்வி' இரு கரங்களும் நீட்டி வரவேற்றது. மகாவித்துவான் சி. கணேசையர், அருட்டிரு விபுலானந்த அடிகள், போன்ற பெருமக்கள் தம்புலமை நலஞ்சிறந்த கட்டுரைகளை எழுதி இந்தப் பத்திரிகை வாயிலாய் வெளியிட்டனர்.

இலக்கண சம்பந்தமான பல விடயங்களைத் தெளிவானதும், இலக்கண வரம்பு கடவாததுமான உரைநடையில், மகாவித்துவான் ஐயரவர்கள் எழுதிய வண்ணம் இருந்தார். இக்கட்டுரைகள் பலரது அறியாமை இருளைப் போக்கின. தொல்காப்பிய விளக்க உரையின் அனுபந்தங்களாய்ச் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகள்மூலம், இவரது அறிவுச்சிறப்பை நாம் நன்கறியலாம்.

ஆற்றெழுக்குப்போன்ற ஒலிநயம் நிறைந்த உரைநடையைக் கையாண்டு, இலக்கிய விடயங்களைச் சிறப்புற எழுதிய பெருமை விபுலானந்த அடிகளார்க்கே உரியது. 'பாரதத்தின் கதாநாயகன் கன்னனே' எனச்சான்று காட்டி நிறுவிய அவர் கட்டுரையும், இமயத்தின் இயற்கை அழகைச் சிறப்புற எடுத்துக்காட்டும் 'இமயம் சேர்ந்த காக்கை' என்ற கட்டுரையும், 'யாழ் நூல்' என்ற இசைபற்றிய ஆராய்ச்சி நூலும் தமிழிற்கு அணியாவன.

சுன்னகம் அ. குமாரசாமிப்புலவர் பால் தமிழ் கற்று, இன்று பண்டிதமணியாய் விளங்கும் சி. கணபதிப்பிள்ளை அவர்களும் சிறந்த இலக்கிய, சமயக்கட்டுரைகள் எழுதுவோராவர். கந்தபுராணம், இராமாயணம், ஈழத்துப் புலவர்களின் படைப்புக்கள் முதலியவற்றின் சிறப்பியல்புகளைப் பேச்சாலும், எழுத்தாலும் எடுத்துக்காட்டிய பெருமை இவரையே சாரும். பள்ளிப்பாலரும் விளங்கிக்கொள்ளும் தெள்ளு தமிழிலே, படிப்போர் நெஞ்சங்களை ஈர்க்கும் வகையிலே கட்டுரைகள் வரைவதில், பண்டிதமணி வல்லுநர். இவரது கட்டுரைத்தொகுதி 'இலக்கிய வழி' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது.

இவர்கள் மட்டுமல்லாது,புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, வித்துவான் க. வேந்தனர், தனிநாயக அடிகள், பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. கி. இலட்சுமணன் M.A., கலாநிதி அ. சதாசிவம், திருவாட்டிகள் மகேஸ்வரி மகாதேவா, கங்கேஸ்வரி கந்தையா, சத்தியதேவி துரைசிங்கம் முதலானேரும் இலக்கியக்கட்டுரைகள் எழுதுவதில், முன்னணியில் உள்ளனர்.

நிற்க, மதச்சார்புடைய கட்டுரைகளை எழுதியோரும், இலக்கியத்தொடர்பான கட்டுரைகளை எழுதியோரும் தமிழிற்கும், சிறப்பாக ஈழத் தமிழகத்திற்கும் பெருந்தொண்டு செய்தனர் என்பது உண்மையே. எனினும் இத்தொண்டு சைவமும், தமிழும் நன்கறிந்தோர்க்கே பெரும் பயன் அளிப்பதாயிற்று. சாதாரண தமிழறிவுள்ளோரும், படித்துப் பயன் அடையத்தக்க

கட்டுரைகளை எழுதும் ஆர்வத்தை இவர்கள் பெற்றிருக்கவில்லை.

இங்கிலேயில், கடந்த சில ஆண்டுகளாக, கட்டுரை இலக்கியம் பல புதுத்துறைகளில் படரத்தொடங்கியுள்ளமை மகிழ்ச்சி தரும் செய்தியே. மக்கள் ஆட்சிபற்றியும், பொதுஉடைமை பற்றியும் பேசப்படுங்காலம் இக்காலம் 'மக்களுக்குப் பயன்படாத எதுவும் புறக்கணிக்கப்பட்டு விடும்' என்ற புதியதொரு கொள்கை இன்று எங்கும் விரைந்து பரவுகிறது. இந்தக்கொள்கையின் செல்வாக்கு இலக்கியத்திற் புகுந்துவிட்டதிலும் வியப்பில்லை. எளிமை, பல துறைகளில் உள்ளோர்க்கும் பயன்படுதல், வாழும் சமூகத்தின் வேட்கைகளை நிறைவு செய்தல் முதலிய பண்புகளைக் கொண்டு கட்டுரை இலக்கியம் பல கிளைகளை விடத்தொடங்கியள்ளது. விஞ்ஞானம் (Science), சமூகவியல்(Social Science), பொருளியல் (Economics), அரசியல் (Politics), சட்டம் (Law), இலக்கிய வரலாறு (History of Literature), இலக்கியத் திறனாய்வு (Literary Criticism), நகைச்சுவை (Humour), அங்கதம் அல்லது நையாண்டி (Satire), வரலாறு (Biography), சுயசரிதம் (Autobiography), பிரயாணம் (Travels), சொந்த அனுபவங்கள் (Personal experiences), நுண்கலைகள் (சிற்பம், ஓவியம், இசை) பற்றிய விளக்கங்கள் (Reviews on Fine Arts), தான் வாழும் சமூகத்தின் குறை நிறைகள், அவற்றை மேற்கொண்டு வெற்றிபெறும் வழிவகைகள் என்ற இத்தகைய பலவுமே அந்தக் கிளைகளாகும்.

பல ஆண்டுகளாய் விஞ்ஞானம் என்பது ஒரு பரீட்சைப்பாடம் என்றும், அது சாதாரண மக்களால் விளங்கிக்கொள்ளமுடியாதது என்றும் கருத்து நிலவிவந்தது. இக்கருத்தை முறியடித்து விஞ்ஞானத்தை யாவரும் விளங்கத்தகுந்த ஒன்ருக ஆக்குவதில், கடந்த சில ஆண்டுகளாய் எம்நாட்டில் முயற்சிகள் நடந்துள்ளன. இம்முயற்சியில் இறங்கிக் கட்டுரைகள் எழுதுபவர்கள், திருவாளர்கள் கிருஷ்ணன் (ஈழகேசரி), பேராசிரியர், கலாநிதி எலியேசர் (தினகரன்), வி. இராமகிருஷ்ணன் (ஈழநாடு), 'தேவன்'- யாழ்ப்பாணம் ('வான வெளியிலே' என்ற நூல்), இ. அம்பிகைபாகன் (ஈழகேசரி), சுப்பிரமணியம் (விஞ்ஞானி), சோ. சிவபாதசுந்தரம் (ஒலிபரப்புக்கலை—இது தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுபெற்றது) என்போராவர்.

பொருளியல், சட்டம் முதலிய துறைகளில் கட்டுரைகள் எழுதும் ஆர்வமும் இன்று முளைவிடத்தொடங்கியுள்ளது. இத்துறைகளில் ஆற்றல் வாய்ந்தோரைத் தூண்டி, அவர்களின் கட்டுரைகளை வெளியிடும் 'தினகரன்' (திருவாளர்கள் கா. சிவத்தம்பி, கதிர்காமநாதன்,) 'சுதந்திரன்' (சொ. வன்னியசிங்கம் M. Sc (Econ), B. Com.. சபாபதிப்பிள்ளை M. A. (Cantab) L. L. B, Bar at Law), முதலிய பத்திரிகைகளின் தொண்டை நாம் மறத்தல் இயலாது.

சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலைகளின் திறம் அறிந்து, அத்திறத்தைத் தமிழில் கூறியவர், கலைப்புலவர் க. நவரத்தினமாவர். 'தென்னிந்தியச் சிற்பங்கள்' என்ற இவரது ஆராய்ச்சி நூல், ஈழத்தமிழரின் அறிவாற்றலைத் தமிழ் நாடும் அறியுமாறு செய்தது.

விலங்குகளின் வாழ்க்கை, அவற்றின் உளத் தத்துவம் முதலியவற்றை நுண்ணிதாய் ஆராய்ந்து, சுவைபடக் கூறும் திரு. எஸ். வி. ஓ. சோமநாதர் F. Z. S, அவர்களது முயற்சியும் மறக்கக்கூடிய ஒன்றன்று. வீரகேசரியில் அவ்வப்போது வெளியாகும் அவரது கட்டுரைகள் படித்துப் பயன்பெறத்தக்கவை.

'அறிவியல்' கட்டுரைகளின் வளர்ச்சி இவ்வாருக, இனி இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்பற்றி நோக்குவோம். இலக்கியவரலாற்றினை நடுவுநிலை பிறழாது எழுதுவது என்பது எளிதன்று. இத்துறையில் முயன்ற பல அறிஞரும் பெருங்கண்டனங்களுக்கு ஆளாயினர். எனினும் தயங்காது இலக்கிய வரலாற்றுக்கட்டுரை முயற்சிகளில் இறங்கியுள்ள, ஈழத்து அறிஞர்களுள் திரு. செல்வநாயகம் M. A. கலாநிதி சு. வித்தியானந்தன், திரு. சு. நடேசபிள்ளை, B. A, B. L, F. R. H. S. என்போர் குறிப்பிடத்தகுந்தவர்கள் தமிழ் இலக்கிய வரலாறு (சுருக்கம்) தமிழ் உரைநடை வரலாறு (சுருக்கம்) என்னும் இரு நூல்களை, திரு. வி. செல்வநாயகமும், 'இலக்கியத் தென்றல்' 'தமிழர் சால்பு' என்னும் இரு நூல்களைக் கலாநிதி சு. வித்தியானந்தனும் எழுதியுள்ளனர் திரு சு. நடேசபிள்ளை 'இராமாயணத்தில் வரும் இலங்கை எது?' என்பதை ஆராய்ந்து 'இலங்கை ஆற்றுப்படை' என்ற கட்டுரையையும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் வாசித்து, விரைவில் நூல்வடிவம் பெறப்போகும் 'திருவள்ளுவர் காலம்' என்ற கட்டுரையையும் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணக் கிராமங்களது வாழ்க்கை முறையையும், அவர்களது தெய்வ நம்பிக்கையையும், அவர்களுக்கு உறுதுணையாய் அமைந்த கருப்பொருள்களையும் பற்றி எளிய தூய தமிழ் நடையில் எழுதுவதில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் வல்வர். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழாண்டிதழிலும், வேறு கல்லூரி இதழ்களிலும் 'பனை', யாழ்ப்பாண மக்களிடையே உலாவும் பேய்க்கதைகள், யாழ்ப்பாணக் கோவில்களில் உள்ள வாகனங்கள் முதலாக அவர் எழுதியுள்ள கட்டுரைகள் படித்து இன்புறத்தக்கன. இவ்வாறே மட்டக்களப்பு மக்களின் தலங்கள், அவர்களின் பொழுது போக்குகள்பற்றி அவ்வப்போது திரு. செ. கணபதிப்பிள்ளை அவர்களும் கட்டுரைகள் எழுதுகின்றார் அன்றியும், கிராமியப்பாடல்களின் சிறப்பினை விரித்து, வெள்ளவத்தை மு இராமலிங்கம் அவர்களும், அருள் செல்வநாயகம் அவர்களும் கட்டுரைகள் எழுதிவருகின்றார்கள், மலைநாட்டு மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கட்டுரைகள் எழுதுவதில் திரு. வி. வி. வேலுப்பிள்ளை சிறந்தவராவர்.

இலக்கியத் திறனாய்வு தமிழிற்குப் புதியதன்று. இத்துறைக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த வ. வே. சு. ஐயர், கு. ப. இராஜகோபாலன், பெ. கோ. சுந்தரராஜன் போன்றோர் கால்நூற்றாண்டிற்கு முன்னரே வித்திட்டுள்ளார்கள். எனினும் இன்றுதான், திறனாய்வுக்கட்டுரைகளுக்கு ஆதரவு கூடி வருகின்றது. திருவாளர்கள் வி செல்வநாயகம், க. கைலாசபதி, கனக செந்திநாதன், காவலூர் இராசதுரை. சில்லையூர் செல்வராசன் முதலான குறிப்பிடத்தகுந்த நல்ல திறனாய்வாளர் நம்மிடையே தோன்றியுள்ளமை பெருமை தரத்தகுந்த செய்தியே.

திரு. வி. செல்வநாயகம் M. A. அவர்கள் கவிதையின் தன்மை, உரை நடைப்பண்பு, மரபு போன்ற கடினமான பொருள்களை எடுத்துக்கொண்டு, அவற்றிற்கு விளக்கங்களைப் பல்கலைக்கழக ஆண்டிதழிலும், கல்லூரி இதழ்களிலும் பல கட்டுரைகளாக அவ்வப்போது எழுதி வருகின்றார்.

திரு. க. கைலாசபதி ஐந்தாண்டுகளுக்கு முன்னரே, வீரகேசரியில் திறனாய்வின் தன்மைகளை எடுத்துக்காட்டியதோடு அமையாது, குறிப்பிடத்தகுந்த சில எழுத்தாளர்களின் படைப்புக்களை நல்லமுறையில் திறனாய்வும் செய்துள்ளார்.

திரு. கனக செந்திநாதன், ஈழத்து எழுத்தாளர்களின் கவிதை, கதை, கட்டுரைகளை அவ்வப்போது திறனாய்வு செய்து வருகின்றார். 'கரவைக்கவி கந்தப்பனார்' என்னும் புனைபெயரில் ஒளிந்து கொண்டு ஈழத்துப் பேனா மன்னர்கள் என்ற தலைப்பில், சில ஆண்டுகளுக்கு முன்னர் நாற்பது எழுத்தாளர்களை ஈழத்தமிழ் உலகத்துக்கும், மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தது நல்லதோர் முயற்சியாகும். கவிஞர் செல்லையாவின் 'இளம்பிறை' என்ற கவிதை நூலுக்கும் இவர் நல்லதொரு திறனாய்வு (கவிதை வானில் இளம்பிறை) செய்திருக்கின்றார். இவரின் வழியிலே 'இளவரசு' என்பார். தமிழ் வளர்க்கும் செல்வர்கள் என்ற தொடரில் இருபத்திரண்டு கலைஞர்களை ஈழகேசரி மூலம் திறனாய்வு செய்ததும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. பத்திரிகை ஆசிரியர் என்ற தோரணையில், வீரகேசரி லோகநாதன் எழுத்தாளர்களின் நூல்களைத் திறனாய்வு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் 'நாவல் உலகில் வரதராசனாரின் இடம்' என்ற விவாதக்கட்டுரைத் தொடர் தினகரன் வார இதழில் வெளியானதைப் பலரும் அறிவர். அத்தொடரின் முதற்கட்டுரை திரு. காவலூர் இராசதுரையினால் எழுதப்பட்டது. இக்கட்டுரை காரணமாய் அவர் பலருடைய கண்டனங்களுக்கு ஆளானாரெனினும், அவரது திறனாய்வு உறுதி வாய்ந்த அடிப்படையில் அமைந்த ஒன்றே. சுதந்திரனில் பணி செய்த காலத்தில் திரு. அ. ந. கந்தசாமி, பண்டிதர் திருமலைராயர் என்ற பெயரில் சிலப்பதிகாரத்தைப் பற்றிப் புதிய கண்ணோட்டத்துடன் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகள் வாசகர் மத்தியில் பரபரப்பை யூட்டின. இந்தவகையில் அவரது மொழிபற்றிய கட்டுரைகளையும் குறிப்பிடலாம். சில்லையூர் செல்வராஜன் அவர்களும் அவ்வப்போது புதியனவாய் வெளிவரும் நூல்களுக்கு நல்ல திறனாய்வு செய்து வருகின்றார். இத்துறையில், திருவாளர்கள் ஈழத்துச் சோமு, என். கே. ரகுநாதன், எச். எம். பி. முஹிதீன் போன்ற புதியவர்களும் இறங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதே.

இவை மட்டுமல்லாது, அரசியல், சமூகம், அதன் ஏற்றத்தாழ்வுகள் முதலிய விடயங்களைக் கட்டுரை வடிவில் அமைக்கும் எழுத்தாளர் சிலரும் எம்மிடையே உள்ளனர். அரசியல் சமூகவியல் என்பவற்றைத் கற்றறிந்த பண்பும், தாம் வாழும் சமூகத்தில் ஆழ்ந்த அனுதாபமும், தெளிந்த கண்ணோட்டமும், அனுபவ அறிவும் இவர்களுக்குத் துணையாக உள்ளன. திருவாளர்கள் எஸ். எச். பேரின்பநாயகன் (ஆட்சிமொழி). இளங்கீரன் (பாரதி கண்ட சமுதாயம், இலங்கையின் இரு மொழிகள்), இ. செ. நடராசா (நாம் எங்கே செல்கிறோம்?) எஸ். டி. சிவநாயகம், எஸ். வி. பி. பிள்ளை (சட்டமறுப்பு) எம். எம். மக்கீன் (தொழில்துறை வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கு—தினகரன் நாளிதழ்') ஏ. எம். ராஜி (முஸ்லிம்களின் கல்வி நிலை—தினகரன் நாளிதழ்) முதலானோர், இந்தக் கட்டுரையாளர்களில் குறிப்பிடத் தகுந்தோராவர். சளைக்காமல் அரசியற் கட்டுரைகள் எழுதி வருபவர்களில் 'தேசபக்தன்' என்ற புனைபெயரில் ஒளிந்திருக்கும் பிரேம்ஜியும் முக்கியமானவர்.

பிரயாணக் கட்டுரைகள் எழுதுதல் ஒரு கலையாகும். 'தாம் கண்ட இடத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பதோடுமட்டும், ஒரு பிரயாணக் கட்டுரை ஆசிரியன் பொறுப்பு முடிந்துவிடவில்லை. அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அரசியல் கண்ணோட்டம், பழக்கவழக்கங்கள், அங்கு வாழும் மக்களின் உளப்பாங்குகள், இயற்கையாய் அமைந்துள்ள குறைநிறைகள் முதலாம் பலவற்றையும் சுவை குன்றாது கூறும் ஆற்றலும் அவரிடம் பொருந்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு பல அம்சங்களும் பொருந்தக் கட்டுரை எழுத வல்லோரும் நம்மிடையே உள்ளனர் என்பது மகிழ்வு தருவதே. திரு. சோ. சிவபாதசுந்தரத்தின் கபிலவஸ்து ('நண்பன்') இலண்டன் அனுபவங்கள் (வீரகேசரி), திரு. எஸ். எச். பேரின்பநாயகனின் (எனது யப்பான் யாத்திரை), திரு. க. கைலாசபதியின் (நான்கு நாடுகளில் 44 நாட்கள்), சச்சிதானந்த யோகிகளின் (கைலயங்கிரி யாத்திரை), திரு. பரமானந்தம் B. A. (Hons)சின் ('மூங்கில் திரைக்குப்பின்னால்') லோகநாதனின் (பிரிட்டனில் நான்காம் நாயகம்), குலரத்தினத்தின் (சிவனொளிபாத யாத்திரை (மறுமலர்ச்சி) முதலியோரின் பிரயாணக் கட்டுரைகள் படித்துப் பயன்பெறத்தக்கன. லண்டன் சென்றுவந்த திரு. சண்முகநாதன், நாவற்குழியூர் நடராசன் ஆகியோரும் தனித்தனி எழுதிய பிரயாணக் கட்டுரைகளும் குறிப்பிடத் தக்கன.

இவற்றோடு நம் நாட்டுப் பெரியார்கள், கலைஞர்கள் முதலியோரின் வரலாறுகள் பலவும் நூல் வடிவம் பெற்றுள்ளன. 'நாவலர்' என்னும் சிறு நூல் தந்த வரதர் அவர்களும், 'விபுலானந்த அடிகள்' என்னும் நூல் யாத்த அருள் செல்வநாயகம் அவர்களும், 'ஈழத்துத் தமிழ்ப் புலவர் சரிதம்' தந்த மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களும், 'கல்கி பிறந்தார்' என்ற கட்டுரையை அளித்த இராச அரியரத்தினம் அவர்களும், 'மூன்றுவது கண்' (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வரலாறு)கொடுத்த கனகசெந்திநாதன் அவர்களும், 'நான் கண்ட கலைப்புலவர்' எழுதிய கா. மாணிக்கவாசகர் அவர்களும் பெரியார் வரலாற்றுக் கட்டுரைகள் எழுதியோரில் குறிப்பிடத் தகுந்தோராவர்.

பெரியார்களின் வரலாறு எழுதுவதில் முதலியார் குலசபாநாதன் அவர்களை மிகவும் முக்கியப்படுத்திக் குறிப்பிடலாம். பெரியார் வாழ்க்கையில் நடைபெற்று, யாரும் அறியாத சம்பவங்களை வெளிப்படுத்துவது இவரது வரலாற்றுக் கட்டுரைகளின் தனிச் சிறப்பாகும். சேர். பொன். அருணாசலம், சேர். பொன். இராமநாதன், சேர். முத்துக்குமார சுவாமி, கலாயோகி ஆனந்த குமாரசாமி, சி. வை. தாமோதரம்பிள்ளை, ந. கதிரைவேற்பிள்ளை ஆகியோரைப்பற்றியும், இலங்கை வரலாற்றைப் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளார். 'கதிர்காமம்' பற்றிய ஸ்தல வரலாற்றை எழுதியதுடன், யாழ்ப்பாண வைபவமாலையைச் செப்பனுறப் பதிப்பித்துமிருக்கிறார். எனினும் இத்துறையில் நாம் பெருந்தொண்டு செய்யவில்லை என்பது உண்மையே. எங்கள் 'ஆறுமுக நாவலர்' வரலாறு யோகி சுத்தானந்தபாரதியாராலும், திரு. மாயாண்டி பாரதியாலும் விரிவாக ஆராயப்பட, நாம் சிறு நூல்களே எழுதியுள்ளோம். இது வருந்தத்தக்க செய்தியே.

'சுயசரிதம்' எழுதுவதில், நம் நாட்டவர் என்றுமே கவனம் செலுத்தியதில்லை. அவ்வாறு எழுதுவது 'தற்புகழ்ச்சியாகிவிடும்' என்று இவர்கள் கருதியிருக்கலாம். ஆனால், இந்த உளப்பாங்கு தவறு என்றே கூறல்வேண்டும். பலஆண்டுகள் வாழ்ந்து, பலவேறு எண்ணப் போக்குக் கொண்ட மக்களோடு பழகி பல வேறுபட்ட

வாழ்க்கை முறைகளைக் கீண்ட அனுபவ அறிவுடைய ஒருவர் தம் சந்ததியாருக்குத் தம் காலத்து அனுபவங்களை எடுத்துக்கூறுதல், நல் வழி காட்டியாக அமையும் என்பது உறுதி. உதாரணமாக மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் எழுதிய 'என் சரிதம்' என்ற நூல், ஏறக்குறைய எண்பது ஆண்டுகளின் தமிழக வரலாருகவே அமைந்துவிட்டமை நாம் நன்கறிந்ததே. ஆக, நம் நாட்டில் முதறிஞராய் உள்ளோர் தம் வாழ்க்கையையும், அனுபவங்களையும் கட்டுரை வடிவில் தரல் மிகவும் இன்றியமையாததே. அவர்களை அவ்வாறு எழுதத் தூண்டுவது பத்திரிகைகளதும், பிரசுரிப்பாளர்களதும் கடனுகும்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது தான் பெற்ற அனுபவங்களைக் கட்டுரையாய் எழுதுதலும் ஒரு வகை. இத்தகைய கட்டுரைகள் சிலவும் அண்மைக் காலத்தில் நம் நாட்டில் எழுதப்பட்டுள்ளன. 'தடுப்புக்காவலில் ஆறுமாதங்கள் (திரு. செ. இராசதுரை (பாராளுமன்ற அங்கத்தவர்)—சுதந்திரன்) 'ஸ்ரீ அளித்த சிறை' ("நாவேந்தன்") என்பன, இக்கட்டுரைகளுக்கு உதாரணங்களாகும்.

நகைச்சுவை, அங்கதம் முதலாம் துறைகளிலும் கட்டுரை முயற்சிகள் நடந்துள்ளன. திருவாளர்கள் "சுயா" (ஈழகேசரி) அ. செ. மு. (மறுமலர்ச்சி) "உதயணன்", ரீ. பாக்கியநாயகம் (சுதந்திரன்), "தீவான்" (கலைச்செல்வி)முதலாம் எழுத்தாளர்கள் அவ்வப்போது நகைச்சுவைக் கட்டுரைகள் பல எழுதியிருக்கிருர்கள். திரு. வி. வி. வேலுப்பிள்ளை 'தினகரனில்' தாம் எழுதிய மலைநாட்டுத் தமிழர்களின் தலைவர்கள், உரிமைப் போர்த் தளபதிகள் பற்றிய கட்டுரைகளில்,உயர்ந்த அங்கதத்தைக் கையாண்டுள்ளார்.

இன்னும், பல்வேறு துறைகளில் கட்டுரைகள் எழுதிவரும் பலர் நம்மிடையேயுள்ளனர். அவர்களில் குறிப்பாக, கண்டிய நடனத்தைப் பற்றி முதன்முதலாக எழுதிய திரு.கே.கணேஷ், சிங்கள இலக்கியங்கள் பற்றி எழுதிவரும் திரு. நா. சுப்பிரமணியன், திருமலையைப் பற்றிச் சுவைபட எழுதிய வீரகேசரி பாலா, 'கிருபா' என்ற புனை பெயரில், இலங்கையில் முதன் முதலாவது நடைச் சித்திரங்கள் எழுதிவந்த திரு கே. ராமநாதன், முஸ்லிம் சமுக கலை, கலாச்சாரத்தைப் பற்றி எழுதிவரும் ஜனுப் முகம்மது உவைஸ், அல்ஹாஜ் வி. எம். சம்சுதீன், ஆவடிக் காங்கிரஸ் பற்றியும், தார்மீகப் புனருத்தாரண இயக்கம் பற்றியும் 'ஐயாறன்' என்னும் புனைபெயரில் எழுதிய திரு. கே. பி. ஹரன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இதுவரை, நம் நாட்டில் அவ்வப்பொழுது நடந்த கட்டுரை முயற்சிகளின் வரலாற்றைச் **(இது வரலாற்றுக் கட்டுரையே. வளர்ச்சி பற்றிய திறனுய்வுக் கட்டுரையன்று. இதை மனத்தில் இருத்திக்கொண்டு கட்டுரையை வாசித்தலே பயனுடையது.)** சிறிது கண்டோம். இவற்ருல் நம் நாடு, கட்டுரை இலக்கியத்தில் முழுமையான வளர்ச்சி பெற்றுவிட்டது என்பது கருத்தன்று. கட்டுரையாளர் மேலும் கவனம் செலுத்தி வளர்க்கவேண்டிய துறைகள் மிகப் பலவாகும். வருங்காலத்தில் அவர்கள் அம்முயற்சிகளில் ஈடுபட்டு, சிறந்த கட்டுரைகளைப் படைத்து நம்நாட்டிற்கு அளித்தல்வேண்டும். இக்கட்டுரையால் உண்டாகக்கூடிய பயன், எதிர்காலக் கட்டுரை ஆக்கத்திற்கான ஊக்கமாக இருக்குமாளுல், அது இந்தக் கட்டுரை ஆசிரியனுக்கு மகிழ்ச்சியும், பெருமையும் தரக்கூடிய ஒன்றே.

பரிசோதனுசிரியர்

பரிசோதனுசிரியர் படும் கஷ்டம் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச் சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. தூக்கினல் அன்ருே தெரியும் தலைச்சுமை? ஒன்றற் கொன்று ஒவ்வாத இருபது, இருபத்தைந்து பிரதிகளேயும் அடுக்கி வைத்துக்கொண்டு, என் கண்காணச் சிந்தாமணிக் காவியத்தைப் பரிசோதனை செய்து, பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரைக் கேட்டால் சற்றே தெரியலாகும். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி.

— சி. வை. தாமோதரம்பிள்ளை

நமது எழுத்து

செ. கணேசலிங்கன்

"ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் நமது எழுத்தாளர்களிலும் பார்க்க வாழ்க்கையை நன்கு கூர்ந்து கவனித்து எழுதுகிறார்கள்."

இவ்வாறு சென்ற ஆண்டில் சென்னையில் இலக்கியத்தரம் மிக்க பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் என்னிடம் தெரிவித்தார். மனம் திறந்து உண்மையைக் கூறிய அவரின் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான பத்திரிகை ஆசிரியர்களும் பல எழுத்தாளர்களும் நமது எழுத்தாளர்கள் பற்றி மிகவும் தாழ்ந்த அபிப்பிராயமே கொண்டுள்ளனர். அதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம். ஒன்று; நமது எழுத்தாளர்களது சிருஷ்டிகளைப் படியாமை. இரண்டு: தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் ஈழத்தில் ஏராளமாக விற்பனையாவதால் இங்கு எழுத்தாளர்கள் இல்லை என்ற தப்பபிப்பிராயம். மூன்று: தவறான இலக்கிய மதிப்பீடு.

தமிழ் நாட்டிலும் பார்க்க ஈழம் கல்வியறிவிலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கும் நாடாகும். அதனால் இலக்கியப் பசி இங்கு அதிகமாக உள்ளது. இலக்கியத்தை வியாபாரமாகக் கருதுபவர்கட்கு ஈழம் நல்ல சந்தையாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் இலக்கியத்தின் தரம் குறைவாக இருந்தாலும் சிறப்புற அச்சேற்றி மலிந்த விலைக்கு விற்க முடிகிறது. இதனால் ஈழத்தில் மலிந்த விலையில், சிறந்த முறையில் பத்திரிகைகளையோ, நூல்களையோ வெளியிட்டு தமிழ் நாட்டுடன் போட்டிபோட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கு படிக்கத்தக்கவர்கள் லட்சக்கணக்கில் இருந்தும் சிறப்பான வாரப் பத்திரிகைகளையோ, மாத இதழ்களையோ வெளியிட்டு வெற்றிபெற முடியாத நிலை இன்னும் நீடிக்கிறது. தேவை ஏற்படும்போதுதான் எழுத்தாளன் படைக்க முற்படுகிறான். தேவை ஏற்படாதபோது அவன் தனது படைக்கும் ஆற்றலை அடக்கியடக்கி மலடாக மரித்துவிடுகிறான். இதே நிலைதான் பெரும்பாலான நமது எழுத்தாளர்களுக்கு ஏற்படுகிறது. இந்த இக்கட்டான நிலையிலும் மிகக் குறுகிய வாய்ப்பினைக் கொண்டு ஈழத்திலே நமது எழுத்தாளர் பரம்பரை ஒன்று தோன்றி, தலைநிமிர்ந்து நிற்பது பாராட்டிற்குரியதொன்றாகும்.

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இலக்கிய நூல்களுக்கு விமர்சனம் எழுதும் களமாக ஈழம் ஒரு காலம் இருந்தது. அதன் பின்னர் உரை நூல்களும், இலக்கிய சமய நூல்களும் கவிதைகளும் இங்கு வெளியிடப்பட்டன. இக்காலத்தில் கணிசமான அளவு படைப்பு இலக்கியங்கள் (creative Literature) வெளிவந்ததாகக் கூறுவதற்கில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நாவல்கள் எழுத ஒருசிலர் முயன்றனர். தமிழ் நாட்டிலும் அதே பரீட்சார்த்த நிலையே இருந்தது. பின்னர் வ. வெ. சு. ஐயர், கு. ப. ரா., பாரதியார் ஆகியோர் சிறுகதை இலக்கியத்தைத் தமிழ் நாட்டில் ஆரம்பித்து வைத்தனர். கலைமகள், ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் சிறுகதைகள் ஒழுங்காக வெளிவந்தன. இக்கதைகளைப் படித்த ஈழத்து இளைஞர்களிடையேயும் ஒரு புது விழிப்பு ஏற்பட்டது. திருவாளர்கள் இலங்கையர்கோன், வைத்திலிங்கம், சம்பந்தன், சிவபாதசுந்தரம் ஆகியோரும் சிறுகதை இலக்கியப் பரீட்சையில் ஈடுபட்டனர். காதல், வறுமை, தமிழாசிரியர் துன்பங்கள் ஆகிய கருவை வைத்து, உருவ அமைப்பையே முதலாகக் கொண்டு கதைகள் எழுதினர். பின்னர் தமிழ் நாட்டின் மணிக்கொடி பரம்பரை ஈழத்திலே ஒரு மறுமலர்ச்சி யுகத்தை ஆரம்பித்து வைத்தது.

'மறுமலர்ச்சி' எழுத்தாளர்கள் சிறுகதை என்பது வெறும் உருவ அமைப்பல்ல; கருத்து வேகத்தையும் உள்ளடங்கக் கூடியது என்பதை நிரூபித்தனர். நமது சிறுகதை எழுத்தாளர்களிடையே ஒரு புதிய தோற்றமும் வேகமும் 1955-ம் ஆண்டின் பின்னரேயே ஏற்படத் தொடங்கியது.

கற்பனை உலகிலிருந்து இலக்கியம் யதார்த்த நிலைக்கு வரவேண்டும்; ஈழநாட்டு மக்களின் வாழ்க்கையையும், போராட்டங்களையும், வளர்ச்சியையும் பிரதிபலிப்பதாக இலக்கியம் உருவாக்கப்பட வேண்டும் என்ற புதிய கருத்து நம் எழுத்தாளரிடையே வளரத் தொடங்கியது. முற்போக்கு எண்ணமும், மார்க்ஸிஸ தத்துவ அறிவும் பெற்ற இளைஞர்களே இப்புதிய திருப்பத்திற்கு வழிவகுத்துக் கொடுத்தனர்.

பாரதியின் பின்னர் கவிதைத் துறையிலும் ஈழத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. எளிய சந்தத்தில், இலகுவான தமிழ் நடையில் பல்வேறு கருத்துகளைக் கொண்டு நமது கவிஞர்கள் பாடினர். நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்ட இன உணர்ச்சி தமிழ் மொழியையும், தமிழர்களின் பண்டைய வீரத்தையும் பறைசாற்றிப் பாடுதற்குத் தூண்டியது. அரசியல் கருத்து வேறுபாடுகள் கவிஞர்களை அரசியல் கட்சிகளைச் சார்ந்து கவிதை இயற்றத் தூண்டியது. இவற்றிடையே அரசியலிலும் பிறவற்றிலும் கிண்டற் கவிதைகள் எழுதும் திறமையும் நமது கவிஞர்களிடையே சிறப்புற்று வளர்ந்து வருகிறது.

கவிதைகள் இன்று இலக்கியத்திலிருந்து ஒதுங்க, உரை, நடை வளர்ந்து வருகிறது. கவிதையில் நீண்ட காவியங்கள் எழுதும் வழமை உலக மொழிகளிலெல்லாம் அருகி வந்துவிட்டது. தமிழ் நாட்டைப் போலவே ஈழத்திலும் கவிதை உருவில் நீண்ட காவியம் எழுதும் முயற்சி நம் கவிஞர்களிடையும் அற்றுவிட்டது.

தமிழ் நாட்டுடன் ஒப்பிடும்போது நாவல் துறை ஈழத்தில் கணிசமான அளவில் வளர்ந்ததாகக் கூறுவதற்கில்லை. படைக்கத்தக்க ஆற்றல் உள்ள எழுத்தாளர்களிடை, தாமே நாவல் எழுதி வெளியிடத்தக்க வாய்ப்பு இல்லை. எழுத்தாளர்களை ஊக்கி எழுதச் செய்து வெளியிடத்தக்க பத்திரிகைகளோ, புத்தக வெளியீட்டு நிலையங்களோ இங்கு கிடையாது. இதனாலேயே நாவல் எழுத வல்லவர்களும் சிறுகதை உலகிலேயே நின்று தாளம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நமது எழுத்தாளர்களிடையே நாடகம் எழுதுவோரும் மிகக் குறைவானவர்களே. தமிழ் நாட்டிலும் இதே நிலையே நிலவுகிறது. அங்கேயும் சினிமா, நாடகத் துறையை ஆக்கிரமித்துள்ளது.

இங்கு சினிமாப் பாணியை ஒட்டி நாடகங்கள் எழுதப்பட்டு ஆங்காங்கே நடிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் கிராமியப் பேச்சைக் கையாண்டு நாடகங்கள் எழுதி ஒரு சிலர் வெற்றியீட்டினர்.

தமிழ் மொழியிலேயே அரிவரி தொடக்கம் பல்கலைக் கழகம் வரை படிக்கும் காலம் நெருங்கி வருகிறது; கல்வியறிவு மக்களிடையே இன்று பெருகி வருகிறது; உலக அரசியல் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பெற்று சோஷலிஸப் பாதையை நோக்கி வளர்ந்து வருகிறது; இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வதுமட்டுமல்ல உலக இலக்கிய வளர்ச்சி பற்றியும் நமது எழுத்தாளர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும்.

தமிழ் இலக்கியத்தையும் உலகத்திலுள்ள பிற மொழி இலக்கிய வளர்ச்சியோடு ஒட்ட வளர்க்கும் பொறுப்பும் நமது எழுத்தாளர்களையே சார்ந்ததாகும். நாம் இப்பொழுதே உலக இலக்கிய வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பல வருடங்கள் பின்தங்கியுள்ளோம். இந்த நீண்ட இடைவெளியை எட்டிப் பிடிக்க நமது எழுத்தாளர்கள் துரித நடைபோடக் கங்கணம் கட்டிக் கொள்வதவசியம். ★

காதல்

வேலை வெட்டியுள்ளவன் காதல் நோயை வளர்க்க மாட்டான். கவிதைகள் பாடவும், காதற் கடிதங்கள் வரையவும், நீண்ட பெருமூச்சுகள் விடவும் அவனுக்குப் பொழுது ஏது? அவன் முன்னே கடமையும், முன்னேற வேண்டுமென்ற எண்ணமும் இலட்சியமுமே இருக்கும்.

— பிரேம் சந்த்

சிற்பம்

கலைப்புலவர் க. நவரத்தினம்

தமிழ் மொழி பேசப்படும் நாடுகள் சேர மண்டலம், சோழமண்டலம், பாண்டிய மண்டலம், ஈழமண்டலம் எனப்பிரிக்கப்பட்டன. ஈழமண்டலம் இலங்கையைக் குறிக்கும். சிலர் ஈழமண்டலம் வட இலங்கையை மாத்திரம் குறிக்குமெனக் கருதுகின்றனர். 'ஈழமண்டல சதகம்' என்னும் நூலின் ஆசிரியர், இலங்கை முழுவதையுமே ஈழநாடாகக் கொள்ளுகின்றார். ஈழமண்டலமாகிய இலங்கை, பௌத்த சமயத்திற்கும், சிங்கள மக்களுக்குமே இருப்பிடமாகுமென வெளிநாட்டார்பலர் கருதுகின்றனர். இலங்கையின் சரித்திரத்தையும் அதனோடு தொடர்புடைய கலாசார வளர்ச்சியையும் நல்ல முறையில், நடுநிலைமையுடன் எழுதாமையே இத்தவறான கருத்துக்களுக்குக் காரணமாகும்.

இலங்கை மிகப் பண்டைக்காலந் தொடக்கம் சைவசமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் தாயகமாக விளங்கிவருகின்றது. தென்னிந்தியத் தமிழ் நாட்டிற்கு அடுத்தபடியாக இன்று உலகத்தில் சைவசமயக் கலாசாரப் பண்புகள் சிறந்து விளங்கும் நாடு ஈழநாடேயாகும். தேவாரப்பாடல் பெற்ற தலங்களைத் தன்னகத்தே கொண்டிலங்கும் பெருமை இலங்கைக்குமுண்டு. தேவார காலத்திற்கு முற்பட்ட திருமந்திரத்தில், இலங்கை சிவ பூமிகளிலொன்றாகக் கூறப்பட்டுள்ளது

இலங்கையில் பௌத்த சமய கலாசாரம் வளர்ச்சி பெற்றமை போலவே, சைவ சமய கலாசாரமும் வளர்ச்சி பெற்றுள்ளது. சிங்கள அரசர்கள் பலர் சைவ ஆலயங்களை நல்ல முறையில் ஆதரித்து வந்தனர். இலங்கைச் சரித்திர நூலாசிரியர்கள், இந்நாட்டு வரலாற்றை வட இந்தியக்காலம், தென்னிந்தியக்காலம் எனப் பிரித்து எழுதுவது வழக்கம். இந்தியக் கலைகளின் வரலாற்று ஆசிரியர்கள், இலங்கையையும் சேர்த்து எழுதுவதும் மரபு. இவை யாவும் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் மிகப் பண்டைக்காலந் தொடக்கமிருந்துவரும் கலாசார சமயத்தொடர்புகளை வலியுறுத்துவனவாகும்.

இலங்கையில் சிவ வழிபாடு எக்காலத்தில் தோற்றியதென்பதை நாம் இன்று கூற முடியாத நிலையிலிருக்கின்றோம். இராவணன் சிவ வழிபாடுடையோனாக விளங்கினானென்பதைத் தேவார திருவாசகங்களால் அறிகின்றோம். முருக வழிபாடு இலங்கையில் தேவநம்பியதீசன் காலத்துக்கு முன்னரே காணப்பட்டது. தென்னிந்தியத் தமிழ் மக்களின் தொடர்பாலும், சைவசமயத் தொடர்பாலும், இலங்கையில் திராவிட கலாசாரப் பண்புகள் காலத்துக்காலம் பரவின. இலங்கையில் இன்று காணப்படும் சைவசிற்ப ஆலயங்களும், சிற்பவடிவங்களும், நாம் கூறுவதற்குச் சான்றுகளாகும்.

அனுராதபுரத்திலுள்ள ஈசுரமுனியவிகாரையின் பக்கத்திலுள்ளகற்பாறையில் காணப்படும் முனிவரது வடிவமும், குதிரைத்தலையும், யானைத்தலைகளும் பல்லவர்காலத்துச் சிற்ப முறையிலமைந்துள்ளன. நாலந்தாவிலுள்ள 'கொடகே' என்னும் ஆலயமும் பல்லவசிற்ப முறையிலமைந்துள்ளது. வேறு பல்லவசிற்பங்களும் அனுராதபுரத்திலுள.

பொலனறுவாவில் சோழர் காலத்துச் சிற்ப முறையைப் பின்பற்றிய ஆலயங்களும், சிற்ப வடிவங்களும் பலவுள்ளன. முதலாம் இராஜ இராஜனால் கட்டப்பட்ட வானவன்மாதேவி ஈசுரமுடையார் எனப் பெயர்கொண்ட (இரண்டாம் சிவாலயம்) சிவாலயமே சோழர் சிற்பமுறையிலமைந்த மிகப் பழைய ஆலயமாகும். முதலாம் பராக்கிரமவாகுவாலும், பிறசிங்கள அரசர்களாலும் அங்கு கட்டப்பெற்ற பௌத்த ஆலயங்களில், வானவன்

மாதேவிச் சிவாலயத்தின் அம்சங்கள் காணப்படுகின்றன.

பொலனறுவையிலுள்ள சிறந்த சிற்பக்கல் வடிவம் பராக்கிரமவாகுவின் வடிவமெனக் கருதப்படும் சிலையாகும். இவ்வுருவம் பொத்கல் விகாரைக்குச் சமீபத்திலுள்ள கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் எவரைக் குறிக்கின்றதென்பது இன்றுவரை வாதிக்கப்படுகின்றது, கர்ணபரம்பரைக்கதை, அது பராக்கிரமவாகுவைக் குறிக்கின்றதெனக் கூறும். டாக்டர் பரணவிதான அவர்கள் கர்ண பரம்பரைக்கதையை தமது ஆராய்ச்சியால் நிலைநாட்ட எத்தனிக்கின்றார், இலங்கைச் சர்வகலாசாலைச் சமஸ்கிருத விரிவுரையாளர் திரு. ஸ்ரீகுணசிங்கி அவர்கள் 'இலங்கைச் சரித்திர சமூக ஆராய்ச்சி'ச் சஞ்சிகையில் எழுதியுள்ள 'பொத்கல் விகாரைச் சிற்ப வடிவம்' என்னுங் கட்டுரையில், மிக விரிவாக ஆராய்ந்து, அவ்வடிவம் ஒரு முனிவரின் வடிவமேயெனக்கூறி, அம்முனிவர் கபிலராக இருக்கலாமெனவும் கூறுகின்றார். அவ்வடிவம், எந்த முனிவரைக் குறிக்கின்றதென்பதை நாம் இன்று அறுதியிட்டுக் கூறமுடியாதிருப்பினும், அது ஒரு முனிவரின் வடிவமென்பதை எவரும் மறுக்க இயலாது. இவ்வடிவம் சோழ அரசர்கள் காலத்தில் செதுக்கப்பட்டதா பராக்கிராமவாகுவின் காலத்தில் அல்லது அதற்குப்பின் செதுக்கப்பட்டதாவென்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும். பொலனறுவை புலத்திநகரம் அல்லது புலத்தியநகரம் எனவும் அழைக்கப்பட்டது. எனவே, இவ்வளவும் புலத்திய முனிவரின் ஞாபகச் சிலையாகவும் கருத இடமளிக்கின்றது. இவையாவும் ஆராய்ச்சியால் தெளியப்படவேண்டிய முடிவுகளாகும்.

பொலனறுவாவில் கண்டெடுக்கப்பட்ட பலசெம்புச்சிலைகள் இப்பொழுது கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அச்சைவத்திருவடிவங்கள், சோழ சிற்ப முறையிலும், பாண்டிய சிற்ப முறையிலும் அமைந்துள்ளன. அவற்றுள் சிறந்தன சுந்தரர், சம்பந்தர், சந்தியாநிர்த்தனர் வடிவங்களாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிவம் உலகத்திலுள்ள சிறந்த சிற்ப வடிவங்களிலொன்று என்பது கலை ஆராய்ச்சியாளர் கருத்தாகும். சில வருடங்களுக்கு முன்னே திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட சிற்பவடிவங்களும் சோழ சிற்ப முறையில் அமைந்தனவேயாகும்.

பாண்டிய சிற்பமுறையில் அமைந்த சிவாலயம் பொலனறுவாவிலுண்டு. அது இன்று முதலாம் சிவாலயமென அழைக்கப்படுகின்றது. யப்பகூவா அரண்மனைச் சிற்பங்களும் பாண்டியமுறையில் அமைந்தனவாகும்.

சோழர் காலத்து ஓவியங்கள், பொலனறுவையிலுள்ள திவங்க ஆலயத்திற் காணப்படுகின்றன. கண்டி அரசர்கள் காலத்து ஓவியங்கள். அக்காலத்துத் தென்னிந்திய பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. நாயக்க அரசர்கள் தொடர்பு அக்காலத்தில் இலங்கைக்கு ஏற்பட்டமையே இதற்குங் காரணமாகும். கடலதேனிய விகாரையும், இலங்காதிலக விகாரையும் தென்னிந்திய சிற்பமுறையிலேயே அமைந்துள்ளன. கண்டி புத்த தந்த ஆலயத்தூண்களும், மதுரைக்கோயிற் தூண்களை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கண்டியரசர்கள் காலத்தில், கண்டியில் பரவிய கலைகள் யாவும் தென்னிந்தியப் பண்புகள் பொருந்தப்பெற்றனவேயாகும்.

தென்னிந்திய இசையும், நடனமும் இன்று இலங்கை முழுவதிலும் பரவி வருகின்றன.

இலங்கையின் கலை வளர்ச்சிக்குப் பல்லவர்களது காலந்தொடங்கி (7-ம் நூற்றாண்டு) தென்னிந்தியத் தமிழகம் பல ஆக்கங்களை அளித்துள்ளது, இக்காலத்திற்குப்பின் இலங்கைக் கலாசாரம் சிங்கள மக்களதும், தமிழ் மக்களதும் ஒன்றுபட்ட கலாசாரக்கலப்பினால் வளர்ச்சி பெற்றதெனக் கூறுவது மிகையாகா. இன்று இவ்விரு பிரிவினர்களுக்கும், அரசியல் பொருளாதாரஉலகில் சில வேறுபாடுகளிருப்பினும், கலாசார வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் அவர்கள் ஒரே பண்புடையோராகவே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவ்வொற்றுமையின் அடிப்படையில்தான் இலங்கையின் எதிர்காலம் அமைக்கப்படுதல் வேண்டும். ★

மண்ணைத் தெய்வமாக்கும் சக்தி மனதுக்கு இருக்குமானால், மனிதனைத் தெய்வமாக்கும் சக்தியும் அதற்கு இருக்கிறது.
— பிரேம் சந்த்

மேடை நாடகம்

கலையரசு கே. சொர்ணலிங்கம்

ஆதிகாலத்திலிருந்தே நாடகம் நமது வாழ்க்கையில் ஒரு விசேஷ லட்சியமாக விளங்கி வந்திருக்கிறது. ஏறக்குறைய 60 வருடங்களுக்கு முன் 'நாடகம்' 'விலாசம்' என்று நாட்டுக் கூத்துக்களாகவே நமது நாட்டில் நடிக்கப்பட்டு வந்தன. கோடை காலங்களில் இந்தியாவிலிருந்து சிறுகோஷ்டிகள் யாழ்ப்பாணம் வந்து கிராமங்களில் ஆடுவார்கள். அந்தக் காலத்தில் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் பிரயாணக்கட்டணம் 25 சதந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோஷ்டிகள் காலியாகவிருக்கும் எங்கள் வீடொன்றில்தான் தங்குயிருப்பது வழக்கம். நான் சிறுவனாகவிருந்த காலத்திலும் அவர்கள் வருவதுண்டு. எங்கள் குடும்பத்தார் கலையில் மிக ஆர்வங்கொண்டவர்கள். கொஞ்சம் செல்வாக்குமுடையவர்களாகையால் அந்தக்கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள் எமது இல்லத்திற்கு அடிக்கடி வந்துபோவார்கள். அவர்களுடன் கூடிப்பழகி சில பாட்டுகளைக் கற்றுக்கொள்ளுவோம். மேற்படி கோஷ்டிகளைப் போல கிராமங்களிலும் கூத்து ஆடுவார்கள். மானிப்பாய், ஆனைக்கோட்டை, வட்டுக்கோட்டை, இணுவில், நெல்லியடி, சுதுமலை போன்ற கிராமங்கள் நாட்டுக்கூத்துக்குப் பேர் பெற்றவை.

சுந்தரராவ் என்பவர்தான் முதல் முதலாகத் தன் கோஷ்டியுடன் கொழும்புக்கு வந்து அங்கே 'சீன்'களுடன் கூடிய மேடையில் 'டிருமா' முறையில் நாடகம் நடாத்தினாரெனக் கேள்வி. அதன்பின், ரி. ரி. நாராயணசாமிப்பிள்ளையவர்கள், சென்னை இந்து வினோத சபையாருடன் அநேக தடவைகளில் கொழும்பில் நாடகங்களை நடத்திப் பெரும்புகழ் ஈட்டியுள்ளார். இவரது நாடகங்களில் ஒன்றைமாத்திரம் 1906-ம்ஆண்டில் பார்த்திருக்கிறேன்.

யாழ்ப்பாணத்திலும் இரண்டொரு டிருமாக் கோஷ்டியினர் வந்து நாடகங்களை நடத்திச்சென்றார்கள். ஆனால் அவை மெச்சக்கூடியவையல்ல. 1900-ம்ஆண்டில் வண்ணார்பண்ணை புத்துவாட்டியார் வளவில் ஒரு கொட்டகையமைத்து நல்லதோர் கோஷ்டியை வரவழைத்துத் தொடர்ந்து சில மாதங்களாக நடாத்தினார்கள். இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த நடிகரின் பெயர்களையறிய அநேகர் விரும்புவார்கள். அவர்களில் முக்கியமானோர்: சி. எஸ். முனிசாமிநாயுடு, சி. எஸ். நடேசபத்தர், சி. என். சாமிநாதமுதலியார், ஜெகநாதஆழ்வார், அப்பண்ணாருவ், கெஞ்சின் றங்கசாமி நாயுடு முதலானோர். இவர்களுக்கெல்லாம் ஆசிரியரர்கவிருந்தவர் சங்கரதாஸ் சுவாமியவர்கள். மறு வருடமும் இன்னுமோர் கோஷ்டி வந்தது. அதில் ஸ்ரீனிவாச ஆழ்வார், மதார் சாகிப், சிறு பையனான எம் ஆர். கோவிந்தசாமி முதலியோர் வந்திருந்தார்கள். மேற்கூறிய யாவரும் தென்னிந்தியாவில் மிக உயர்ந்த நடிகராய் பிற்காலங்களில் விளங்கியவர்கள்.

அதே வருடத்தில் (1901-ல்) நமது ஊரில் மானா இந்து விநோத சபாவென்னும் பெயருடன் ஓர் சபையை ஸ்தாபித்து அரிச்சந்திரா—மயான காண்டத்தை நடத்தினோம். இதுவே இலங்கையரால் முதல் முதலாக 'டிருமா' முறையில் நடிக்கப்பட்ட நாடகமென்று நினைக்கிறேன். இதில்தான் நானும் முதல் முதலாக மேடையேறித் தேவதாசனாக நடித்தேன். எமது பள்ளிப் படிப்பைக் கெடுத்துவிடுமென்று சபையைக் கலைத்துவிட்டார்கள்.

எல்லா விஷயங்களிலும் போல் நாடகத்திலும் 'இமிட்டேஷன்' புகுந்துவிட்டது. போதிய தமிழ் அறிவோ, நாடக அனுபவமோ இல்லாவிட்டாலும் கொஞ்சம் சாரீரசுகமுண்டானால் எவரும் மேடைமீதேறி நடிக்கவாரம்பித்துவிட்டார்கள். நாடகமென்றால் வேடந்தரித்து திரைகள் முன் நின்று கச்சேரி செய்வதுபோலாயிற்று. நாடகத்திற்கேற்ற ஒத்திகை செய்வதில்லை. உடையென்றால் எல்லாப் பாத்திரங்

களுக்கும் கட்டைக்காற்சட்டையும், கோட்டும் தான். இராமர்தானும் அதே உடையில்தான் தோன்றுவார். வசனம் இஷ்டம்போல் பேசுவார்கள். அநேகமாக நடிகருள் போட்டியேற்பட்டுவிடும். அந்தச் சமயங்களில் வசனங்களும் பாடல்களும் எல்லை மீறி ஓடும். அன்றியும் நாடகங்களில் விரும்பத்தகாத பாடல்கள், பேச்சுக்கள், கட்டங்கள் இடம்பெறத் தொடங்கிவிட்டன. ஒரு சில கோஷ்டிகள் ஓரளவுக்குக்கிரமமாக நாடகங்களை நடாத்தியபோதிலும், பெண்களாவது பெரும் மனுஷராவது நாடகம் பார்க்கப் போகாதிருந்தார்கள். அப்படியிருக்கும் காலத்தில் 1911-ம் ஆண்டில் சென்னையிலிருந்து நமது குரு (ராவ்பகதூர் சம்பந்தமுதலியார்) அருண விலாச சபாவுடன் கொழும்புக்கு வந்து சில நாடகங்களை நடாத்தினர். அந்த ஜூன் மாதம் 10-ந் திகதியன்றே இலங்கையில் தமிழ் நாடகத்திற்கு ஒரு புது சகாப்தம் உண்டானதென்று சொல்லலாம். நாடகமென்றால் இன்னதென்பதை அன்றே உணர்ந்தோம். அவர்களைப் போல் நாமும் சபா ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்னும் ஆசை சிறுவர்களாகிய எங்களுக்குள் வேரிட்டது. ஆனல் எமக்கு வழி காட்ட ஒருவருமேயில்லை. இதனல் இரண்டு வருடம் காத்திருந்து மறுமுறை சுகுணவிலாச சபா கொழும்புக்கு வந்த சமயம் பெரியாரிடம் சென்றோம். நம்மைச் சிறுவர்களென்று அசட்டை செய்யாமல் பெரும் மனுஷருக்கேற்ற மரியாதையுடன் வரவேற்று, மற்றும் நடிகருக்கும் அறிமுகஞ் செய்து தம்மாலியன்ற உதவியெல்லாம் செய்வதாக வாக்களித்து, உற்சாகப்படுத்தியனுப்பினர். உண்மையாக நமது குருவின் உதவியும், ஒத்தாசையும், உற்சாகமும் எனக்குக் கிட்டியிராவிட்டால் நான் ஒரு நடிகனுக வந்திருக்கவும் மாட்டேன்; நமது லங்காசுபோத விலாச சபா அந்த உயர் நிலையை அடைந்திருக்கவும், மாட்டாது. பெரியார் பிரபல வக்கீலாகவும் நீதிபதியாகவுமிருந்த காலத்திலும் சிறியேன் என் மீதுள்ள அன்பினல் நான் ஓயாமல் எழுதும் கடிதங்களுக்கும், கேள்விகளுக்கும் கடிதம் கிடைத்த அன்றே பதில் அனுப்பி விடுவார். எங்கள் முன்னேற்றத்தில் அத்தனை அக்கறை எடுத்து வந்தார்.

நமது லங்கா சுபோத விலாச சபா முன்னேற்றமடைந்ததற்கு இன்னுமோர் காரணமிருந்தது. அதையும் சொல்லத்தான் வேண்டும். அந்நாட்களில் கொழும்பிலேயுள்ள பெரியோரின் ஆதரவு தாராளமாக எமக்கிருந்தது. விசேஷமாக 25, 30 பெரியோர்கள் எமக்கு எந்த நேரத்திலும் என்ன உதவியும் செய்வதற்கு ஆவல் கொண்டவர்களாயிருந்தார்கள். அவர்களில் எவர் ஒருவராவது தம்மையோ, தம்முடைய இனத்தவர்களையோ அல்லது தமக்கு வேண்டியவர்களையோ முன்னணிக்குக் கொண்டுவரவேண்டுமென்னும் அவாவால் ஏதும் உதவி செய்ய வந்தவர்களல்ல. அப்படிச் சுயநல நோக்கமின்றி கலை வளரவேண்டுமென்பதற்காக ஏதும் கொடுத்துதவக்கூடியவர்கள் தற்காலத்தில் எத்தனைபேர் நமது சமூகத்திலிருக்கிருர்கள்?

லங்கா சுபோத விலாச சபா, நாடகம் நடாத்த ஆரம்பத்திலிருந்து,நாடகம் சீரடையத் தொடங்கிற்று. முதலாவதாக, குறிக்கப்பட்ட ஆரம்ப நேரத்திலிருந்து 1 நிமிடந்தானும் பிந்தாமல் நாடகம் தொடங்கவேண்டுமென்பது கண்டிப்பான ஏற்பாடு. இரண்டாவதாக, சரித்திர காலத்தை உத்தேசித்து தக்க ஆராய்ச்சி செய்து அந்தந்த நாடகத்திற்கேற்றவாறு உடைகள், 'மேக்கப்' மேடையலங்காரங்கள் முதலியவற்றைத் தயாரிப்போம். பாட்டுகள் மிகக்குறைவு. அந்தக் கட்டத்திற்கு ஏற்றபடி உணர்ச்சிகளைத் துலக்கக்கூடிய வர்ணமெட்டுகளில் பாட்டுகளையியற்றுவோம். பிற்பாட்டுப்பாடி நேரத்தைச் சுணக்குவதோ உணர்ச்சியைக் கெடுப்பதோ நிறுத்தப்பட்டன. எல்லாவற்றிற்கும்மேலாக நடிப்பிலே பெரும் கவனம் செலுத்தினேம். தவருமல் பல மாதங்களாக ஒத்திகை செய்து வந்து நிர்வாக சபையார் அனுமதி கொடுத்த பின்னர் தான் மேடையேறுவோம். நாடகங்களும் பிறசாதியாரும், தமிழ் தெரியாதவரும்கூட விரும்பிப் பார்க்கக்கூடிய தரத்தையடைந்தன. மேற்படி சபையை முன்னேற்றச் செய்வதற்கு சுயநலங் கருதாது, கலை வளர்ச்சியையே நோக்கமாகக்கொண்டு ஒவ்வொரு அங்கத்தவரும் உழைத்து வந்தார்கள். அவர்களுள் தலைசிறந்த நடிகர் அநேகர் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானேர் மறைந்து விட்டார்கள். மறைந்தவர்களை நாம் மறக்கக்கூடாது. அவர்களில் முக்கியமானேர்: எம். இராஜேந்திரம், ஜே. ஜி. இராஜா, கே. சரவணமுத்து, எஸ். வி. சுப்பிரமணியம், வி. சின்னத்துரை, எம். எஸ். திருவிளங்கம், வி. குமாரவேலுப்பிள்ளை, வி. இரத்தினசபாபதி. எம். கந்தையா, ரி. கந்தையா, எஸ். பி. சீவரத்தினம், பி. அமிர்தலிங்கம், எஸ். மனுநாயகம், ஏ. நாகலிங்கம் முதலியோர். இப்படித் திறமைவாய்ந்த நடிகர் கொண்ட ஒரு கோஷ்டியின் நாடகங்களைப் பார்க்க இனி எப்போதாவது எமக்குச் சந்தர்ப்பம் கிட்டுமா?

ஏறக்குறைய லங்கா சுபோத விலாச சபா ஸ்தாபிக்கப்பட்டுச் சில வருடங்கள் நாடகங்களை நடாத்தி மறைந்துபோன நடிகருள் முக்கியமானோர் வி. இராமநாதன், எஸ். நவரத்தினம், வித்வான் இராமலிங்கம், பண்டிகர் சம்பந்தம், வி. கிருஷ்ணசாமி, சபாரத்தினம் (அம்மான்) ஆகியவர்கள்.

சபா நாடகங்கள் ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் நடக்க ஆரம்பித்ததிலிருந்து தொழில் நடிகரும் சீராக நடிக்க ஆரம்பித்தனர். இலங்கையில் புகழுடன் நடித்துச்சென்ற நடிகர் நடிகைகளுள் பின்வருபவரை முக்கியமாகக் கூறலாம். எம். ஆர் கோவிந்தசாமி, எஸ் ஜி கிட்டப்பா, கே. எஸ். ஆனந்தநாராயணன், மனமோகன், எம். ரங்கசாமி நாயுடு, பி, எஸ். இராமச்சந்திரம்பிள்ளை, கே. எஸ். செல்லப்பா ஐயர், கின்டான் பக்கிரி, கே. பி, சுந்தராம்பாள், எஸ். ஆர். கமலம், இராஜலட்சுமி ஆகியோர்.

1930-க்குப் பின், சினிமாவின் வருகையினாலோ அல்லது வேறு ஏதும் காரணத்தினாலோ நாடகத்தின செல்வாக்குக் குறைந்து கொண்டே வந்தது. செல்வாக்கு மாத்திரமல்ல, தரமே குன்றி வந்தது. இந்தச் சினிமாவினால் தமிழ்பாஷை, தமிழ்நாடகக்கலை, தமிழ்ச்சங்கீதம், தமிழ் கலாசாரப, தமிழ்ப்பண்பாடு, தமிழ்ச் சமூகம் இவைகளில் ஏதாவது முன்னேற்றமடைந்திருக்கிறதா? அல்லது பாழடைந்துவிட்டதா? இதற்கு விடை நீங்களே கூறவேண்டும். சினிமாவைப்பற்றி என் அபிப்பிராயத்தை நான் இங்கே எழுத முடியாது. சினிமா முதலாளிமார்கள் ஒருவர் இருவர் தவிர, யலர் பணம சம்பாதிப்பதற்காகவே படங்களைத் தயாரிக்கிறார்கள். அவர்களுக்குக் கலைமீது கவலையில்லை. ஒரு படத்தில் நாலு நடனங்கள், மூன்று குத்துச்சண்டைகள், காதல் என்ற முறையில் ஒருவரையொருவர் துரத்தித்திரியும் காட்சிகள், அழகான பெண்களை அங்க உறுப்புக்கள் தெரியக்கூடியவாறு உடுத்திவைப்பதுபோன்ற இன்னும் பொதுஜனங்களின் மனதைக் கவரக்கூடிய பல ஆபாசங்களையும் புகுத்திவிட்டால் படம் ஓடும். கலையைப்பொறுத்தவரையில் எத்தனை படங்களைப் பொறுக்கி எடுக்கலாம்.

சென்ற சில வருடங்களில் நாடகத்திற்கு மறுபடியும் மதிப்பு ஏற்பட்டுப் புத்துயிர் பெற்று வளர்ந்து வருவதாகத் தெரிகின்றது. இது சந்தோஷமடையக்கூடிய விஷயம். சினிமா என்ன கோளாறுகளை விளைவித்த போதிலும் உடை, வேஷத்தயாரிப்பு(Make up) மேடையலங்காரம், ஒளியமைப்பு முதலியன நாடகத்திற்கு பெரும் முன்னேற்றத்தையுண்டுபண்ணியுள்ளனவென்றே சொல்ல வேண்டும். இவைகளையெல்லாம் தக்கமுறையில் உபயோகித்து நாடகம் நடாத்தினல் வெற்றியடையலாம். ஆனல் நடிப்பு விஷயத்தில் சினிமாவைப் பின்பற்ருதிருந்தால் நலம் என்பதே என் அபிப்பிராயம். சில வருடங்களுக்குமுன் நமது மத்தியில் நடித்துச்சென்ற டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்கள் நயக்கு ஓர் எடுத்துக்காட்டாகவிருந்தன, அன்றியும் சென்னையில் சிவாஜி கணேசன், எம், ஜி. ராமச்சந்திரன், மனோஹர், சகஸ்ரநாமம், நவாப் இராஜமாணிக்கம் போன்றவர்கள் தத்தம் நிர்வாகத்தில் நாடகக்கோஷ்டிகளையமைத்துச் சிறப்பாக நடித்துவருகிறார்களென அறிகிறோம். இவ்வாறு நமது நாட்டிலுள்ளவராலும் பிரயாசையெடுத்து நாடகத்துக்குரிய எல்லா அம்சங்களையும் முறையாக ஆராய்ச்சி செய்து, படித்து அமைத்து நடிப்பார்களாகில் நமது நாடகங்களும் முன்னேற்றமடையும், தற்சமயம் கொழும்பில் 45, 50 நாடக மன்றங்களிருப்பதாக அறிகிறேன். இவைகளில் உள்ள அனுபவம்பெற்ற நடிகர்கள் சுயநல நோக்கங்களை ஒதுக்கி விட்டு ஒன்றுசேர்ந்து நடிப்பார்களாகில் நாடகக்கலை முன்னேறி வருமென்பதே எனது கருத்து யாழ்ப்பாணத்திலும் ஆங்காங்கு பல நாடகக் குழுக்கள் தோன்றுகின்றன. இதில் எனக்கொரு சந்தோஷம். ஒன்றின்மேல் மற்றொன்று பொருமைப்பட்டு மோதிக்கொள்ளாதென்பதற்குச் சில அறிகுறிகள் காணப்படுகின்றன. சில நாட்களுக்கு முன் ஒரு மன்றத்தாரின் நாடகத்தை மெச்சி அவர்களை அழைத்து தேனீர் விருந்து கொடுத்து உபசாரப்பத்திரமும் வாசித்துக் கௌரவப்படுத்தினர். இத்தகைய நல்மதிப்பு மன்றங்களுக்கிடையில் இருக்குமாயின் நாடகக்கலை கட்டாயமாக முன்னேறுமென்பதற்குச் சந்தேகமில்லை. கலை முன்னேறவேண்டுமென்னும் ஆர்வமுடையவர்களிடத்தில் பொருமை ஏற்படாது.

கைமாறு பெறும் நோக்கமுடையவரால் கலை விருத்தியடையாது.

குழந்தை இலக்கியம்

நா. மு. குமாரசிங்கன்

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் இலங்கையில் குழந்தை இலக்கியம், இன்றைய நிலையுடன் ஒப்புநோக்கினல் கணிசமான அளவுக்கு வளர்ந்திருந்தது. ஆனல் இன்று, கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியதுபோல், குழந்தை இலக்கியம் பெயரளவில் இருக்கிறது. எழுதிப் பழகும் மாணவர்கள் படைப்பதெல்லாம் இலக்கியமா?

இன்று இலங்கையில் குழந்தை இலக்கியம் உள்ள நிலையையும், தேக்க நிலைக்கான காரணத்தையும், அதைப் போக்குவதற்கான வழிவகைகளையும் ஆராயுமுன், இலங்கையில் குழந்தை இலக்கியத்தின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

வரலாறு

குழந்தைகளுக்காக இலங்கையில் முதன் முதல் வெளிவந்த பத்திரிகை—'பாலியர்நேசன்'. இது 1859–ம் ஆண்டு அமெரிக்க மிஷனைச்சேர்ந்த சாண்டர்ஸ் ஹிச்கொக் (Sanders Hitchcock) என்றவரின் முயற்சியால் நடைபெற்றது. இதன் ஆசிரியர் வில்லியம் சின்னத்தம்பி என்பார்.

1924-ம் ஆண்டில் மிகச்சிறந்த முறையில் குழந்தைகளுக்காக 'பாலர் மித்திரன்' என்ற பத்திரிகை வெளிவந்தது. இது மூன்றுமாதத்துக் கொருமுறை 167, செட்டித்தெரு, கொழும்பிலுள்ள 'ஹிந்து இலக்கிய சபை'க்காக எஸ். பத்மநாப ஐயரவர்களால் 'டயமண்ட் அச்சக'த்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் விலை 30 சதம். வருடச்சந்தா ரூபா ஒன்று. இந்தப் பத்திரிகையின் தரத்தில் இன்றுகூட இந்தியாவிலோ இலங்கையிலோ குழந்தைகளுக்கான பத்திரிகை எதுவும் தமிழில் வெளிவருவதில்லை என்றுல் மிகையாகாது.

1. வாசகத் திரட்டு.
2. செய்யுட் திரட்டு.
3. மாணவருக்கான கதை. (உதாரணம்: அலடின் கதை)
4. விளம்பரங்கள்.

ஆகிய நான்கு அனுபந்தங்களைக் கொண்ட 'பாலர் மித்திரன்' மாணவர்களுக்குத் தேவையான சகல அம்சங்களையும் உள்ளடக்கி வெளிவந்தது.

மட்டக்களப்புத் தமிழபிமானிகளும் 20-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சிக்காக சிறந்த சேவை செய்துள்ளனர்.

1934-ம் ஆண்டில் மட்டக்களப்பு அர்ச். மரிய பாடசாலையிலிருந்து மாணவர்களுக்காக 'சிறுவர் போதினி' என்ற மாத சஞ்சிகை வெளிவந்தது.

அதே போன்று அக்கரைப்பற்று ரோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையும் 'கலாவல்லி' என்ற பத்திரிகையை மிகச் சிறப்பான அம்சங்களுடன் வெளியிட்டது,

இதே காலத்தில் 'ஈழகேசரி' உதயமாகி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் செய்து வந்த குழந்தை இலக்கிய சேவைகளுக்கு கைலாகு கொடுத்தது.

இலங்கை குழந்தை இலக்கிய வளர்ச்சியின் உச்சகட்டம்—ஈழகேசரி 1939-ம் ஆண்டு வெளியிட்ட இளைஞர் சங்கக் கல்வி மலர். ஐம்பது சத விலையில் 160 பக்கங்கள் கொண்ட அரிய பொக்கிஷத்தையே மாணவர்களுக்கு அன்பளித்தார்கள். அம்மலரில் இன்றைய சிறந்த எழுத்தாளர்களான, கனக செந்திநாதன், அ. ந. கந்தசாமி, தி. ச. வரதராசன், அ. செ. முருகானந்தன் முதலியோரும், பெ. நா. அப்புஸ்வாமி, ராஜேஸ்வரி—தம்பு முதலியோரும் எழுதியிருந்தார்கள்.

அம்மலரில் வெளியாகிய, பண்டிதர் மு. நல்லதம்பி எழுதிய, "பொன் பெற்ற துறவு"

என்ற கதைப் பாடல் மிக நல்ல படைப்பு. அப்பாடல், பாடப் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளது.

அதன் பின்பு இலங்கையில் குழந்தை இலக்கிய வளர்ச்சியில் மந்த நிலை ஏற்பட்டு விட்டது.

பின்பு, சிறுவர்களுக்கென வெளி வந்த 'சுரபி' 'மாணவமணி' 'சிறுவர் உலகம்' 'தமிழ் மாணவன்' முதலிய மாசிகைகளுக்குப் போதிய ஆதரவும், பொருளாதார பலமும் இல்லாமையால் இடையே நின்றுவிட்டன. ஈழத்தில் ஏற்பட்ட குழந்தை இலக்கிய மறுமலர்ச்சியில் 'ஈழகேசரி கல்வி மலரு'க்கும் 'சுரபி'க்கும் முக்கிய பங்குண்டு.

இன்றைய நிலை

இலங்கையில் குழந்தைகளுக்கென வெளிவரும் பத்திரிகைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். தரமான இலக்கியம் படைக்கும் பத்திரிகை எதுவும் இங்கு இல்லை என்பதை நாம் மறுக்க முடியாது. அவ்வப்போது காளான்கள் போல் வந்து காலப்போக்கில் மறைந்து போகும் சில குழந்தைப் பத்திரிகைகளிலும், 'வீரகேசரி' 'தினகரன்' 'சுதந்திரன்' 'ஈழநாடு' முதலிய பத்திரிகைகளிலும் வெளிவரும் மாணவர்களுக்கான பகுதிகளிலும் சிறுவர்க்கான விஷயங்களை வெளியிடுகிறார்கள். இதைவிடத் தத்துநடை பயிலும் 'சிறுவர் சுடர்' 'வெற்றிமணி' போன்ற குழந்தைப் பத்திரிகைகளும் உள. இவ்விரு பத்திரிகைகளும் 'குழந்தை இலக்கிய' வளர்ச்சிக்கு சேவை செய்கின்றன எனச் சொல்லிவிட முடியாது.

நமது சகோதர மொழியாகிய சிங்களத்தில் "உதய" என்ற சிறுவர் பத்திரிகை அழகான முறையில் 25 சத விலையில் தரமாக வெளிவருகிறது. இலங்கையில் இனிமேலாவது குழந்தை இலக்கியம் வளரவேண்டுமென்ற அக்கறை பூண்டவர்கள் இப்பொழுது வெளிவரும் சிறுவர் பத்திரிகைகளையாவது தாராளமாக ஆதரிக்க முன்வர வேண்டும்.

கதை, கட்டுரை

இலங்கைக் குழந்தை எழுத்தாளர்கள் அநேகமாகக் கட்டுரைகளே எழுதுகின்றனர். சிறந்த கதைகள் எழுதும் சிறுவர் எழுத்தாளர் எவரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. காவலூர் ராசதுரை எழுதிய "பிச்சைக்காரன்" என்ற கதை ஒன்றுதான் ஓரளவு தரமானதாக சிறுவர்களுக்குச் சிந்தனை நல்கக் கூடியதாக அமைந்திருந்தது.

சிறுவர்களின் மன இயல்புகளை அறிந்து குழந்தை இலக்கியம் படைப்பதை விடுத்து, பத்திரிகை படிக்கும் மாணவர்கள் அத்தனை பேரும் எழுத்தாளர் ஆகும் பேரவாவால் உந்தப்பட்டு தரக்குறைவான விஷயங்களை எழுதுவதால் குழந்தை எழுத்தாளர்கள் ஆகிவிட முடியாது. பலர் இந்தியப் பாணியில், அங்குள்ள சூழ்நிலைகளைப் பகைப்புலமாக வைத்தே இலங்கையிலும் குழந்தை இலக்கியம் படைக்கிறார்கள். இது தவறு. இலங்கைப் பண்பாடு, பாரம்பரியம் இவர்கள் படைப்புகளில் மிளிர வேண்டும்.

தினகரன், வீரகேசரி, சுதந்திரன், ஈழகேசரி முதலிய பத்திரிகைகளின் சிறுவர் பகுதிகளில் எழுதிப் பயிற்சி பெற்று, இலங்கையில் ஒரு குழந்தை எழுத்தாளர் கோஷ்டி உருவாகியது. ஆனால் அவர்கள் இப்போ குழந்தைகளுக்காக எழுதுவதை விடுத்துப் பெரியவர்களுக்காக எழுதுகிறார்கள். விஞ்ஞான விஷயங்களைச் சிறுவர்களுக்காக என். பி. கனகலிங்கமும், நா. மு. குமாரசிங்கனும் எழுதினார்கள். ஹாஸ்ய எழுத்தாளர்களில் ரி. பாக்கியநாயகமே முதன்மை வகிக்கிறார். அடுத்து இடம் பெறுபவர்கள் எம். எம். மக்கீன், மாஸ்டர் சிவலிங்கம் முதலியோர்.

கவிதை

குழந்தைகளுக்குக் கவிதைகள் எழுதுவதென்பது, கவிஞர்கள் தங்கள் கவித்துவத்தையோ அல்லது சொல்லாட்சியையோ காட்டுவதற்காக அல்ல. வசனத்தைவிட இசையுடன் இணைந்த பாடல்களாலேயே குழந்தைகள் அதிகம் கவரப்படுவர். அதை மனதிலிருத்தியே கருத்தாழம் மிக்கதாக அதே சமயம் எளிமை மிக்க பாடல்கள் இயற்றப்பட வேண்டும்.

யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களில் ஆடிப் பிறப்புக்கு விடுமுறை கொடுப்பது வழக்கம்.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!"

எனச் சந்தோஷ ஆரவாரம் செய்கின்றனர் சிறார்கள்.

"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்
களே!"

"வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்
நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டைதன்னைச் கடிப்போமே!"

எனச் சிறுவர்களுடன் சேர்ந்து கும்மாளமடிக்கிறார் ஒருபுலவர். அமரகவி பாரதியாரின் 'ஓடி விளையாடு பாப்பா' சிறுவர்கள் மத்தியில் எவ்வளவு பிரசித்தி அடைந்ததோ அவ்வாறே இலங்கையிலும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' என்ற பாடலும் ஒவ்வொரு பள்ளிக்கூடச் சிறுவர்கள் வாயிலும் தவழ்கின்றது.

இதே போன்றுதான் அவரின், "வீமா, வீமா, ஓடிவா..." "கத்தரி வெருளி" "புழுக்கொடியல்" முதலிய பாடல்களும் சிறுவர்களுக்கான பாடல்கள் எவ்வாறு இயற்றப்பட வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

ஈழத்தில் குழந்தைகளுக்காகக் கவிதை எழுதுபவர்களுக்கு முன்னோடியாக, ஆதர்ச புருஷராக விளங்குபவர் சோமசுந்தரப் புலவர்.

இங்கு குழந்தைகளுக்காக கவிதை எழுதுபவர்கள் பலர். சிலர் மாணவர்கள், பலர் பண்டிதர்கள். இளைஞர்களில் கோசுதா—'திமிலைத்துமிலன்' அரசன்—கலையழகன், க. மயில்வாகனன். க. அந்தோனி முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் எழுதும் கவிதை இலக்கண சுத்தியானவையாவென ஐயுற வேண்டியிருக்கிறது. மற்றும் வித்துவான் க. வேந்தனர், பண்டிதர் க. வீரகத்தி முதலியோரும் குழந்தைகளுக்கான அழகான கவிதைகள் எழுதுகிறார்கள்.

இங்கு குழந்தைகளுக்காக வெளிவரும் கவிதைகள் பலவற்றில் எளிமையும், இனிமையும் இருந்தால் கருத்தழகு இல்லை; கருத்தாழம் மிக்க கவிதைகள் வாயில் நுழையாதவாறு 'கரடுமுரடா'க இருக்கின்றன. இரண்டும் ஒருங்கே அமைய நல்ல கவிதைகள் இயற்றுபவர்கள் 'ஈழ' 'யாழ்ப்பாணன்'—இருவர் என்பது எனது முடிபு.

வானொலி

இலங்கை வானொலியில் சிறுவர்களுக்காக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் பல, தரக் குறைவாகவே காணப்படுகின்றன. குழந்தைகளுக்கு விளங்காத இலக்கியங்களையும் புள்ளி விபரங்களையும் ஒலிபரப்பி தலைவேதனை உண்டாக்குகிறார்கள், அழ. வள்ளியப்பாவின் குழந்தைப் பாடல்கள் தான் அதிகமாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. இலங்கைக் கவிஞர்களை அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ?

கல்வி ஒலிபரப்பில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள், பாடசாலை மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்றனவே தவிர குழந்தை இலக்கியத்தை அவ்வளவாக வளர்க்கின்றன எனச் சொல்லிவிட முடியாது.

'சிறுவர் மலரி'ல் ஒலிபரப்பப்பட்ட 'தீராத விளையாட்டுப்பிள்ளை' போன்ற விஷயங்களைச் சிறுவர்கள் விரும்பிக் கேட்பார்கள். கதை எழுதிய கு. இராமச்சந்திரன் ஹாஸ்ய ரசம் ததும்ப எழுதியிருந்தார். இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும் சிறுவர் நிகழ்ச்சிகள் அத்தனையும் மாற்றி அமைத்தல் நலம்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

இலங்கைக் குழந்தை எழுத்தாளர் சங்கமும் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு ஓரளவு சேவை செய்துள்ளது. அது நடாத்திய 'பேரவை'—புத்தகக் கண்காட்சி—கவியரங்கம் முதலியன பாராட்டத் தக்கவை. தலைமைச் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் இலங்கைக் கவிஞர் 'திமிலைத்துமிலன்' முதல் பரிசைத் தட்டிக் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்க விஷயமாகும். இலங்கை குழந்தை இலக்கியத்தை நேர்வழியில் திசைதிருப்ப வேண்டிய பணி குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் தங்கியிருக்கிறது என்பதை மறந்துவிடாமல் அவர்கள் செயலாற்ற வேண்டும்.

குழந்தை இலக்கியத்தை வளர்ப்பது எப்படி?

இலங்கையில் குழந்தை இலக்கியம் வளராமைக்குப் பல காரணங்கள் கற்பிக்க முடியுமென்றாலும், அதற்கான முக்கிய காரணரங்கள்:

(1) இந்தியாவிலிருந்து வெளிவரும் குழந்தைப் பத்திரிகைகள்.

(2) இங்கு குழந்தைகளுக்காக எழுதும் பெரியவர்கள் மிகக் குறைவு.

(3) எழுதிப் பழகும் மாணவர்கள் எழுதுவ தெல்லாம் குழந்தை இலக்கியம் என்ற மயக்க நிலை.

(4) குழந்தைகளுக்காக எழுதுபவர்கள் எல்லாரும் ஆரம்ப எழுத்தாளர்கள் என்ற தவருன எண்ணம்.

குழந்தை இலக்கியத்தின் தேக்க நிலையைப் போக்குவதற்கு மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்கள்—குழந்தை எழுத்தாளர்களின் ஸ்தாபனமாகிய குழந்தை எழுத்தாளர் சங்கம்—மாணவர் பகுதி நடாத்தும் பத்திரிகை ஆசிரியர்கள், வானொலி அதிகாரிகள் முதலியோர் ஒன்றுகூடி ஓர் ஆக்கபூர்வமான திட்டம் வகுக்க வேண்டும். வயது வந்தவர்களை, குழந்தைகளின் மன இயல்புகளை அறிந்தவர்களை எழுதத் தூண்ட வேண்டும். பத்திரிகைகள் மாணவர்களின் விஷயதானங்களை வெளியிடுவதை மட்டும் விடுத்து, பெரியோர்கள் குழந்தைகளுக்காக எழுதும் விஷயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். 'தினகரன்' மாணவர் பகுதியில் வெளிவரும் "தில்லைவாசன்" எழுதும் "பாட்டும்—அதன் பொருளும்" மாணவர்கள் கவிதையை ரசிப்பதற்கு வழிகாட்டியாக அமைகிறது. இதே போன்ற விஷயங்கள் பல வெளிவர வேண்டும்.

மாணவர்களுக்குப் பாடசாலை புஸ்தகங்களை மட்டும் கற்பித்தால் போதாது. உபபாடப் புஸ்தகங்களாக தரமான கதைப் புஸ்தகங்கள், அறிவியல் நூல்கள் முதலியவற்றை உபயோகிக்க வேண்டும். அவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யாமல், இலங்கைக் கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றைப் பிரதிபலிக்கக்கூடியவிதத்தில் இங்கு படைக்க வேண்டும்.

இந்த மனப்பாங்கு நமது எழுத்தாளர் மத்தியில் வேரூன்றினுல்தான் இலங்கையில் குழந்தை இலக்கியம் வளர முடியும்! ★

ஆங்கிலம் பேசிய அர்ச்சுனன்

சுமார் 20 ஆண்டுகட்கு முன்னர், பருத்தித் துறையைச் சேர்ந்த வராத்துப்பளை வாலிபர்களால் 'அர்ச்சுனன் தபசு' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. அர்ச்சுனன், சிவனை நோக்கி பாசுபதாஸ்திரத்துக்காகத் தவஞ் செய்து கொண்டிருக்கிருன். இதனை அறிந்த இந்திரன், தவத்தைக் கலைப்பதற்காக, நடனமங்கை ஊர்வசியை அனுப்புகிருர். அவள், அர்ச்சுனன் தவம் செய்யுமிடத்தையடைந்து அவன் முன்னிலையில் அற்புதமாக ஆடத் தொடங்கினுள். அர்ச்சுனன் ஆடலினுலும் பாடலினுலும் தன் புலனடக்க கலைந்து கண் விழிக்கிருன். முன்னே நடனமாடிக் கொண்டிருக்கும் பெண்ணைக் கண்டதும் அவனது கோபம் உச்சநிலைக்கு வந்துவிட்டது. உடனே பாடுகிருன்.

"ஏண்டி என்னைத் தீண்டவந்தாய் லேடி?
நான் ஏகிறேன் வனமதையே நாடி"

நாடகத்துக்குப் பாட்டமைத்த அண்ணுவியார் மனதில், ஏகிறேன் வனமதையே நாடி என்ற அடிமுதலில் உறுத்தியதும், முதலடியை எதுகையாய்ப் பாட நினைத்துவிட்டார் போலும்; எங்கேயோ பட்டினக் கரையில் காதில் விழுந்த (Lady) என்ற சொல்லைத் தூக்கிப்போட்டுவிட்டார்.

நமது இலக்கிய பாரம்பரியம்

கனக செந்திநாதன்

ஈழத்துக்கெனத் தனியாக இலக்கியப் பாரம்பரியம் உண்டா? என்ற வினா எழுத்தாளர்களிடையே சிலகாலமாக எழுந்துள்ளது. இது தமிழ்நாட்டில் சிறிது காலமாகப் பேசப்பட்டுவரும் பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை, கல்கி பரம்பரை, புதுமைப்பித்தன் பரம்பரை என்பதை மனதில் வைத்துக்கொண்டு எழுப்பப்படும் ஒரு கேள்வி. பாரம்பரியம்—பரம்பரை என்று சொல்லப்படும் சொற்களுக்குள்ள பேதத்தை மிகைப்படுத்தாமல் கிட்டத்தட்ட இரண்டையும் ஒன்ருக்கி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பரம்பரை என்று பேசுபவர்கள் உண்மையில் அந்தப் பரம்பரைக்கு வாரிசுகள்தானு? என்று பார்த்தால், தான் பிரகாசிப்பதற்காகப் புகழ்பெற்ற பிறரொருவரின் ஒளியில் நிற்பதாகத்தான் நமக்குத் தென்படுகிறது. ஒவ்வொரு எழுத்தாளனும் தத்தமக்கெனத் தனிப்பாதை வகுத்துக்கொண்டு முன்னேறித் தானும் ஒரு பரம்பரையை ஆக்க முயலவேண்டுமேயொழிய மற்றவர்களின் பரம்பரை—அது இது என்று கூச்சல்போடுவதெல்லாம் வெறும் ஆரவாரமேயன்றி வேறென்றுமன்று.

சில மாதங்களுக்குமுன் வெளிநாட்டில் நடந்த ஒரு பெரிய எழுத்தாளர் மகாநாட்டிற்குச் சென்ற ஈழத்துப் பிரபல எழுத்தாளர் ஒருவர் ஈழத்திலே படைக்கப்பட்ட சில நூல்களோடு ஆறுமுகநாவலரின் திருவுருவப்படமொன்றையும் கொண்டு சென்று அந்நாட்டுச் சர்வகலாசாலைக்கு அர்ப்பணித்தார். மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஈழநாட்டு எழுத்தாளர் பரம்பரை-பாரம்பரியம் ஆறுமுகநாவலர் வழிவந்தது என்று காட்டத்தான் அவர் அவ்வாறு செய்தார் போலும்.

'அன்னநடை பிடியின் நடைஅழகு நடை அல்லவென அகற்றி, முன்னுள் பன்னமுதுபுலவரிடைச்செய்யுள் நடைபயின்ற தமிழ்ப்பாவையாட்டு, வன்னநடை வழங்குநடை வசனநடை எனப் பயிற்றிவைத்த ஆசானுகிய' ஆறுமுக நாவலரை நம்பாரம்பரியத்துக்குக் 'கால்கோள்' கொண்டவராகக் கொள்வதில் தவறென்றுமில்லை. தமிழ் நாட்டிலிருந்துவரும் பிரபல எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் விமான நிலையத்தில் இறங்கியவுடனே, நம்மைப் பிரீதிப்படுத்தவோ—உண்மையாகவோ நாவலர்பெருமானின் பெயரை உச்சரிக்கத் தவறுவதில்லை. அதனுல் நாமும் ஈழத்தின் இலக்கிய பாரம்பரியம் அவருடன் தொடங்கியதுதான் என்று சொல்வதில் பெருமையடைகிறேம். வெறும் பெருமை மாத்திரந்தானு அது? உண்மையில் அப்படியொன்றுமில்லையா? நாவலர் நிலைநாட்டிய, 'எழுத்துருவம்' தான் என்ன? என்ற வினு எழுகிறது. நாவலரின் பரம்பரை என்றும், அவர் நாட்டிய பாரம்பரியம்தான் ஈழத்தின் பாரம்பரியம் என்றும் நாம் சொல்லும்போது 'அது என்ன?' என்பதையும் விளக்கியே ஆகவேண்டும்.

'பண்ணில் தோயப் பொருள் முடிப்புக் கட்டி
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
எண்ணிப் பொன் முடிப்புக் கட்டி வைத்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே'

ஈழத்தின் இலக்கிய வாயிலுக்குப் 'பொன் பூச் சொரிந்து' கொண்டிருக்கும் பருளைவிநாயகர் பள்ளைப் பாடிய சின்னத்தம்பிப்புலவர் ஈழமண்டலத்தைப்பற்றிப்பாடிய பாடல் இது. 'பண்ணில் தோயப் பொருள்முடிப்புக் கட்டிவைத்திடும் நாடு எங்களுடைய நாடு' என்று பெருமிதப்படக் கூறுகிறுர் அவர். மேற்படி பாடலில் 'பொருள் முடிப்புக்கட்டிப் பாடும் பாவலர்' என்ற தொடர் சிந்திக்கற்பாலது.

இந்தப் 'பொருள்'மரபை வளர்த்து அதுவே ஈழத்தின் பாரம்பரியமாக ஆக்கியவர் நாவலர்பெருமான். அவர் தமது சொற்பொழிவாலும் உரைநடையாலும் புத்தகப் பதிப்பாலும் அதை வளர்த்தார்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்' என்று கால் கொள்ளும் நாவலர் வசன நடை 'தூணிலாவது சுவரிலாவது சார்ந்து அதனை அழுக்காக்காதே' என 'ஆவது' என்பதற்கு இலக்கணங்கற்பித்து பாலபாடக்கட்டுரைகள் மூலம் பெரிய நூல்கள் படிப்பதற்கு ஆயத்தஞ் செய்வித்து, 'உண்மைநாயன்மார் மகிமை'யில் தேக்செறிந்து, 'திருக்கயிலாயச்சிறப்பில்' வர்ணனைக்கு வழிகாட்டி' பெரியபுராண—திருவிளையாடற்புராண வசனமூலம்—ஆற்றெழுக்காகி, கண்டனங்கள் மூலம் புயலென வீசி, சூசனத்தில் போய்முடிகிறது.

ஆறுமுகநாவலர் புத்துரை எழுதியும் பரிசோதித்தும் புதிதாய் இயற்றியும் வெளியிட்ட நூல்கள் 59. அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு எழுதிமுடித்தவைகள் 10.

இந்த அறுபத்தொன்பது நூல்களும் சிறுவர் தொடக்கம் பண்டிதர்வரை அவரவர் தகுதிக்கேற்பப் படிக்கக்கூடியவை. இந்த நூல்கள் சொல்லும் பொருளுக்கேற்ப விதம்விதமான நடையை நாவலர் அவர்கள் கையாண்டார். புத்தகத்தை முசஞ்செய்யும் முகமாக, உபயோகமான—அளவான முகவுரையை அவர் எழுதினர். அவர் முகவுரைகளில் 'ஏடுதேடியது எழுத்தாணியால் எழுதியது' பொருள் உபகரித்தவர் வரலாறு ஒன்றுமே கிடையாது.

நாவலர் வசனநடை, பரிமேலழகர் உரையையும் சிவஞானமுனிவர் நடையையும் பின்பற்றி 'கற்றோரும் மற்றோரும்' விளங்கும்படியாக எழுதப்பட்டிருப்பதை ஊன்றி வாசிப்போர் உணரலாம். கிட்டத்தட்ட இதே நடை இக்காலம்வரை ஈழத்தில் ஓரளவு பின்பற்றப்பட்டு வருகிறது.

நாவலர் எழுதிப்பிழைக்க வந்தவரல்ல. அவரிடம் சொல்லவேண்டிய கருத்துக்கள் நிறைய இருந்தன. மனதிலே தெளிவு இருந்தது எனவே வாக்கிலும் எழுத்திலும் 'ஒளி' உண்டாயிற்று. மக்களைத் திருப்திப்படுத்த அவர் எழுதவில்லை. தான் உண்மையென்று கண்டவற்றை—அடிப்பட்ட சான்றோர்களின் கருத்துகளை அவர் எழுதினர். மக்களை நீதி வழுவாநெறி முறையிற் கொண்டு செலுத்த, எழுதினர். அதனாலேதான் அவர் படைப்புக்கள் இன்றுவரையும் நின்று நிலவுகின்றன.

•தர்மத்துக்கு மாறான செயல்களையும், நீதிக்கு முரண்பட்ட போக்குகளையும் வாழ்க்கைமுறைகளையும் அவர் தாக்கினர். தம்மவர் பிறர் என்று பாராமல் கண்டனஞ் செய்தார். தன்னால் தாக்கப்படுவர் அரசாங்க அதிபராக இருந்போதிலும் அவர் அஞ்சியதேயில்லை.

'யாழ்ப்பாணக்கச்சேரி அநீதி, பொய்கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கொலீஜ் (College) அதற்குத் தலைவர் (Principal) துவையினந்துரை, உபாத்தியாயர்கள் 'பாவந் தோன்றிய காலத்திற்றோன்றிய பதகன்' ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள் அவைகள் படிட்பிக்கிறதாலுகாப் பள்ளிக்கூடங்கள் சில தலைமைக்காரர்களுடைய தானங்கள். இப்படியானல் யாழ்ப்பாணம் விரைவிலே தேவனுடைய சாபத்துக்குப் பாத்திரமாவதிற் சந்தேகமா!'

எண்பது வருடங்களுக்குமுன் (1877) இப்படி எழுதக்கூடிய துணிவும்—ஆற்றலும் நாவலர் பெற்றிருந்தார். இந்தக் காலத்து எழுத்தாளர்கள் இதை ஊன்றி உணரவேண்டும். இந்தக் கண்டன பரம்பரை—பாரம்பரியம் ஓரளவு ஈழத்தில் இன்றும் தலை காட்டுகின்றது.

ஆதி சிவன் பெற்றுவிட்ட தமிழ்க் குழந்தைக்கு ஆரியமைந்தன் அகத்தியன் இலக்கணஞ் செய்து கொடுத்துப் பெருமையுற்றான் எனப் பாரதி பாடுகிறான். 'அகத்தியன் விட்ட புதுக்கரடி' என இதை மறுத்துவிட்டு, மக்களின் உபயோகத்துக்காக மக்களாலே கண்டுபிடிக்கப்பட்டு அறிஞர்களாலே செப்பஞ் செய்யப்பட்டதுதான் தமிழ்மொழி' என்று வாதாடலாம். ஆனால் வரையறுக்கமுடியாத ஒரு காலந்தொடங்கி அறிவுப்பாதை செல்லும் ஆரியமும் அன்பு வழி காட்டும் தமிழும் ஒன்றுடனென்று இறுகப் பிணைந்து நமக்கு இரு கண்களாக அமைந்துவிட்டன என்பதுண்மை. இவற்றுள் ஒன்றைத் தாழ்த்தியும் மற்றதை உயர்த்தியும் பேசுவது விரும்பத்தக்கதன்று. ஆரியம்—தமிழ் என்ற இரண்டையும் இருகண்களாக மதித்தது நாவலர் பரம்பரை. அந்தப் பாரம்பரியத்தை ஈழம் இன்றளவும் காப்பாற்றிவிட்டது. 'ஆரிய—திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை'த்தான் ஓர் ஈழநாட்டால் பெற்றெடுக்கமுடியுமேயல்லாமல் ஒரு கண்ணைக்குருடாக்கி இன்னொரு கண்ணை மாத்திரம் வைத்திருந்தால்போதும் என நாவலர் பரம்பரை எண்ணவேயில்லை.

தமிழ்நாட்டிலே இப்போது சம்பாஷணைக்காக ஒருநடையும், சொற்பொழிவுக்காக வேறு ஒரு நடையும், எழுதுவதற்காகப் பிறிதொரு நடையும் கையாளப்பட்டுவருகிறது. ஆனால் ஈழ நாட்டில் ஓரளவு சுத்தமாகப் பேசி, பேசுவதைப் போலத்தான் எழுதியும்வருகிறார்கள். இதை ராஜாஜி அவர்களே ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்கள். இது நாவலர் பரம்பரை தந்த முதுசொத்து.

முக்கியமாக இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட்டேயாகவேண்டும். அதுதான் வரிசை தெரிந்து மதிப்புக்கொடுத்தல் என்பது. இதோடு இன்னொரு, விஷயத்தையும் சேர்த்துக்கூறலாம். அது போலிப்புகழ் பெறுதலையும் பட்டங்கள் சூட்டிக்கொள்ளுதலையும் வெறுத்தல். இந்த இரண்டையும் நாவலர் அவர்கள் கண்டனத்திலேயே நாம் கண்டு கொள்ளலாம்.

'உமக்குச் சாற்றுகவி தந்தாரை நிறுவிய வரிசை எவ்வரிசை? சிவமுதற் பிரமனீறாக நிறுவிய வரிசைபோலப் பட்டிறக்கவரிசையா? பிரமன்முதற் சிவமீறாக நிறுவிய வரிசைபோலப் படியேற்றவரிசையா? இறக்கம் ஏற்றம் யாது நிலைபற்றியவை?'

குமாரநாயகரலங்காரம் என்ற நூலுக்கு நாவலர் எழுதிய கண்டனத்தில் உள்ளவை இவை. வரிசை தெரியாமல் சாற்றுகவி அடித்த ஆசிரியரை நாவலர் கேட்கும் கேள்விகளைப் பாருங்கள். ஆனால் மந்திரிகளையும்—கலைஞர்களையும்—புலவர்களையும் எழுத்தாளர்களையும் தமிழ் மகாநாடுகளுக்கு அழைத்துவிட்டு தமிழ்தெரியாத மந்திரியாரைக் கொண்டு திறப்புவிழா நடத்தி, ஏதோ செய்யும் ஒரு கலைஞரைக் கொண்டு வரவேற்புரை கூறுவித்து, புலவர்களையும் எழுத்தாளர்களையும் கவனியாமல் விடும் இக்காலத்தில் நாவலர் இருந்திருந்தால்........ ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தை—பண்பாட்டின் பாரம்பரியத்தைக் காப்பாற்ற விரும்புகிறவர்கள் இதை ஊன்றி யோசிக்கவேண்டும்.

தமக்குத்தாமே பட்டங்கள் சூட்டிக்கொள்வதும்—தகுதியற்றவர்களுக்கெல்லாம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதும் இப்போது அதிகரித்துள்ளது. நாங்கள் நாவலர் பரம்பரை என்று சொல்லிக்கொண்டு, ஈழநாட்டின் பாரம்பரியம் அவர் நாட்டியவழிதான் என்று பெருமை அடித்துக்கொண்டு இருப்பது உண்மையானால் இந்தப் போலிகளை இனம்கண்டு வெளிப்படுத்தி ஆகவேண்டும்.

'வித்துவான் தம்பையாப்பிள்ளை' என்றிட்டுக்கொண்டீரே! ...வித்துவான் என்னும் பட்டம் ஏற்றற்கு யோக்கியராகும் வண்ணம் கற்றற்பாலனவாகிய நூல்கள் எவை? அந்நூல்கள் நீர் கற்றிருக்கின்றீரா? அவைகளிலே நீர் பரீக்ஷிக்கப்பட்டீரா? பரீக்ஷித்தவர் யாவர்? பரீக்ஷையிலே சித்திபெற்றீரா? பட்டந்தந்தவர் யாவர்? பட்டப்பத்திரம் எங்கே? உமக்குப் பட்டம் நீரே படைத்திட்டுக்கொண்டீரா?'

வித்துவான் பட்டத்தைத் தமக்குத்தாமே சூட்டிக்கொண்ட ஒருவரைப்பார்த்து நாவலர் கேட்ட கேள்விகள்தான் மேலேயுள்ளவை. இப்போது இப்படியாக ஈழத்தில் உலாவிவரும் பண்டித வித்துவான்களைக்கேட்டால் எஞ்சுவது எத்தனை பேர்? எங்களிடையே உலாவிவரும் எழுத்தாளர்களில் அநேகர் அயல்நாட்டு எழுத்தாளர் படைப்புகளைப்பற்றியும், அயல்நாட்டு அரசியல் போக்குகளைப்பற்றியுமே விவாதிக்கிறார்களேயொழியச் சகோதர எழுத்தாளனின் திறமையைப்பற்றியோ, சொந்த நாட்டு அரசியல் விவகாரங்களைப்பற்றியோ பேசுகிறார்களில்லை. பேசினாலும் ஒரே தூற்றலாயிருக்கிறதேயொழிய நடுவுநிலைமையான விமர்சனமாகக் காணோம். 'நாமிருக்கும் நாடு நமது' என்ற எண்ணம் அவர்களிடையே ஊறியிருப்பதாக இல்லை. சிலகாலமாக இந்த நிலையினின்றும் ஒரு 'விழிப்புணர்ச்சி' உண்டாகி ஈழத்திலக்கியம்பற்றியும் ஈழத்து எழுத்தாளர்பற்றியும், வெளிநாட்டுத் தாக்கங்கள்பற்றியும் சர்ச்சைகள் நடந்துவருவது வரவேற்கக்கூடியதொன்றே. இதற்குச் சிலகாலம் முன்னதாக இந்த உணர்ச்சியை ஊட்டிய பலபேர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவர்கள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும்; சோ. சிவபாதசுந்தரம் அவர்களுமே.

இவர்கள் இருவரும் நாவலரின் பரம்பரையை ஓரளவு நிலைநிறுத்தியவர்கள் என்று கூறலாம். இந்த உணர்ச்சிகூட—நமதுநாடு, நமது இலக்கியங்கள், நமது எழுத்தாளர்கள் என்பவை நாவலராற்பெறப்பட்டவை என்பதை அறியப் பலபேர் ஆச்சரியப்படலாம்.

'யாழ்ப்பாணம் ஒரு சிறுநூலையேனும் ஒரு சிற்றுரையையேனும் செய்குநரில்லாத்தேசம்' என்று இகழ்ச்சியாகக் கூறிய நரசிங்கபுர வீராசாமி முதலியாரைப் பார்த்து நாவலர்பெருமான் கூறுவதைப்பாருங்கள்.

'தமிழிலே ஹேமாந்திரிகற்பம், இரகுவம்சம், இராமேசர்கிள்ளை விடுதூது, செகராசசேகரம், பரராசசேகரம், அமுதாகரம், தக்ஷிணகைலாசபுராணம், சிவராத்திரிபுராணம், ஏகாதசிபுராணம், பரகிதம், புலியூர்யமகவந்தாதி, கல்வளையமகவந்தாதி, மறைசையந்தாதி, திருவண்ணைக்குறவஞ்சி, திருமாவைக்குறவஞ்சி, திருநாகைக்குறவஞ்சி, திருநல்லைக்கிள்ளைவிடுதூது, திருநல்லைவெண்பா, திருநல்லையந்தாதி, வேதாந்தசொயஞ்சோதி, நியாயலக்கணம், வீசகணிதம், விரிவகராதி முதலியன யாழ்ப்பாணத்தாராற் செய்யப்பட்டனவென்பதை அறிந்தடங்கக்கடவீர்.'

'தமிழ்நாட்டில் சிறந்த பாண்டிதேசத்தார்களாலும், சோழதேசத்தார்களாலுமே குடியேறப்பெற்றுப் பிறபாஷைகளொன்றேனுஞ் சிறிதும் கலப்புறாத சுத்தத் தமிழ் வழங்கப்பெறும் யாழ்ப்பாணம், திருகோணமலை முதலியவைகள் தமிழ்நாடென்பதற்கு ஐயமுளதா?'

இதுவரை ஈழத்தின் பாரம்பரியம் நாவலர் வழிப்பட்டதென்றும், அதுவே நமக்குப் பெருமையைத்தரக்கூடியதென்றும், அந்தப் பாரம்பரியம் (1) பொருள் முக்கியம் சொண்டது. (2) விஷயத்திற்கேற்ப நடை கொண்டது. (3 கண்டனதர்மம் கொண்டது. (4) ஆரிய—தமிழ் என்ற பேதமற்றது. (5, பேசுவதுபோல எழுதுவது. (6) வரிசைக்கு முக்கியத்துவம் கொடுப்பது (7) போலிப்புலமையை வெறுப்பது. (8) தன்னாட்டுணர்ச்சி கொண்டது என்பவற்றையெல்லாம் தொட்டுக்காட்டியிருக்கிறேன்.

இன்னுஞ் சிலவற்றைக்கூட எழுதலாம் என்று அன்பர்கள் கருதலாம். ரகரறகரபேதமின்மை (ளகர ழகரபேதத்துள் தவறுதல்) வந்துப்போனன், செய்துக்கொண்டான் என மிகாத இடத்து மிக எழுதியும் கல்யாண பரிசு, அதிசய பெண் என மிகவேண்டிய இடத்துமிகாமல் எழுதியும் வரும் தமிழ்த்தொண்டைச்செய்யாமல் இருத்தல், கொச்சைகளையும் கிராமிய வழக்குகளையும் அதிகமாகக் கையாளாமல் எழுதல்—மஞ்சள் இலக்கியத்தையும் பத்திரிகைகளையும் வளர்த்துக் குறுக்கு வழியில் பொருள் தேடாதிருத்தல், சிறுவர் இலக்கியத்தரம் உயர்ந்திருத்தல் என்பனவும் ஈழநாட்டு இலக்கிய பாரம்பரியத்தின் சிறப்பியல்புகள்தான். ஆனல் இவை அதிகம் முக்கியமான விஷயங்கள் அல்ல.

ஈழநாட்டின் இலக்கிய பாரம்பரியம் குமாரசுவாமிப்புலவர் அவர்களோடு (1922) அற்றுப் போய்விட்டது. இப்போது இங்கே இருப்பது கலப்படமான ஒரு எழுத்து நடை தான் என்று ஒரு பிரபல விமர்சகர் அபிப்பிராயப்பட்டார். அதிலும் உண்மையில்லாமலில்லை.

பழமையில் அதிகம் ஊறி எந்தப் புதுமையைக் கண்டாலும் சிறிது நிதானத்தோடு வரவேற்பதும், வரவேற்றபின்னும் அலசி ஆராய்வதும், சரியெனக்கண்டால் அதை இறுகப்பற்றிக்கொள்வதும் ஈழத்தின் பண்பாகிவிட்டது. எந்தனையோ விதமான நடைகளும், கருத்துகளும் சிறிது சலசலப்பைக்காட்டி மயக்குகின்றன. ஆனல் நாவலர் வசன நடையும். இலக்கிய பாரம்பரியமும் அவற்றிற்கு ஈடுகொடுத்து நிற்கக்கூடிய வலுப்பெற்றன என்பதுண்மை.

அந்தப்பாரம்பரியம் நீடுவாழ உழைக்க வேண்டியது ஈழத்து எழுத்தாளர் கடன்.

அன்பு

அன்பு ஒன்றே மனித வாழ்வாகிவிடாது. உலக வாழ்வென்னும் நீண்ட யாத்திரையில் வாழ்க்கையெனும் படகைச் செலுத்த உதவும் அனுகூலமான காற்றைப்போல அன்பு, ஒரு சாதனம். ஆனல், அக்காற்றே பிரதிகூலமாகப் படகைத் திசைதவறச் செய்தால் அதைச் சாதனம் என்று எவ்வாறு கூறமுடியும்?

—தர்ஷக்.

வரலாற்று நூலாசிரியர்

கா. சிவத்தம்பி

பழமையுணர்வும், மரபுணர்வும், ஒவ்வொருவரது வாழ்விலும் காணப்படுவனவாகும். அப்படி நோக்கும்பொழுது எல்லா மக்களுமே வரலாற்றுணர்வு கொண்டவர்களாகத்தான் விளங்குகிருர்கள். இவ்வரலாற்றுணர்வு பிறசக்திகளால் பாதிக்கப்படுவதென்பதும் எல்லோரும் அறிந்ததொன்று. ஓர் இனத்தையோ அல்லது சமுதாயத்தையோ எவ்வெச்சக்திகள் எவ்வெம் முறையில் பாதிக்கின்றனவென்பதை நாம் அவ்வினத்தினது அல்லது சமுதாயத்தினது வரலாற்றிலிருந்து காணலாம். எனவே, தோன்றும் வரலாற்று நூல்கள் ஒவ்வொன்றும் அவ்வக் காலச் சூழ்நிலையையும், பண்பையும், நூலாசிரியரது இலட்சியத்தையும் நோக்கையும் நன்கு புலப்படுத்தி நிற்கும்.

இலங்கைத் தமிழர் பற்றிய வரலாறுகளும், வரலாற்ருசிரியரும் இப்பெருவிதிக்கு உட்பட்டு நிற்பதை அறிந்தோர் உணர்வர். ஈழத்துத் தமிழ்ச்சரித்திர நூலாசிரியர்பற்றி எழுதமுனேயும் ஒருவருக்குப் பல தடைகள் உள. அவற்றில் முக்கியமானது ஈழத்தமிழர் பலரிடையேயுள்ள வரலாற்றுணர்வுதான். ஆயுள்வேத வைத்தியர் சிலர் செய்வது போன்று தம்மிடமுள்ள நூல்களைப்பற்றி எதுவும் அறியமுடியாது போய்விடுகின்றது. இன்னும் தப்பித்தவறி அறிந்த நூல்களைப் பார்ப்பதென்பது முற்றிலும் முடியாத காரியமாகும். முக்கியமாக யாழ்ப்பாணச் சரித்திர நூல்களைப்பற்றி எதுவும் அறியமுடியாது போய்விடுகின்றது. முக்கியமாக யாழ்ப்பாணச் சரித்திரநூல்களைப் பொறுத்தவரையில் இது முற்றிலும் உண்மை. இக்காரணத்தினுற்ருன் யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்ருராய்ச்சி இத்துணைத் தாழ்ந்த நிலையிலிருக்கின்றது. தப்பியொட்டி இருக்கின்ற நூல்களையும், பதுக்குபவர்கள் பெருந்துரோகமிழைக்கின்றனர் என்பதை உணரவேண்டும்.

யாழ்ப்பாண வரலாற்ருசிரியர், இலங்கை பற்றிய வரலாற்ருசிரியர், தமிழகம்பற்றிய வரலாற்ருசிரியர் என்ற முப்பிரிவுக்குள் ஈழத்தமிழ் வரலாற்ருசிரியரை நாம் அடக்கிவிடலாம்.

இவ்வாருன பட்டியல் தொகுக்கப்படுவது இதுவே முதல் முறையாக இருப்பதால் கட்டுரை முற்றிலும் விமர்சன முறையில் அமையாது செய்திக்கோவையாகவே அமைந்துவிடுகின்றது. இன்னும் சம்பந்தப்பட்ட ஆசிரியர் எல்லோரினது பெயர்களும் இடம்பெற்றுள்ளன எனக் கொள்ளுதலுங் கூடாது.

யாழ்ப்பாண வரலாற்ருசிரியர்

ஈழத்துத் தமிழ் வரலாற்ருசிரியருள் மிக முக்கியமானவர்கள் இவர்களே. சொந்தவூர் வரலாற்றை எழுதியவர்கள் என்பதால்மாத்திரமல்லாது, விவரங்கள் அறியமுடியாமை போன்ற பிற அம்சங்களாலும் இவர்கள் முக்கியமானவர்களாகி விடுகிருர்கள்.

பண்டைக்காலந்தொட்டே இலங்கையில் இனபேத உணர்வு இருந்துவருவதாலும், தமிழர்க்குரிய இடம் சிங்கள மக்களால் வழங்கப்பட்டதில்லை என்று தமிழர்கள் கருதுவதாலும், தமிழர் தொன்மையைக் காட்டும் வகையில் யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் எல்லாம் அமைந்துள்ளன. தமிழர் இந்நாட்டு நாகரிகத்திற்குப் பெரிதும் உதவியுள்ளனர் என்பதையும், இந்நாட்டுத் தமிழர், தென்னுட்டுத் தமிழருடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளனர் என்பதையும் நிறுவுவனவாக அமைந்துள்ளன. யாழ்ப்பாணம்பற்றிய யாழ்ப்பாணத்தவரது வரலாற்று நூல்கள், அரசியற்றுறையிலும் பொருளாதார வாழ்விலும், தமிழர்க்கு உரிய

இடம் வழங்கப்படும் காலம்வரை யாழ்ப்பாணச் சரித்திரம் காய்தல் உவத்தலின்றி ஆராயப்படமாட்டாதென்பது திண்ணம். இக் குறிப்பு யாழ்ப்பாண வரலாறுபற்றி யெழுதும் தமிழர்க்கும் சிங்களவர்க்கும் பொருந்தும்.

இலங்கையில் தமிழர் சரித்திரம் என்பது யாழ்ப்பாணச் சரித்திரமே என்ற இன்னொரு தப்பபிப்பிராயம் எமது 'வரலாற்றாசிரியர்' பலரிடம் நிலவுகிறது. மட்டக்களப்பு, புத்தளப்பகுதிகளின் வரலாறு இன்னும் ஆராயப்படாதிருக்கின்றது. அடிக்குறிப்புக்களாகவும், தொடர்க்குறிப்புக்களாகவும், இப்பகுதிகளைப் பற்றி சில வரலாற்றுண்மைகள் எடுத்தாளப்பட்டுள்ளனவேயன்றி இப்பகுதிகளின் வரலாறு இன்னும் நன்காராயப்படவில்லை. வரலாறு என்பது தக்க ஆதாரம் காட்டி எழுதப்படவேண்டுவதென்பதை யாழ்ப்பாண வரலாற்றாசிரியர் பலர் மறந்துவிடுகின்றனரென்பதையும் குறித்துக்கொண்ட பின்னரே ஆசிரியர்களைத் தனித்தனியாராய்தல் வேண்டும்.

முத்துராசக் கவிராசர்

யாழ்ப்பாண வரலாற்றிற்கான ஆதார நூல்களுள் பழமையான 'கைலாயமாலை' என்னும் நூலை இயற்றியவர் இவர் என்பதைக் குறித்த நூலின் முடிவில் உள்ள வெண்பா உணர்த்துகின்றது.

யாழ்ப்பாண அரசர் ஆண்ட காலத்தில் பேரிடம் வகித்ததும், பின்னர் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டதுமான நல்லூர்க் கைலாயநாதர் கோவில் கட்டப்பட்ட வரலாற்றை ஸ்தலபுராண முறையில் சொல்ல வந்த ஆசிரியர் இடையிடையே யாழ்ப்பாணம்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைச் சேர்த்துள்ளார். பௌராணிக் மரபில் எழுதப்பட்டிருக்கும் இந்நூலில் வரலாற்றுண்மைகள் பல திரித்துக் கூறப்பட்டுள்ளன கலிவெண்பாவில் இயற்றப்பட்ட இந்நூல் 310 வரிகளைக் கொண்டது.

இந்நூலாசிரியர் 17-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் வாழ்ந்தவர் என்பது முதலியார் இராஜநாயகம் அவர்களது எண்ணக்கிடக்கை. 'உறையூர்ச் செந்தியப்பன் தந்த சிறுவன் முத்துராசன்' என இவரைப்பற்றிக் குறிக்கும் வெண்பாவிற் காணப்படுவதால், இவர் தென்னிந்தியர் என்றே கொள்ளக் கிடக்கின்றது. அல்லது உறையூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறியவராகவும் இருக்கலாம்.

முத்துராசக் கவிராசருடைய கைலாயமாலை, முதலியார் செ. இராசநாயகம் அவர்களது ஆராய்ச்சி முன்னுரையுடனும் அ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களது ஆங்கிலமொழி பெயர்ப்புடனும், மற்றும் அரும்பதவிளக்கம் முதலிய உதவிக் குறிப்புக்களுடனும் திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையால் 1939-ல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. 1906-ம் ஆண்டில் இந் நூல் த. கைலாசபிள்ளையால் பதிப்புக்குறிப்புகள் எதுவுமின்றி அச்சுவாகனமேற்றப்பட்டது.

மயில்வாகனப்புலவர்

யாழ்ப்பாண வரலாற்றின் முக்கிய ஆதார நூலான யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை எழுதிய இவர் யாழ்ப்பாணத்து மாதகலைச்சேர்ந்தவர்.

'உலாந்தேசு மன்னன் உரைத்தமிழாற் கேட்க............ யாழ்ப்பாணத்தின் செய்தி மயில்வாகனவேள் செப்பினனே' என வைபமாலைச் சிறப்புப் பாயிரத்தில் காணப்படுகின்றது. ஜான் மக்கரு (Jan Maccara) என்ற தேசாதிபதியை மேற்கூறிய அடிகள் குறிக்கின்றது என்று சிலரும், 46 நாட்களுக்கு தேசாதிபதியாகக் கடமையாற்றியவர் மக்கரு--எனவே இவர் பற்றிய குறிப்பு இடைச்செருகல் எனச் சிலரும் வாதாடுவதால், மயில்வாகனப்புலவர் காலத்தை, பாயிரக் குறிப்புக்கொண்டு நிர்ணயிக்கமுடியவில்லை. எனினும் வைபவமாலையைப் பதிப்பித்த திரு. குல சபாநாதன் அவர்கள் கூறுவதுபோன்று 'மயில்வாகனப்புலவர் காலம் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியும் எனக் கொள்வதே சாலப்பொருத்தமுடையது.'

மயில்வாகனப்புலவர் உரைநடையில் எழுதியுள்ள 'யாழ்ப்பாண வரலாறு' 'கிரேத திரேத துவாபர யுகங்கள்' தொடக்கம் ஒல்லாந்தர் வரையுள்ள வரலாற்றைக் கூறுகின்றது. யாழ்ப்பாணத்தின் தோற்றம் பற்றிய மரபு வழிக்கதைகள் இந்நூலில் காணப்படு

கின்றன. தமிழரை இலங்கையின் பூர்வீகக் குடிகள் என நிறுவ முனைவது மாத்திரமல்லாது சைவமும் அப்பண்டைக்காலம் தொட்டு நிலவிவருகின்றது என வலியுறுத்துகின்றார் மயில்வாகனப்புலவர். கைலாயமாலை, இராசமுறை, வையாபாடல், பரராசசேகரனுலா முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டே எழுதப்பட்டதெனக் கொள்ளப்படும் வைபவமாலையில் புராண இதிகாசமரபினைக்காண முடிகிறது. ஆனால் நூலின் பிற்பகுதியில் உள்ள குறிப்புக்கள் பெரிதும் உபயோகமானவை. மயில்வாகனப்புலவர் புலியூரந்தாதி, ஞானலங்கார ரூபநாடகம், காசி யாத்திரை விளக்கம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

ஜோன் எச். மார்ட்டின்

'யாழ்ப்பாணம் பற்றிய குறிப்புக்கள் (Notes of Jaffna) என்னும் நூலை எழுதியவர் இவர். யாழ்ப்பாணத்துடன் தொடர்புள்ள செய்திகள் பலவற்றைக் காலவரையறைப் படுத்தி ஒரு செய்திக்கோவையாக அளிப்பதுடன் யாழ்ப்பாணப்பிரமுகர்களைப் பற்றியும் யாழ்ப்பாணத்தில் நடந்த பல முக்கிய சம்பவங்களைப்பற்றியதுமான குறிப்புக்களையும் தம் நூலிற் சேர்த்துள்ளார்.

1505–ம் ஆண்டிற்கும் 1920-ம் ஆண்டிற்கும் இடையிலுள்ள காலப்பகுதியில் நடந்தவற்றைத் தினக்குறிப்பாகக் காட்டியுள்ளார். 442 குறிப்புக்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன. கிறிஸ்தவ மேலிடங்களிலிருந்த ஆதாரங்களைக்கொண்டே தமது நூலை எழுதியிருப்பதாக முகவுரையில் கூறிச்சென்ற மார்ட்டின் அவர்களது நூலில், யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவம் பற்றிய முழுவிபரத்தையும் நன்கு காணமுடிகிறது.

பத்திரிகாசிரியராகவும், ஆசிரியராகவும், கடமையாற்றிய இவர் இந்நூலினை 1922–ம் ஆண்டு வெளியிட்டார். இதுதவிர யாழ்ப்பாணத்து ஆசனக்கோவிலின் வரலாற்றையும் இவர் எழுதியுள்ளார்.

அ. முத்துத்தம்பிப்பிள்ளை

யாழ்ப்பாணத்து வரலாற்றில் மிகுந்த ஆர்வங்காட்டி, ஆராய்ச்சி செய்தவர்களில் திரு. அ. முத்துத்தம்பிப்பிள்ளையும் ஒருவர். யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலினை எழுதி வெளியிட்ட ஆசிரியர் அவர்கள் யாழ்ப்பாணத்து வரலாறுபற்றிப் பல ஆங்கில சஞ்சிகைகட்கும் எழுதியுள்ளார். கைலாயமாலையினை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் இவரென்றே கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாண வரலாறுபற்றி அவர் கொண்டிருந்த அபிப்பிராயம் அவரது நூல் முகவுரையின் ஆரம்ப வசனங்கள்மூலம் நன்கு புலப்படுகின்றது.

'யாழ்ப்பாணத்திலே யுள்ளார்க்கு யாழ்ப்பாணத்தினது பூர்வோத்திர சரித்திரத்தை யறிவது அவசியமும் ஆனந்தமுமாகும். யாழ்ப்பாணத்தைப் பூகோளப்படத்திலே நோக்கும்போது அது கடுகுப்பிரமாணமாய்த் தோன்றினும், அதன் சரித்திரத்தை நோக்கும்போது பெரிய தேசங்களின் சரித்திரங்களோடு வைத்து நோக்கத்தக்க பெருமையுடையதாயிருக்கின்றது. யாழ்ப்பாணம் சிறிதாயினும் அதிலிருந்தரசியற்றிய சிலவரசர் தமது பராக்கிரமத்தினல் இலங்கை முழுவதையும் கட்டியாண்டதோடு, பாண்டிநாடு, சோழநாடுகளையும் ஒவ்வோரமையங்களில் வெற்றிகொண்டிருக்கிருர்களென்ருல் அதன் சரித்திரப் பெருமை கூறவும் வேண்டுமோ?'

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே யாழ்ப்பாண அரசு தோன்றிவிட்டதெனக் கொள்ளும் திரு. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் தனிப்பாடற்றிரட்டில் காணப்படும் சில பாடல்களுக்கு வரலாற்று மதிப்புரை வழங்கியபின் பாணன் கதையைச் சொல்கிருர். நூல் வாசிக்கும்பொழுது ஒழுங்கமைப்பற்ற ஒரு கதையை வாசிப்பது போன்றிருக்கும். யாழ்ப்பாணச் சரித்திரம் முதன்முதலில் 1812–ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

முதலியார் செ. இராஜநாயகம்

யாழ்ப்பாண வரலாற்ருசிரியர்களுள் முக்கிய இடம்பெறும் முதலியார் அவர்களது Ancient of Jaffna (பூர்வீக யாழ்ப்பாணம்) மிகவும் பிரபல்யம் பெற்றுள்ள ஒரு நூலாகும். பூர்வீக காலந்தொட்டுப் போர்த்துக்கேயர் காலம்வரையுள்ள யாழ்ப்பாண வரலாற்றினை எட்டு அத்தியாயங்களுக்குள் அடக்கும் இந்

நூலில் எந்த ஒரு ஒழுங்கு முறையும் பின்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. கால ஒழுங்கும் பொருள் ஒழுங்கும் காணப்படவில்லையெனினும் தக்கதொரு யாழ்ப்பாண வரலாற்றிற்கான விஷய அடக்கம் நூல் முழுவதும் செறிந்து கிடக்கின்றது தமது உத்தியோக அலுவல்கள்மூலம் கொட்றிங்க்ரன் முதலியோருடன் ஏற்பட்ட தொடர்பினை நன்கு பயன்படுத்தியுள்ளார் என்பது நூல் வாசிப்போர்க்கு விளங்கும். யாழ்ப்பாணத்து வரலாறு புறக்கணிக்கப்பட்டுள்ளதென்றும், யாழ்ப்பாண வரலாற்றைப் படித்து மகிழ வேண்டுவது ஒவ்வொரு யாழ்ப்பாண மகனது கடமையுயாகும் என்றும் கருதிய திரு. இராஜநாயகம் தமது நூலின் முகவுரையில் 'யாழ்ப்பாண வரலாற்றைப்படிக்கும் ஒவ்வொரு யாழ்ப்பாணத்தவன் மனதிலும் எத்துணைப் பெருமையும் நாட்டன்பும் தோன்றும் தெரியுமா?' என விளிக்கின்றார். தாம் எழுதியுள்ள நூல்களில் எங்கும் திராவிடத்தின் பெருமையும் தமிழரின் தொன்மையுமே கண்ட டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் இந்நூலுக்கு எழுதியுள்ள மதிப்புரையில் 'திரு. இராஜநாயகத்தின் இன உணர்வு, வரலாற்றுணர்வை அடக்கிவிடுகின்ற'தெனக் கூறியிருக்கின்றார்.

இந்நூல் 1926-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாண வரலாறுபற்றிய பல கட்டுரைகளையும் (Ancient of Jaffna) தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

க. வேலுப்பிள்ளை

வசாவிளானைச்சேர்ந்த இவர், யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூலும் மரபுவழிக் கதைகளை வைத்துக்கொண்டே எழுதப்பட்டதாகும். யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய குடும்பங்களின் வரலாறு சேர்க்கப்பட்டுள்ளமையே இந்நூலின் சிறப்பு எனக் கொள்வர். இவர் யாழ்ப்பாணத்துப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராகவும் விளங்கியவர்.

சுவாமி ஞானப்பிரகாசர்

பன்மொழியறிவினுலும், ஆராய்ச்சித்திறனுலும் தக்க வரலாற்று நூல்களை ஆக்கித்தந்த பெருமை சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கட்குண்டு. Kings of Jaffna (யாழ்ப்பாணத்து அரசர்); 'யாழ்ப்பாண வைபவ விமரிசனம்' என்பன சுவாமியவர்கள் எழுதியுள்ள யாழ்ப்பாண வரலாற்று நூல்களாகும். யாழ்ப்பாணம் பற்றியும், தமிழர்பற்றியும் அவர் எழுதிவைத்த நூலின் சில பகுதிகள் Tamil Culture (தமிழர் பண்பாடு) என்னும் சஞ்சிகையில் வெளிவந்துள்ளன.

போர்த்துக்கேய ஆதார நூல்களை நன்கறிந்திருந்தமையால் அந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தரசர் என்ற தமது நூலினை எழுதியுள்ளார் சுவாமியவர்கள்.

சுவாமியவர்கள் தமது மொழியியல் அறிவினைக்கொண்டு யாழ்ப்பாணத்து ஊர்ப்பெயர்களை ஆராய்ந்திருப்பது போற்றற்குரியது. யாழ்ப்பாணத்து ஊர்ப்பெயர்கள் சிங்களமொழியடியினைக் கொண்டுள்ளதை சுவாமியவர்கள் ஐயந்திரிபறக்காட்டியுள்ளார்.

சிங்களத்திற்கும் திராவிடமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளைப்பற்றி அவர் நடத்தியுள்ள பல ஆராய்ச்சி முடிபுகளை மொழியியல் அறிவு வளர்ந்துள்ள இந்நாட்களில் ஏற்றுக்கொள்வது மிகக்கஷ்டமான தொன்ருகும்.

யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதம் பரவுவதற்கு முக்கியமானவர்களில் ஒருவராகிய சுவாமியவர்கள் யாழ்ப்பாண வரலாற்றைப்பற்றிய பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதியவைகளுள் யாழ்ப்பாண வைபவ மாலைக்கான ஆதார நூல்கள் (Souros of the Yalpana Vaipava Malai) 'யாழ்ப்பாணச் சிங்கள ஊர்ப்பெயர்கள்' என்பன முக்கியமானவையாகும்.

க. கணபதிப்பிள்ளை

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியராகவும், கீழைத்தேசக் கலைத்துறைத் தலைவராகவும் விளங்கும் இவர் 'இலங்கைவாழ் தமிழர் வரலாறு' என்ற தலைப்பில் எழுதியுள்ள வரலாற்றுச் சிறுநூல், அவரது 'சங்கிலி' என்னும் நாடக நூலிற்கு முன்னுரையாக அமைந்துள்ளது. இது தனி நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கைவாழ் தமிழர் வரலாறு என்று சொல்லப்பட்டிருப்பினும் உண்மையில் யாழ்ப்பாணத்து வரலாறுதான் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

ஆராய்ச்சித்துறையில் சிறந்த இவரது இவ் வரலாற்றுச் சிறுநூலில் யாழ்ப்பாண வரலாறு ஓரளவு காய்தல் உவத்தலின்றி ஆராயப்பட்டுள்ளது. தென்னிந்திய வரலாற்றுடன் வட இலங்கையின் வரலாற்றை நன்கிணைத்து ஆராய்ந்துள்ளமையால், இவரது வரலாற்று நூலில், பிற நூல்களிற் காணப்படாத தெளிவு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணக்கிராமிய வாழ்வினை நன்கறிந்த இவர் தமது 'காதலியாற்றுப்படை' எனும் நூலில், 'ஐம்பது வருடகாலத்திற்குமுன் யாழ்ப்பாணச் சமுகவாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்ததென்பதைக் காட்டுகின்றார்.

'ஈழத்தமிழர் தமிழ்மொழிக்காற்றியுள்ள தொண்டு' என்ற இவரது பேராசிரியப்பேருரையில், யாழ்ப்பாணத்துப் புலவர் பலரது தொண்டும், யாழ்ப்பாணத்துப்பாதிரிமார்களது தொண்டும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றுள்ள பேராசிரியர் யாழ்ப்பாணப்பேச்சுத் தமிழ் பற்றிய மொழியாராய்ச்சியும் செய்துள்ளார்.

சி. எஸ். நவரத்தினம்

இவர் இலங்கையும் தமிழரும் (Ceylon and Tamils) என்ற நூலை அண்மையில் எழுதி வெளியிட்டுள்ளார். நூற்பெயர் இலங்கைவாழ் தமிழர் எல்லோரையும் குறித்தாலும் நூற்பொருள் யாழ்ப்பாணத்து வரலாருகவே விளங்குகின்றது.

மரபுவழி வரும் கதைகள் பலவற்றை 'வரலாற்றின் பாற்பட்டன' எனக்கொண்டுள்ளமை இவரது நூலிற் காணப்படும் ஒரு சிறப்பாகும். அரசியலில் தமிழர்க்குக் கொடுக்கப்படாத இடம் இலங்கை வரலாற்றில் அவர்களுக்கு உண்டு என நிறுவமுனைந்துள்ளது. இவரது நூல்.

பிற ஆசிரியர்கள்

யாழ்ப்பாண வரலாறுபற்றி எழுதியுள்ளவர் இன்னும் பலர் உளர். ஆனல் அவர்களைப் பற்றியும், அந்நூல்களைப்பற்றியும் நன்கு அறிய முடியாமையினல் அவர்குடத்திடை விளக்காகியுள்ளனர்.

'யாழ்ப்பாணச்சரித்திரம்' எனும் நூலை இயற்றிய எஸ். ஜோன் என்பவரும் 'யாழ்ப்பாணக்கைந்நூல்'(a Handbook of the Jaffna Peninsula) எனும் நூலை இயற்றிய எஸ். கதிரேசு என்பவரும் முக்கியமான இருவர்.

யாழ்ப்பாண வரலாறுபற்றிக் கட்டுரைகள் பல எழுதியுள்ளவர் வ. குமாரசுவாமி எனும் அத்துவக்காத்து ஆவர். இவர் கதிரைமலைப் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு முதலிய வேறு நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

யாழ்ப்பாண வைபவமாலையை நன்கு பதிப்பித்த திரு. குல சபாநாதன் அவர்களும் யாழ்ப்பாண வரலாறு தெரிந்தோரில் முக்கியமான வராவர்.

இலங்கை பற்றிய வரலாற்ருசிரியர்

சொந்த ஊரினது வரலாறு என்ற சிறு வட்டத்திற்கு வெளியேயும் தமது கருத்தையும் கவனத்தையுஞ்செலுத்தி முழுஇலங்கைபற்றிய வரலாற்று உண்மைகளையும் ஆராய்ந்த வரலாற்ருசிரியர்களும் இலங்கைத் தமிழர்களிடையே இருக்கின்ருர்கள்.

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி

(பிற வரலாற்ருசிரியரைக் கொள்வது போன்று இவரையும் 'இலங்கைத் தமிழன்' எனக்கொண்டு இவரது நூல்களை ஆராய்தல் இவருக்கு இழுக்கினை ஏற்படுத்துவதாகும்) இலங்கையில் கலைபற்றிய ஆர்வம் தோன்றியதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய ஆனந்தக் குமாரசுவாமியுடைய இடைக்கால சிங்களக் கலை' (Medieval Sinhalese Art) என்னும் நூல் உலக கலாமேதைகளால் போற்றப்படும் தலைசிறந்த நூலாகும். சிங்களக் கலையின் பெருமையை விளக்கியவர் இவரே.

இவரை வரலாற்ருசிரியர் எனக்கொள்தல் பொருந்துமோவென ஐயுறுதல் பிழையன்று. எனினும் அவர் நூல் செய்த சேவையினைக் கொண்டு கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் வரலாற்ருசிரியர் எனவும் கொள்ளலாம். இவருடைய இந்தியக்கலையறிவும் தத்துவ ஞானமும் உலகப்புகழ் பெற்றவை.

பொன்னம்பலம் அருணசலம்

இலங்கையின் அரசியல் வளர்ச்சியில் முக்கியமான இடம் பெறுபவர் சேர். பொன். அரு

ணசலம். இவர் இலங்கை வரலாற்றினை நன்கு அறிந்த தமிழர்களில் ஒருவரெனக் கருதப்படக்கூடியவர். வரலாற்றில் இவருக்குள்ள திறமையை விளங்குவதற்காக 'இலங்கைச் சரித்திரத்தில் சில பகுதிகள், (Sketches in Ceylon Hostory) என்னும் அவரது நூல் அமைந்துள்ளது.

அரசாங்க உத்தியோகத்தவராகக் கடமையாற்றிய சேர். பொன். அருணசலம் அக்காலத்து உயர்தர உத்தியோகத்தரது மரபிற்கேற்ப வரலாற்றில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தார்.

மேலைத்தேய மொழியறிவும், இந்துமத அறிவும் நிரம்பப்பெற்றவர் ஆதலின் இவருடைய நூலில் இவ்விரு பண்புகளும் தலைதூக்கி நிற்கின்றன.

இவர் இலங்கை வரலாற்றினை எழுதிய முறையை நோக்கும்பொழுது மேனட்டாருக்கு இலங்கை வரலாற்றினை அறிமுகஞ்செய்து வைக்கும் வகையில் வரலாற்றை அமைத்துள்ளாரென்றே சொல்லத் தோன்றுகிறது. இலங்கையின் வரலாற்றை இந்தியாவுடன் தொடர்புறுத்திப்பார்த்த பெருமை இவருக்குண்டு.

இவர் தொகுத்த குடிசனமதிப்பறிக்கையின் முன்னுரையாக விளங்கும் இலங்கை வரலாற்றுப்பகுதி இவரது வரலாற்றுணர்வுக்கு அழியாச் சான்ருக விளங்குகின்றது.

கலாநிதி சி. அரசரத்தினம்

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுவிரிவுரையாளராக விளங்கும் இவர் தமது கலாநிதிப் பட்டத்திற்கென இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி செய்த, ஒரு காலப் பிரிவை எடுத்து ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சி நூல், ஒல்லாந்து நாட்டினரால் பதிக்கப்பெற்றமை நூலினது சிறப்பை விளக்குகிறது.

இவர்களைதவிர காலஞ்சென்ற கௌரவ க. பாலசிங்கம் அவர்களும் இலங்கை வரலாறு பற்றி எழுதியவர்களுள் ஒருவராவர். உலக நாகரிகம் இலங்கையில் தோன்றிப் பிறஇடங்கட்கும் பரவியதென்பது இவரது கொள்கையாகும்.

தமிழ், தமிழ்நாடு பற்றிய வரலாற்ருசிரியர்

தமிழ், தமிழகம்பற்றிய வரலாற்று ஆராய்ச்சிகள் பலவற்றில் ஈடுபட்ட பெருமை ஈழத்தமிழருக்கு உண்டு. தென்னகத்தில் இவர்களது சேவை நன்கு மதிக்கப்படாவிட்டாலும் தமிழக வரலாற்று ஆராய்ச்சி வளர்ச்சிக்கு இவர்கள் பெரிதும் உதவியிருக்கின்ருர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

வி. கனகசபைப்பிள்ளை

தமிழர் வரலாறு, நாகரிகம், இலக்கியம் முதலியனபற்றி முதன்முதலில் ஆங்கிலத்தில் தக்கதொரு நூலை இயற்றியபெருமை திரு. வி. கனகசபைப்பிள்ளை அவர்களைச் சேரும்.

ஈழத்தில் பிறந்து வளர்ந்த கனகசபைப்பிள்ளை, சென்னைத் தபாற்பகுதியில் கடமையாற்றினர். *1895*-ம் ஆண்டு தொடக்கம் *1901*-ம் ஆண்டுவரை மதருஸ் றிவியூ (Madras Review) எனும் சஞ்சிகைக்குத் தாம் எழுதிவந்த கட்டுரைகளைத் தொகுத்து '*1800* வருடங்கட்கு முற்பட்ட தமிழர்' (Tamils Eighteen Hundred yaurs Ago) என்ற தமது தொகுப்பு நூலை *1904*–ம் ஆண்டு வெளியிட்டார். திரு. கனகசபைப்பிள்ளை, வரலாற்ருராய்ச்சியுணர்வு நன்கு அமையப்பெற்றவர் என்பது அவரது நூலை வாசிக்கும் எவர்க்கும் புலனகும். அந்நாட்களில் தமிழர்பற்றிய வரலாற்றறிவு இருந்த நிலைமையை அறிந்தோர்க்குத்தான் திரு. கனகசபையின் நூலில் காணப்படும் கருத்துத்தெளிவு மிகச்சிறந்ததாகப்படும். வரலாற்றுக்குறிப்புக்கள் காலவாராய்ச்சிகள் பற்றிய அவரது முடிவுகளை, தமிழ் வரலாற்றறிவு வளர்ந்துள்ள இன்று நாம் ஏற்கமுடியாமலிருக்கும் நிலைமை கொண்டு அவரது நூலை மதிப்பிடுதல் கூடாது. தமிழர் பற்றிய தலை சிறந்த நூல்களில் இதுவுமொன்று என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ந. சி. கந்தையாபிள்ளை

வேறெந்த ஈழத்தமிழரும் எழுதாத அளவு தொகையான நூல்களை எழுதியவர் திரு. ந. சி. கந்தையாபிள்ளை என்று சொன்னல் அது விவாதத்திற்குட்பட்ட விஷயமாகாது என்பது திண்ணம். தமிழர் சரித்திரம் 'பழந்தமிழர்' தென்னிந்திய குலங்களும் குடிகளும்' 'திராவிட இந்தியா', 'உலக நாகரிகத்தில் தமிழர்', 'பெண்களுலகம்', 'தமிழ் ஆராய்ச்சி', 'திராவிடமென்ருல் என்ன?', 'சைவசமய வரலாறு' முதலிய பல வரலாற்று நூல்களை எழுதியுள்ள திரு. ந.

சி. கந்தையாபிள்ளை திராவிடத்தின் தொன்மையிலும், தொன்மையான அத்திராவிடம் தமிழர் தான் என்பதிலும் நம்பிக்கையுள்ளவர். இந்திய பண்பாடு, வரலாறுபற்றி வந்துள்ள ஆங்கில நூல்களைக்கொண்டு தமிழ்க்கண்ணேட்டத்தில் தமது நூல்களை எழுதியுள்ளார்.

இவ்வாசிரியர் நூல்கள் எல்லாம் தென்னிந்தியாவிற்றான் பிரசுரிக்கப்பட்டன என்பதை இக்கால ஈழத்தெழுத்தாளர் மனதிற்கொளல் நன்று.

சைமன் காசிச்சிட்டி

தமிழரிடையே சாதி மரபுகள், பழக்க வழக்கங்கள், இலக்கியம் (Castes, Customs Manners and Literature of Tamils)என்ற வரலாற்றுக்கண்ணேட்டமுள்ள நூலை எழுதியுள்ள திரு. காசிச்சிட்டி தமிழ்ப்புலவர்கள்பற்றி ஒரு ஆங்கில நூலையும் எழுதியுள்ளார். (Tamil Plutareh) 1859-ம் ஆண்டில் முதன்முதலில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களுக்கு முன்னேடியாக அமைந்துள்ளது எனக்கொள்ளலாம்.

க. நவரத்தினம்

இலங்கையில் 'கலை வளர்ச்சி' என்ற நல்லதொரு நூலை இயற்றியுள்ள கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் தென்னிந்தியச்சிற்பவடிவங்கள்பற்றிய நூலொன்றினையும் எழுதியுள்ளார். திராவிடக் கலையறிவுள்ள ஆசிரியரது நூல் தென்னகத்திலும் மதிப்புப்பெற்றுள்ளது இலங்கை வரலாற்றினைப்பற்றி இவர் எழுதியுள்ள நூல்களும் அவ்வடிப்படையிற்ரேன்றியனவாதலின் இவர், தமிழகம்பற்றிய வரலாற்ருசிரியர் என்ற இடம் பெறுகின்ருர்.

ஈ. எல். தம்பிமுத்து

'தனியொரு பரம்பரையினரைப்பற்றியோ அல்லது காலப்பிரிவுபற்றியோ அல்லது தென் இந்தியா முழுவதினதும் வரலாற்றையும் கூறும் முதல் நூலிது' வென பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் இவரது 'திராவிடம்' (Dravida) என்ற ஆங்கில நூலிற்கு வழங்கியுள்ள வுரையிற் கூறியுள்ளமை இவரது நூலின் சிறப்பை உணர்த்துவதாகும். இக்காரணம்பற்றியே இந்நூல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'பண்டைத்தமிழினத்தின் வரலாற்றுப் புகழை இக்காலத்தமிழர்எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காகவே இந்நூலைத் தொகுத்துள்ளேன்' என்று முகவுரையில் கூறும் ஆசிரியரது தமிழ்ப்பற்று நூலெங்கும் காணப்படுகின்றது.

எஸ். ஜே. குணசேகரம்

தமிழர் வரலாற்றில் பெரிதும் ஈடுபட்டுள்ள இவர் தினப்பத்திரிகைகட்கு ஆசிரியர் கடிதங்கள் எழுதுவதன்மூலம் தமிழரது பெருமையை நிலைநாட்ட முன்வந்துள்ளார். 'கடல் கடந்த தமிழகம்'பற்றிய இவரது சொற்பொழிவொன்று நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

வி. செல்வநாயகம்

தமிழினத்தின் வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கும் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றினை தெளிவுற விளக்கும் தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலை இயற்றியுள்ள திரு வி. செல்வநாயகம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் ஆவர். கருத்துத்தெளிவும் பொருளமைதியும் சிறந்து பொலியும் இந்நூல் தமிழகத்தில் பெரிதும் மதிக்கப்படுகின்றது. இலக்கிய ஆராய்ச்சியில் துறைபோகிய இவர் 'தமிழ் உரைநடை வரலாறு' எனும் நூலொன்றையும் இயற்றியுள்ளார்.

சு. வித்தியானந்தன்

சங்கக்காலத் தமிழகத்தின் பண்பாட்டினை நன்கு ஆராயும் நூல்களில் ஒன்ருன 'தமிழர் சால்பு' என்ற நூலை இயற்றியுள்ள இவரும் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் ஆவார்.

தமிழர் நாகரிகம்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் ஈழத்தமிழரின் கிராமியப் பண்பாடு பற்றி பல அரிய கட்டுரைகளையும் எழுதியுள்ளார்,

முடிவுரை

கட்டுரைத் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளதுபோல இப்பட்டியல் பூரணமானதொன்றெனக்கொளல் பொருந்தாது.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமை, வரலாற்றுத்துறையில் ஈழத்துத்தமிழர் பலரை மேலும் ஊக்குவிக்குமென்பதில் ஐயமில்லை. ★

ஈழத்தின் முஸ்லிம் புலவர்கள்

ம. முகம்மது உவைஸ்

ஈழ நன்னாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். பரந்து வசிக்கின்றனர். இவர்கள் அனைவரையும் இணைக்கும் தொடர்களில் ஒன்றாகத் தமிழ் விளங்குகிறது. இவர்களுள் மிகப் பெரும்பான்மையானோர் தமிழ் மொழியையே வீட்டு மொழியாக உபயோகிக்கின்றனர். முஸ்லிம் மக்களின் மூதாதையோர் ஈழத்தில் குடியேறிய நாட் தொட்டுத் தமிழ் மொழியையே வழங்கி வருகின்றனர். இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த தமிழ் நூல்களிலிருந்தே பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் இஸ்லாம் மதத்தைப் பற்றி அறிகின்றனர். இஸ்லாம் மதத்தை அறிவதற்கு ஏதுவாக எழுந்த தமிழ் நூல்கள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டன வென்னின் அது மிகையாகாது. ஈழத்தின் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரிந்த முஸ்லிம் பெரியார்கள் பல்வேறு முறைகளில் கடமையாற்றியுள்ளனர். பல்வகையிலும் தொண்டு புரிந்துள்ளனர். அவர்களிடையே புலவர்களும் இருந்தனர், புரவலர்களும் இருந்தனர். புலவர்கள் கவி பாடுவதற்குப் புரவலர்கள் துணை புரிந்து வந்துள்ளனர்.

ஈழத்தில் வாழ்ந்த முஸ்லிம் புலவர்கள் பல்வேறு பிரபந்தங்கள் பாடியுள்ளனர். அவற்றைப் பாடுவதிலும் தலைசிறந்து விளங்கியுள்ளனர். அவர்களுள் யாழ்ப்பாணத்து சு. அசனா லெப்பையும் ஒருவராவர். இவர் சுல்தான் முகியித்தீன் என்பவரின் புதல்வர். தமிழ், ஆங்கிலம், அரபு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராவர். இவர் பல பாடல்கள் பாடியுள்ளார். அவையனைத்தும் புகழ்ப்பாவணி என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழிக்கே சொந்தமான திருப்புகழ், அந்தாதி போன்ற பிரபந்தங்களும் முஸ்லிம்களுக்கே உரிய அரபுப் பிரபந்தமான முனாஜாத்தும் புகழ்ப்பாவணியில் இடம் பெற்றுள்ளன. அசனாலெப்பையவர்களின் திருப்புகழில் முகம்மது நபிகள் நாயகம் அவர்களைப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. இத்திருப்புகழ் நவரத்தினத் திருப்புகழ் என அழைக்கப்படுகிறது. ஏனைய திருப்புகழ் நூல்களில் உள்ளவை போன்று நவரத்தினத் திருப்புகழிலும் ஆசிரியர் தமது சந்தப்பாவன்மை, சொல்லாட்சி, பொருட் செறிவு முதலியவற்றை அமைத்துப் பாடியுள்ளார். நவரத்தினத் திருப்புகழில் திரு மக்கமா நகரும் திரு மதீனமா நகரும் திருத்தலங்களாக இடம் பெற்றுள்ளன. முகமது நபிகள் நாயகம் அவர்கள் திரு மக்காவில் பிறந்து திரு மதீனாவுக்குச் சென்று உலகெலாம் இஸ்லாத்தைப் பரப்பி உலகின் பல்வேறு பகுதிகளையும் ஒரு குடைக்கீழ் ஆட்சி புரிந்தார்கள் என்பதைப் பின்வருமாறு பாடுகிறார் ஆசிரியர்.

> பதிகள் பலவுரு முயர்வுரு நின்ற மக்கநக
> ரிலகிலள முதிமெதினா வந்து புக்குலகு
> பலதிசையு மொரு குடையினாளும் புரக்கு
>
> மா—சிறதூலே

[இலகு — விளங்கி]

வேறோர் இடத்தில் அசமு லெ ்பை நபி ்ள் பெருமானார் முகம்மது அவர்களின் அருளை விரும்பிப் பாடுகிறார். கேட்டையே அளிக்கும் தன்மையதான தீமைகள் அனைத்தையும் அழிக்கவும், மகிழ்ச்சியையே தரவல்ல நன்மைகளைக் கிட்டச் செய்யவும், எல்லாம் வல்ல ஒருவனான அல்லாகுத்த ஆலாவின் அன்பு பொருந்தச் செய்யவும் அருளும்படி இறைதூதரிடம் ஆசிரியர் பின்வருமாறு வேண்டுகிறார்.

> ஏத நீரகி தம்பல பொன்றவு
> மோகை கூருமி தம் பல துன்றவு
> மேக நாதனி னன்பு பொருந்தவு—மருடாரீ.

[ஏதம் — கேடு; அகிதம் — தீமை; பொன்றுதல் — அழித்தல்; ஓகை — மகிழ்ச்சி; இதம் — நன்மை; துன்றுதல் — கிட்டுதல்]

அசனா லெப்பை பாடிய கவிதைகளுள் முகியித்தீன் ஆண்டவன் பேரில் பாடிய ஆசிரிய விரு

த்தமும் பதாயிகுப் பெரியார் மீது பாடியுள்ள பதாயிருப்பதிற்றுத் திருக்கந்தாதியும், நாகூ ராண்டகை பேரில் பாடியுள்ள முனஜாத்தும் ஈண்டு குறிப்பிடத்தக்கவையாகும்.

வேர்விலை தென்மேற்கு இலங்கையில் உள்ள ஒரு பட்டினம் என்பதை யாவரும் அறிவர். சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இப்பகுதியில் சிறந்த முஸ்லிம் கவிஞர்கள் தோன்றியுள்ளனர். அவர்களுள் வேர்விலை அகமது லெப்பை மரைக்கார் வாத்தியாயர் என்பவரும் ஒருவர். இவர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்தவராவர். ஆசுகவி பாடும் வல்லமை இவரிடமிருந்தது. வேர்விலையில் நடைபெறும் சமய விழாக்கள் அனைத்திலும் இவரின் கீதங்கள் முழங்கின. பல விழாக்களில் இவர் நேரடியாகப் பங்குபற்றி கூடியிருந்த மக்கள் பருகும் பொருட்டுத் தமது கவித்தேனை வாரி இறைப்பார். இவருடைய பாடல்கள் நபிமார்கள் என்று வழங்கப்படும் மார்க்க ஞானிகளைப் பற்றியும் கன்னெஞ்சும் உருகும்படியாக அமைந்திருந்தன. கருத்துமிக்க, பத்திச் சுவை ததும்பும் இவரது பாடல்கள் இசையுடன் பாடற்குரியனவாய் இருக்கின்றன.

நபிகள் பெருமானரின் போதனைகளை ஒன்று திரட்டியவர்களுள் இமாம் புகாறியும் ஒருவராவர். அப்போதனைகள் "ஹதீஸ்" என்று வழங்கப்படுகின்றன. இவர் புகாரு நகரைச் சேர்ந்தவர். இவர் ஒன்று சேர்த்த ஹதீதுகள் 'ஸஹீஹ்' —உண்மையானவை எனப் படுகின்றன. இக்கருத்துக்களை வாத்தியாயர் பின்வருமாறு பாடுகிருர்.

நபிக்குக் கனவில் விசிறிகள் வீசிச் சுகமீந்த நாதா
நலன்பல கொண்டிலங்கும் புகாறி கோர்த்த
வேதா
ஆறிலட்சம் ஹதீதாராய்ந் துணர்ந்த வாழ் வே
ஷஹீஹாகும் சொல்லினதென்று பிரித்த
பூவே.

இலங்கையில் தோன்றிய தலை சிறந்த முஸ்லிம் ஞானிகளுள் செய்கு முஸ்தபா ஒலியுல்லா என்பவரும் ஒருவராவர். இவர் குழந்தை மரைக்கார் ஆலிம் சாகிப் என்றும் வழங்கப்படுகிருர். இப்பெரியாரைப் பற்றியும் அகமது லெப்பை வாத்தியாயர் அவர்கள் பாடிய சில செய்யுட்கள் கிடைத்துள்ளன.

பாவா ஆதம் பெரும் சீலராம்
பாத்தும்மா பெரும் பாலராம்
மேவும் காமி லென்றேற் பவர்
வேந்தராம் செய்கு முஸ்தபா
வேருவிலையில் பிறந்தநீர்
மேவு வோர் குருவானவீர்
சீருலா வொலியானவா
ஜெம் மலாகும் செய்கு முஸ்தபா.

இவ்வாறு பாடியுள்ள இப்பாட்ல்களில் அரபுச் சொற்கள் தமிழ்ச் சொற்களுடன் இணைத்தும் பாடப்பட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. இஸ்லாமிய அடிப்படையிலே எழுந்த நூல்களில் காணக்கூடிய சிறப்பியல்புகளுள் அரபுச் சொற்களின் ஆட்சியும் ஒன்ருகும். இப்புலவர் இயற்றிய பாடல்கள் மிகப்பல. அவை அழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. சிலவற்றை அரபு எழுத்தில் எழுதிச் சிலர் பாதுகாத்து வருகின்றனர். ஏனையவற்றை மனனம் செய்துள்ள முதிய முஸ்லிம் பெரியார்களின் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்கள் வேர்விலைப் பட்டினத்தைச் சேர்ந்தவர். சிங்கள மொழியைப் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக உள்ள தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கினர்கள் என்பதற்குச் செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்களின் தமிழ்ப் புலமையே சான்றுபகருகின்றது. செய்கு முஸ்தபா ஒலியுல்லா பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவர். இவர் இயற்றிய பல நூல்கள் வசன நூல்களாகவும் பாக்களாகவும் அமைந்துள்ளன.

மெய்ஞ்ஞானத்துதி என்பது செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்கள் பாடிய நூல்களுள் ஒன்ருகும். இந்நூலில் நாற்பத்து மூன்று திருப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் ஆசிரியர் தமது குருவைப் புகழ்ந்து பாடுகிருர். மெய்ஞ்ஞானத் துதி என்ற திருப்பாடல் ஞானந்தரத்தினம் என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. மெய்ஞ்ஞானத் துதியின் காப்புச் செய்யுள் வருமாறு:

ஒருவ னுருவிலவன் உயிர் பலவும் வெளியாகக்
கருவுங் குருவுமவன் காணவருங் காட்சி யவன்
மருவு முன்ளோடவனை மனதுகந்த செய்தவர்
மேல்
ஒருமை யுடன் புகழ்பாட உண்மை நபி காப்பாமே.

இப்பாடலில் உள்ளதுபோல் மெய்ஞ்ஞானத் துதியில் உள்ள ஏனைய பாக்களிலும் உயரிய ஆத்ம ஞானத்தோடு தொடர்புள்ள பல கருத்துக்கள் அடங்கி உள்ளன.

செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்களால் இயற்றப்பட்ட வேறொரு நூல் மீஸான்மாலை என்பதாகும். இந்நூல் இஸ்லாத்தின் நுண்ணிய கருத்துக்களைக் குறிப்பிடுகின்றது. அரபு எழுத்தில் அச்சிடப்பட்ட தமிழ் நூல்களில் இதுவும் ஒன்றாகும். இந்நூலில் வெண்பாக்களும், தொங்கல் என்று வழங்கும் அறுசீர்க்கழிநெடிலாசிரியப் பாக்களும் இடம் பெற்றுள்ளன. செய்கு முஸ்தபா ஒலியுல்லாவின் புதல்வர் இதற்கு ஓர் உரை எழுதியிருப்பினும் சாதாரண ஒருவருக்கு விளங்காத நிலையில் ஆழ்ந்த கருத்துக்களை உடையனவாய் இந்நூல் உள்ளது. உரையும் அரபு எழுத்துக்களிலே எழுதப்பட்டுள்ளது. மீஸான் மாலையில் உள்ள காப்புச் செய்யுள் ஒரு வெண்பாவாக அமைந்துள்ளது. அது வருமாறு:

மூவுலகும் போற்று முகம்மதுநபி பொருட்டால்
ஏவலுறு மாதி இஸ்லாம் வழியைக்—காவலிட
வாதனுகா மீஸான் மாலைதனைக் கூறவே
காதிறுவே நீ யிதற்குக் காப்பு.

செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்களைப் பற்றிப் பாடப்பட்ட கும்மிப் பாடல் ஒன்றும் உள்ளது. செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்களின் காரண அலங்காரக் கும்மி என்பது அந்நூலாகும். இப்பாடல் காவியைச் சேர்ந்த தம்பி சாகிபுப் புலவரின் புதல்வன் முகம்மது காஸிம் புலவரால் பாடப்பட்டது. செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்கள் சாதனையில் செய்து காட்டிய பல அரிய பெரிய நிகழ்ச்சிகள் இக்கும்மிப் பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒரு நாள் செய்கு முஸ்தபா ஒலியுல்லாவும் அவர்கள் தம் புதல்வரும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். காட்டு வழியாகப் போகையில் அவர்களைக் கள்வர் வழி மறித்தனர். அவர்களிடமுள்ள பொருள்களைக் கொடுக்கா விட்டால் கொல்வதாக அச்சுறுத்தினர். அவ்விருவரும் தங்களிடம் உள்ள பொருள்கள் அனைத்தையும் கொண்டு செல்லும்படி கள்வரிடம் கொடுத்தனர். அவ்வாறு கொடுத்துவிட்டுத் தொழுகையை நிறைவேற்றுவதில் ஈடுபட்டார்கள். தொழுகையை முடித்துக் கொண்டு பார்க்கையில் கொள்ளை அடித்தவர்கள் இன்னும் அங்கே நிற்பதைக் கண்டார்கள். இதனைக் கண்டதும் ஒலியுல்லா அவர்கள்,

என்னப்பா இன்னும் போகவில்லை நீங்கள்
என்ன விதத்தாலே நிற்குகிறீர்
காணவில்லை என்ற எண்ணத்தினாலே
கவலையினாலே சலிக்கிறீரோ
உள்ளதைத் தந்தோம் எங்களிடத்தில்
உடுமானந் தவிரவே ரென்றுமில்லை
கள்வரே உங்கள் மனம் போல் உங்கள்
காரியத்தை நன்றாய்ச் செய்துகொள்வீர்.

என்று கூறினார்கள். இதனைக் கேட்டவுடன் கள்வர்கள் "பல்லாண்டுகளாக நாங்கள் இங்கேயே இருக்கிறோம். எங்கள் கையிலிருந்து தப்பி ஒருவராவது போனதில்லை. ஆனால் இன்றோ எல்லாம் வியப்பாய் இருக்கிறது" என்றனர். அக்கள்வர் தங்கள் கண்களின் ஒளி மங்கி விட்டதாகவும் கூறினர். கள்வர்களின் இச்சிக்கலான நிலைமையைக் கண்டு உள்ளமிரங்கிக் கள்வருக்குப் புத்திமதி கூறினார்கள் செய்கு முஸ்தபா ஒலியுல்லா அவர்கள்.

கொள்ளைத் தொழிலை மறந்து விடுமிந்த
கொலை களவைத் தொலைத்துவிடும்
எல்லாம் படைத்தாளுமேக பெரியோனை
எண்ணி மனதில் தொழுது கொள்ளும்.

கள்வர்களும் தப்பிப் பிழைத்தது போதுமென்று அன்று முதல் களவில் ஈடுபடவில்லை.

வேர்விலைச்கு அருகாமையில் மக்கூன் என்றோர் பட்டினம் உண்டு. அங்கேயுள்ள கிராமங்கள் பல இன்றும் ஊர்மனை போன்ற செந்தமிழ்ப் பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சிறு நகரத்தில் அப்துல் ஹமீது மரைக்கார் என்ற ஒரு புலவர் இருந்தார், இவர் செய்கு அஷ்றப் ஒலியுல்லாவைப் புகழ்ந்து பாக்கள் பாடியுள்ளார். ஈழத்தில் குடியேறிய முஸ்லிம் மக்களின் முதற் பிரிவைச் சேர்ந்தவரின் வழித்தோன்றல்களுள் செய்கு அஷ்றப் ஒலியுல்லாவும் ஒருவராவர். அவரின் பூதவுடல் கெச்சிமலைப் பள்ளியிலே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. அப்துல் ஹமீது மரைக்கார் பாடியுள்ள பாடல்கள் தோத்திரப் புஞ்சம் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. தோத்திரப் புஞ்சத்தில் பல பிரபந்தங்கள் உள்ளன.

ஒரு முனாஜாத்துப் பாடல் தோத்திர புஞ்சத்தின் முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஒருவரைப் புகழ்ந்து குறை இரங்கிப் பாடுவதை முனாஜாத்து என்று அறபு மொழியில் வழங்குவர். இம்முனாஜாத்துப் பாடல் செய்கு அஷ்றப் ஒலியுல்லா அவர்கள் பேரில் பாடப்பட்டது. காப்புச் செய்யுளாக அமைந்துள்ள வெண்பாப் பாடலிலே இவ்வாறு புலவர் குறிப்பிடுகின்றார்:

நீர்பூத்த வாரிதிசூழ் நீணிலத்தி லாரிலங்கைச்
சீர்பூத்த கெச்சிமலைத் தீபகற்பத்—தேர்பூத்த
சத்தார்சை கஷ்றபுபாற் சார்பு
முனாஜாத்துரைக்கக்
கத்தா லாங் காருணியே காப்பு.

ஒரு முறை ஒல்லாந்தர் மூன்று பக்கங்களாலும் கடலால் சூழப்பட்டுள்ள கெச்சி மலைக்குச் செல்லக் கூடிய நிலப்பரப்பில் உள்ளபாதையை உடைத்தனராம். அவ்வாறு ஒல்லாந்தர் உடைக்கும் பொழுது அவர்களை அவ்வாறு செய்யவிடாமல் தடுத்தது மட்டுமின்றி ஒல்லாந்தர்களும் கடலில் விழக் காரணராயிருந்தார்களாம். இந்நிகழ்ச்சியையே தோத்திரப் புஞ்ச ஆசிரியர் அப்துல் ஹமீது மரைக்கார் அவர்கள் பின்வருமாறு பாடுகிறார்.

முப்புரங் கடல்சூழுங்கள் முறை மலைப்பாதை
தன்னைத்
தப்புற மறுத்து டைக்குந் தறுகண் ணொலாந்தர்
தம்மைக்
குப்புறக் கடலில் வீழ்ந்து குருதி கொப்பளிக்க
மாய்த்தே
அப்புறமகற்றுஞ் சைகு அஷ்றபு ஒலியுல்லாவே.

இவ்வாசிரியர் பாடிய இன்னொரு பாடல் கெச்சிமலைத் தேவாரம் என வழங்கப்படுகிறது. இப்பாடலில் வேர்விலையில் உள்ள கெச்சி மலையைத் திருத் தலமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இப்பாடல்களும் அப்துல் ஹமீது மரைக்காரின் தோத்திர புஞ்சத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவையேயன்றி அப்துல் ஹமீதுப் புலவர் இயற்றிய வேறு பல நூல்கள் இன்னும் ஏட்டுப் பிரதிகளாகவே இருக்கின்றன. இவர் பல சமர கவிகளும் பாடியுள்ளார். இவரால் இயற்றப்பட்ட பாலகர் தாலாட்டு இப்பகுதி மக்களால் பெரிதும் போற்றப்படுவதெனினும் இன்னும் ஏட்டு வடிவிலே இருக்கின்றது.

இனி, முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராகக் கூடி வாழும் தமிழ் பேசும் பிரதேசமான கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொள்வோம். இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுள் பெரும்பாலானோர் விவசாயிகளாகவே வாழ்கின்றனர். இதன் பயனாக அவர்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல்கள் மிகப் பல. அம்மட்டன்று. அவர்களிடையே பல அறிஞர்களும் வாழ்ந்துள்ளனர்.

மட்டக்களப்புக்கு அண்மையில் மருதமுனை என்னும் ஊர் உண்டு. அங்கு 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மீரா லெவ்வை ஆலிம் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் செய்கு இப்றாகீம் லெவ்வை ஆலிம் அவர்களின் புதல்வராவர். கிராமிய மக்கள் இவரைச் சின்ன ஆலிம் அப்பா என்றழைப்பர். இவர் இயற்கைப் புலமை நிரம்பியவர். இவரால் இயற்றப்பட்ட பாக்களோ மிகப் பல. அவை கவனிப்பாரற்று அழிந்தொழிந்தன. இவர் இயற்றிய நூல்களுள் ஞானரை வென்றான் என்பது மாத்திரமே இப்போது எமக்குக் கிடைத்துள்ளது. ஒரு சமயம் இவர் ஈடுபட்டிருந்த வேளாண்மை உரிய காலத்தில் மழையின்மையால் வாடி வதங்கியது. இதனைச் சகிக்க மாட்டாதவராய் அல்லாவை நினைத்து வயலுள் நின்றபடியே தோத்திரப் பாக்களைப் பாடினாராம். காவியம் பாடி முடியுமுன் பெரு மழை பெய்ததாம். இதனை மக்கள் மழைக்காவியம் என்ற பெயரால் அழைத்தனர். இவர் தமது பிற்கால வாழ்க்கையைத்திருகோணமலைக்கு அருகாமையில் உள்ள கவாட்டிக் குடா என்னும் இடத்திற்கழித்து அங்கேயே இவ்வுலகை நீத்தார். அவருடைய கல்லறை புகையிரத நிலையத்துக்குப் பக்கத்தில் இருக்கின்றது. இவருடைய கல்லறை எல்லா மதத்தினராலும் கௌரவிக்கப்படுகின்றது.

ஞானரை வென்றான் என்ற நூலில் இஸ்லாம் மதத்தைப் பேணாது உலகை ஏமாற்றிக் கொண்டு திரியும் சில போலி ஞானிகளை இன்னார் என அறிவதற்குப் பயன்படும் பல போதனைகள் உள்ளன. மீரா லெவ்வை ஆலிம் தமது நூலில் கேட்டுள்ள வினாக்களுக்கு விடை இறுக்கக்கூடியவர்கள் ஒருபோதும் நல்வழியில் இருந்து சறுகமாட்டார் என்று கூறலாம். வேறொரு வகையில் கூறுவதெனின் ஞானரை வென்றான் என்ற நூலில் எழுப்பப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை காண முடியுமெனின் கற்றறிந்த ஞானரை

யும் வென்று விடலாம். எடுத்துக்காட்டாக ஒரு செய்யுளை மாத்திரம் ஈண்டு குறிப்பிடலாம்.

அறிவிலாத மூடரே அமட்டுகின்ற மாடரே
முறிவிலாத தொழுகையை முயன்றிலாத கேடரே
மறுவிலாத வள்ளல்சொன் மறுத்து வந்த வண்டரே
நெறிபிறேடு பிரிவை யிங்கு நீயறிந்து விள்ளடா.

[அமட்டுதல் — அதட்டிப் பயமுறுத்தல்; மாடா — மூடா; வண்டன் — தீயோன்; விள்ளுதல் — சொல்லுதல்.]

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த வேறொரு புலவர் மு. வெ. அப்துல் றகுமான் ஆலிம் என்பவராவர். இவர் அக்கரைப்பற்று அட்டாளைச் சேனையைச் சேர்ந்தவர். இப்பொழுது அக்கரைப்பற்று என்று வழங்கும் பகுதி முன்னர் கருங்கொடி என வழங்கப்பட்டது என்பர். இவரால் இயற்றப்பட்ட மணமங்கள மாலை இன்னும் அச்சு வாகனம் ஏறியது என்று கூறமுடியாது. முகம்மது நபி அவர்களின் புதல்வி பாத்திமா நாயகியின் திருமணத்தை—புலவர் கூறுவது போல் மாமண மங்களத்தை—மணமங்களமாலை ஆசிரியர் பொருளாக வைத்துப் பாடியுள்ளார். மணமங்கள மாலையில் பலவிதமான செய்யுள் வகைகள் கையாளப்பட்டுள்ளன. பல்வேறு இராக தாளங்களிலும் பாடப்பட்டுள்ளன. பல பாட்ல்கள் இடம் பெற்றுள்ள மண மங்கள மாலையை விரிவஞ்சி விடுத்தனம்.

புத்தளத்துக்கு அண்மையிலுள்ள கற்பிட்டியைச் சேர்ந்த காரைத் தீவில் இயற்கையாகக் கவிபாடும் ஆற்றல் மிக்க ஒருவர் இருந்தார். இவர் கண் தெரியாத குருடராவர். இவர் பாடிய பாடல்கள் மிகப் பல என்பர்.

புரவலர்களைப் பொறுத்தவரையில் புத்தளத்தில் வாழ்ந்த தம்பி மரைக்காரைக் குறிப்பிடலாம். இவர் புலவர்களுக்கு இல்லையெனது பரிசில்கள் வழங்கினர். கீழக் கரையைச் சேர்ந்த அப்துல் மஜீது என்பவர் ஆசாரக்கோவை என்னும் இஸ்லாமியத் தமிழ் நூலை இயற்றுவதற்கு பெரிதும் உதவிபுரிந்துள்ளார். இதன் பயனாக ஆசாரக்கோவையிலுள்ள ஒவ்வொரு செய்யுளினதும் இறுதியில் 'தம்பி மாமரைக்காய சகாயனே' என்ற சொற்றொடர் அமைந்துள்ளது.

எனவே ஈழத்து முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு குறிப்பிடத்தக்க தொன்றாகும். முஸ்லிம் மக்கள் தமிழுக்காற்றிய தொண்டைப் போற்றிப் புகழ்வதுடன் நாம் நின்று விடலாகாது. ஈழத்து முஸ்லிம் புலவர்கள் இயற்றிய அச்சு வாகனம் ஏறிய நூல்களைப் பெருவழக்கில் கொண்டு வருதல் வேண்டும். அச்சுவாகனம் ஏறாத பல நூல்களை வெளியிட முயல வேண்டும். இதுவே தலைசிறந்த தொண்டாகும் ★

பண்டிதர்

நாவலர் என்றால் அது எப்படி ஆறுமுக நாவலரைக் குறிக்கின்றதோ, அப்படியே பண்டிதர் என்றால் ஈழநாட்டில் கணபதிப்பிள்ளை யவர்களையே குறிப்பிடுவதாகும். இப்போது பலர் 'பண்டித மணி', 'தமிழ்ப் பெருங்கடல்' என்றெல்லாம் அவருடைய பெயருக்கு முன்னால் எழுதுகிறார்கள். இதெல்லாம் அவருக்குப் பிடிக்காத சங்கதிகள். ஏனென்றால் அவர் ஏறக்குறைய பதினைந்து வருடமாகச் சொந்தப் பெயரை விட்டுவிட்டுப், புனைபெயர்களில் ஒளித்து விளையாடியிருக்கிறார்.

— கனக செந்திநாதன்

பழந்தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்தின் தொண்டு

எவ். எக்ஸ். சி. நடராசா

ஈழம் தமிழ்நாடு; தமிழ் வளம் நிறைந்த தமிழ்நாடு. தமிழ் வளர்த்த பெருநாடு. தமிழ்த் தொண்டு புரிந்து தலைசிறந்த தனிநாடு ஈழவள நாடு பண்டுதொட்டு இன்றுவரையும் தமிழ்த் தொண்டு புரிந்து வந்துள்ளது.

ஈழம் செந்தமிழ்நாடு எனும்போது நமக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகின்றது. இப்பெருமகிழ்ச் சிக்குரிய ஆதாரங்களை எடுத்துக்காட்டி இது வெறும் போலிப் பூரிப்பன்று என்று காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தியத் தமிழகம் இலங்கைத் தமிழகம் என்ற பான்மையில் இயங்கிவரும் தமிழகத்தில் இலங்கையின் தமிழ்த்தொண்டு எத்தன்மையது என்று ஒருவர் அறிதற்கு இக்கட்டுரை உதவு மென்பதே எமது நம்பிக்கை.

தொன்மை தொட்டு ஈழம் தமிழ் வளர்த்தது என்றும். தமிழகத்தின் தொன்மை சங்க இலக்கி யங்களிலேயே உண்டு சங்க இலக்கியங்களில் ஈழத்துச் சான்றோர் நாமங்களைக் கேட்கின்றோம்.

முரஞ்சியூர் முடிநாகராயர் சங்கப் புலவர்க ளில் பெருமை வாய்ந்தவர். இவர் ஈழமண்ட லத்தைச் சார்ந்தவரென்பது ஒரு ஐதீகம். இப் பழங்கதைக்கு மாறாக இவர் தாய்நாட்டுக்கே உரியவர் என்று கூறுவர் ஒருவருமிலர். முடிநா கர் ஆயர் எனவே நாகர்கள் வாழ்ந்த ஈழநாட் டுக்கே உரியவராவர் என்பது துணிவு.

சங்கத்தமர்ந்து தமிழ் வளர்த்த மற்றைய இந்நாட்டுப் புலவர், ஈழத்துப் பூதந்தேவனர் என்பர். ஈழத்துப் பூதனுக்கு மகன் தேவன் எனப்பெற்றார்போலும். இவர் பாடல்களைச் சங்க நூல்களில் இன்றும் காண்டல் கூடும். மேற் கணக்கு நூல்களில் இவர் பாடல்கள் அமைந்திரு க்கின்றன. இவரின் பாடல்களாக, எல்லாமாக ஏழு பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. நற் றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை என்ற நூல்களில் இப்பாடல்கள் வந்துள்ளன.

ஈழத்தின் வடபால் நல்லரசு செலுத்திய ஆரியச் சக்கரவர்த்திகள், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் என்பர். தமிழ் வளர்ச்சியுற சங்கத நூலறிவு வேண்டியதே என்பதை உணர்ந்து இள வரசர்களைத் தாய்நாடு போக்கி, சங்கதமும் தமி ழும் ஒருங்கே கற்கவைத்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தே சோதி டம், வைத்தியம், புராண சம்பந்தமான பல நூல் கள் இயற்றப்பட்டுள்ளன என்பது பொய்யுரை யன்று. அரசர்களே புலவர்களாக விளங்கினர் அரசனுயிருந்தும் பாண்டித்தியம் பெற்றிருந்த மையால் சிங்கைச் செகராச சேகரனைப் பண்டித ராசர் என்றனர் சான்றோர். பண்டிதராசர் எனப்பட்ட சிங்கைச் செகராச சேகரன் தட்சிண கைலாச புராணம், கண்ணகி வழக்குரை காவி யம் போன்ற பெருநூல்களை இயற்றினன் என் பது வெள்ளிடைமலை.

ஆரியச்சக்கரவர்த்திகள் வமிசத்திற் பிறந்து இளவரசனுயிருந்த அரசகேசரி, இரகுவமிசம் என்னும் புகழ்மிக்க காவியத்தைச் செய்தருளி னார்.

தமிழ் மக்களின் சுய ஆட்சி ஒழிந்து அந்நியர் ஆட்சி ஏற்பட்ட காலத்தும் தமிழர்கள் தம் தாய் மொழியை மறந்தனரல்லர். போர்த்துக்கீசருக்கு உறுதுணையாயிருந்த கத்தோலிக்கக் குரவர்களும் தங்கள் வேதபோதக வேலைக்கும் தமிழ்மொழி யின் ஆவசியகம் வேண்டியதுமாயிற்று. ஆகவே

தமிழ் வளர்க்கப்பட்டது. தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. மக்கள் காவியங்கள் என்று கருதப்படும் பிரபந்தங்கள் சில இயற்றப்பட்டன. சந்தியோகுமையூர் அம்மானை, ஞானப்பள்ளு இவை அவற்றுட் சில. பெருங்காப்பியமாக இயற்றப்பட்டது திருச்செல்வர் காவியமாகும்.

அந்நியர் மதம் தலைகாட்டுவதற்கு முன்னும் பின்னும் சைவசமயாபிமானிகள் தங்கள் சமய விருத்தி நோக்கி, புராணங்கள் பல ஆக்கியுள்ளார்கள். வரதபண்டிதர் என்னும் பெரும் புலவர் சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், பிள்ளையார் கதை முதலாம் சைவசமய நூல்களை இயற்றியுள்ளார்.

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்டகாலத்தும் பழந்தமிழ் இலக்கியப் பான்மையில் நூல்கள் ஆக்கப்பட்டன. நவநீத கிருஷ்ணபாரதியாரின் உலகியல் சங்க நூல்களின் சாயலாகவே விளங்குகின்றது. புலவர் பாண்டியனாரின் நம்பியகவலும் அதே தன்மைத்து. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை சங்ககாலத்து நூல்களைத் தழுவிய ஒரு புதுத் திருப்பம்.

மட்டக்களப்பு பூபாலபிள்ளையின் நல்லிசை நாற்பது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களை ஒத்திருக்கின்றது.

முகாந்திரம் சதாசிவ ஐயர் அவர்களின் இருது சங்கார காவியம், இளமுருகனார் அவர்களின் செந்தமிழ்ச் செல்வம் இவையிரண்டும் பழைய காவியங்களின் பான்மையில் எழுந்தவை.

புராண வகையில் கனகசபைப் பிள்ளையின் திருவாக்கூப் புராணம் சிவானந்தையரின் புலியூர்ப் புராணம், பூபால பிள்ளையின் சீமந்தனி புராணம் பெரிதும் போற்றப்படக் கூடியவை.

பிரபந்த வகையிலும் ஈழநாடு பின்னிற்கவில்லை. பள்ளு, அந்தாதி, ஊஞ்சல், குறவஞ்சி இவற்றிற்கு இங்கு பெரிதும் மதிப்பு.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியத்திற்கு ஈழஞ் செய்த தொண்டு மேற்போந்த நூல்களை ஆக்கியமைதான் என்று முடிவு கட்டலாகாது. பழந்தமிழ் இலக்கியங்களை மக்களின் கண்முன் கொண்டுவந்து நிறுத்திக் காட்டிய பெருமையும் ஈழத்துச் சான்றோரைச் சார்ந்ததே. செல்லரித்து அழிந்துபோகாமற் காப்பாற்றி, பண்டை நூல்களில் மிகவும் போற்றப்படக் கூடியனவற்றைத் திருத்தமாகவும் பொருத்தமாகவும் அச்சேற்றி வெளிப்படுத்திய பெருமை நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களுக்கும், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்குமுரியதே.

பண்டைத் தமிழ் நூல்களை இவர்கள் வெளிப்படுத்த, பண்டைத் தமிழ்ப் புலவர்களைப் பற்றிய செய்திகளையும் அவர்களின் வரலாறுகளையும் முதன்முதலாக எழுதிக்காட்டிய புகழ் சைமன் காசிச் செட்டியையும், ஆர்னேல்டு சதாசிவம் பிள்ளையையும் சார்ந்தது.

இவ்வண்ணம் ஈழஞ் செய்த தமித் தொண்டு எவ்வாற்றானும் தாய்நாட்டு மக்களின் தொண்டிலும் குறைந்ததன்று.

> "தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு
> சக்தி பிறக்குது மூச்சினிலே... ..."
> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
> தன் மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய்"

★

சிருஷ்டிகர்த்தா

எழுத்தாளன் சமூகத்துக்குத் தேவையானவைகளைச் சிந்தனைத் தெளிவோடும், கலையழகோடும் எழுபவனாக இருக்க வேண்டும். சமூக நிலையைத் தெரிவிக்கும் கண்ணாடியாகமட்டும் அல்ல, புது இலட்சிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க உதவும் சம்மட்டியாகவும் இருக்க வேண்டும்.

— வ. அ. இராசரத்தினம்

தமிழ்-சிங்கள இலக்கியப் பரிவர்த்தனைகள்

நா. சுப்பிரமணியன்

தமிழ் நாடும், நம் நாடாகிய இலங்கைத் தீவும் சரித்திரம் அறியாக் காலத்திற்கு முன்னிருந்தே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்திருக்கின்றன. ஒரு காலத்தில் இவ்விரு நாடுகளும் இணைந்திருந்து, பிற்காலத்தில் பிரிந்துள்ளன என சில நூலறிஞர்கள் கருதுகின்றார்கள். இவ்விரு நாடுகளும் இணைந்திருந்த காலததிலே இங்கு வாழ்ந்த மக்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் இவர்களின் பழக்கவழக்கங்கள், குடியிருப்பு முறை, ஆசார முறை, தொழில் முறைகள் ஆதியனவற்றில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது.

இலங்கைச் சரித்திரம்; விஜயன் தன் சகாக்களுடன் இலங்கையை வந்தடைந்த காலத்திலிருந்து ஆரம்பமாகிறது. இங்கு வந்த விஜயன் முதலில் இந்நாட்டு இளவரசியாகிய குவேனியின் மனதைக் கவர்ந்து அவள் மூலமாக நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினன். சிறிது காலம் கழிந்ததும் குவேனியை விரட்டிவிட்டு பாண்டிய மன்னனுக்குப் பரிசுகள் பலவற்றை அனுப்பிப் பெண் கேட்டான். தென் மதுரையில் அரசு செலுத்திய பாண்டிய மன்னன் தனது புத்திரியையும், விஜயனின் சகாக்களுக்கு மனைவிகளாகப் பல பெண்களையும், பதினெட்டுச் சாதிகளைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களையும் அனுப்பி வைத்தான். விஜயன் தென் மதுரைப் பாண்டியனின் மகளை மணஞ்செய்து மற்றப் பெண்களைத் தன் சகாக்களுக்கும் மணமுடித்து வைத்தான். சரித்திர வரலாற்றின்படி தமிழருக்கும் சிங்களருக்குமிடையே ஏற்பட்ட முதற் சம்பந்தம் இதுவாகும். பல தொழில் புரியும் ஆயிரம் குடிகளும் (பெண்கள், ஆண்கள், குழந்தைகள் உட்பட) இங்கு குடியேற்றப்பட்டதனாலே தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், ஆசார முறைகள், மொழி ஆதியன இந்நாட்டில் குடிபுக ஏதுவாயிற்று. அதன் பிறகு அடிக்கடி இந்தியாவில் வட நாட்டிலிருந்து ஓரளவு மக்களும், தமிழகத்திலிருந்து பெருந்தொகையான மக்களும் வந்து குடியேறலாயினர். அதனால் இந்நாட்டுப் பூர்வ குடிகளின் பழக்கவழக்கங்கள் தோன்ற வழியேற்பட்டது. மகாவம்சம் தரும் குறிப்புகளைக் கொண்டு நாம் இந்த முடிவிற்கு வந்த போதிலும் எது காரணங் குறித்தோ இந்நாட்டுச் சரித்திரத்தை எழுதிய சரித்திராசிரியர்கள் தமிழ் மக்களின் செல்வாக்கு இந்த நாட்டிலே பன்னிரண்டாம் நூற்றுண்டின் பின்னரே தோன்றியது எனக் கூறியிருக்கிறுர்கள். அத்துடன் அவர்கள் பொல்லநறுவையை சோழர்கள் பிடித்து அரசாளத் தொடங்கிய பின்னர்தான் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது எனவும் வாதித்திருக்கிறுர்கள். இக்கூற்று முற்றிலும் ஏற்கக் கூடியதன்று. தமிழரின் அரசியல் ஆதிக்கம் தமிழ்—சிங்கள பரிவர்த்தனைக்கு ஓரளவு உதவியிருக்கிறதேயொழிய, அதனல் தான் இவ்விரு மக்களினத்துக்கும் நெருங்கிய ஐக்கியம் ஏற்பட்டது எனக் கூறுவது பொருந்தாது. இக் கட்டுரையில் இந்நாட்டிலே தமிழ்—சிங்கள இலக்கியப் பரிவர்த்தனைகள் ஏற்பட ஏதுவாயிருந்த காரணங்களையும், இலக்கியப் பரிவர்த்தனைகளையும் மாத்திரம் ஆராயத் துணிவதால் மற்ற விஷயங்களை இங்கு ஆராயாது விடுகிறேம்.

இந்நாட்டில் சிங்கள மக்களிடையே தமிழ் இலக்கியக் கருத்துக்கள் இடம் பெற மூல காரணமாயிருந்தது பௌத்த சமயப் பிரசாரமாகும். புத்த பகவானின் புனித போதனைகளை உலகமெங்கும் பரப்ப நினைத்த தர்மாசோக மன்னன் பர்மா, சீயம், யப்பான், தமிழ்நாடு, இலங்கை ஆகிய நாடுகளுக்கு புத்த குருமார்களை

அனுப்பி வைத்தான். வணக்கத்துக்குரிய மகேந்திர தேரர் இலங்கைக்கு வந்து பௌத்த சமயத்தைப் போதித்த காலத்திலேயே, தமிழ் நாட்டிலும் புத்த மதம் பரவியது. பன்மொழிப் புலவர்களான பல தமிழ்ப் பெரியார்கள் புத்தரின் போதனையில் ஈடுபட்ட பௌத்த குருமார்களாக மாறினர். பௌத்த பிக்குகளாக மாறிய தமிழர்கள் தமிழ் நாட்டில் பௌத்த மதப் பிரசாரம் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு, இலங்கைக்கும் பௌத்தம் போதிக்க வந்துள்ளனர். இவர்கள் மூலமாக, அதாவது பாளி மொழி மூலமாக தமிழ் இலக்கியக் கருத்துக்கள் சிங்களத்தில் இடம் பெறத் தொடங்கின.

மகா வம்சத்தில் காணப்படும் குறிப்பின்படி இலங்கைக்கு வந்த முதலாவது தமிழறிஞர் சங்கமித்திரர் என்னும் புத்த குரு ஆவார். இவர் கோட்டாபய மன்னன் காலத்திலே, அதாவது கி. பி. 254-ல், இலங்கைக்கு வந்திருக்கிறார். கோட்டாபய மன்னன், புத்தபிக்குகள் 60 பேரை அபயகிரி விகாரையிலிருந்து அகற்றி நாடு கடத்தி விட்ட செய்தியைக் கேள்விப்பட்ட சங்கமித்திரர் சோழ நாட்டிலிருந்து இங்கு வந்து மகா விகாரைப் புத்த குருக்களை வாதில் வென்று தமது வைதுல்ய கொள்கையை நிலை நாட்டினர். இவர் சிறந்த அறிஞரென மகாவம்சம் குறிப்பிடுகிறது. இவர் எழுதிய நூல்கள் யாவை யெனத் தெரியவில்லை.

அடுத்தபடியாக இந்நாட்டிற்கு வந்து பௌத்தம் வளர்த்த தமிழ்ப் பெரியார் ஆசார்ய புத்த தத்தராவர். இவர் தமிழ் நாட்டிலே காஞ்சியில் பிறந்தவர். இவர் உறையூரிலும் அனுராதபுரத்தில் மகா விகாரையிலும் தங்கியிருந்து பாளி நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். பௌத்தர்கள் புத்த கோசருக்கு அடுத்தபடியாக வைத்துப் போற்றும் பெரியார் இவராவர். இவரெழுதிய நூல்களில் பிரதானமானவை "அபிதம்மாவதார"வும், "வினய வினிச்சய"வுமாகும். இந்நூல்களில் காணப்படும் விஷயங்கள் சிங்கள இலக்கியத்தில் காணப்படுகின்றன.

நாளந்தா பௌத்த சர்வகலாசாலையின் துணை வேந்தராகவிருந்த தருமபால தேரர் தமிழகத்தில் பிறந்த தமிழர். புத்தரின் அவதாரங்களில் ஒருவராக இவர் பௌத்தர்களால் மதிக்கப்படுகின்றார். இவரைப் பௌத்தர்கள் தருமபால போதிசத்துவர் என அழைக்கின்றனர். இவர் மகா விகாரையில் தங்கி பல பாளி நூல்களை எழுதியிருக்கிறார்.

இரண்டாம் பராக்கிரம பாகு மன்னன் காலத்தில் தவருன வழியில் நடந்த புத்த பிக்குகளைத் திருத்திச் சமயத்தைக் காப்பதற்காக அரசன் சோழ நாட்டிலிருந்து புத்த மதப் பெரியார்களை வரவழைத்தான். அவனது வேண்டுகோளுக்கிணங்கி வந்த பெரியார்களில் தர்மகீர்த்தி தேரரும் ஒருவராவர். இவர் மகாவம்சத்தின் இரண்டாம் பகுதியாகிய குள வம்சத்தைப் பாளியில் எழுதியதோடு, பாளி இலக்கியத்தில் தலைசிறந்த நூலாகக் கருதப்படும் "தாத வம்சம்" என்னும் நூலையும் பாளியில் எழுதினர். இவர் இதனைப் பொது மக்களுக்கு சிங்களத்தில் விளக்க சிங்களத்தில் ஒரு உரையையும் எழுதியிருக்கிறர். தாத வம்சத்தை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்த திரு. குமாரசுவாமியவர்கள் இதனை சுளோபாக்கியானத்துடன் ஒப்பிட்டுள்ளார்.

நான்காம் பராக்கிரமபாகு மன்னன் அரசோச்சிய காலத்தில் சோழ நாட்டிலிருந்து பெருந் தொகையான தமிழ்ப் புத்த குருக்கள் இங்கு வரவழைக்கப்பட்டிருக்கிருர்கள். இவர்களில் இருவர் புலவர்களால் போற்றப்படத்தக்க பெரும் புலவர்கள். ஒருவர் பெயர் யாதெனத் தெரியவில்லை. இப்பெரியார் பன்மொழிப் புலவனுகத் திகழ்ந்த நான்காம் பராக்கிரமபாகுவின் ஆசிரியராகவிருந்திருக்கிருர். பகவான் புத்தரின் முற்பிறப்புக்களைக் கூறும் 550 ஜாதகக் கதைகளை பாளியிலிருந்து சிங்களத்தில் மொழி பெயர்க்க இப்பெரியார் பெரிதும் உதவியிருக்கிருர். பல புத்த குருமார்கள் இதனைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க அரசனுக்கு உதவியிருக்கிருர்கள். இப்பெரியாருடன் வந்த மற்றப் பெரும் புலவர் தீபங்கரர் என்றும் புத்தப்பிரியர் என்றும் அழைக்கப்படும் இவர் தமிழ் நாட்டின் தீபமாக விளங்கியிருக்கிருர். இவர் "பத ரூப சித்தி" என்னும் பாளி இலக்கண நூலையும், "பஜ்ஜமது" என்னும் பாளி நூலையும் எழுதியுள்ளார். இன்னும் பல தமிழ்ப் பெரியார்கள் பாளி மொழி மூலமாக சிங்கள இலக்கியம் வளர உதவியளித்திருக்கிருர்கள். இவர்கள் தவிர பல தமிழர்கள் சிங்களத்திலேயே பல நூல்களை எழுதியிருக்கிருர்கள்.

அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் ஆரும் பராக்கிரமபாகு மன்னனின்

இரண்டாம் மகளாமா உலகுடைய தேவியை மண முடித்த நல்லூர்த்துணையார் என்பவராவர். இவர் சாசனப் பாதுகாப்பு மந்திரியாகக் கடமையாற்றி யிருக்கிறார். சிங்கள நூல்கள், இவர் பாண்டி நாட்டிலிருந்து வந்த தமிழ் வீரன் எனக் கூறு கின்றன. முதன் முதலிலே சிங்களத்தில் எழுதப் பட்ட நிகண்டுகளில் இவரெழுதிய "புராண நாமா வலிய" என்ற நூலும் ஒன்ருகும். இவர் காலத்தி லேயே சிங்கள நிகண்டுகள் தோன்றியிருக் கின்றன.

19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியிலேதான் சிங்களத்தில் நாவல்கள் தோன்றின. முதலில் தோன்றிய நாவல்களில் பெரும்பாலும் இந்நாட் டின் கிராமியக் கதைகளையும், கர்ண பரம்பரைக் கதைகளையும் பின்னணியாகக் கொண்ட கதை களே காணப்படுகின்றன. ஆரம்பத்தில் எழுதப் பட்ட சிங்கள நாவல்களில் "குடும்ப சங்ரக்சனி" என்னும் நாவலும் அடங்கும். இதனைக்களுத் துறை கோர்ட் முதலியாராகவிருந்த திரு. ஏ. சி. நமசிவாயம் என்னும் தமிழர் எழுதியுள்ளார். திரு. நமசிவாயம் அவர்களே பஞ்சதந்திரத்தை யும் சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளார். அதன் பிறகு சிங்கள இலக்கியங்களைப் படைத்த தமிழர்கள் யார் என அறியக்கூடியதாயில்லை. அண்மையில் அரச கரும மொழி இலாகாவினர் சிறுகைத்தொழிற் பாடப் புத்தகங்களை சிங்கள த்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வருகி ருர்கள். தமிழ் நாட்டில் மெழுகு வர்ண வேலை (அரக்கு வேலை) மிகவும் விருத்தியடைந்துள்ள போதிலும் இது பற்றித்தமிழில் ஏதாவது நூல் எழுதப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. திரு. எஸ். கே. தம்பிப்பிள்ளையவர்கள் அரக்கு வேலை முதலாம் பாகத்தையும், திரு. நா. சுப்பிரமணி யன் அரக்கு வேலை இரண்டாம் பாகத்தையும் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த் துள்ளனர். இன்னும் திரு. தம்பிப்பிள்ளையவர் கள் நெசவுத் தொழில், தச்சு வேலை, வனைதற் ருெழில் போன்ற பல நூல்களையும், திரு. சுப்பிர மணியன் தும்பு வேலை, நெசவுத் தொழில் (இர ண்டாம் பாகம்) போன்ற நூல்களையும் மொழி பெயர்த்துள்ளனர். இலங்கை வானெலியில் கடமை பார்க்கும் ஜனுப் காமில் மரைக்கார் அவர் கள் தச்சு வேலை (முதலாம் பாகம்) என்னும் நூலைத் தமிழாக்கினர்.

இதுவரை சிங்களம் கற்று தமிழையும், சிங்க ளத்தையும் வளம் படுத்திய தமிழர்களைப் பற்றிக் குறிப்பிட்டோம். இனித் தமிழ் கற்றுச் சிங்க ளத்தை வளர்த்த சிங்கள அறிஞர்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

புத்தசமயம் இலங்கையிலும், தமிழகத்திலும் பரவியவுடனே சிங்கள-தமிழ்ப் புத்த குருமார் கள் பரிவர்த்தனை அடிக்கடி நடந்து வந்துள்ளது. சீன யாத்திரீகரான திரு ஹியுங்சான் காஞ்சிக் குச் சென்றிருந்தபொழுது, பன்மொழிப் புலவர் களான முந்நூறுக்கு மேற்பட்ட இலங்கைப்புத்த குருக்கள் அங்கு தங்கி கல்வி கற்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்களில் பெரும்பாலோர் தமிழறிந்த சிங்கள பௌத்த குருக்களாக இருக்கவேண்டும். பெயரளவில் யாம் அறிந்த முதலாவது சிங்களத் தமிழறிஞர் ஆரும் பராக்கி ரமபாகு மன்னன் காலத்திலே வாழ்ந்த தொட்ட கமுவை ஸ்ரீராகுல என்னும் புத்த குருவாவர். இவருக்குப் பலநூற்ருண்டுகளுக்குமுன் "இரா ஜாவளி" என்ற நூலை எழுதியவரும், "உம்மக்க ஜாதக" என்னும் நூலைஎழுதியவரும் தமிழறிந்த சிங்கள அறிஞர்கள் எனத் தெரியவருகிறது. இவர்கள் பெருந்தொகையான தமிழ்ச் சொற் களைத் தம் நூல்களில் உபயோகித்திருக்கி ருர்கள். 15ம் நூற்ருண்டிலே கோகில சந்தே சத்தை (குயில் விடுதூது) எழுதிய ஆசிரியரும் ஒரு தமிழறிஞரே.

16ம் நூற்ருண்டில் வாழ்ந்த தலைசிறந்த சிங்க ளப்புலவர் அழகிய வண்ண மொஹொட்டால என்பாராவர். இவர் சுபாசித்தய, செவுல சந்தே சம் (சேவல் விடுதூது) குஸ்தாந்தினு ஹட்டன என்னும் பல நூல்களை எழுதியிருக்கிருர். இவர் "சுபாசித்தய" என்ற நூலில் தமிழ் நூல்க ளில் காணப்பட்ட கருத்துக்களையும் எடுத்தாண் டிருப்பதாக ஆரம்பத்திலேயே குறிப்பிடுகிருர். இவர் நாலடியாரிலிருந்து பல செய்யுட்களைச் சிங்களத்தில் மொழி பெயர்த்திருக்கிருர். இவ ருக்குப் பின்தோன்றிய சிங்களப் புலவர்கள் எல் லோருமே தமிழ் மொழியை நன்குகற்ற அறிஞர் களாக விளங்கியிருக்கின்றனர். "லோகோப காரய" என்ற சிங்கள நீதி நூலை எழுதிய "ரணஸ் கல்லே சாமி" என்னும் புத்தகுரு திருக்குறளைத் தெளிவுறக் கற்ற மேதை. இவர் குறளடியைப் பின்பற்றி லோகோபகாரத்தை இரண்டடியில் 'கீ' (G) முறையில் எழுதியிருப்பதோடு திருக்குறளிலிருந்து பல செய்யுட்களையும் மொழி பெயர்த்திருக்கிருர். "மகா ஹட்டன", மகாபதரங்க ஜாதகம், வேதாளன் தகத்தாவ

என்ற நூல்களை எழுதிய கிரிமெட்டியாவைப் புலவர் பின்னிரண்டு நூல்களையும் தமிழிலிருந்து மொழிபெயர்த்துள்ளதாகக் கூறியிருக்கிறார். வேதாளன் கத்தாவ, விக்கிரமாதித்தன் கதை மொழிபெயர்ப்பாகும். இவர் காலத்திலே, இரண்டாம் இராஜசிங்கனின் புலவர் அவையிலே கண்டி விநாயகர் கோவிலைச் சேர்ந்த "பிராம்மண ரால" எனப்படும் பிராமண தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்ததாகத் தெரியவருகிறது. கட்டுவானே திஸாநாயக்க என்னும் புலவர் வள்ளி—முருகன் கதையை "வள்ளி மாதா கத்தாவ" எனச் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். 1720ல் வாழ்ந்த தொடம்வலைக் கவிஞர் அரிச்சந்திரன் கதையைத் தமிழிலிருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்த்துள்ளார். கண்டி அரசர்கள் காலத்தில் பல தமிழ் நூல்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டிலே மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தை வணக்கத்துக்குரிய ஹிஸ்ஸெல்லே தர்மரத்தின அடிகள் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இவர் ஒரு ஆங்கிலப் பட்டதாரி. சிங்களத்திலும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர். அண்மையில் இவர் சிலப்பதிகாரக் கதையை "பத்தினி தெய்யோ" என்ற தலைப்பில் சிங்களத்தில் மொழிபெயர்த்து "சாகித்திய அக்கடமி"யின் முதற்பரிசைத் தட்டிக்கொண்டார். நானறிந்தவரையில் ஒரு சிங்கள நூலை தமிழில் மொழிபெயர்த்த முதற் சிங்களவர் இவராவர். இவர் சிங்களத்தில் எழுதப்பட்ட "பொருளாதாரம்" என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இவரே தற்பொழுது திருக்குறளையும் சிங்களத்தில் மொழிபெயர்த்து வருகிறார். ★

கலை

கலை—அது அழகின் வடிவம். ஆக்க சிந்தனையின் வடிவம். மனித உணர்ச்சியின் உயர்வை, உன்னத நிலையை அது பிரதிபலிக்கிறது. கலைஞன் அந்தக் கலையின் சிற்பி. அவன் உலகை நோக்குகிறான். அதன் ஒவ்வொரு படைப்பையும், அதன் ஒவ்வொரு அங்க அசைவையும், அதில் துவளும் அதி உயர்ந்த உணர்வையும் நோக்குகிறான். அந்த நோக்கத்துக்கு அவன் அழகு தருகிறான். அதுவே மனித உணர்வின் பூரணத்துவம்.

— பிரேம்ஜி

★ ★ ★

எழுத்தாளன் கடமை

இலக்கிய ஆசிரியன், தன் நாட்டிற்கும் சமூகத்திற்கும், ஏன் முழுதாக இவ்வுலகிற்கும் தொண்டு செய்பவனாக இருக்க வேண்டுமாயின், தன் சிருட்டிகளின் தேவை என்ன? என்பதைச் சிந்தித்தேயாக வேண்டும்.

— வ. அ. இராசரத்தினம்

நூல் நிலையங்கள்

கா. மாணிக்கவாசகர்

ஒரு நாட்டின் முதல் நூலகம் அதன் தேசிய நூலகமாகும். நம் நாட்டு அரசியல் வாதிகளின தும், கல்வியாளர்களினதும் கவலையீனத்தால் இலங்கையின் தேசிய நூலகம் இதுவரை உருவாகவில்லை. எனினும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நூலக மறுமலர்ச்சி இதனை நிறைவாக்கும் என நம்பலாம்.

இலங்கையின் நூலக வரிசையில் முதலிடம் வகிப்பது இலங்கைப் பல்கலைக் கழக நூலகமாகும். சேர். பொன். அருணசலம் அவர்களால் அவரது மகன் பத்மநாபன் என்பவருக்கு அன்பளிக்கப்பட்ட சுமார் 1,500 நூல்களைக் கருவூலமாகக் கொண்ட இந்நூலகத்தில் தற்பொழுது ஒரு லட்சத்திற்கும் அதிகமான நூல்கள் இருக்கின்றன. நூற்றுக் கணக்கான கால வெளியீடுகளும் பெறப்படுகின்றன. கலைப் பகுதிகள் அடங்கிய பிரதம நூலகம் பெரதெனியாவிலும் விஞ்ஞானப் பகுதிகள் கொழும்பிலும் நிறுவப் பெற்றிருக்கின்றன. இங்குள்ள நூல்கள் "டியூயி டெசிமல்" என்ற தசம பாகுபாட்டு முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைப் படிப்புக்குத் தேவையான நூல்களனைத்தையும் வைப்பதற்கு இங்கு இடவசதியின்மையால் நான்கு இலட்சம் நூல்கள் இடம் பெறக்கூடிய பல மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் மிக முக்கியம் வாய்ந்த தொழில் நுட்ப ஆய்வு நூலகமாகக் கருதப்படுவது இலங்கை விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுக் கழகத்தின் நூலகமாகும். இலங்கையிலுள்ள விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுனர்கள், உற்பத்தியாளர் ஆகியோருடைய அறிவாற்றல்களுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் துணை செய்வது இக்கழகத்தின் நோக்காகும். பாராளுமன்றச் சட்டத்தால் தோற்றுவிக்கப்பட்ட இக்கழகத்தின் ஆரம்பச் செலவுகள் வரையறுக்கப்படவில்லை. உலகெங்கிலும் பிரசுரிக்கப்படும் உயர்தர தொழில் நுட்ப, விஞ்ஞான நூல்களும் கால வெளியீடுகளும் இங்கு பெறப்படுகின்றன. நூல்களைத் தேர்ந்தெடுப்பதிலும், பாகுபாடு செய்வதிலும் நவீன முறைகளும் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. "போட்டோ ஸ்ரற்" எனப்படும் படப்பதிவு செய்யும் சாதனங்கள் இந்நூலகத்தில் இருக்கின்றன. இதனுல் ஒன்றைப் பார்த்தெழுதிப் பிரதி எடுக்கும் சிரமம் தவிர்க்கப்படுகிறது. இவ்விரு நூலகங்களும் நூலகவியலிற் சொன்னவாறு கூடியவரை நிர்வகிக்கப்படுகின்றன.

நூல்களின் எண்ணிக்கையில் இந்நூலகங்களிலும் பார்க்கக் குறைவாக இருந்த போதிலும் அமெரிக்க தகவல் நிலையத்தின் நூலகமும் ஐக்கிய சாம்ராஜ்யத்தின் தகவல் நிலைய நூலகமும் கவர்ச்சிகரமான, ஒழுங்கு முறையான நூலகங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இவ்விரு நூலகங்களிலும் புத்தகங்கள் பாகுபாடு செய்யப்பட்டு திறந்த தட்டடுக்குகளில் அடுக்கப்பட்டிருக்கின்றன. ஒலிப்பதிவுச் சாதனங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. படக் காட்சியும், சொற்பொழிவுகளும் சங்கீத நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. அமெரிக்க தகவல் நிலையத்தினர் கொழும்பிலுள்ளதைப் போன்று நூலகங்களை கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்தி வருகின்றனர். மாத்தறையிலுள்ள மக்களுக்கு நடமாடும் நூலக சேவை யளிக்கப்படுகிறது. ஏனைய தூதராலயங்களும் நூலகங்களை நடத்தி வருகின்றன.

ஆங்கிலேயர் புத்தகங்களைச் சேகரிப்பதிலும், பாதுகாப்பதிலும் நெடுங்காலம் அனுபவமுடையவர்களாகையால் அவர்கள் இந்நாட்டை ஆண்ட காலத்தில் பல நூலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கொழும்பிலுள்ள தேசிய நூதன சாலையும் அதன் நூலகமும் அவர்களால் உருவாகியவை. கிடைத்தற்கரிய நூல்களையும், சாசனங்களையும், சுவடிகளையும் இன்னும் சரித்திர சம்பந்தமான ஏடுகளையும் இங்கு காணலாம். இலங்கையில் வெளியிடப்படும் பிரசுரங்கள் அனைத்திலும் ஒவ்வோர் பிரதி இந்நூலகத்திற்கு

அனுப்பப்பெறல் வேண்டும் என்று சட்டம். இட நெருக்கடி காரணமாக இங்குள்ள பொருள்கள் ஒழுங்காக வைக்கப் பெருதது ஒரு குறையாகும். இவைகள் பெரும்பாலும் உடனுதவும் பொருள் களேயாம்.

ரோயல் ஆசியச் சங்கத்தின் இலங்கைக்கிளை இந்நாட்டின் தலைசிறந்த அறிஞர்களால் தோற்று விக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடத்திய அறிவக மாக விளங்கியதெனில் அதன் நூலகத்திலிருந்த அறிவுப் பொக்கிஷங்களின் தன்மையை அறிந்து கொள்ளலாம். இன்றும் இது இலங்கையின் சிறந்த நூலகங்களில் ஒன்ருகத் திகழ்கிறது.

அரசினர் ஆய்வுப் பதிலேடுகள் நிலையத்தி லும், அரசினர் புதைபொருள் இலாகாவிலும் சரித்திர சம்பந்தமான அரிய சாதனங்களும், சுவடிகளும் பாதுகாக்கப்பெறுகின்றன. பழமை யான புத்த கோயில்களில் ஓலைச் சுவடிகள் பல உள்ளன.

தென்னிலங்கையில் இவ்வாறு அறிவுக் களஞ்சியங்கள் பெருக யாழ்ப்பாணத்திலிருந்த தமிழர்கள் ஒன்றுகூடி "கலா நிலையம்" என்னு மொரு மன்றத்தைத் தோற்றுவித்தார்கள். கிடைத்தற்கரிய தமிழ் ஆங்கில நூல்களும் கை யெழுத்துப் பிரதிகளும் இங்கிருந்தன. சுமார் இருபது ஆண்டுகளின் பின் இதன் சேவை குன் றிச் செயலற்றுப் போய்விட்டது.

பழைய ஏட்டுப் பிரதிகளைக் கூறுமிடத்து கண்டியிலுள்ள கீழைத்தேய நூல்களும் வித்யோ தயக் கல்லூரியின் நூல்களும் குறிப்பிடத்தக் கவை. இவை முறையே 1875-ம் ஆண்டிலும் 1879-ம் ஆண்டிலும் ஆரம்பிக்கப்பட்டவை. பெரும்பாலும் இவை குறிப்பிட்ட ஒரு சிலருக்கே பயன்படுகின்றன.

ஆகவே இலங்கையின் பொது மக்களுக்குப் பயன்படும் பொதுசன நூலகங்கள் வளர்ச்சி யுற்ற வரலாற்றைக் கவனிப்போம். பொதுசன நூலகம் என்றதும் கொழும்பு பொதுசன நூலக மும் யாழ்ப்பாண பொதுசன நூலகமுமே நமது நினைவிற்கு வருகின்றன. இவை இந்நூற்ருண் டிற் தோன்றியவைகளே. கண்டி (1841) இரத் தினபுரி (1849) குருநாகலை (1852) மட்டக்களப்பு (1858) களுத்துறை (1897) அனுராதபுரம் (1891) ஆகிய இடங்களிலுள்ள நூலகங்கள் சென்ற நூற்ருண்டிற் தோன்றியவை என்பதும், அவை களுட் சில ஒரு நூற்ருண்டைத் தாண்டிவிட்டன வென்பதும் புலனுகிறது. பாணந்துறை, நுவ ரெலியா, திருகோணமலை, மன்னார், நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும் பொதுசன நூலகங்கள் இருக்கின்றன.

கொழும்பு பொதுசன நூலகமே நூல்களின் எண்ணிக்கையில் கூடியது. கொழும்பு மாநகரில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்நூலகம் போதாமையால் இதனை விஸ்தரிக்க வேண்டுமென்றும், இதற்கெனப் புதியதோர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்றும் பொது மக்களும், பத்திரிகைகளும், அரசியல் வாதிகளும் அரசாங்கத்தை வேண்டினர்கள். இதனுல் திரு. பொ. கந்தையா அவர்களைக் கொண்ட கொமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவரது அறிக்கையின் பின்னர் கொழும்பு பொதுசன நூலகத்தில் பல திருத்தங்கள் செய் யப்பட்டன.

இங்கிலையில் இலங்கையின் நூலக வளர்ச்சி யில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது யாழ்ப் பாணத்தின் புதிய பொதுசன நூலகமாகும். யாழ்ப்பாணப் பிரமுகர்களினதும் குறிப்பாக லோங் சுவாமியினதும் முயற்சியினுலும் நூலகப் பேராசிரியர் டாக்டர் ரங்கநாதன் யாழ்ப்பாணத் திற்கு வரவழைக்கப்பட்டார். அவர் பத்து லட்ச ரூபா செலவில் நகரில் ஒரு மத்திய நூலகத்தை யும், வட்டாரங்கள், கிராமங்கள், கல்லூரிகளில் கிளை நூலகங்களும் நடமாடும் நூலக மொன்றை யும் அடக்கிய ஐந்து அம்சத் திட்டமொன்றை வகுத்தார். கட்டடக் கலைஞர் நரசிம்மன் வர வழைக்கப்பட்டார். தென் கிழக்காசியாவிலேயே சிறந்ததொரு நூலகத்தின் மாதிரி உருவத்தைச் செய்து முடித்தார். ஆனுல் இதனைக் கட்டி முடிப்பது சாமானிய விஷயமா? யானைக்குத் தீனி போடும் விஷயமாச்சே. ஆகவே ஒவ்வொரு கட்டமாகக் கட்டி முடிப்பதெனத் தீர்மானித் தார்கள். அவ்வாருயின் கட்டிடத்தின் ஒரு சிறு பகுதியாவது குறைக்க வேண்டிய அவசிய மில்லையே. இவ்வாறிருக்க கட்டப்பட்டுவரும் ஒரே பகுதியாகிய முதற் கட்டத்தின் நீளத் தையே குறைத்து விட்டது ஒரு பெருங் குறை யாகிவிட்டது.

1959, ஒக்டோபர் 11-ஆம் தேதி யாழ்ப்பா ணத்தில் ஒரு முக்கிய தினம். யாழ் மாநகர முன்னைநாள் மேயர் அல்பிரட் துரையப்பா அவர்

களால் நூலகக் கட்டிட வேலைகள் துரிதமாக்கப் பட்டு சம்பிரதாய முறையில் திறந்து வைக்கப் பெற்றது.

வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம் ஒரு கல்லூரியின் நூலகமாக இருந்த போதிலும் இலங்கையின் மிகச் சிறந்த நூலக வரிசையில் இடம் பெறுகிறது. கிடைத் தற்கரிய பல நூல்களை இங்கே பெறலாம். "யுனெஸ்கோ"வினால் அங்கீகரிக்கப்பெற்ற நூல கம் இலங்கையில் இது ஒன்றே. இதன் நூலக நிர்வாகி திரு. கே. செல்லையா அவர்களை இலங்கையில் நூலக நிர்வா கத்தின் தந்தை என்றால் சிறிதும் மிகை யாகாது. கல்லூரிகளின் நூலகங்கள் கல்லூரி களின் பண வசதியைப் பொறுத்தது. பெரும் கல்லூரிகளில் ஒரு அறையோ நூலக நிர்வா கியோ கிடையாது.

அரசாங்க இலாகாக்களில் இருக்கும் நூல கங்கள் தொழில் நுட்ப நூலகங்கள் என்ற பிரி வில் அடங்கும். மருத்துவம், றப்பர், தேயிலை, தென்னை முதலியன ஆய்வுக் கழகங்களின் நூல கங்களும், இலங்கை மத்திய வங்கி, இலங்கை மருத்துவ நூலகம், கொழும்பு (1855) கண்டி, குருணாகலை, யாழ்ப்பாணம் என்னுமிடங்களி லுள்ள சட்ட நூலகங்களும் தொழில் நுட்ப நூலகங்களாகும். இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியிலும் குறிப்பிடத்தக்க தொகையான நூல்களுடன் நூலகமொன்றுளது.

பாராளுமன்றங்களின் இரு சபைகளுக்கும் தனித்தனி நூலகங்கள் இருக்கின்றன. அவைக ளில் சபை நடவடிக்கைகள், சாசனங்கள், சட்டப் பிரதிகள், இலகாக்களின் பிரசுரங்கள் அனைத் தும் பாதுகாக்கப்படுகின்றன. அரசாங்க அச்சக ரின் அலுவலகத்திலும் தகவல் இலாகாவிலும் நூலகங்களுள்ளன. கிராமங்களிலிருக்கும் சன சமூக நிலையங்களில் வாசகசாலைகள் செயலாற் றுகின்றன.

இக்கட்டுரையில் தனிநபர் நூலகங்களைப் பற்றியும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இத்துறையில் முன்னணியில் நிற்பவர் டாக்டர் லூசியன் டி சில்வா என்பவராகும். ஆங்கிலத் தில் முதல் நாவல் எழுதிய இலங்கையரும் இவரே. இவரிடம் பெருந்தொகையான நூல்கள் இருந் தன. இவர் வசித்த இல்லத்தையே காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா அவர் கள் வாங்கினர். "டெய்லி நியூஸ்" பத்திரிகை யின் உரிமையாளராயிருந்த விஜயவர்த்தனவிட மும் குறிப்பிடத்தக்க தொகையான நூல்கள் இருந்தன. கிடைத்தற்கரிய தமிழ் இலக்கண இலக்கிய நூல்களும், இந்திய வரலாறு, பண் பாடு, கலைகள், சமயம் சம்பந்தமான நூல்களைச் சேகரித்து வைத்திருந்த தமிழ்ப் பெருமக்கள் சேர். பொன் இராமநாதன், சேர் பொன் அருண லம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோர். கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களின் நூற் தொகுதியும் குறிப்பிடத்தக்கது. ★

புலமைக் காய்ச்சல்

புலமைக் காய்ச்சல் இலக்கியத் துறையில் ஊடுருவி உள்ளறுக்கும் ஒரு சாபக் கேடு. அது இலக்கிய கர்த்தாக்களின் கூட்டான ஆக்க சக்திக்குப் பிறவிச் சத்துருவாக இருக்கிறது.

— பிரேம்ஜி

விளம்பரக் கலை

சி. பொ. மயில்வாகனன்

"வியாபாரத்துக்கழகு விளம்பரம் செய்தல்"—இந்த வசனத்தை நாம் அடிக்கடி பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றோம். இது கூட ஒரு விளம்பரம்! இப்படியான விளம்பரங்கள் இப்பொழுது காணப்படுவது குறைவு. சில வருடங்களுக்கு முன்—விளம்பரம் செய்வதால் உண்டாகும் பலனைப்பற்றி வியாபாரிகளும், விளம்பரதாரர்களும் உணராது இருந்த சட்டத்தில்—இப்படியான விளம்பரம் தேவைப்பட்டது. அந்தக் காலத்தில் பத்திரிகை விளம்பரத்தை யறியாதவர்கள், உணராதவர்கள், விளம்பரம் செய்வதற்கு என்ன முறையைக் கையாண்டார்கள் என்று ஆராயும் பொழுது, சிறு பிராயத்தில் தெருமுனையில் கேட்ட பறையொலி தான் காதில் ஒலி செய்கின்றது. காணி விற்பனை செய்வதற்கு ஊரார் அறிய பறைசாற்றி, விளம்பரம் செய்தார்கள்; தம்பட்டம் அடித்தார்கள். அப்போது, பறை பிரதான விளம்பர சாதனமாக விளங்கியது. பொது இடங்களில் பறைசாற்றும் பொழுது மக்கள் பலர்வந்து கூடுவார்கள். பறை சாற்றறிவிப்பவன் தன்னிடம் உள்ள அறிவித்தலை உரத்து வாசிப்பான். கற்றோர், கல்லாதோர் யாவரும் விஷயத்தை அறிந்துகொள்ள இம் முறை இலகுவாக இருந்தது.

காலம் சற்று முன்னேறிற்று. நாகரிகம் வளர்ந்தது. அச்சுத் தொழில் மனிதவாழ்வில் தலைக்காட்டத் தொடங்கியது. விளம்பரங்களை, துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்து விநியோகித்தார்கள். இந்தத் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கும் தம்பட்டம் தேவைப்பட்டது. விரைவாக விளப்பரம் செய்ய விரும்பியவர்கள் ஒரு குதிரை வண்டியில் ஏறிச்சென்று, தம்பட்டத்தை அடித்து, அந்த நோட்டீஸ்களை விநியோகித்தார்கள். இப்படித் தம்பட்டம் அடித்து விளம்பரத் துண்டுகளை விநியோகிக்கும் முறை இப்போதும் நடைமுறையிலிருப்பதை நாம் காணலாம். ஆனல் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குதிரை வண்டிக்குப் பதில் மோட்டார் வாகனம் புகுந்துவிட்டது. தம்பட்டத்துக்குப் பதில் ஒரு வாத்தியக் கோஷ்டியினர் புகுந்து விட்டார்கள். இவைமட்டுமா? மோட்டார் வாகனத்தின் இரு பக்கங்களிலும் பலவித விளம்பர 'போஸ்டர்கள்' ஒட்டப்பட்டிருக்கும். இந்த 'போஸ்டர்'களில் பலவித வர்ண ஜாலங்கள் கொண்ட ஓவியங்கள இடம் பெறுகின்றன. இன்றைய விளம்பரக் கலைக்கு பெருந் துணையாக இருப்பவர்கள் பல கை தேர்ந்த ஓவியர்கள் தாம் என்ருல் மிகையாகாது. ஒரு சினிமாப்படத்தல் வரும் காதலோ, ஹாஸ்யமோ, சோகமோ அன்றி வேறெந்த ஒரு உணர்ச்சிமிகுந்த கட்டத்தையோ ஒரு கை தேர்ந்த ஓவியனைக் கொண்டு வரைந்து, மோட்டார் வாகனத்தின் இரு பக்கங்களிலும் கட்டிக் கொண்டு, வாத்தியக் கோஷ்டியினர் நாதம் எழுப்ப, தெருப்பூராவும் சுற்றி வந்தால் மிகக் குறைந்த நேரத்திலேயே அந்தப் படத்தைப் பற்றிய செய்தி பட்டிதொட்டியெங்கும் பரவி விடுகின்றது!

விளம்பர நோட்டீஸ் விநியோகம் குதிரை வண்டிக்காலத்திலிருந்து 'கெலிகோப்டர்' விமான காலத்துக்கு வந்துவிட்டது. பெருந் திரளான மக்கள் வாழும் பட்டினங்களில், பெருவாரியான நோட்டீஸ்களை விநியோகிக்க, 'கெலி கோப்டர்' விமானங்களில் உயரப் போய், அங்கிருந்து நோட்டீஸ்களை வீசுகிருர்கள். இந்த முறையினல், மிக விரைவிலே ஜனங்கள் ஒரு செய்தியை அறிந்துகொள்ள முடிகிறது. இந்த விநியோக முறை மேல் நாட்டிலிருந்து இலங்கைக்கும் வந்துள்ளது! நோட்டீஸ் விநியோகிப்பது இலங்கை விளம்பரக் கலையில் அன்றும் இன்றும் உள்ள முறை. மற்றக் கலைகள் முன்னேறி வருவதைப் போலவே, இலங்கையில் விளம்பரக் கலையும், திருத்தங்களைப் பெற்று, முன்னேறி வருகின்றது எனச் சொல்லலாம். பத்திரிகைக்காரர்கள்—'வியாபாரத்துக்கழகு விளம்பரம் செய்தல்'—என்ற வசனத்தை இங்கு இப்போது எடுத்து விட்டார்களென்ருல், விளம்பரதாரர்களும் விநி

யோகஸ்தர்களும் விளம்பரஞ் செய்வதிலுள்ள மகிமையை அறிந்து அதை ஆதரிக்கிறார்களென்பது தானே அதன் அர்த்தம்?

பத்திரிகைகளில் விளம்பரங்கள் முன்னர் எப்படி வந்தன; இப்போது எப்படி வருகின்றன என்பதைக் கவனித்துப் பார்த்தால் விளம்பரக் கலையின் வளர்ச்சியை அவதானிக்கமுடியும். விளம்பரக்கலை இலங்கையில் அதற்கென ஒரு இடத்தையும் அழியாத புகழையும் பெற்றுவிட்டது என்பதைப் பலரும் ஒப்புக் கொள்வர். இப்போது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பல அயல்நாட்டு விளம்பர ஸ்தாபனங்களே இதற்குச் சான்றாகும். இந்த ஸ்தாபனங்களில் அயல் நாட்டு ஓவியர்களும், வசன கர்த்தாக்களும், மொழி பெயர்ப்பாளர்களும் விளம்பரத் துறையில் கடமையாற்றுகிறார்கள். இந்த விளம்பர ஸ்தாபனங்கள், இலங்கையிலும், வெளி நாடுகளிலுமுள்ள ஏற்றுமதி இறக்குமதிக் கம்பனிகளுக்காகவும், உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களுக்காகவும், வியாபார விருத்தியில், பணி செய்கின்றன. புதிதாக ஒரு பொருளை விற்பனைக்கு வைக்க விரும்பினால், அந்தப் பொருளின் இறக்குமதியாளர் ஏதாவது ஒரு விளம்பர ஸ்தாபனத்தை அணுகி அவர்களிடம், அந்தப் பொருளின் தரம், பிரயோசனம் முதலியவற்றைக் கூற வேண்டியது தான். அந்த விளம்பர ஸ்தாபனத்தார், பத்திரிகைகள் மூலமாகவோ, வானொலி மூலமாகவோ, திரைக் காட்சி மூலமாகவோ அன்றி வேறெவ்வித வகைகளிளெல்லாம் விளம்பரஞ் செய்யலாமென ஆலோசனை கூறுவதற்கு தயாராக இருக்கிறார்கள். விளம்பர ஸ்தாபனங்களிடம், இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும் விளம்பரப் பொறுப்பை விட்டு விட்டதும்; விளம்பர மூலம் பலன் ஏற்படுத்திக் கொடுப்பது இந்த ஸ்தாபனங்களின் பொறுப்பாகிவிடுகின்றது.

விளம்பர ஸ்தாபனங்களோடு தொடர்பு கொண்டு விற்பனையைப் பெருக்குவதற்கென, ஒவ்வொரு பிரபல இறக்குமதி ஸ்தாபனத்திலும், விளம்பரப் பகுதி என ஒரு தனிப் பிரிவே இருக்கின்றது. இந்தப் பிரிவுக்குப் பொறுப்பாகத் திறமைவாய்ந்த ஒரு உத்தியோகத்தரும் இருப்பார். அவருடைய கடமை, தங்கள் பொருட்கள் விளம்பரம் மூலம் எவ்வளவு கூடுதலாக விற்பனையாகியுள்ளதென்றும், எந்த எந்த வகைகளை மேற்கொண்டு மேலும் விற்பனையைப் பெருக்கலாமென்றும் ஆலோசித்து நடவடிக்கை எடுத்தலாகும். அதிகமாக விற்பனை ஆகாத இடங்களுக்கு, மோட்டார் வான் மூலம், விற்பனைப் பிரதிநிதிகளை அனுப்பி, பேச்சு வன்மையால் விற்பனையை அதிகரிப்பார்கள். அல்லது, சில நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து அதை ஒரு 'ரேட் ரெக்கோட்டரி'ல் போட்டு, ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பப் பிரசாரம் செய்வார்கள். இத்தகைய உத்தியோகத்தர்கள் பலர் மேல் நாடுகள் சென்று விளம்பரக் கலையில் பயிற்சி பெற்றும் வந்துள்ளார்கள்.

விளம்பரத் துறையில், சினிமாவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர்தான் இம்முறை இலங்கையில் பரவத் தொடங்கியது. ஆரம்பத்தில் சில பொருட்களைப் பிரபல்யப்படுத்த 'சிலைட்ஸ்' (Slides) என்றழைக்கப்படும் சித்திரத்தோடு கூடிய விளம்பரத்தை திரைப்படங்களின் இடை வேளைகளில் போட்டுக் காண்பித்தார்கள். அதிலும், காலக் கிரமத்தில் பலவித மாற்றங்கள் புகுத்தப்பட்டன— விளம்பரப் பொருட்களைப் பற்றி சலனப்படமாக எடுத்து அதை படமாளிகைகளில் படம் ஆரம்பிக்குமுன்போ, இடை வேளையிலோ இப்போது காட்டுகிறார்கள். சிலர் ஒரு கதையாகவே தயாரித்து, கடைசியில் விற்பனைப் பொருளைக் காட்டி ரசிகர்களைப் பிரமிக்கச் செய்கிறார்கள். இந்த வகையான விளம்பரக் கதைகள் சினிமா நடிகர்களைக் கொண்டும் தொடர்ச்சியான சித்திரங்களைக் கொண்டும் உருவாக்கப்பட்ட துண்டுப் படங்களாக விளங்குகின்றன. இந்த விளம்பர முறை இலங்கையில் நன்றாக வேரூன்றி வருகின்றது.

இலங்கையில் விளம்பரத் துறையில் வானொலி ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. நேயர்கள் பாடல்களைக் கேட்டு இன்புறும் அதே வேளையில், விளம்பரங்களையும் அறிகிறார்கள். நேயர்களுக்குக் கவர்ச்சியாகவும், வியாபாரிகளுக்கும் விளம்பரதாரர்களுக்கும் பெரும் உதவியாகவுமிருக்கும் இந்த வானொலி விளம்பரக் கலை 1951ம் ஆண்டுதான் இலங்கையில் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள மூன்று பாஷைகளிலும், ஆரம்பத்தில் ஒரு மணி, இரண்டு மணி நேர நிகழ்ச்சியாக ஆரம்பித்து கடந்த எட்டு வருடங்களில் பல விதத்திலும் முன்னேறிவிட்டது

வானொலி விளம்பரம், ஆரம்பத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் நடைபெற்றுவந்த இந்த வர்த்தக ஒலிபரப்பு, தாய் நாடாகிய பாரதத்திலுள்ளவர்களுக்குப் பயன்படும் வகையில் ஹிந்தி மொழியிலும் விளம்பர ஒலிபரப்பை நடத்திவருகிறது. இசையில் மயங்காதவர்கள் இவ்வுலகில் எவரும் இல்லை இசையைக் கேட்டு அனுபவிக்கும் பொழுது இடையில் விளம்பரம் செய்வதால் வானொலியைக் கேட்கும் ஒருவரல்ல, பலர் பயனடைகிறார்கள். வானொலி விளம்பரத்திற்கு இப்பொழுது இருக்கும் மதிப்பு இனி எப்பொழுதும் குறையாது என்பது திண்ணம். நாட்டிலும் நகரத்திலும், வானொலி பெரும் செலவு செய்து வருகிறது. மின்சாரமில்லாத இடங்களில் கூட பாட்டரி மூலம் இயங்கும் வானொலி பெட்டிகள் இருக்கத்தான் செய்கிறன. அதன் காரணமாக இலங்கையில் விளம்பரக் கலையில் புகுந்திருக்கும் வானொலி விளம்பரம் இன்றும் என்றும் அழியாப் புகழை ஈட்டிவிட்டது.

இலங்கையில் விளம்பரக் கலையில் புதிய கலையாக இடம்பெற வேண்டியதுதோர் சாதனம் டெலிவிஷன். இது மேல் நாடுகளில் நன்ருகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இலங்கையில் இன்னமும் இடம் பெருதது பெரும் குறை என்றே கூற வேண்டும். இலங்கையில் விளம்பரக் கலை ஒரு நிரந்தர ஸ்தானம் பெற்று விளங்கும் பொழுது காலக்கிரமத்தில் டெலிவிஷனும் வந்து இலங்கையில் விளம்பரக் கலைக்குத் தொன்டாற்றும் என்பது திண்ணம். ★

முற்போக்கு இலக்கியம்

முற்போக்கு இலக்கியம் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானதன்று. சிந்தனை சக்தியுள்ள எந்த எழுத்தாளருக்கும் அது பொதுவானது. அவ்வகை முற்போக்கு இலக்கியம் மனிதப் பண்பின் உயர்வை, உழைப்பின் பெருமையை, நாட்டுப் பற்றை, சொந்த மண் வாசனையை, சமாதான இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்க வேண்டும்.

— கனக செந்திநாதன்

★ ★ ★

காதலைப் பற்றி பல பல கோணங்களிலிருந்து பார்க்கச், சுவைக்க நாவலருக்குத் தெரியாது. அந்தப் பண்டத்தில் தனக்கு மனமில்லை யென்று நாவலர் சொல்லவில்லை. ஹிட்லருக்கு, சுபாஸ் சந்திரபோஸுக்கு எப்படிக் காதல் நாடகங்களிற் களிக்க நேரமில்லையோ அப்படி நாவலருக்கும் அதில் மினக்கெட நேரமில்லை.

— பண்டிதமணி

ஈழத்தில் தமிழ் இலக்கிய மரபு

க. கைலாசபதி

ஆங்கிலேயர் இங்கிலாந்து தேசத்திலே வசிப்பவர்கள். அவர்கள் நாட்டிலே அவர்களுக்கென குறிப்பிட்ட மொழி மரபும் இலக்கிய மரபும் இருக்கின்றன. ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் பிற நாடுகளிலும் வாழ்கிறார்கள். அமெரிக்க மக்கள், ஆஸ்திரேலிய மக்கள், கனடா தேசத்து மக்களிற் பெரும் பகுதியினர் ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே. எனினும் இலக்கியங்களைத் திறனாயும் பொழுது அமெரிக்க இலக்கியம், ஆஸ்திரேலிய இலக்கியம், கனேடிய இலக்கியம் என்றே கூறுகிறோம். இலக்கியங்கள் எழும் மொழி பொதுவானதாக இருப்பினும் அவற்றை அவை தோன்றும் நாட்டின் பெயர் கொண்டே அழைக்கிறோம். அந்தந்த நாட்டில் எழும் இலக்கியங்கள் ஏதோ சில தனிப் பண்புகள் பெற்று விளங்குவதாலேயே அவ்வாறு நாம் கூறுகிறோம் அல்லவா? "கவிதையில் ஓர் அடி முத்தாய்ப்புப் பெறுகின்ற விதம், நாவலில் பாத்திரங்கள் நடந்து கொள்ளும் முறை, கட்டுரைகளில் சில கருத்துக்கள் விளக்கப்படும் வகை இத்தகைய பல பண்புகளை அடிக்கடி பார்க்கும். பொழுது இவற்றிற்குப் பொதுவான—அடிநிலையான—ஜீவ சதது ஒன்று இருப்பது தெரிய வரும்." அமெரிக்க இலக்கியம் என்னும் பொருள் பற்றி 1884-ம் ஆண்டு எழுதிய வில்லியம் சிம்ஸ் என்பவர் மேற்கண்டவாறு தனது கட்டுரையைத் தொடங்கினார்.

ஈழத்தில் தமிழ் இலக்கியம் தொன்று தொட்டு இருந்து வருவதை யாவரும் ஒப்புக் கொள்வர். இந்த இலக்கியத்திற்குத் தனியான மரபு ஒன்று இருக்கிறதா? இல்லையா? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மேனாட்டார் வருகையைத் தொடர்ந்து ஆசிய நாடுகள் பலவற்றிலும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஈழத்திலும் எழுந்தது. சமயத் துறையிலேயே இந்த விழிப்புணர்ச்சியைத் தெளிவாக நாம் காணலாம். தென் இந்தியாவில் இருந்ததை விட ஈழத்தில் தமிழ்ச் சைவர்களின் கிறிஸ்துவ விழிப்புணர்ச்சி தீவிரமாக இருந்தது. இதற்குக் காரணங்களும் இல்லாமலில்லை. குறைந்த தொகையினரான தமிழ் மக்கள் இங்கிருந்ததும் மடாலயங்கள் பெரும் கோவில்கள் இங்கு இல்லாதிருந்ததும் கிறிஸ்துவத்தின் வளர்ச்சிக்குத் துணையாக இருந்தன. நாட்டில் புகுந்த பர சமய, பிற கலாச்சார ஆதிக்கத்தை எதிர்த்து நாவலர் காலத்தில் எதிர்ப்புக் கொடி உயர்த்தப்பட்டது. இந்த எதிர்ப்பு இயக்கத்தின் வடிகால்களாக வசனம், செய்யுள் ஆகிய இரு துறைகளிலும் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்தன. எனினும் நாவலர் தொடங்கிய இவ்வியக்கம் வெகு விரைவிலேயே தென் இந்தியாவின் சொத்தாகிவிட்டது. ஈழத் தமிழர்களிடையே தொடங்கிய இயக்கம் தென்னகத்தில் பொங்கிப் பிரவாகித்தது. சைவ சமயத்துடன் இணைந்தே—சைவ சமயத்தை அடிநிலையாகக் கொண்டே—தமிழ் வளரும் என்னும் கருத்து யாழ்ப்பாணத்தில் வேரூன்றியது உண்மையே. ஆனால் திட்டவட்டமான தனித்துவமோ—தனிப் பண்போ—பெறுவதற்கு முன்னர் அந்த இயக்கம் சக்தி இழந்து விட்டது. பிரபந்த வகைகளைச் சேர்ந்த வழக்கொழிந்த நூல்கள் இன்று அக்காலத்தின் நினைவுச் சின்னங்களாகப் பெயரளவில் இருந்து வருகின்றன.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இந்திய வரலாறு தேசிய இயக்கத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பூரணத்துவத்தையும் கண்டது. அரசியல் பொருளாதார இயக்கங்கள் அசுர வேகத்தில் ஒன்றன் பின் ஒன்றாக அலையடித்தன. அதன் விளைவாகச் சமுதாயத்தின்

ஜீவ சக்தி பல்வேறு இலக்கியங்களாகப் பரிண மித்தது.

ஈழத்தைப் பொறுத்தவரையில் நிலைமை வேருக இருந்தது. சமுதாயத்தில் எத்தகைய புரட்சிகரமான மாற்றங்களும் ஏற்படவில்லை. எனவே, சலனமற்ற சமுதாயம் எத்தகைய இலக்கியங்களையும் படைக்கவில்லை. தென் இந்தியா மிக அண்மையில் இருந்ததாலும் அங்கு தோன்றிய சமுதாய, பொருளாதார, இலக்கிய இயக்கங்களுடன் ஈழத் தமிழர்கள் மானஸீகமாக உறவும் உரிமையும் பாராட்டி வந்ததாலும் எத்தகைய பிரத்தியேகமான இலக்கியங்களும் தோன்ருமல் போயின. சுதந்திர தாகத்தில் பாரதியார் தென்னகத்தில் கவிமழை பொழிந்த போது ஈழத்தில் அது பொருளற்றதாக இருந்தது.

ஆங்கிலக் கல்வி ஈழத் தமிழர்களிடத்து நன்கு பரவியிருந்ததாலும், தமிழ் மக்கள் பொருளாதார வாழ்வில் எத்தகைய பிரச்னைகளும் தோன்ருமையாலும் சமநிலத்து நீரோட்டம் போல சமூக வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. கோவிலுக்குப் போவதென்ருல் சிதம்பரத்திற்கும், கலியாணச் சேலை வாங்குவதென்ருல் மதுரைக்கும் போவது சுலபமாய் இருந்ததைப் போலவே இலக்கியங்களைப் பெறுவதும் சுகவழியாக இருந்தது.

நாவலர் காலத்திற்குப் பின்னர் சி. வை. தாமோதிரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை, தி. த. கனகசுந்தரம் பிள்ளை, த. கைலாச பிள்ளை, அ. சதாசிவம் பிள்ளை முதலியோரது கண்ணேட்டத்திற்கும் தென்னிந்தியாவைச் சேர்ந்த, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, வேதாசலம் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, கே. என். சிவராச பிள்ளை முதலியோரது எழுத்துக்களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. தனித் தமிழ், தமிழின் தூய்மை, தமிழின் தொன்மை, தமிழிசையின் பெருமை, முதலியன இயக்க வடிவில் வளர்ந்த போதெல்லாம் ஈழத தமிழறிஞர்களும், தென்னிந்தியத் தமிழ் அறிஞர்களும் சேர்ந்தே ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளார்கள் என்பது அவர்களது நூல்களைப் படித்தால் தெரியவரும். சுருங்கக் கூறின் ஈழத் தமிழர்கள் தென்னகத்தைத் தாயகம் எனக் கருதி அதனை ஆதர்ஷ நாடாகக் கொண்டு வந்ததால் ஈழத் தமிழர்கள் ஈழத்தவர்களாகவோ, அல்லது ஈழத் தமிழர்களாகவோ வாழும் நிலை ஏற்படவில்லை.

''அரசியல் விழிப்புணர்ச்சி; சுயாட்சி வேட்கை; அரசியலில் மட்டுமன்றிப் பொருளாதாரத்திலும் தாம் மாறுபட்டவர்கள் என்னும் உணர்வு; தத்துவஞானம்; பண்பாடு ஆகியவற்றிற்கூட வேறுபாடு'' இவை யாவும் சேர்ந்தே அமெரிக்க இலக்கியத்தை உருவாக்கின என்கிருர் ஓர் விமர்சகர். அமெரிக்காவில் வாழ்ந்த ஆங்கில மொழி பேசும் மக்களுக்குச் சில பிரத்தியேகமான பிரச்சினைகள் தோன்றிய பொழுது தான் மேற்சொன்ன சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டது. ஈழத் தமிழர்களுக்கு வெகு காலமாக இத்தகைய உணர்ச்சி தோன்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

சுதந்திர இலங்கையில் அரசியல் பிரச்சினைகள் தோன்றியபோதே தமிழ் மக்களுக்கும் பிரச்சினைகள் தோன்றலாயின. அரசியல் கணக்கில் இலங்கைத் தமிழர்கள் என்னும் ஒரு சமூகம் திட்டவட்டமான வடிவம் பெற்றது. ஈழத்திலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தினருடன் உள்ள உறவு முறையில் ஈழத்தில் தமிழர்கள் சிறுபான்மைச் சமூகத்தினர் என்ற நிலைமை தெளிவாக ஏற்பட்ட பொழுதுதான் முதன் முதலாக ஈழத் தமிழர் இலங்கையர் என்னும் உணர்வைப் பெற்றனர். தமிழின உணர்ச்சி திடீரெனப் பொங்கியது. தேசிய எழுச்சிக்காகப் பாடிய பாரதியார் முதன் முதலாக ஈழத் தமிழரிடையே எழுச்சிதரும் புலவஞகப் பிரவேசித்தார். தமிழுணர்ச்சியைத் தட்டி யெழுப்புவதற்கு பாரதியார், சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன் முதலிய புலவர்கள் பயன்பட்டனர்; பயன்பட்டுவருகின்றனர். இன்னுஞ் சொன்னல் தமிழர்களுக்குச் சில நெருக்கடிகள் ஏற்பட்ட காலையில்தான் அவர்கள் தமிழர்களாக மட்டுமின்றி ஈழத் தமிழர்களாக தாம் வாழ வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டது. தென்னிந்தியாவுடன் கொண்டிருக்கும் மானஸீக உறவுகள் நடைமுறைக்குப் பயன்படாது போகவும் இந்தப் புது உணர்வு இறுகிப் பற்றியது. இந்த நிலைமை 1950-ம் ஆண்டுக்குப் பின்னா ஏற்படத் தொடங்கியது எனலாம்.

இந்தக் காலகட்டத்தில் ஈழத் தமிழரிடையே சில புதிய கருத்துக்கள் திடீரெனத் தோன்றின.

தமிழர்கள் இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்கள் ஒரு சமூகத்தினரே என்னுங் கருத்து.

இந்த நாட்டில் தமிழருக்கெனப் பாரம்பரியம் உண்டு என்ற வாதம்.

தமிழரிடையே சாதி சமயப் பிளவுகள் இருக்கக் கூடாது என்னும் பிரசாரம்.

தென்னிந்தியாவிலிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டாலும் இந்த நாட்டிலே தமிழர்களாக வாழத் தேவையான வாய்ப்புகளைச் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம்.

இத்தகைய கருத்துக்கள் ஏற்ற இறக்கமின்றி ஓடிக்கொண்டிருந்த தமிழர் சமுதாயத்தில் ஒருவித இன உணர்ச்சியைத் தூண்டி மறைந்து கிடக்கும் பல திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

கடந்த பத்தாண்டு காலத்திற்குள் கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய துறைகளிலெல்லாம் மேற்கூறிய கருத்துக்களின் சாயல் படிந்திருப்பதைக் கவனிக்கலாம். அவைமட்டுமின்றி ஈழத்தில் தமிழர் தம் வரலாற்றைப் பற்றிய நூல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன; சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வெளிவந்த சில ஈழத் தமிழறிஞர்களின் கட்டுரைகள் தொகுதியாக வெளிவந்துள்ளன. ஈழத் தமிழ் மக்களுக்கெனப் பல்கலைக் கழகம் ஒன்று அவசியம் கூறி அதற்கென ஓர் இயக்கமும் பணிபுரியத் தொடங்கியுள்ளது; ஈழத்தில் நாடக, இசை விழாக்கள் பெருவழக்காகி வருகின்றன. இவை போன்ற நிகழ்ச்சிகள் ஈழத் தமிழ் மக்களின் கலாசாரப் பிரசவ வேதனையையே நன்கு காட்டுகின்றன.

இத்தகையதொரு சூழ்நிலையில் இலக்கிய மரபொன்று தோன்றுதல் கூடும். தோன்றலாம் என்றே வரலாறு கூறும். ★

வரம்

கன்னலும் பாலும் இனியசெந் தேனும் கற்
கண்டுடன் கலந் தெனக் காக்கி
உண்ணுவாய் என்று ஊட்டினுந் தாயே
உன் சுவை மறந்திடா வரந்தா!

— தில்லைச் சிவன்

★ ★ ★

ஏதோ காரணங்களால் முன்னுக்கு வந்துவிட்டவர் எல்லாம் தெரிந்தவரைப் போல முன்னுரை எழுதும் வழக்கம் தவறு. இதனல் பல நூலாசிரியர்களுக்கு ''இல்லை'' ''இல்லை''; ''முடியாது'' என்று சொல்லி வந்தேன். ...... திரு. சிவபாதசுந்தரத்துக்கும் இப்படியே 'இல்லை யென்று எழுதிவிட வேண்டும்' என்பதாக நிச்சயித்துக் கொண்டே புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பினேன். நூலின் தமிழும் அழகும் என்னைக் கவர்ந்தன...... ஆசிரியரின் நுட்பமான அறிவு காந்தம் போல் என்னை இழுத்துக் கொண்டே சென்றது.

— ஒலிபரப்புக் கலை என்ற நூலின் முன்னுரையில் ராஜாஜி

ஈழத்தில் தமிழிலக்கியத் தொண்டாற்றும் முஸ்லிம்கள்

அ. ஸ. அப்துஸ்ஸமது

மலர்ந்து வரும் தமிழிலக்கியத் துறையில் இது ஒரு புதிய சகாப்தம். இதை ஒரு புதிய திருப்பம் என்றும் கூறலாம். இந்தப் புதிய திருப்பத்தில், முன்னர் கவிதைக்கிருந்த இடத்தை உரைநடை பெற்றுவிட்டது, அன்றியும் கவிதையின் இலட்சியப் போக்கும், இலக்கிய அமைப்பு முறையும், கருத்தோட்டமும் காலத்திற்கேற்றவாறு மாறுபட்டன. தன்னேரில்லாத் தலைவனொருவனைக் கொண்டெழுந்த காப்பிய முறை இலக்கியங்களுக்குப் பதிலாக, மக்களது வாழ்க்கை இலக்கியமும், மனித உணர்வுகள், அதனாலேற்படும் பிரச்னைகள், மனித உரிமைகள், தேவைகள் என்பனவும், இலக்கியக் கருப் பொருளாயின. மானுஷீக உணர்வின் பிம்பங்களை இலக்கிய உருப்படுத்தும் போது, எழுத்தாளனுடைய முற்போக்கு, நோக்கங்கள் அவற்றைச் செம்மைப் படுத்தின. வாழ்வுக்கு வழிகாட்டும் புதுமை உணர்ச்சிகள்—சித்தாந்தங்கள் எழுத்தாளனுடைய எண்ணத்தின் முக்கிய அம்சமெனக் கருதப்பட்டது.

இந்த இலக்கிய வளர்ச்சியில், தனி உரைநடை மட்டும் போதிய செல்வாக்கோடு இல்லை. மனித உணர்வின் வேறுபாட்டினால் அவை, சிறுகதை, நாவல், ஆய்வு, நாடகம், நடைச் சித்திரம், அங்கதச் சித்திரம், இயற்கவிதை, இசைக் கவிதை, வசன கவிதை, திறனாய்வு இப்படிப் பலவாய்த் தோன்றின. இத்துறைகளில் ஈழத்து முஸ்லிம்கள் ஆற்றிவரும் மதிப்பிடத்தக்க பணியை இங்கு நோக்குவோம்.

ஈழத்து முதல் முஸ்லிம் தமிழ் எழுத்தாளர் என்ற இடத்தை வகிப்பவர் வழக்கறிஞர் ஜனாப் ஸித்தி லெப்பை அவர்களாவர். சரியான முறையில் இன்றைய தமிழிலக்கிய மலர்ச்சியே ஏற்படாத காலத்தில் இவர் "முஸ்லிம் நேசன்" என்ற தமிழ் பத்திரிகையொன்றைத் தொடங்கி நடாத்தினார். இது 1885-ல், இலங்கையிலிருந்த மூன்று பத்திரிகைகளுள் ஒன்றாகும். சமூக சம்பந்தமான பல கட்டுரைகளைத் தனக்கே உரித்தான ஆங்கில மொழிப் புலமையோடியைந்த தமிழில் எழுதினார். இவருடைய அன்றைய முயற்சி இன்றும் பாராட்டற்குரியதாகும்.

இதற்குப் பின் 1945-ஆம் ஆண்டுவரையில், இலங்கையில் வாழ்ந்த இந்திய முஸ்லிம் எழுத்தாளர்களே, இலங்கையிலுள்ள முஸ்லிம் எழுத்தாளர்களாக விளங்கி இருக்கின்றனர். ஈழத்து முஸ்லிம்கள் இந்தப் புதிய இலக்கியத் திருப்பத்தில் கவரப்படுவதற்கும் இவர்களே அடிகோலினர் எனலாம். இவர்களுள், ஜனாப் வ. மி. ஷம்சுதீன் அவர்கள் ஒருவராவர். இந்தியாவிலேயே உள்ள பழம் பெரும் எழுத்தாளர்களுள் ஒருவரான இவர் ஈழத்தைத் தம் தாய் நாடெனவே நேசிப்பவர். 'தினகரன்' பத்திரிகையில் உதவியாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். முஸ்லிம்களின் தற்கால நிலைமை, ஏகத்துவம், வியாசக் கோவை, இஸ்லாமும் அத்வைதமும் என்னும் நான்கு நூற்களை எழுதியதோடு, உமர்க்கய்யாம், பாகிஸ்தான் விளக்கம் ஆகிய நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். "கௌதம புத்தர்" என்னும் இவரது நூலொன்றும் வெளிவர இருக்கிறது. மத சம்பந்தமாகவும், சமூக சீர்திருத்தம் சம்பந்தமாகவும் அரிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

'தாரகை', 'இஸ்லாமிய தாரகை' ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றிய கே. எம். முஹம்மது ஸாலிஹ் அவர்களும் இஸ்லாத்திற்கும், தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றிய ஒருவர். நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டிய மற்றொருவர் ஜனாப். எம். கே. எம். அபூபக்கர்.

இவர் இப்பொழுது தினகரனில் கடமையாற்றுகிறார். சிறந்த கட்டுரையாளர். இஸ்லாமிய இலக்கியங்களிலும் ஈடுபாடுள்ளவர். நல்ல பேச்சாளர்.

நவீன இலக்கிய பரம்பரையோடு முற்றும் சம்பந்தப்பட்டு, "சதியில் சிக்கிய சலிமா" என்ற நாவலின் மூலமும், விறுவிறுப்பான கட்டுரைகள், உணர்ச்சிகரமான சொற்பொழிவுகள் மூலமாகவும் நமக்கு அறிமுகமானவர் ஜனாப். டி. எம். பீர் முகம்மது. ஜனாப். எம். ஏ. அப்பாஸ் அவர்களும் நாம் குறிப்பிடத்தக்க ஒருவராவர். கள்ளத் தோணி, யக்கடயாவின் மர்மம். துரோகி (நாடகம்) ஆகிய புரட்சிகரமான சமூக சித்திரங்களை எழுதியுள்ளார். யக்கடயாவின் மர்மம் என்ற நாவலில் சில இடங்களில் இஸ்லாத்தின் சில கோட்பாடுகளைக் (சரியாகப் புரியாமல்) கிண்டல் செய்திருப்பது வருந்தத்தக்கது. தினகரனில் வெளிவந்த இவருடைய தொடர் கதையான "ஒரே இரத்தம்" சிறந்ததொரு சிருஷ்டியாகும். சமீபத்தில் "பாகிஸ்தான் கதைகள்" என்ற மொழி பெயர்ப்பு நூலொன்றையும் வெளியிட்டு நல்ல பணி செய்துள்ளார்.

இந்திய முஸ்லிம் எழுத்தாளர்களான இன்னுஞ் சிலர், பல பத்திரிகைகளை நடாத்தியுள்ளனர். அவற்றின் ஆயுட்காலம் போதாமையால், அவை இலக்கிய அந்தஸ்தில், ஸ்திரமான ஓரிடத்தை வகிக்க முடியாமற் போனதால், இவர்களுடைய பெயர்களையும் இங்குள்ளார் மறந்துவிடவேண்டியதாயிற்று எனலாம்.

ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களுள், இன்றுள்ளார்களுள் பழமையானவர் என்று கூறக்கூடிய ஒருவர் ஜனாப். ஏ. எல். எம். கியாஸ். தினகரனில் பணிபுரிகிறார். "இறைவனைப் பற்றிய முஸ்லிம்களின் நம்பிக்கை" போன்ற இஸ்லாம் மத, சம்பந்தமான சிந்தனைக் கட்டுரைகளும், சோல்பரி அரசியல் திட்டம்பற்றி இவர் தினகரனில் எழுதிய விமர்சனக் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்க தரம் வாய்ந்தவை. "மறைந்த பிரதமரைப் பற்றிய நினைவுகள்" என்று ஸ்ரீமான் பண்டாரநாயகாவைப் பற்றி இவர் எழுதிய கட்டுரை, அரசியல் சம்பந்தமாக கட்டுரைகள் எழுதுவதில் இவருக்குள்ள திறமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது. சுமார் 20 வருட காலமாக எழுத்துத்துறை அனுபவமுள்ள இவர் ஒரு ஸ்தாபனத்தின்கீழ் பணியாற்றுவதால், இவருடைய பேனவுக்கு மிகவும் கட்டுப்பட்ட நிலைமையுண்டு.

1945—1955–க்கும் இடைப்பட்ட காலம் முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர் தமிழிலக்கியச் சோலையுள் பூத்துக் குலுங்கி நறுமணம் பரப்பிய காலமாகும். இந்தப் பத்து வருடத்துள் தோன்றிய இலக்கிய கர்த்தாக்களைத் துறைப் படுத்தி எடுத்துக் கொள்வோம்.

நாவல் துறையில் ஈடுபாடுள்ள முஸ்லிம் எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் ஒருவரே. எனினும் இலங்கையில் தலைசிறந்த நாவலாசிரியராக இன்று இவர் விளங்குவது பெருமைத்தரும் விஷயமாகும். சுமார் பதினறு கதைப் புத்தகங்களையும், இரண்டு வேறு நூற்களையும் எழுதிய இவரை, இலங்கையில் அறியாதார் எண்ணெ முத்தறியாதாரே. தினகரனில் இவரெழுதிய 'புயலடங்குமா?' 'சொர்க்கம் எங்கே?' 'இங்கிருந்து எங்கே?' 'நீதியே நீ கேள்' ஆகிய தொடர் கதைகள் இவருக்கு இத்துணை பிரபல்யத்தைக் கொடுத்தது. பாட்டாளி வர்க்கத்தினரின் வாழ்வுப் பிரச்னைகளை மையமாகக் கொண்டதும், பொதுவுடமைத் தத்துவங்கள் இழையோடி நிற்பதுமான இவருடைய நாவல்கள், சிறந்த சமூக நாவல்களாகும். இஸ்லாமிய முற்போக்குக் கண்ணோட்டத்தில், முஸ்லிம்களின் பிரச்னைகளையும் மையமாகக் கொண்டும் இவர் தன்னுடைய சிருஷ்டிகள் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்பது எமது அவா. அன்றியும் இது இவருடைய கடமை, இவ்வளவு காலமும் இவர் விட்ட தவறு என்று சுட்டிக் காட்டவும் விரும்புகிறேன்.

சிறுகதை எழுத்தாளராக நாம் இங்கு, குறிப்பிடத்தக்க ஒருவர், ஜனாப். எச். எம். பி. முஹையதீன். மாஸ்கோ வரை சென்று பல்வேறு சமூகங்களைப் பற்றியும் அறிந்தவர். முற்போக்குக் கண்ணோட்டத்தில் பல நல்ல சிறுகதைகளை எழுதியவர். இவருடைய சிறு கதைகளில் மனித உணர்ச்சிகள் மிதப்பதைக் காணலாம். சமூகப் போக்குகளை நுணுக்கமாக ஆராய்ந்திருப்பதை அவதானிக்கலாம். "தங்கச் சுரங்கம்" இவருடைய மொழி பெயர்ப்புக் கதைத் தொகுதியாகும். டில்லி ஒப்பந்தம், கார்க்கியைக் கண்டேன், மார்கஸிஸமும் இலக்கியமும் என்னும் அரசியல் தத்துவ நூல்களையும் எழுதியுள்ளார். கவிஞர் இக்பால் மீது அபார ஈடுபாடுள்ள இவர், பல மதத்தவருக்கும் இக்பாலின் பொதுத் தத்துவங்களை அறிமுகம் செய்து வைக்கும் நோக்க

மாக, சிறந்ததொரு நூலை வெளியிடவிருக்கிறார். கட்சிப் பத்திரிகையான ‘தேசாபிமானி’யின் ஆசிரியரான இவர், அதை ஒரு பிரச்சார இதழாக மட்டுமின்றி, இலக்கிய மதிப்புள்ள பத்திரிகையாகவும் செய்து வருகிறார்.

இடையிடையே ஒன்றிரண்டு கதைகளை எழுதிவிட்டு, ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர். எனினும் இவர்களுள் மௌலவி எஸ். எம். முஸ்தபா மௌலானா குறிப்பிடத்தக்க ஒருவர். சுதந்திரன் நடாத்திய சிறுகதைப் போட்டியொன்றில் மூன்றாம் பரிசைப் பெற்ற முஸ்தபா அவர்கள் வேறு சில சிறு கதைகளையும் எழுதியுள்ளார்.

இலக்கியக் கட்டுரைகள் எழுதுவோர்களில் குறிப்பிடப்பட வேண்டிய ஒருவர் ஜனாப். எம். எம். உனவஸ் அவர்களாவர். குறிப்பாக இஸ்லாமிய இலக்கியத் துறைக்கு இவர் ஆற்றிய தொண்டு எவராலும் மறக்க முடியாததாகும். மறைந்து போன, மறந்து போன எத்தனையோ இஸ்லாமிய தமிழிலக்கியங்களை எல்லாம், ஆராய்ந்தெடுத்து வகைப்படுத்தி, ஆராய்ச்சி நூலொன்றை எழுதி எம். ஏ. பட்டம் பெற்றவர். இத்தகைய ஆராய்ச்சியை இந்தியாவில் கூட செய்தவர்கள் யாருமில்லை எனலாம். “முஸ்லிம்கள் தமிழிலக்கியத்திற்காற்றிய தொண்டு” என்பது இவர் ஆங்கிலத்தில் எழுதிய சிறந்த நூலாகும். சிறந்த இஸ்லாமிய இலக்கியங்களைப் பாராட்டுவது மட்டுமின்றி, அவ்விலக்கியங்களில் காணப்படும் இஸ்லாத்திற்கு முரணான கருத்துக்களையும் கண்டித்துத் துணிவுடன் எழுதியுள்ளார். அடிக்கடி பத்திரிகைக்கெழுதிய இவர், இப்பொழுதெல்லாம் விசேட மலர்களுக்கு மட்டுமே எழுதுவதாகத் தேரிகிறது.

இலக்கியக் கட்டுரையாளர் மட்டுமின்றி இலக்கியச் சொற்பொழிவாளருமான ஜனாப். எஸ். எம். கமால்தீன் இலக்கியச் சோலையுள் தாம் துய்த்த இன்பத்தை நமக்கும் அளிப்பவர். குறளில் பெரிதும் ஈடுபாடுள்ளவர். இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றியும், பொது இலக்கியங்கள் பற்றியும் சிறப்பான பல கட்டுரைகளை எழுதியவர். இவர் தினகரனில் ஈழத்து முஸ்லிம் புலவர்களைப் பற்றி ஆராய்ந்தெழுதிய கட்டுரைத் தொடர் பயனுள்ள பணியாகும்.

ஏறாவூர் எம். எம். அஹமது லெவ்வை அவர்களும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒருவர். மட்டக்களப்பு முஸ்லிப் புலவர்களைப் பற்றி, இவுர் வீரகேசரியில் எழுதிய கட்டுரைத் தொடரும், மற்றும் இலக்கியச் சுவையுள்ள இவரது கட்டுரைகளும், இவருடைய இலக்கியப் பணிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

கிராமிய இவக்கியத்தில் ஈடுபாடுள்ளவர்களை நாம் இங்கு பட்டியலாகக் கொடுப்பதே பொருந்தும் ஒருவருக்கொருவர் மாற்றமின்றி, ஒரே பாணியில் கதைகளை அமைத்து, இடை இடையே கவிதைகளைப் புகுத்தி எழுதும் முறையே இன்று பலராலும் கைக்கொள்ளப்படுகின்றது. இந்தக் குழுவில் முக்கிய இடத்தை வகிக்கக்கூடியவர்கள் ஜனாப்கள் எம். ஸி. எம். ஸுபைர், ஏ. ஆர். எம். ஸலீம், எம். வை. எம். முஸ்லிம், யூ. எல். தாவூத், பேராதனை ஷர்புன்னிஸா ஆகியோராவர். சிலர் கிராமியக் கவிதைகளின் உண்மை உருவை மாற்றியும், சிதைத்தும், தரமில்லாத கவிதைகளைக் கையாண்டும் எழுதுகிறார்கள். கிராமியக் கவிதைகள் வெறும் காதல் இலக்கியம் மட்டுமல்ல, வாழ்க்கை இலக்கியம் என்பதையும் கவனித்து, கவிதைகள் மூலம் இம்மக்களுடைய உணர்வுகள், பிரச்சினைகள், வாழ்க்கை முறைகள் முதலானவற்றையும் எடுத்துக்காட்ட முயற்சிக்க வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எழுத்தாளர்கள், இக்கருத்தினை மனத்தில் கொண்டுள்ளார்கள் என்பதை இவர்களது பல கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சிறந்த கட்டுரை எழுத்தாளர்களாக இன்று விளங்குபவர்களில் ஜனாப். எம் எச். எம். இப்றாஹீம் ஒருவர். இஸ்லாமிய தாரகையில் பணியாற்றிய இவர், இன்று வீரகேசரி உதவி ஆசிரியர் குழுவில் பணியாற்றுகிறார். பாகிஸ்தான் போராட்டத்தின் போது, இது சம்பந்தமாக இவர் இ. தா.-வில் எழுதிய உணர்ச்சிகரமான கட்டுரைகளும், இஸ்லாம் மத சம்பந்தமான கட்டுரைகளும், இவருக்கு எழுத்துலகில் நல்லதொரு இடத்தைத் தேடித் தந்தது. சிறந்த நூல் விமர்சகருமாவர். மாத்தளை ஜனாப். எம். ஸிமதார் ஸாஹிப், ஓவியம் சம்பந்தமாகப் பல கட்டுரைகளை எழுதி வருவது, கலைத்துறைக்கான நல்ல பணியோடு தனக்கென ஒரு துறையையும் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஜனாப். எஸ். எம். ஹனிபா, இன்று தினசரியொன்றில் பணிபுரிகிறார். “சமுதாயம்” என்ற நல்ல இதழொன்றை நடாத்தியவர். ஆராய்ச்சித்

துறையிலும் இலக்கியத் துறையிலும் கட்டுரைகள் எழுதும் பண்பட்ட எழுத்தாளர். இன்று இவரது சுவடு செல்லும் பாதை......? தெரியவே இல்லை.

நடைச் சித்திர எழுத்தாளர் என்று குறிப்பிடக்கூடிய ஒருவர், ஜனாப். எம். எம். மக்கீம். இவர் சமீபத்தில் தினகரனில் எழுதிய "தொழிற் துறையில் முஸ்லிம்கள்" என்னும் தொடர் கட்டுரையும் நடைச் சித்திரப் பாணியைச் சார்ந்தது. சமீப காலத்தில் நாடகத் துறையில் தனது பெயரை, நல்ல முறையில் நிலைநாட்டிக் கொண்டு வருபவர். ஜனாப். எம். நஸ்ருதீன், வானொலியில் சமூகப் பிரச்சினைகளையும், கலைஞர்களின் வாழ்வையும் பற்றிய பல நல்ல நாடகங்களை எழுதியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற நாடக விழாவின் போது இவருடைய "அழாதே கண்ணே" என்னும் துப்பறியும் நாடகம் மேடையில் நடிக்கப் பட்டது. நாடகத் துறையால் ஈர்க்கப் பெற்ற இன்னுமொருவர், எம். ஏ. கபூர் அவர்கள். வானொலியிலும் இவரது சரித்திர சமூக நாடகங்கள் சில ஒலிபரப்பப்பட்டன. "நூதன வஞ்சகம்" என்னும் சமூக நாடகம் கொழும்பில் நடிக்கப்பட்டது. கவிஞரான இவர் நாடகங்களுக்குத் தேவையான பாடல்களையும் தாமே எழுதிக் கொள்கிறார். நாடக வசனங்கள் கவிதைப் பாணியில் அலங்காரமாக இருக்கின்றன.

நாம் மறந்துவிடும் நிலையிலுள்ள இரு எழுத்தாளர்களையும் இங்கு ஞாபகமூட்டிக் கொள்வோம், ஒருவர் ஜனாபா பாத்துமுத்து ஹலால்தீன். சிறு கதைகள், இலக்கியக் கட்டுரைகள் ஆகியனவற்றில் ஈடுபாடுள்ளவர். துறைவி என்ற இவரது சிறுகதை யொன்றும், சங்ககால இலக்கியங்களில் நகைச்சுவை (வீரகேசரியில்) என்ற கட்டுரையும், இவரது சிருஷ்டித் திறனை எடுத்துக்காட்டும். மற்றொருவர் எம். செயினுல் ஆப்தீன். இவர் இஸ்லாமிய தாரகையில் "காற்றில் பறந்த கருங்காலிக் குதிரை" என்னும் சரித்திரத் தொடர் கதை யொன்றையும், இன்னும் பல நல்ல கதைகளையும் எழுதிப் புகழ்பெற்றவர்.

இஸ்லாம் மத சம்பந்தமான கட்டுரைகளை எழுதி வருவோர் பலருளர். எனினும் நல்ல தமிழில், தெளிவான கருத்துக்களோடு, எழுதுவோர், மௌலவி யு. எம். தாஸிம், மௌலவி ஏ. ஆர். எம். நூஹுல்ஹக், மௌலவி எம். யு. செய்யத் முஹம்மத், எஸ். எம். ஏ. ஹஸன், ஏ. எல் ஏம். இப்ருஹீம், எம். ஐ. எல். பக்கீர் தம்பி, ஏ. ஸி. எம், வதூத் ஆகியோராவர். இவர்களை வளரும் இலக்கியத் துறைக்கு மத சம்பந்தமான கட்டுரைகள் எழுதிப் பணியாற்றுவோர் என்று கூறலாம்.

சமீப காலத்தில், எழுத்துத் துறையில் ஈடுபட்டு, இலக்கிய மதிப்பு வாய்ந்த கட்டுரைகள் பலவற்றை எழுதி வருபவர், ஜனாப். முஹம்மது ஸமீம். டாக்டர் மு. வ. நாவலாசிரியர் என்ற விவாதக் கட்டுரையில் தம் கைவண்ணத்தைக் காட்டி, இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள், இலங்கை முஸ்லிம் தலைவர்கள் பொன்ற கட்டுரைகளிலும் தனது ஆராய்ச்சித் திறமையை காட்டி வருகிறார். தி. த. மலரில் இவரெழுதிய "முஸ்லிம் பண்பாடு" ஒரு நல்ல சிருஷ்டி. புதிய துணிகரமான முயற்சி,

ஜனாப். எம். ஜே. எம். ருஜி அவர்களும், நல்ல முறையில் இஸ்லாமிய சரித்திரக் கட்டுரைகளை எழுதி வருகிறார். தினகரன் தமிழ் விழா மலரில் இவரெழுதிய "முஸ்லிம் மக்களின் வரலாறு" நல்ல பணியாகும்.

கவிதைத் துறையில் "மலர்ந்த வாழ்வு" என்னும் தனது நூலின் மூலம் நன்கு அறிமுகமான ஒருவர் ஜனாப். எம். ஸி. எம். ஸுபைர். ஈழத்திலும், இந்தியா, மலாயா நாடுகளிலுமுள்ள பல இஸ்லாமிய ஏடுகளில் எழுதி வருகிறார். வானொலியிலும் கவிதா நாடகங்கள் எழுதியுள்ளார். இனிய கவிதைகள் மூலம் இஸ்லாத்திற்கும், தமிழுக்கும் பணி செய்கிறார்.

விடத்தல் தீவுக் கவிஞர் எம். பி. எம். முஹம்மது காஸிம் உணர்ச்சிகரமான இஸ்லாமிய இசைப் பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். இஸ்லாமிய தாரகை, சுதந்திரன், நூறுல் இஸ்லாம், ஆகிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார். இந்தியப் பிரிவினையின் போது பாகிஸ்தானை ஆதரித்துப் பல உணர்ச்சிகரமான பாடல்களை எழுதியுள்ளார். இவரது பாடல்களில் மதப் பற்று மிகுந்திருக்கும். இஸ்லாமிய தத்துவார்த்தம், கள்ளத் தோணிக்கு மறுப்பு, ஆகிய வசன பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார்.

ஜனாப். புரட்சிக் கமால், தினகரன் தமிழ் விழா, கவியரங்கத்தில் பங்குபற்றியவர். உரிய இடத்தில் உயரிய முறையில் தம் திறமையைப்

பளிச்சிடச் செய்தார். தமது ஆதர்ஸ கவிஞராக அல்லாமா இக்பாலை நேசிக்கும் இவர், இக்பாலைப் போல புரட்சிக் கருத்துக்களை யுடையவர். உருக்கமும், உணர்வும் நிரம்பிய பல கவிதைகளை ஆக்கியுள்ளார். கவிதைப் பாணி பாரதிதாஸனைப் போன்றது. நூலுருப் பெற வேண்டிய இவரது கவிதைகள் பல, சோம்பிக் கிடப்பது வருத்தத்திற்குரியது.

பாவலர் சி. மு. நல்லதம்பி சாய்பு, நம்மிற் பலர் மறந்துவிட்ட எழுத்தாளரும், கவிஞருமாவர். எனினும் சமீபத்தில் வெளியான இவருடைய கவிதைத் தொகுதியான "இசைத்தேன்" தமிழ்த் தேஜைக, உள்ளத்திற்கும் உணர்வுக்கும் உயரிய விருந்தாக அமைந்துள்ளது. இவருடைய பாடல்கள் பெரும்பாலும் இசைப் பாடல்களாகவே அமைந்துள்ளன. இலக்கிய சம்பந்தமான பல கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்து உறுப்பினராவர்.

கற்பனை வளம் நிறைந்த "இளங் கவிஞர் அண்ணல் (எம். எஸ். எம். ஸாலிஹ்) சுதந்திரனால் வளர்க்கப் பெற்றவர். பெரும்பாலும் விரசஉணர்வுள்ள பல பாடல்களை எழுதி இளைஞருள்ளத்தை அள்ளிவிட்டவர். ★

நாவலரின் விவிலியம்

நாவலர் மொழி பெயர்த்த பைபிளின் பிரதியொன்று வட்டுக்கோட்டையில் உள்ள பிஷப் குலேந்திரன் அவர்கள் வசம் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவர்கள் இல்லத்துக்குச் சென்றேன். இப்பெரியார் இந்நூலை எமக்குக் காட்டியதுமன்றி, அதிலுள்ள சில நயங்களையும் எடுத்து விளக்கினர். இந்த பைபிளுக்கும், பிற்காலத்து பைபிளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் எடுத்துக் காட்டினர். நாவலர் மொழி பெயர்ப்பில் தமிழ் மரபு வழுவாமல் இருப்பதைக் காணலாம்.

— முதலியார் குல. சபாநாதன்

★ ★ ★

விமர்சகன்

அடிமைத்தனத்துக்கும், கொடுங்கோலுக்கும் ஆதரவாயிருக்கும் எந்த ஆசிரியனும், விமர்சகனும் தனது தொழிலுக்குத் துரோகம் செய்பவனாவான். மக்களுடன் பழக அவன் அருகதையற்றவன்.

— இளங்கீரன்

மலைநாட்டு நாட்டுப் பாடல்கள்

சி. வி. வேலுப்பிள்ளை

வாழ்வின் உணர்ச்சிகளெல்லாம் எவன் இதயத்தில் வெள்ளம் போல் பாய்ந்து பிரவாக மெடுக்கின்றதோ அவனிடத்தில் கவிதா சக்தி வெளிப்படுகின்றது. உண்மையான ஒரு கவிஞன் எப்படிப்பட்டவன் என்பது பற்றி தாகூர் சொல்கிறார்: "கவிஞன் இதயத்திலே காதலன் குடி கொண்டு விடுகிறான். அதே நேரத்தில் காதலியின் உணர்ச்சிப் பிரவாகத்திலும் அவன் மூழ்கி விடுகிறான். அன்னையின் எல்லையற்ற அன்பிலே, மழலையின் மொழியிலே, தாய் தந்தையரின் பாசத்திலே, வீரனின் வெற்றிப் பெருமிதத்திலே, தோல்வியுற்றவனின் இதய வேதனையிலே, வாழ்வின் துடிப்பிலே, சாவின் அமைதியிலே, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த வயலிலும், வழியிலும் பாடுபட்டுழைக்கும் பாட்டாளியின் சுக துக்கங்களிலே, தன்னை மறந்து ஐக்கியப்படுகிறவனே உண்மையான கவிஞனாவான்."

கவிஞனொருவன் பிறருடைய உணர்ச்சிகளை உண்மையிலேயே பிரதிபலித்துக் காட்டுவதில் வெற்றி காணும் போது அவனுடைய கவிதைகள் அமரத்துவம் அடைகின்றன. ஆனால், எவ்வளவு கைதேர்ந்த முறையில் கவிஞன் அதைச் செய்திருந்த போதிலும் அது கை மாறிய சரக்கைப் போன்றது தான். மக்கள் மத்தியிலேயேயிருந்து தோன்றும் கவிதைகள் இப்படிப்பட்டவையல்ல. மக்களிடத்திலிருந்து தோன்றும் கவிதா உணர்ச்சியை இயற்கையின் பல அம்சங்களையும் புலன்களால் நுகர்ந்து தனது வளர்ச்சியிலும் மாற்றங்களிலும் பிரதிபலிக்கும் ஒரு மென்மையான செடிக்கு ஒப்பிடலாம்.

ஒரு வானம்பாடியைப் பற்றிய பழைய கதையொன்றுண்டு. தனது உடலை முள்ளிலே தைத்து, இதயத்தை முள்ளின் மேல் வைத்து அழுத்தி இரத்தம் சொட்டச் சொட்டக் குரலையெழுப்பி கீதம் இசைத்ததாம் அந்த வானம்பாடி. அமரத்துவம் வாய்ந்த அதன் கீதம் இரத்தத்திலும் வேதனையிலுமிருந்து பிறந்ததொன்றாகும். சிறிதும் சம்பந்தமில்லாதிருந்தாலும் இந்த உவமை தோட்டப் பகுதியிலேயுள்ள நாடோடிப் பாடல்களுக்கு, குறிப்பாக அற்புதமான இந்தப் பாடல்களைப் பாடும் பெண்களுக்கு முற்றிலும் பொருந்தும். தோட்டப் பகுதிகளிலேயுள்ள பெரும்பாலான நாடோடிப் பாடல்கள் பெண்களுக்கே உரிய தனிச் சொத்தாகும். உள்ளத்தின் அடித்தளத்திலேயிருந்து வெளிப்பட்டு இதயத் துடிப்பையும், நாடித் துடிப்பையும் அப்படியே பிரதிபலிக்கும் சிறு ரத்தினங்கள் இப்பாடல்கள்.

தோட்டப் பெண்கள் கம்பெனிக்கு சம்பாதித்துக் கொடுக்கும் உழைப்பாளிகள். குடும்பத்தைப் பராமரிப்பவர்கள்—கணவனுக்குப் பணிவிடை செய்து குழந்தைகளைப் பேணி, குடும்ப வாழ்வை நடத்துவதற்கு நடுநாயகமாக விளங்குபவர்கள். வீட்டிலும் மலையிலுமாக நாளொன்றுக்குப் பதினேழு மணி நேரத்துக்கதிகமாகவே வேலை செய்கிறார்கள். காலை 3 மணிக்கு படுக்கையை விட்டு எழுந்து இரவு 10 மணிவரையும் ஓய்வு ஒழிவில்லாமல் பாடுபடுபவர்கள் தோட்டப் பெண்கள்.

இந்த வேலையெல்லாம் செய்து கொண்டே அவர்கள், பாட்டும் பாடுகிறார்கள். உழைப்போடு—வாழ்வோடு மக்கள் இலக்கியம் உதயமாகிறது.

விசித்திரமான ஓர் செடியைப் போல் அவர்கள் வளர்கிறார்கள். இளமையென்பது சொற்ப காலமே அவர்களிடம் தங்குகிறது. பூவின் மலர்ச்சியைப் போல மெல்லிய புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு சீக்கிரமே அது வாடி வதங்கிவிடுகிறது. இளமையோடு காதல் மணமும் இலேசாக வந்து அவர்கள் வாழ்வில் வீசுகிறது. சுகபோக வாழ்வு வாழ்பவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் ஈடுபடும் காதல்

விளையாட்டைப் போன்றதல்ல அது. வேகமும் விறுவிறுப்பும் நிறைந்தது. அவர்களின் காதலுணர்ச்சி உடலை வருத்தி மலைச் சாரல்களில் குனிந்து நிமிர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும் வேகத்திலேயே தோன்றுகிறது அவர்களின் காதல். கொழுந்து மலையிலே ஒரு பெண் வேலை செய்து கொண்டிருக்கிறாள். பக்கத்து மலையிலே முள்ளுக்குத்து வேலை நடக்கிறது. முள்ளுக்குத்தும் மலையிலே தன்னுடைய காதலன் வேலை செய்து கொண்டிருப்பதைக் காண்கிறாள். அவன் அவளைப் பார்க்கிறான். அவளிடமிருந்து பாட்டொன்று பிறக்கிறது.

"முன்னூறு ஆளுக்குள்ளே
முள்ளுக் குத்தும் என் சாமி
முள்ளு மூனும் மண்ணுக்குள்ளே
முழிகள் ரெண்டும் என் மேலே"

முள்ளுக்குத்து வேலை மாறி அவன் இப்போது ஸ்டோர் ரோல் காம்பராவில் வேலை செய்கிறான். இடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் தகுந்தாற்போல் அவளுடைய பாட்டும் மாறுகிறது.

"வெங்கல ரோதையிலே
வேலை செய்யும் என்சாமி
வெத்திலை வேனுமின்னா
வெளியே வந்து கேளுமையா"

காதலன் எங்கோ ஓர் பயனம் போகிறான். அது அவளுடைய கவனத்தை ஈர்க்கிறது. ஆச்சரியமும், கவலையும் அவளிடமிருந்து வெளிப்படுகின்றது.

"முந்தியிலே பணம் முடிஞ்சு
முருகப்பூ லேஞ்சி கட்டி
கிளி மூக்கு என் சாமி—நீங்க
கிழக்கே பயண மாச்சோ"

தேயிலைச் செடிகளின் மத்தியிலேயே நின்று நாள் முழுதும் பாடுபடும் அவள் அந்தச் செடிகளுடன் ஐக்கியப்பட்டு விடுகிறாள். தேயிலைச் செடியுடனும், செடியிலிருந்து அவளெடுக்கும் கொழுந்துடனும் தனது உள்ளக்கிடக்கையெல்லாம் பரிமாறிக் கொள்கிறாள். ஒரு பாடலுக்கு இருக்க வேண்டிய தலைசிறந்த அம்சம் இந்த சிறு பாடலிலே தங்கியிருப்பதை காணலாம்.

"செடியே, செடிக்கொளுந்தே
சின்ன துரை டீக் கொளுந்தே
வாரணச்செடிக் கொளுந்தே
வந்திட்டாரே நம்ம தொர"

முதலாளியைத் தலைவனாகவும், அரசனாகவும் மதித்த பழைய சமுதாயத்தைச் சேர்ந்தவள் அவள். பழங்காலப் புலவர்களைப் போல் "வாசல் வளம்" ஒன்று பாடுகிறாள். தோட்டத்துச் சின்னத்துரையின் வாசல் வளத்தைத்தான் அவள் பாடுகிறாள்.

"கொய்யாப் பழம் பழுக்கும்
கொடி மல்லிகை பூ பூக்கும்
சீத்தாப் பழம் பழுக்கும்—நம்ம
சின்னத் தொரை வாசலிலே"

கஷ்டம் நிறைந்த அவள் உழைப்பின் மத்தியிலே காதலும் கைக்கூடித் திருமணமும் நடக்கிறது. அவள் ஓர் குழந்தைக்குத் தாயாகிறாள். குழந்தை பிறந்து நான்கு வாரங்களாகின்றது. குழந்தையை தொட்டிலிலே போட்டு ஆட்டுவதிலே எல்லையற்ற இன்பத்தைக் காண்கிறாள்.

"குளிச்சு முழுகி
குளத்தருகே போகையிலே
குருநாதர் பாத்துக்
குடுத்த கொழந்தை—நீயே

கன்னித் தவமிருந்து
கண்டெடுத்தேன்—ரத்தினத்தை
சீதை தவமிருந்து
செல்வத்தைக் கண்டெடுத்தேன்"

முப்பது வயதை அவள் எட்டிப் பிடிக்கிறாள். இளமை அவளிடமிருந்து விடை பெறுகிறது. ஓயாத உழைப்பு அவளுடைய உடல் நலத்தைப் பாதிக்கிறது. வாழ்வில் ஓர் சலிப்புத் தட்டுகிறது. அவளிடமிருந்து வெளிப்படும் நீண்ட பெருமூச்சு காற்றோடு கலக்கிறது.

"ஆத்தோரம் கொந்தறப்பு
அது நெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ—என்
வாழ்வும் கொறைந்ததையா!"

எப்படியிருந்த போதிலும், வருடா வருடம் பொங்கல், தீபாவளி குதூகலத்தையும், கேளிக்கை விளையாட்டுக்களையும் கொண்டு வருகிறது. மஞ்சள் கரை போட்ட பச்சைச் சேலையொன்றை அவள் கட்டிக் கொள்கிறாள். அதற்கேற்ற ரவிக்கை அவள் உடலை அலங்கரிக்கிறது. வெற்றிலைச் சாயம் ஏறி உதடுகள் செக்கச் செவேரென்று இருக்கின்றன. நெற்றியிலே குங்குமம் திகழ்கிறது. கைகளில் கண்ணாடி வளையல்கள்

குலுங்குகின்றன. கங்காணி வீட்டு வாசலுக்குப் போய் கை கொட்டிக் கும்மியடித்து, ஆடிப்பாடி மரியாதை செலுத்துகிருள்.

"திண்ணேயே திண்ணேயே கூட்டுங்களே
தெருவுத் திண்ணையை கூட்டுங்களே
நம்மையா கங்காணி சாஞ்சிருக்க
சரிக திண்ணேயே கூட்டுங்களே

"பாகை படந்ததைப் பாருங்களே—அது
பத்திப் படந்ததைப் பாருங்களே
பாகை வெதை போல நம்மையா கங்காணி
பல்லு வரிசையெப் பாருங்களே"

காலச் சக்கரம் சுழல்கிறது. கருணை சிறிது மின்றிக் காலதேவன் தன் ஆட்சியை அவள் மீது செலுத்துகிருன். அவள் வாழ்க்கையை பிணைத்த கம்பி ஒன்று அறுந்து விழுகின்றது. தகப்பன் மரணமடைகிருன். இப்போது குடியற்றுப் போன அந்த வீட்டின் தரையில் கிடந்து அவள் புரள்கிருள். நெஞ்சைப் பிளக்கும் அழுகை அவளிடமிருந்து வெளிப்படுகிறது.

"பொன்னுச் சருவக் கிண்ணம்—நீ
போய் குளிக்குந் தெப்பக் குளம்
போய் குளிச்சு வீடுவந்து
புண்ணியரே எங்கே போனே ?

எனக்கு தங்க விசிப்பலகே—இங்கே
சாய்ந்திருக்கும் பூப்பழகேநீங்க
சாய்ந்திருந்து சேதி சொன்னு
சாமி வெளியே வரும்!

பொன்னும் விசிப்பழகே—நான்
போற்றும் தெய்வழகே—நீங்க
போயிருந்து செதி சொன்னு
பொழுதே விடிஞ்சு வரும்."

சகல புண்களுக்கும் காலம் அருமருந்தாக அமைகிறது. ஆனுல் வடுக்கள் மட்டும் மறைவதில்லே. அமைதி, பொறுமை இவைகளின் அர்த்தத்தைக் காலம் அவளுக்கு கற்றுக் கொடுக்கிறது. மீண்டு மொருமுறை தீபாவளியோ, பொங்கலோ வரும்போது இளம் பெண்களோடு சேர்ந்து கொண்டு அவளும் பாடுகிருள். இப்போது காலத்தால் ஏற்பட்ட ஞானம் அவள் பாட்டில் தொனிக்கிறது. ★

மொழிபெயர்ப்பு

இங்கிலிசு மிக மலிந்த தற்காலத்திலே, இரண்டு பாலே மரக் குற்றி என்று பொருள்படுகிற 'two Logs of iron wood' என்றதற்கு, இரண்டு இரும்பு மரப் பூட்டு என்று கீழ்க் கோட்டிலே மொழி பெயர்த்து நகையாடப்பட்டவர் ஒருவர் தமது உத்தியோகத்தினின்று தள்ளப்பட்டாரோ............ இப்படிப்பட்ட மூட சிரோமணியினுல் எத்தனை பேருடைய எத்தனை வழக்குகள் எவ்வளவு மோசம் போயிருக்குமோ.........

— ஆறுமுக நாவலர்

நாட்டுக்கூத்து

கலாநிதி சு. வித்தியானந்தன்

மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் நாடகக் கலை மிக உயர்ந்த நிலையிலிருந்து வந்திருக்கின்றது. இன்று நாடகங்களை நாட்டுக் கூத்து என்றும், 'இருமா' என்றும் இரு பிரிவாக மக்கள் வழங்குவர். இவற்றுள் இருமா ஐரோப்பிய நாடக முறையைப் பின்பற்றி எழுந்த கூத்து; நாட்டுக்கூத்து தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த மக்கள் கலை. இதனை வெறுமனே 'கூத்து' என்று அழைப்பதும் உண்டு.

நாட்டுக் கூத்தை இருவகையாகப் பிரிப்பர். ஒன்று நாடகம், மற்றது விலாசம். நாடகமே முதன் முதல் தமிழ் நாட்டில் இருந்து வந்தது. சங்ககாலம், பல்லவர்கள் காலங்களில் இத்தகைய கூத்துக்கள் இருந்தன. சோழப் பெருமன்னர் காலப் பகுதியாகிய பத்து, பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலே நாடகங்கள் நடித்தனர் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. விலாசம் என்பது மிகப் பிந்தியது. இது விஜய நகர மன்னர் ஆட்சியிலேயே எழுந்தது தஞ்சையில் பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகளில் ஆண்ட நாயக்க மன்னர் காலத்தில் விலாச நாடகங்கள் நடிக்கப்பட்டன. இரகுநாத நாயக்கன் ஆட்சிக் காலத்தில் 'இரகுநாத விலாச நாடகம்' இயற்றப்பட்டதெனக் கூறுவர். இவ்வாறு எழுந்த விலாச நாடகம் பிற்காலத்தில் 'விலாசம்' என வழங்கியது. எனவே விலாசங்கள் பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோன்றின.

நாட்டுக் கூத்து நூல்களுள் நாடகங்களாக எழுதப்பட்டவை இராம நாடகம், குசலவ நாடகம், வீரகுமாரன் நாடகம், வள்ளியம்மன் நாடகம், சிறுத்தொண்டர் நாடகம், அல்லி நாடகம் என்பவை ஈழத்திலும் இத்தகைய நாடகங்கள் எழுதப்பட்டன. அவற்றுள் வாளபிமன் நாடகம், அலங்கார ரூப நாடகம், அதிரூபவதி நாடகம், கோவலன் நாடகம், விசயதர்ம நாடகம், தரும புத்திர நாடகம், இந்திர குமார நாடகம், சாவித்திரி நாடகம் முதலியன குறிப்பிடத்தக்கவை. கிட்டின விலாசம், அரிச்சந்திர விலாசம், மார்க்கண்ட விலாசம் முதலியன விலாசங்கள். ஈழத்தில் எழுதப்பட்ட விலாசங்களுள் தலைசிறந்தது. பூதத்தம்பி விலாசம், மாணிக்கவாசகர் விலாசம், நளச்சக்கரவர்த்தி விலாசம், மிருகாவதி விலாசம், தமயந்தி விலாசம் முதலியனவும் ஈழத்தவரால் எழுதப்பட்டவை. நாடகங்கள் முற்றிலும் தமிழ்ச் சார்பாய் அமைக்கப்பட்டவை. விலாசங்களில் வடநாட்டுச் சார்பு கலந்திருக்கும். ஆனால், இவை இரண்டிற்குமிடையேயுள்ள வேற்றுமையை இன்று இலகுவில் அறிந்துகொள்ள இயலவில்லை.

மேலும், இந்நாட்டுக் கூத்தைத் தென்மோடி வடமோடி என்றும் பிரிப்பர். தென்மோடிக் கூத்துக்களில் பழைய இசை முறைப்படியே பாட்டுக்கள் அமைந்திருக்கும்; வடமோடியில் தமிழ் நாட்டுக்கு வெளியே இருந்து வந்த இசை முறைப்படியே பாட்டுக்கள் அமைந்திருக்கும்; வடமோடியில் தமிழ் நாட்டுக்கு வெளியே இருந்து வந்த இசை முறைகளும் கலந்திருக்கும், பாட்டுடன் ஆடும் கூத்தும் இவ்வாறே இருக்கும். அதாவது தென்மோடியில் முற்றிலும் தமிழ்க் கூத்தே வரும்; வட மோடியில் சிறிதளவு ஆரியக் கூத்தும் கலந்து வரும். யாழ்ப்பாணத்தில் முதன் முதல் தென்மோடியே இருந்து வந்தது. வடநாட்டு இசை முறைகளும் கூத்து முறைகளும் வந்துசேர, யாழ்ப்பாணத்தில் நடக்கும் கூத்து முறைகளும் மாறின. வடமோடிக் கூத்தும் வந்து சேர்ந்தது. யாழ்ப்பாணத்துக்கு முறைக்கு முறை வந்த இந்திய நாடகக் குழுவினரால் வடமோடிக் கூத்தும் இங்கே பரவியது.

மட்டக்களப்பில் நடிக்கப்படும் நாடகங்கள் வடமோடி, தென்மோடி என்ற பிரிவிற் பெரும்பாலும் அடங்கும். இவற்றிற்கிடையே கதைப் போக்கு, ஆடல் வகை, தாளக்கட்டு, உடை அணியும் முறை ஆகியவற்றில் வேற்றுமை

உண்டு. கதைப் போக்கை நோக்குமிடத்து, வட மோடி நாடகங்கள் பெரும்பாலும் போர் செய்து வெற்றிபெறுவதில் முடிகின்றன. தென் மோடி நாடகங்கள் காதற் சுவை பயந்து காதல் கைகூடு வதில் முடிகின்றன. மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடி நாடகங்களில் இராமநாடகம், வீர குமார நாடகம், தரும புத்திர நாடகம், சூரசம் காரம், பாண்டவர் வனவாசம் முதலியன போர்க்கள முடிவைக் கொண்டவை. தென் மோடி நாடகங்களாகிய பவளவல்லி நாடகம், அலங்கார ரூபன நாடகம், நரேந்திர நாடகம், முதலியன காதல் வெற்றிபெறுவதோடு முடி கின்றன. தென்மோடி நாடகங்களில் நகை வியப்பு என்ற சுவைகளே பெரும்பாலும் பயின்று வருகின்றன. வடமோடி நாடகங்களில் வரும் முதன்மையான சுவை வீரமே. அதனைச் சார்ந்து கோபம் அழுகை முதலான சுவைகளும் தோன்றும்.

இச்சிறப்புகள் வாய்ந்த நாட்டுக் கூத்துக் களை கிராமங்களில் மக்கள் தமது ஓய்வு காலங் களில் ஆடிப்பழகுவர். கூத்தை ஆட்டப்பழக்கும் ஆசிரியரை அண்ணாவிமார் என்றழைப்பர். ஓர் ஊரிலுள்ள இளைஞர் பலர் ஒன்று கூடி, அண் ணாவி ஒருவரை நியமித்து, அவரிடத்து ஒரு நாட கத்தை ஆடவும், அதற்குரிய பாட்டுக்களைப் பாட வும் பழகிக்கொள்வர். பழகி முடிந்ததும், இரவு ஒன்பது மணிக்கு இன்ன கூத்து இன்ன இடத் தில் நடக்குமெனக் கிராமவெட்டியான் காலையே தமுக்கடித்துக்கொண்டு போவான். இருண்ட தும், மக்கள் ஒவ்வொருவராக நாடகம் நடக்கும் இடத்திற்கு வந்து சேருவர். சிலர் பாய், தலை யணை கொண்டு வந்து பாயைப் பரப்பி அதன் மீது உட்கார்ந்துகொள்வர். இதற்குள் ஒரு மறைவான இடத்தில் நாடகம் ஆடுபவர் வந்து சேர்ந்து வேஷம் போட்டுக்கொள்வர். 9 மணிக் குத் தொடங்குவதாக உள்ள கூத்து 11 மணி வரையில் தொடங்கும். கூத்துப் பார்க்க வரும் கும்பலுக்குக் குறைவே இராது. ஏனெனில் நுழைவு சீட்டு அக்காலம் இல்லை. முதலில் இரண்டு வண்ணார் தீப்பந்தங்களைக் கையிற் பிடித்து நிற்பர். இவர்கள் கிராம வண்ணார்கள். நாடகம் நடக்கும்போது தீப்பந்தம் பிடிக்கும் கடமை இவர்களுடையது. இவர்களுக்கு இதற் கென ஒரு தொகை படி நெல் கூலி கொடுப் பதுண்டு. பிறகு இரண்டு பேர் ஒரு வெள்ளைத் துணியைக் குறுக்காகச் சபையோர் எதிரில் பிடித்துக்கொள்வர். அதன்பின் கூத்தாடிகள் வந்து நின்று கொண்டு, இரண்டு மூன்று நிமி ஷம் வரை தாளங்களைத் தட்டி, பிறகு பாடத் தொடங்குவார்கள். பாட்டு ஒரே கூச்சலாய் இருக்கும். ஆங்காங்கு கேட்கும் சில சொற்களைக் கொண்டு விநாயகர் தோத்திரம், சரஸ்வதி தோத்திரம் என்று அறிந்துகொள்ளலாம்.

அதன் மேலேயே கூத்துத் தொடங்கும். குறுக்காகப் பிடிக்கப்பட்டிருக்கும் திரையின் பின் இருந்து "கட்டியக்காரன் இதோ வந்தான்" என்கிற பல்லவியைப் பாடிவிட்டு, திரையை நீக் கிக்கொண்டு கட்டியக்காரன் வேஷம் பூண்ட வன், கையிற் பிரம்பொன்றைப் பிடித்துச் சுற் றிச் சுற்றி ஆடத் தொடங்குவான். பிறகு தொப் பைக் கூத்தாடி இம்மாதிரியாகவே வந்து ஆடு வான். இவர்கள் இருவர் பேச்சுக்களால் இன்ன நாடகம் நடக்கப் போகிறதெனச் சபையோர் அறிவர். பிறகு முக்கிய பாத்திரம் வேஷம் பூண்டு வருவான் இவன்தான் இன்னானெக்கூறி ஆடிவரும் போது பக்கத்திலிருக்கும் வண்ணாரும் தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு இவனோடு சுற்றி வருவர். இவன் வருவதற்கு முன், திரைக் குப் பின் இருந்து ஒருவன் இவன் வருவதைச் சபையோருக்குத் தெரிவிப்பான். உதாரண மாக அப்பாத்திரம் அர்ச்சுனனென்றால் பின்வரு மாறு தெரிவிப்பான். "அகோதெப்படி என்றால்- இராஜாதி ராஜன்—ராஜசேகரன்—ராஜமார்த் தாண்டன் அர்ச்சுன மகாராசன் வருகிற விதம் காண்க". இவன் ஒவ்வொரு விருதாகக் கூறும் போழுதெல்லாம் கூட்டமாய் நின்ற மற்ற நடி கர்கள் 'ஹோ' ஹோ' என்ற குரலுக்குத் தக்கப் படி கூச்சலிடுவார்கள். "அர்ச்சுனன் இதோ வந்தான்; ராஜாதி ராஜன் அர்ச்சுனன் இதோ வந்தான்" என்னும் பல்லவியாக அர்ச்சுன வேஷம் பூண்டவன் ஆடி, அபிநயம் பிடிப்பான். இவ்வாறே மற்ற முக்கிய பாத்திரங்கள் வரும் பொழுதெல்லாம், தாங்கள் இன்னாரெனக் கூறித் தாங்களே அபிநயம் பிடித்து ஆடி விட்டுத்தான் நடிக்கத் தொடங்குவார்கள். கட்டியக்காரன் முதல் எல்லா நாடக பாத்திரங்களும் காலில் சலங்கை அணிந்திருப்பர். அதன் மேல் நாடகம் நடந்து விடியற் காலையில் முடிவுறும். இக்கூத் துக்களின் பின்பாட்டு குறிப்பிடத்தக்கது. அதா வது, ஒவ்வொரு வேஷதாரியும் ஒவ்வொரு அடி யாகப் பாடுவான்; அது முடிந்ததும் அதே அடி யைப் பின்புறம் நிற்கும் மற்ற வேஷதாரிகள் கும்பலாய் அதே மாதிரியாகப் பாடுவர்.

இதுவே பழைய நாட்டுக் கூத்து முறை. இஃது சிற்சில வேறுபாடுகளுடன் இடத்துக் கிடம் மாறி வழங்குகின்றது. சில இடங்களிற் கோயில்களுக்கு அருகிலுள்ள வெளிப்புறங்களில் நாடகம் ஆடுவதற்குக் கொட்டகை அமைத்து அதிற் களரி கட்டுவர். கொட்டகை வட்டமாக அமைந்திருக்கும். அதற்கு வெள்ளை கட்டி அழகுறச் செய்வர். அதன் கப்புகளுக்கிடையில் வாழைக் குற்றிகள் நட்டு, அவற்றில் தேங்காய்ப் பாதிகளை வைத்து, அவற்றுள் பழஞ்சீலை செம்மி, எண்ணெய் ஊற்றி விளக்கு எரிப்பர். இவ் வெளிச்சத்திலேதான் கூத்து நடைபெறும். தொடக்கத்திலே இக்கொட்டகைகள் நாலு புறமும் திறந்திருந்தன. கூத்தாடுவோர் எல்லாப் புறத்தும் வளைத்து ஆடி வந்தனர். கூத்துப் பார்க்க வந்தவரும் கொட்டகையைச் சுற்றி எல்லாப் புறமும் இருந்து, கூத்தைப் பார்ப்பர் இவ்வாறான கொட்டகை அமைப்பு இன்றும் கீழ் மாகாணத்தில் இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒரு பக்கம் அடைத்து மூன்று பக்கம் மட்டும் திறந்துள்ள கொட்டகைகளையே பெரும்பாலும் காணலாம். மேலும் கூத்துப் பார்ப்போர் ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு கலசங்களில் எண்ணெய் கொண்டு சென்று, கொட்டகையைச் சுற்றி எரியும் விளக்குகளுக்கு அவ்வெண்ணெயை ஊற்றுவர்.

நடிகர் களரியில் வந்து தோன்றியவுடன் அண்ணாவியார் விருத்தப்பாட்டு மூலம், கதைப் புனர்ப்பில் அக்கூத்தர் யாரென்றும், அவர் ஆற்றப் போகும் அருஞ் செயல்கள் யாவை எனவும் நாடகம் பார்ப்போருக்கு அறிவுறுத்துதலும் உண்டு. அதன்பின் அண்ணாவியார் தருக்களைப் பாடித் தாளம் போட, அதற்கு ஏற்ப மத்தளம் கெம்பீரமாய் நின்று முழங்க, அக்கூத்தர்கள் நின்று சுழன்று சுழன்று பல்வகைக் கூத்துக்கள் ஆடுவதுமுண்டு. அவருக்குப் பின்னால் அண்ணாவியார் சென்று தாளம் பிடித்தலும் சில இடங்களில் மரபு.

மட்டக்களப்பில் ஆடப்படும் கூத்துக்களில் சட்டியக்காரன் முதலிலே தோன்றி, தன் வரவையும் பின்னல் வரப்போகும் அரசனுடைய சிறப்பு முதலியவற்றையும் சொல்லி அமைதியாய் இருந்து பார்க்கும்படி சபையோரைக் கேட்டுக் கொள்ளுவான். அதன்மேல் கதைப் போக்குக்கு ஏற்பக் கூத்துக்காரர் தோன்றி நடிப்பர். அரசன், அரசி, மந்திரி பிரதானிகள் என்போர் கூட்டம் கூட்டமாக வந்து ஆடுதல் மரபு. இவர்களுடைய கூட்டம் கொலு என்று வழங்கப்படுகிறது. இராமர் கொலு, தருமர் கொலு என்பன இதற்குதாரணங்கள். நடிகருடைய முதல் தோற்றத்திற்கு வரவு என்று பெயர். அம்முதல் தோற்றத்தின் பேரில் வரவுப் பாட்டுக்களும் ஆட்டங்களும் இடம் பெறும். அரங்கில் ஒரு கொலுவினருக்கோ தனிப்பட்ட ஒரு கொலுவுக்கோ வரவு நிகழும் போது மிகச் சிறந்த ஆட்டம் ஒன்று இடம் பெறும். அப்போது வேறு வேறான தாளங்கள் மத்தளத்தில் ஒலிக்கும். அத்தாளங்களை ஒலிவகையாக வாயாற் சொல்லும் பத வரிசைகளுக்குத் தாளக் கட்டு என்று பெயர். அரசன், கொலுவரவு, சேனபதி வரவு, அரசகுமாரி வரவு, முனிவர் வரவு என்று வேறு வேறான இயல்புடையவரின் வரவுகளுக்கெல்லாம் வேறுவேறான ஆட்டங்களும் அவற்றுக்கேற்ற தாளக் கட்டுக்களும் உண்டு. ஓர் அரசனுடைய ஆட்டம் சேனதிபதியுடைய ஆட்டத்தை விட இலகுவாய் இருக்கும். பெண் வரவு மென்மைத் தன்மையுடைய நுணுக்கமான அபிநயங்களைப் புலப்படுத்தும் தாளக்கட்டுக்களையும் ஆட்டங்களையும் கொண்டு நிகழும். அதிலும் அரச கன்னியர் வரவு சாதாரணப் பெண்களின் தனிப்பட்ட வரவைவிடச் சீர்மைபெற்ற ஆட்ட நுணுக்கமும் சிறப்பும் பொருந்தி இருக்கும். இந்த ஆட்டங்கள் யாவும் வடமோடி, தென்மோடி இரண்டுக்கும் தனித் தனி வேறான வகையில் இயங்கும்.

தென்மோடியில், வடமோடியிலும் பார்க்க அதிக நுணுக்கமும் கடினமுமான ஆட்டங்கள் உள. இதனாலேயே வடமோடியில் வரவு ஆட்டத்தின் பின்னர் தம் வரவைக் குறிக்கும் பாட்டை நடிகர் தாமாகவே படிக்க, தென்மோடியில் அதனைப் பக்கப்பாட்டுக்காரர் படிக்கும் வழக்கம் உண்டு. மேலும் வடமோடியார் தம் விருத்தங்களை அதிகம் நீட்டி இசைக்காது படிப்பர். தென்மோடியார் அவற்றை நீண்ட ஓசை புலப்பட இழுத்துப் பாடுவது வழக்கம். வசனங்களும் அவ்வாறே வடமோடியிற் சதாரணமாகச் சொல்லப்படத் தென்மோடியில் அவை இசைபட இழுத்துச் சொல்லப்படுகின்றன. வடமோடிக் கூத்தர் ஒரு பாட்டைப் படித்தால் பக்கப்பாட்டுக் காரரும் அதனைத் தொடர்ந்து படிப்பர். தென் மோடியில் பாட்டை நடிகர் படிக்க அப்பாட்டின் கடைசிப் பகுதியை மட்டும் பிற பாட்டுக்காரர் தொடர்ந்து படித்து விட்டுப்

பாட்டு முழுவதற்குமுரிய தருவைப் படிப்பர். பாட்டுக்கு அமைக்கப்படும் சுர வரிசை போன்று கூத்துப் பாட்டுக்களைப் பாடும் முறையை அமைத்துக் காட்டும் ஒருவித சொற்கோப்பே தரு எனப்படுவது. இப்படித் தருப்படிக்கும் போது நடிகர் அத்தருவிற்கேற்ற தாளத்துக்கே நடிப்பர். இவ்வாறு கூத்துப் பாட்டுக்களுக்குத் தருப் பாடும் வழக்கம் தென் மோடியில் அன்றி வட மோடியிற் கிடையாது. வரவு, ஆட்டம், பாட்டு என்பவற்றை முடித்துக் கொண்டு களரியை விட்டுப் போக வேண்டிய நேரம் வந்ததும் ஒரு துரிதமான ஆட்டத்தை ஆடுதல் வடமோடியில் உண்டு. இவ்வாட்டம் காலமேற்றுதல் எனப்படும். இது தென்மோடியில் கிடையா.

நடிப்புக்கு உயிர்நாடியாய் உள்ளவை தாளக் கட்டுக்கள். கூத்தர் மேடையில் தோன்றி ஆடும் தாளங்களைச் சொற்கோப்பினால் தொடுத்துக் காட்டுவது தாளக்கட்டு ஆகும். கீர்த்தனங்களில் இருக்கும் பல்லவி போன்று ஓர் உறுப்பு இத்தாளக்கட்டுக்களிலும் முதலில் இருக்கின்றது. நடிகரின் வரவுத் தொடக்கத்திலே 8 முதல் 12 முறைவரை அண்ணாவியார் இம்முதற் பகுதியைத் திருப்பித் திருப்பித் தாள அமைதியுடன் படிக்க, அதற்குரிய அபிநயம் காட்டி அரங்கின் முகப்பிலேயே நின்று கூத்தர் ஆடுதல் மரபு. இந்த ஆரம்ப ஆட்டத்தின் பின்னரே அவர் களரியுள் இறங்குவர். வரவுக்கேற்றவாறு தாளக் கட்டினை அண்ணாவியாரும் பக்கப்பாட்டுக்காரரும் தொடர்ந்து சொல்லுகையில், மத்தளமும் தன் மொழியில் அவற்றைச் சொல்லும். பல்லவி போன்ற முதற் பகுதி குறிக்கப்பட்ட கால அளவுக்கு மீட்டும் மீட்டும் சொல்லப்படும்போது கூத்தர் நின்ற நிலையிலும் பக்கங்களுக்குத் திரும்பியும் அபிநயம் செய்து ஆடி அந்த இடத்தில் வீசாணம் போடுதலும், எட்டுப் போடுதலும் உண்டு. ஒருவர் பின் ஒருவராகப் பாம்பு போல வளைந்து ஆடிச் செல்வது வீசாணம் எனப்படும். எட்டு என்ற இலக்கத்தைப்போல வளைந்து செல்லும் ஆட்டம் எட்டுப் போடுதலாகும். இதன்மேல் நடு அரங்கில் ஆடி, முன்களரியிலும் பக்கங்களிலும் சென்று ஆடிப் பாட்டுத் தொடங்குவதற்காக வரவு ஆட்டத்தை முடித்துக்கொண்டு வருவர். இப்படி அது முடிவுறும் போது, 'தகத திங் கினதோம்' என்ற கடைசித் தாளம் இரண்டு மூன்று முறை மத்தளத்தில் இறுக்கி அடிக்கப்படும். இந்த அடிக்குத் தாளம் தீர்தல் என்று பெயர். தாளம் தீர்ந்ததும் கொலுவின் முதன்மைக் கூத்தர் தன் வரவைப் பற்றிப் பாட்டுக்களைப் பாடுவர். பின்பு கதைப் புணர்ப்புக்கு ஏற்ப உரையாடல் முதலியன தொடர்ந்து நடக்கும்.

இந்த ஆட்டங்களுக்கு இணங்கவே கூத்தரின் உடையும் அமைந்திருக்கும். உடல் வருந்த வளைந்து ஆடப்படும் காரணத்தால் தென்மோடியாருடைய உடைகள் மற்றவர்களுடைய உடைகளிலும் பார்க்கப் பாரங் குறைந்தவையாய் உள்ளன. வடமோடி அரசருடைய முடி கெருடம் ஆகவும், தென் மோடியாருடைய பூமுடி ஆகவும் இருத்தல் முறை. வடமோடியார் இடுப்பில் ஒடுக்கமாகவும் கீழ்ப்பாகம் அகன்று வட்டமாகவும் கரப்புப் போல் தொங்குகின்ற வட்டுடைகளை அணிவர். தென்மோடி உடைகள் பெரும்பாலும் பட்டுத் துகிலாலும் மணிகளாலும் குயின்று வேட்டி, சேலை என்பவற்றைப்போன்ற உடுக்கத் தக்கவையாய் அமைந்திருக்கும். இவர்கள் அணியும் ஆபரணங்கள் முருக்கஞ் செத்தல் முதலிய கனமில்லாத மரங்களால் செய்து கண்ணாடிக் கற்கள் புதைக்கப்பட்டிருக்கும். பெண் நடிகராக ஆண்களே வேஷம் தரித்து நடித்தனர். இவர்கள் பெண்களைப் போல கேசம் தரிப்பதற்காகத் தலையின் மீது கறுப்புத் துணியை இறுக்கிக் கட்டி மரத்தாலாகிய கடைநாகம், சூரியப் பிரபை, சந்திரப் பிரபை முதலிய அணிகளை அணிவர். மேலும், பழங்காலத்தில் வேஷதாரிகள் முகத்திற்கு மாத்திரம் வர்ணம் பூசுவர். பொதுவாக அரிதாரமும், செந்தூரமும், கறுப்புப் பொடியுமே இவர்கள் பாவித்த வர்ணங்கள். அரிதாரம் முகத்திற்கு மஞ்சள் வர்ணம் கொடுப்பதற்கும், செந்தூரம் உதட்டிற்குச் சிவப்பு நிறம் கொடுப்பதற்கும், கரிப் பொடி புருவத்திற்குக் கறுப்புத் தீட்டுவதற்கும் பயன்பட்டன. மீசை தாடி முதலியவற்றை ஒட்டுவதற்கு இக்காலத்தில் ஸ்பிரிட் கம் (Spirit gum) என்னும் பிசினைப் பாவிக்கின்றோம். இதற்காக அக்காலத்தில் பாவிக்கப்பட்டது அத்தில் பால். அத்திப்பாலினால் மீசை முதலியவற்றை ஒட்டிவிட்டால், அந்த இடத்தை விட்டு அகலாது. எவ்வளவு அருகிலிருந்து பார்த்தபோதும், இயல்பாக வளர்ந்தது போலத் தோன்றுமேயன்றி ஒட்டியதாகப் புலப்படாது.

நாட்டுக் கூத்துக்களில் பாடும் இசையும் பண்டைக் காலந்தொட்டுத் தமிழரிடையே வழி வந்தவையே. நாடகங்களில் இவ்விசைக் கேற்

ப வே கதைக்கிணங்கப் பாட்டுக்களை அமைப்பர். பாட்டுக்கள் புதியனவாய் இருப்பினும் இசைப் போக்குப் பழையதாய் இருக்கும். கர்நாடக சங்கீதம் தென்னாட்டில் உண்டாகுவதற்கு முன்னர் வழங்கிய இசையே இந்நாடகங்களில் வரும் இசையிற் பெரும்பாலன. சுரம் பாடி இராக இலட்சணங்கள் நன்கு அறிந்தாலேயன்றி கர்நாடக சங்கீதம் ஒருவருக்கு வந்து அமையாது. ஆனால் நாட்டுக் கூத்து இசைகள் வேறு வகையின. அவற்றை மிக இலகுவிற் பாடலாம். கர்நாடக சங்கீதத்திற்போல வேலைப்பாடுகள் இல்லை. வர்ண மெட்டை அறிந்தாலே ஒரு குறித்த கீர்த்தனத்தையும் அதன் இராகத்தையும் பாடி விடலாம். அத்துடன் தெம்மாங்கு என்ற இசையும் நாட்டுக் கூத்திற் பயன்படுத்தற்படும். பொதுமக்களிடையே பழங்காலந்தொட்டு வழங்கி வரும் இவ்விசை இராக இலக்கண விதிகளுக்கு அமையாதது. இசை வல்லுநர் நாட்டுக் கூத்து இசைகளை ஆராய்ந்தால் பழந்தமிழ் நாட்டு இசை முறைகளை ஒருவாறு காணமுடியும்.

அக்காலத்தில் கிராமத்தில் கூத்து அரங்கேற்றம் நிகழ்ந்தால் அதனைத் தொடர்ந்து அவ்வூரிற் பல திருமணங்கள் நடப்பதும் வழக்கமாய் இருந்தது. நாடகம் நடக்கும்போது கூத்தரில் ஒருவரின் ஆட்டத்தில் கூத்துப் பார்க்க வந்தோரில் யாருக்காவது பிடித்துவிட்டால், அக்குறித்த நடிகருக்குப் பரிசில் வழங்குவதும் உண்டு. அப்பரிசிலைக் கொடுப்பவர் தம் பரிசிலை அண்ணாவியாரிடம் கொடுப்பார். அண்ணாவியார் இன்னாரின் நடிப்புத் திறமையில் இன்ன ஊரிலிருக்கும் இன்ன பெயர்வழி உள்ளம் களித்தவராய் அவருக்கு இன்ன பரிசு வழங்குகின்றார் என்று பாட்டு உருவாய் மத்தளதாள இசையுடன் அவைக்களத்தாருக்கு அறிவிப்பார். கூத்தாடிப் பெற்ற புகழாற் சிலர் அக்கூத்தின் பெயராலே அநுமான் வேலுப்பிள்ளை, தருமர் சீனி, துரோபதை முத்தர், இயமன் பொன்னம்பலம், இராவண கந்தன் என்பதுபோல வாழ்நாள் முழுவதும் அழைக்கப்படுவதும் உண்டு.

ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுக் கூத்துக்களும் நாட்டுப் பாடல்களும் அந்த அந்த நாட்டுப் பொதுமக்களிடையே இருந்து வருகின்றன. இவை நாட்டு மக்களின் உள்ளத்திலே காலத்துக்குக் காலம் நின்றெழும் வற்றாத ஊற்றுக் கேணிகள். மக்களின் இன்பதுன்பங்களைக் காட்டும் கண்ணாடிகள். இக்கூத்துக்களைத் திறம்பட நடிக்கவும் பழக்கவும் வல்லார் தொகை இன்று குறைந்துகொண்டே வருகின்றது. இவர்களுக்குத் தெரிந்த பழங்கலை நாளடைவில் மறைந்து போகாது பாதுகாத்தல் எமது கடன். இதனைப் பாதுகாத்தால் தமிழ் நாட்டுக் கூத்துள் கலந்து நிற்கும் திம், தக, திமி முதலான தாளங்கள் வாயிலாகக் கிடைக்கும் தமிழ் இசைச் செல்வத்தினையும் நாம் போற்றிக் காத்தவர்கள் ஆவோம். பல கூத்துக்கள் அச்சேறாது ஏட்டுப் பிரதிகளாகவே கிடக்கின்றன. இவற்றை அச்சேற்றிப் பேணுதலும் எமது கடன். எனவே, மக்கள் கலையாகிய நாட்டுக் கூத்து மங்கி மறைந்து அழிந்து போகாது அச்செல்வத்தினைப் போற்றி வளர்ப்போமாக. ★

மரணம்

அவன் பல புத்தகங்களில் பல வீரர்களைப் பற்றிப் படித்திருக்கிறான். அவர்களைப் போல, தைரியமாகவும், உறுதியாகவும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறான். எனினும் அன்று இரவு அவனை அந்தச் சிறைக்கு இழுத்து வந்தபோது........."இவனை எதற்காக இழுத்துக் கொண்டு போகவேண்டும்? முதுகில் ஒரு குண்டு அடித்தால் ஆள் தீர்ந்தான்" என்று ஒருவன் சொன்னபொழுது அவன் பயந்துவிட்டான். ஆம்! பதினாறு வயதில் இறப்பதென்பது பயங்கரமான விஷயம்தான். இறந்துவிட்டால் அதன்பின் வாழ்வு இல்லை.

—ஆஸ்ட்ராவ்ஸ்கி

சிங்கள இலக்கியத்தின் வளர்ச்சி

மாட்டின் விக்கிரமசிங்ஹ

சிங்கள மொழி, இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், தென்னிந்திய மொழிகளான கன்னடம், தெலுங்கு மொழி, இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் நெருங்கிய ஒருமைப்பாடுண்டு.

தென்னிந்தியாவிலே ஆந்திர நாட்டிலே தான் பௌத்தம் செழிப்புற்று வளர்ந்தது. ஆந்திரா மிகப் பெருமைவாய்ந்ததும், புராதனமானதுமான பௌத்த நாடாகும். சமணத்தின் செல்வாக்கு ஆந்திராவிலே வேரூன்றியதும், பௌத்த மதம் மக்களின் மதிப்பை இழந்தது. சமணமும் பின்னர் இந்து சமயத்தினரின் ஆதிக்கத்தினுல் அழிக்கப்பட்டது. இன்று ஆந்திர மக்கள் பேசும் தெலுங்கு, ஆந்திரர்கள் ஆதியில் பேசிய ஒரு வகைப் பிராகிருத மொழியிலிருந்து தோன்றியிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. மிகப் பழைமை வாய்ந்த தெலுங்கு இலக்கியங்கள் சமஸ்கிருதம் கலந்தவை. இவை பத்தாம் அல்லது பதினேராம் நூற்ருண்டைச் சேர்ந்தவையாகும். இந்த இலக்கிய காலத்திற்குமுன் எழுதப்பட்ட கல்வெட்டுக்களெல்லாம் பிராகிருத மொழியிலோ, சமஸ்கிருத மொழியிலோ தான் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து இலங்கை வந்து குடியேறிய மக்கள் பேசிய ஒருவகைப் பிராகிருத மொழியிலிருந்து சிங்களம் வளர்ந்திருக்கின்றது. கி. மு. 237ம் ஆண்டிலே பௌத்த மதம் இலங்கையில் பரப்பப்பட்டது. இப்புதிய போதனையை மக்கள் எவ்வளவு ஆர்வத்துடனும், பக்தியுடனும் ஏற்றுக்கொண்டனர் என்பதை, உபநிஷத காலத்தில் இந்திய ரிஷிகள் வாழ்ந்த முறையிலே ஆதியில் வசித்த பௌத்த குருமார்களின் இருப்பிடங்களான குகைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் எண்ணற்ற பிராகிருத சிலாசாசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இலக்கணிகள் தெலுங்கு மொழியை நான்கு விதமாகப் பிரிக்கின்றனர்.

தத்சமமு லு—சமஸ்கிருதச் சொற்கள்
தத்பவ முலு—சமஸ்கிருதச் சொற்கள் தெலுங்கு மரபில் எழுதப்பட்டவை.
தேசீய முலு—தெலுங்குச் சொற்கள்
அன்ய முலு—பிறமொழிச் சொற்கள்

சிங்கள எழுத்துகளின் பிரிவும் இதைப் போன்றதே.

தத்சம—சமஸ்கிருதச் சொற்கள்
தத்பவ—சமஸ்கிருதச் சொற்கள் சிங்கள மரபில் எழுதப்படுபவை.
நிஸ்பன்ன—சிங்களச் சொற்கள்
அன்ய—பிறமொழிச் சொற்கள்.

இலங்கையிலே சமண குருமார் இருந்து வந்தபோதிலும், சமணம் ஒரு குறிப்பிட்ட தொகையினரின் சமயமாகவாவது இந்நாட்டில் இடம்பெறவில்லை. பத்தாம் நூற்ருண்டின் பின்னர், சோழரின் ஆதிக்கம் காரணமாகவும், சமஸ்கிருத இலக்கியத்தின் மூலமாகவும் இந்து சமயம் சிங்களப் பண்பாட்டில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தனது செல்வாக்கைப் பரப்பியது. அழிவுச் செல்வாக்கான இந்த ஆதிக்கத்தை, இந்நாட்டை ஆக்கிரமித்தவர்களை முறியடித்த முதலாம் விஜயபாகுவும், முதலாம் பராக்கிரமபாகுவும் கட்டுப்படுத்தினர். எனினும், ஆர். ஜி. பந்தர்கார் அவர்களின் கூற்றுப்படி தென்னிந்தியாவில் 12ம் நூற்ருண்டிலே ஏற்பட்ட வைணவ மறுமலர்ச்சி இலங்கையிலும் பரவி 15ம் நூற்ருண்டுவரை நிலைத்தது.

வைணவ மறுமலர்ச்சி சிங்களப்புலவர்களின் காவியங்களிலே நன்கு பிரதிபலிப்பதைக் காணலாம். எமது புலவர்களில் சிலர் திருமாலைப் போற்றியும், இன்னுஞ் சிலர் திருமால், சிவன், மகாவீரர்,பிரம்மாமுதலிய இந்துத் தெய்வங்களை

இகழ்ந்தும் பாடியிருக்கின்றனர். இவ்விதம் கண்டித்துப்பாடிய சிங்களப் புலவர்களிலே "வீதாகமை மைத்திரேயர்" முதலிடம் வகிக்கின்றார். அவர் எழுதிய "புதுகுணலங்காரய" என்னும் நூலிலே இந்துத் தெய்வங்களைக் கீழ்க் காணும் விதத்தில் நிந்தித்துப் பாடியிருக்கிறார்:

"எங்கும் வியாபித்திருக்கிறார் திருமால்
ஆனால் சீதை தன் கணவனைவிட்டுப்
பிரிந்திருக்க நேர்ந்தது. அதனால் ஒரு
பெரும்போர் நிகழவும் செய்தது—
ஏன் இந்தப் பெரும் பொய்?"

"ஒரு நீரிணையைக் குரங்கொன்று
நீந்திக் கடந்தது.
ஆனால் இராமன் அதைக் கடக்கமுடியவில்லை.
அவன் பாலமமைத்துக் கடந்தான்
என்கிறார்கள்.
இந்தத் தெய்வங்களின் சக்தியெல்லாம்
இந்த மாதிரித்தான்."

புலவரின் கருத்தை அவ்விதமே இங்கு தந்திருக்கிறோம்.

புராதன சிங்கள அரசர்கள் காமினி, திஸ்ஸ, சிரிசங்கபோ, உதய, மகிந்த என்பனப் போன்ற ஆடம்பரமற்ற நாமங்களையே வைத்துக்கொண்டார்கள். இப்பெயர்கள் அவர்கள் அமைதியை விரும்பினார்கள் என்பதைக் காட்டுகின்றன. இந்நிலை பதினோராம் நூற்றாண்டிற்குப் பின் மாறியது. இதற்குப்பின் அரசோச்சிய மன்னர்கள் சகலரும் இந்து சமய மறுமலர்ச்சிச் சூறாவளியில் அடிபட்டு தங்கள் பெயர்களை வீரத்தின் இலக்கணமாக விஜயபாகு, பராக்கிரமபாகு, புவனேகபாகு, இராஜசிங்கன் என்ற பெயர்களுக்கு மாற்றிக்கொண்டார்கள்.

ஆறும் நூற்றாண்டிலே பதினொரு சிங்களப் புலவர்கள் இலக்கியம் வளர்த்ததாக புராதன சாசனங்கள் கூறுகின்றன. இவர்கள் எழுதியவற்றில் சில செய்யுள்களே, பிற்காலத்தில் வெளிவந்த அலங்கார நூல்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. பேராசிரியர் டாக்டர் பரணவித்தான அவர்கள் சிகிரியா மதிலிலே 8ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை இவ்விடத்தைத் தரிசிக்க வந்தவர்கள் எழுதிப்போந்த சுமார் 300 செய்யுட்களைப் பிரதியெடுத்து புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். இரண்டு பாகங்களில், ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கும் இந்நூலிலே செய்யுட்களின் பிரதிகளும், மொழிபெயர்ப்பும், அச்செய்யுட்களில் எடுத்தாளப்பட்டிருக்கும் மொழியின் இலக்கணம், இலக்கிய நயம் ஆகியவையும் தரப்பட்டுள்ளன.

இந்த நூலிலே தரப்பட்டிருக்கும் பழைமையான செய்யுட்கள் இயற்கையான கவி வளம் செறிந்தனவாய்க் காணப்படுகின்றன.

II

முதன்முதலாக எழுதப்பட்ட சிங்கள நூல்களில் ஒன்று "தம்மபதட்டகத்தா;" என்ற பாலி நூலுக்கு உரையாக எழுந்த நூலாகும். அடுத்தது புத்தகுருமார்களின் ஒழுக்கத்தை வரையறுத்து எழுதப்பட்ட பாலி நூலின் மொழிபெயர்ப்பாகும். இரண்டாவது நூலில் எடுத்தாளப்பட்டிருக்கும் நடை வழக்கழிந்ததாகவும், புராதன சிலாசாசனங்களில் காணப்படும் நடையை ஒத்ததாகவும் விளங்குகிறது. பாலி மூல நூலிலே சரளமான, எளிய நடை பின்பற்றப்பட்டிருப்பதனாலே அதன் சிங்கள மொழிபெயர்ப்பிலும் எளிய, கலப்பற்ற நடை இடம் பெற்றுள்ளது.

"அமாவத்துர" (அமிர்தம்) என்னும் நூல் முதன்முதலாக எழுதப்பட்ட வசன நூல் எனக் கொள்ளப்படலாம். இது 12ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகவிருக்கமுடியாது. இந்நூலிலே ஆசிரியர் தான் விரும்பிய முறையிலே கற்பனை செய்து புத்தரின் வாழ்க்கையிலேற்பட்ட அபூர்வ சம்பவங்களை விவரிக்கின்றார். பாலிக் கதைகளின் தழுவல்களும் இதில் இடம்பெறுகின்றன. நூல் முழுவதிலுமே சமணர்களும், பிராமணர்களும், பிரபுத்துவமும் தாக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆசிரியர் குருளுகோமி இத்தழுவற் கதைகளில், மொழியில் தமக்குள்ள ஆற்றலை நன்கு புலப்படுத்தியிருக்கிறார்.

"அமாவத்துர"வில் வரும் திட்ட மங்கலிகாவின் கதையில் சிங்கள இலக்கியத்திலே வேறெங்கும் காணப்படாத முறையிலே அங்கதச்சுவை இடம் பெற்றுள்ளது. இந்தக் கதை சாதித் திமிர் பிடித்தவர்களையும், அரசர்களையும், மந்திரிகளையும் கண்டிக்கும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. வேதங்களைக் கற்ற வெறியில், பஞ்ச

மனின் நிழல் பட்டதென்ற காரணத்திற்காக கிணற்று நீர் அசுத்தமடைந்துவிட்டதென்று கருதும் அகம்பாவம் பிடித்த பிராமணர்களைப் பற்றித் தயவுதாட்சண்யமின்றித் தாக்கி எழுதியிருக்கிறார் ஆசிரியர். இதில் வரும் ஒரு கதையில் சாதித்திமிர் படைத்த ஒரு பிராமணன், பஞ்சமன் சாப்பிட்டுக் கையலம்பிய நீரில் தயாரிக்கப்பட்ட கூழைக் குடித்த விதத்தை இளிவரற் சுவையிலே அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

திட்டமங்கலிகா செல்வத்திலே புரளும் ஒரு பிரபுவின் மகள். அகங்காரத்தின் பிரதிபிம்பம் அவள். தன்னை மணமுடிக்கக் கோரி வந்த இளைஞர்களுக்கெல்லாம், சாதியிலோ, குடும்பப் பரம்பரையிலோ குறைபாடு கண்டு அவர்களை உதறித் தள்ளிவந்தாள். இவள் ஒரு நாள் தன் பல்லக்கிலேறி பூங்காவனத்திற்குச் சென்றுகொண்டிருக்கையில், வழியிலே ஒரு பஞ்சம இளைஞன் செல்வதை பல்லக்குத் திரையினூடாகக் கண்டாள். கண்டதும் அவளுக்கு ஆத்திரமும், அருவருப்பும் ஒருங்கே ஏற்பட்டது. அவள் உடனே உமிழ்ந்து துப்பி, "ஆ, என்ன மோசம் நடந்துவிட்டது? ஒரு பஞ்சமனை என் கண்கள் பார்த்துவிட்டனவே" என்று கூறி பல்லக்கை வீட்டுக்குத் திருப்பினாள்.

அவள் வீடு திரும்பியதும் தனது அடிமைகளை அழைத்து, பஞ்சமனைப் பார்த்த கண்களையும், "பஞ்சமன்" என்ற வார்த்தையைக் கூறிய தனது வாயையும் கழுவிச் சுத்தப்படுத்த நீர் கொண்டுவருமாறு கட்டளையிட்டாள். அடிமைகளும் தங்களுக்கு வழக்கமாகக் கிடைக்கும் கள்ளை இழந்தனர். இதனால் கடுங்கோபங்கொண்ட வேலைக்காரர்கள் பஞ்சமனை மயிரைப் பிடித்திழுத்து வந்து தரையில் கிடத்தி கைகளாலும், தடிகளாலும், கற்களாலும் அடித்து வதைத்தனர். பஞ்சமன் பட்ட அடி தாங்கமுடியாமல் உணர்விழந்தான். உணர்வு தெளிந்து எழுந்ததும் நேரே பிரபுவின் மாளிகைக்கு எதிரே சென்று வாசலில் படுத்துக்கொண்டு "திட்டமங்கலிகாவை எனக்குத் தாருங்கள். தராவிட்டால் இந்த இடத்திலேயே உயிரை இழப்பேன்" என்று கூறி சத்தியாக்கிரகம் செய்தான்.

அந்தக் காலச் சட்டத்தின்படி ஒரு பஞ்சமன் எவருடைய வீட்டு வாசலில் இறந்தாலும், அவ்விடத்திலுள்ள பதினன்கு வீடுகளில், அதாவது இருபுறத்திலும் ஏழு, ஏழு வீடுகளில் வசிப்பவர்கள் பஞ்சமர்களாகக் கணிக்கப்பட்டு சமூகத்திலிருந்து அகற்றப்படுவார்கள். எனவே, இச்சட்டத்திற்குப் பயந்த அயல் வீட்டார் அவனுக்கு நிறையப் பொருள்கொடுத்துஅவனை அவ்விடத்திலிருந்து அகற்ற முயன்றார்கள். அவன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்த அந்த வீட்டுக்காரர்கள் திட்டமங்கலிகாவை பலாத்காரமாக பஞ்சமனிடம் ஒப்படைத்துவிடுவதாகப் பயமுறுத்தினர்கள். நிலைமை மோசமடையவே வேறு வழியின்றி திட்டமங்கலிகாவின் பெற்றோர் அவளைப் பஞ்சமனுக்குக் கொடுத்தனர்.

திட்டமங்கலிகா தன்னையடைந்ததும் பஞ்சமன் அவளைப் பார்த்து "பெண்ணே, உனது வேலைக்காரர்கள் என்னை அடித்து நையப்புடைத்துவிட்டார்கள். என்னால் நடக்கமுடியாது. என்னை உன் தோளில் சுமந்துகொண்டு போ" என்று கட்டளையிட்டான்.

இவ்விதமாகப் பஞ்சமன் செல்வச் செழிப்பினால் செருக்குடன் வாழ்ந்த திட்டமங்கலிகாவின் தோளிலே ஏறி அந்நகரில் வதியும் எல்லாப் பிரபுக்களின் வீடுகளையும் சென்று தரிசித்தான்.

ஆசிரியர் இக்கதையின் மூலம் சாதித் திமிர் படைத்தோருக்கு சாட்டை அடி கொடுக்கிறார். கதையில் தனது ஆத்திரத்தையெல்லாம் அப்படியே அள்ளிக் கொட்டியிருக்கிறார். இந்நூலில் காணப்படும் கதைகளிலெல்லாம் அரசர்களையும், அமைச்சர்களையும், பிராமணர்களையும் தாக்கி எழுதப்பட்டிக்கிறது.

அதே காலத்தில் எழுதப்பட்ட இரு பிரதான வசன நூல்கள் வித்தியா சக்கரவர்த்தியின் 'புத்தசரண'வும், தர்மசேன தேரரின் 'சத்தர்ம ரத்னவளியு'மாகும் 'புத்தசரண'காரராம் பரியின் சமஸ்கிருதத்தில் திளைத்த காலத்தைச் சேர்ந்ததனாலே வர்ணனைமிக்க சமஸ்கிருதம் கலந்தசிங்களத்திலே அதாவது "மணிப்பிரவாள" நடையிலே எழுதப்பட்டிருக்கின்றது. "சத்தர்ம ரத்னவளி" சிங்கள வசன இலக்கியங்களிலே தனித்துவம் பெற்ற நடையிலே எழுதப்பட்டதாகும்.

தர்மசேனர் அலங்காரமிக்க சமஸ்கிருதம் கலந்த நடையைவிட்டு, கிராமிய மொழியிலே நூலை எழுதியுள்ளார். கிராம வாழ்க்கையில்

அன்றாடம் காணக்கூடியவையே அவரது கதைகளில் இடம் பெற்றுள்ளன. தனக்கே சிறப்பான ஒரு பாணியில் அவர் கதைகளை விபரித்துள்ளார். இதில் வரும் எல்லாக் கதைகளுமே பாளி இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் கதையில் மனிதனை நேசிக்கும் சுபாவம் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது.

அதற்குப்பின் எழுதப்பட்ட வசன நூல் உம்மக ஜாதகமாகும். ஜனரஞ்சகமான இந் நூலிலே அரசர்களும், அமைச்சர்களும் ஏளனப் படுத்தப்பட்டிருக்கின்றனர். இந்தக் கதையில் வரும் பிராமண அமைச்சர் ஒருவரின் செயல்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கும் கௌடில்ய அர்த்தசாஸ்திரத்தின் ஆசிரியரும், தலைசிறந்த அரசியல் மேதையுமான சாணக்கியரின் வாழ்க்கையை நினைவூட்டுகின்றன.

முதன்முதல் எழுதப்பட்ட சிங்களக் காவியங்களான கவ்சிலுமின, முவதெவ்-தாவத்த, சசதாவத்த என்ற நூல்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இக்காவியங்களெல்லாம் புத்தரின் முற்பிறப்புகளை தெளிவான காவிய நடையிலே விபரிக்கின்றன. இக்காவிய கர்த்தாக்கள் யாவரும் காளிதாசரின் காவியத்திலும் பார்க்க மாகரின் ஆஸ்தான கவிதைகளில் மனம் லயித்திருப்பதாக இந்நூல்களில் கையாளப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து தெரியவருகிறது.

வேறெம்மொழியினது செல்வாக்குமின்றி தனித்துவம் பெற்று விளங்கும் சிங்களக் காவிய நூல் குத்திலகாவியமாகும். இந்நூலை பதினைந் தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வெத்தாவை என்னும் புலவர் எழுதியிருக்கிறார். சமஸ்கிருத ஆஸ்தான காவியத்தின் செல்வாக்கைப் பெறாது தனித்து வளர்ந்திருக்கும் இந்த இலக்கிய நூலில் புராதன இந்தியாவின் சங்கீத வித்துவான்களிருவரின் சோகம் நிறைந்த வாழ்க்கை விபரிக்கப்பட்டிருக்கின்றது. இவருக்கு முன் நூலெழுதிய புலவர்கள் எல்லோரும் தமக்குத் தெரிந்த சமஸ்கிருத அறிவையும், காவியாலங்காரத்தில் தமக்குள்ள பரிச்சயத்தையும் காட்டத் தவறவில்லை. வெத்தாவைப் புலவரோ, இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றாது எளிய நடையிலே தம் நூலை எழுதியிருக்கிறார். இவரது காவியத்திலே காளிதாசரின் தெளிவையும், கவித்துவத்தையும் எடைபோடும் நல்ல செய்யுட்களைக் காணலாம்.

சிறிதுகாலங் கடந்து வெளிவந்த ஜாதகக் கதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பிலே நாவல்களில் வரும் கதைகளையொத்த கதைகளையும். தெள்ளிய வசன நடையையும் காணக்கூடியதாயிருக்கிறது. பதினாறாம் நூற்றாண்டிலே மொழிபெயர்க்கப்பட்ட இந்த நூலில், கல்வியறிவில்லாத மக்களும், புத்தகுருமார்களிடம் பாடம் கேட்ட ஒருவர் உரத்து வாசிக்கும்பொழுது கூடி நின்று கேட்டு விளங்கிக் கொள்ளத்தக்க முறையிலே கிராமியச் சொற்கள் கலந்த நடை எடுத்தாளப்பட்டிக்கிறது. ஜனரஞ்சகமான இந்த மொழிபெயர்ப்பு இலக்கியத்தரத்தை அடையவில்லையென்று சிங்கள அறிஞர்களும், புத்தகுருமார்களும் முன்னர் கருதி வந்தனர். இவர்கள் வர்ணனை மிக்க சமஸ்கிருத வசன நடையை விரும்பியதால், இந்நூலுக்கு உரிய அந்தஸ்தைக் கொடுக்கவில்லை.

III

நவீன சிங்கள இலக்கியம் ஐம்பது வருடங்களுக்குள் தோன்றியதாகும். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஓரிரண்டு எழுத்தாளர்கள், நடுத்தர வகுப்புக் குடும்பங்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் கதைகளை ஆரம்பத்தில் எழுத முயன்றனர். அவர்களின் முயற்சி சிங்கள எழுத்தாளர்களை அத்துறையில் ஈர்க்கும் சக்தியைப் பெறவில்லை. முதன்முதலாக சிங்கள நவீனங்களை எழுதும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் பியதாச சிரிசேனா, ஏ. சைமன் டி சில்வா, எம். சி. எவ். பெரேரா என்போராவர். பியதாச சிரிசேனாவும், எம். சி. எவ். பெரேராவும் பத்திரிகையாளர்கள். சைமன் டி சில்வா ஒரு அரசாங்க ஊழியராவார். பியதாசசிரிசேனா ஒருநாவலாசிரியர் என்பதிலும் பார்க்க அவர் ஒரு தேசீயவாதியும், பத்திரிகையாளரும் ஆவார் எனக் கூறுவது சாலப் பொருந்தும். எனினும் அவரது கதைகளை இன்றும் பௌத்த மக்கள் விரும்பி வாசிக்கின்றனர். சிரிசேனா தனது தேசீயப் பிரச்சாரத்தை நடத்துவதற்கு கதைகளை ஆயுதமாகக்கொண்டார். அவரெழுதிய எல்லா நவீனங்களிலும் காதல் கதையைக் காணலாம். இவற்றில் வரும் பாத்திரங்கள் மூலமாக "கறுப்புத் துரைமார்" களைத் தாக்குவதிலும், நையாண்டி செய்வதிலும் அவர் வெற்றி கண்டிருக்கிறார். சிரிசேனாவின் நவீ

னங்களில் வரும் ஒரு சம்பவத்தை இங்கு சுருக்கமாகத் தருகிறோம்.

கொழும்பிலே ஜனநெருக்கடியுள்ள வீதியில் வசிக்கும் குறைந்த வருமானமுள்ள நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஒரு விதவை தன் மகளுடன் வாடகைக் குதிரை வண்டியில் நகரிலுள்ள நீராடு குளமொன்றுக்குப் போகிறாள். அவர்கள் பகல் போசனத்திற்குச் சிறிது நேரத்துக்குப்பின் வீடு திரும்புகிறார்கள். விதவை தன்னிடமிருந்த முழு ஆஸ்தியான இரண்டு ரூபாவை வண்டிக்காரனுக்குக் கொடுக்கிறாள். வீட்டில் அரிசியோ பணமோ இல்லை. சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாததால் கிழவி அடுக்களையினுட் சென்று ஒரு தேங்காய் மூடியில், காலையிலே சாப்பிட்டு எஞ்சியிருந்ததை எடுத்து இருவரும் கடித்து தின்றுவிட்டு இரண்டு கிளாஸ் தண்ணீரைக் குடிக்கின்றனர். இதுதான் அவர்களின் பகற் சாப்பாடு.''

வெள்ளைக்காரரின் போக்கைப் பின்பற்றும் ''கறுப்புத்துரைமார்''களைப் போல நடிக்கும் விதவையை இவ்விதமாகத்தான் சிரிசேன படம் பிடித்துக் காட்டுகிறார். அவள் தன் மகளை வெள்ளைக்காரர் உடையில் நீராடு குளத்திற்குக் கூட்டிப்போவது, அங்கு வரும் பிளைஞர்களின் ஒருவனைக் கண்ணி போட்டுப் பிடிப்பதற்காகும்.

சிரிசேன பிற்காலத்தில் பல துப்பறியும் நாவல்களை எழுதினர். இந்நாவல்களில் கதாநாயகனை விளங்கும் விக்கிரமபாலன் மர்மக் கொலை, களவுகளைத் துப்பறிந்து கண்டுபிடிப்பதற்குப் பதிலாக மக்களை ஏமாற்றித் திரியும் தேசியவாதிகளையும், புத்த குருமார்களையும் கண்டுபிடிப்பதில் முனைகிறான். மதத்தின் பெயரால், தேசியத்தின் பெயரால் எல்லோர் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு வாழ்க்கை நடத்துவோரைக் கண்டிக்க ஆசிரியர் தவறவில்லை. எம். சி. எவ். பெரேரா, சிரிசேனவைப் போன்றே ஆங்கில மோகம் பிடித்த சிங்களவர்களைத் தாக்கி எழுதினர். பெரேராவுக்கு இவர்களைப் பற்றி எழுதுவதற்கு சிரிசேனவிலும் பார்க்க போதிய அனுபவ ஞானமிருந்தது. இவரது மிகப் பிரபல்யமான நாவல் **''எனது விதி.''** இதில் உண்மையிலேயே ஒரு பணக்காரப் பெண் ஆங்கில மோகம் பிடித்த நவநாகரிக சிங்களச் சமூகத்தில் நுழைய முயன்று நாசமடைந்த விதத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

ஏ. சைமன் டி சில்வா தனது முதலாவது நவீனத்தில் அருமையான ஒரு கதையை எழுதினர். ஆனல் தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் கதைகளையே மக்கள் விரும்பியதால், இது அவ்வளவாக விரும்பிப் படிக்கப்படவில்லை. எனவே சைமன் சில்வாவுக்கு பிரச்சார நோக்கத்துடன் நவீனங்களை எழுதும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவரது அடுத்த இரு நவீனங்களான **திரேசாவும்**, **நமது மதமும்** மக்களின் தேவையையே பூர்த்திசெய்கின்றன. **நமது மதம்** என்ற நாவல் ஆங்கில நாவலின் சாயலைப்பெற்றிருக்கின்றது. இதில் வரும் பாத்திரங்களும், அவர்களின் போக்கும் இலங்கை வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை. ஆனல் அவர் கதா பாத்திரங்களைச் சிறந்தமுறையில் உருவாக்கியிருக்கிறார்.

சிறந்த வகையைச் சார்ந்த ஐரோப்பிய நாவல்கள், அதியுன்னத ரஷ்ய நாவல்கள் முதலியவற்றின் செல்வாக்கினல் சிங்கள நாவல் எதிர்பார்க்கமுடியாத அளவு வேகத்தில் அபிவிருத்தி அடைந்து வந்தது. சிங்கள நாவலின் இத்துரித அபிவிருத்திக்கு சர்வகலாசாலையின் சிங்களத்துறை, ஆங்கிலத் துறைகளைச் சார்ந்த சில பட்டதாரிகள், தம் திறனய்வினல்—சில சமயங்களில் அத்தகைய திறனய்வு, அறிவு முதிர்ச்சியற்று, அனுதாப நோக்கு அற்றதாக இருந்தபோதிலும்கூட-உதவியுள்ளனர்.

நுனிப்புல் மேய்ச்சலைப் போன்ற சோக சிருஷ்டிகளைத் தொடர்ந்து எழுதுவது வீண் என்பதை டபிள்யு ஏ. சில்வா உணர்ந்தார். எனினும், பாசமயமான சோகச் சிருஷ்டிகளை உருவாக்குவதில் அவரது திறமைகளை வாடகைக்கு விட்டதனல், சிங்கள மக்களின் வாழ்க்கையைப் பற்றி அவருக்கு இருந்த அனுபவத்தைக்கொண்டேனும் தமது கலையை விருத்திசெய்வதற்கு துரதிர்ஷ்டவசமாக காலம் கடந்துவிட்டது என்பதை அறிந்தார். 'அராபிய இரவுகள்', 'இராமாயணம்' போன்ற பழைய சிருங்கார சிருஷ்டிகளை தமக்கே உரித்தான சிங்கார வசன நடையிலே மொழிபெயர்ப்பதில் தமது நேரத்தைச் செலவிட்டார்.

நவீன சிங்கள இலக்கியம் சம்பந்தமாக அண்மையில் வெளியான பத்திரிகைக் கட்டுரை ஒன்றில், டாக்டர் ஆனந்த குருகே, டபிள்யு. ஏ. சில்வாவுக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு அவர் வய

தான பின்னர் நாவல்கள் எழுதத் தொடங்கிய மையையும், சர்வகலாசாலைப் பட்டதாரிகளின் நாசகரமான திறனாய்வையுமே காரணமாகக் காட்டியுள்ளார். டபிள்யு. ஏ. சில்வா மாத்திர மல்ல, சிங்கள எழுத்தாளர்கள் அனைவருமே நாசகரமான, அறிவு முதிர்ச்சியற்ற, வேண்டு மென்றே செய்யும் சூழ்ச்சிகரமான திறனாய்வுக்கு உட்பட்டுள்ளனர். சர்வகலாசாலைப் பட்டதாரி களும், தங்களைத் தாங்களே திறனாய்வாளர் என அழைத்துக்கொள்வோரும் இத்தகைய திறனாய் வுகளை வாரி இறைத்திருக்கிறார்கள். சூழ்ச்சிகர மான கண்டனத் திறனாய்வு இயக்கம் நடைபெற் றுக்கொண்டிருந்தபோதிலும்கூட, டபிள்யு. ஏ. சில்வா தவிர்ந்த ஏனைய சிங்கள எழுத்தாளர் யாவரும் சிறந்த, அறிவுப் பக்குவத்தைக் காட் டும் சிருஷ்டிகளைத் தொடர்ந்து படைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆகவே, பிரபல்யம் தேடுவதற்காகத் தமது திறமைகளை வாடகைக்குவிட்ட ஒரு எழுத்தாளரின் தோல்விக்குத் திறனாய்வு வாதி கள்மீது குற்றஞ்சுமத்துதல் அர்த்தமற்றது. சூழ்ச்சிகரமான, நாசகரமான திறனாய்வு, வள ரும் இலக்கியத்துக்குக்கேடு விளைக்கும். எனி னும், அத்தகைய குற்றங்காணும் திறனாய்வு, உண்மையான திறமைகளைக் கூர்மைப்படுத் துமே தவிர அழிக்காது.

டபிள்யு. ஏ. சில்வாவின் சரித்திர சம்பந்த மான சிருங்கார நவீனங்களில், சோகநாதமும், சிறுபிள்ளைத்தனமான பாச ஒலிகளும் ஆங் காங்கு எழுந்தபோதிலும், அத்தகைய நவீனங் கள் நிலைத்து நிற்கும். அவரது திறமைகள், வாழ்க்கையைப் பாசநயப்படுத்துவதற்கு உகந்த சூழ்நிலைகளை, இலங்கையின் பண்டைய சரித் திரத்தில் கண்டுகொள்ளுகின்றன.

பியதாச சிரிசேனவை ஒரு நாவல் ஆசிரியர் என்பதிலும் பார்க்க சிறந்த ஒரு கவிஞர் என்றே சொல்லலாம். அவ்வப்போது புனைந்த இரண்டா யிரம் அல்லது மூவாயிரம் தனிக் கவிதைகளைத் தவிர வேறு கவிதைகள் எதையும் விசேஷமாக அவர் எழுதவில்லை. இத்தனிக்கவிதைகள் திரட் டப்பட்டு இரண்டு தொகுதிகள் வெளியிடப்பட் டன. சிங்களக் கவிதையிலே தேசிய உணர்ச் சியை அவரே முதன்முதல் புகுத்தியவர் எனக் கொள்ளலாம். தேசிய, அரசியல்நிகழ்ச்சிகளினால் உந்தப்பட்டபோதே அவர் தமது கவிதைகள் அனைத்தையும் புனைந்தார். அவரது கவிதை களில் புலமைச் செருக்கையோ, வெறும் அலங் கார நடையையோ காணமுடியாது. அவரது நாவல்களில் குழுக்குரோதம், சகிப்பின்மை போன்ற குண இயல்புகள் பிரதிபலிக்காது இருக்கச்செய்ய அவரால் முடியவில்லை. ஆயினும் அவரது கவிதைகள் தேசியம் கனிவு படைத்தன வாகவும், உத்வேகம் கொண்டனவாகவும் மிளிர்ந் தன. அவர் கையாண்ட நையாண்டிப்பாணி, கசப்பற்றதாக இருந்தமையினால், தன்மை உடைத்ததாக உள்ளது.

சிங்களக் கவிதை இலக்கியத்தின் ஒரு புதிய இயக்கத்துக்கு சிரிசேன தளம் அமைத்தார். இத னையே ஆனந்த ராஜகருணாவும், ஜி. எச். பெரெ ராவும் பின்பற்றினர். முன்னவர், வழமையான கவிதை மரபிலிருந்து விடுபடத் தவறிவிட்டார். பின்னவரோ 'சோஷலிசத்தைப் பற்றி மனந்திற ந்து பேசுபவர், தொழிலாளர், விவசாயிகளை ஆதரிப்பவர். இவர் பண்டைய அரச அவையின் வடமொழிக் கவிதை மரபை விலக்கினார்.

இப்புதிய கவிதை இயக்கத்தைச் சேர்ந்த பிரபல கவிஞர்கள் இன்னும் கவிதைகளைப் புனை ந்து கொண்டு இருந்தபோதிலும், அதில் வளர்ச்சி எதுவும் தென்படவில்லை. அவர்களுள் சிலர் அல்விஸ் பெரெரா, மீமன பிரேமதிலக, சாகர பலன்சூரிய, விமலரத்ன குமாரகம முதலி யோராவர்.

அல்விஸ் பெரெரா நல்ல கற்பனை வளம் நிரம்பப்பெற்றவர். அவர் தாகூரின் காவியங் களில் ஈடுபடாதிருப்பின், அவரது ஆற்றல் நன்கு புலப்பட்டிருக்கும்.

IV

எனது கட்டுரையில் சிருட்டி இலக்கியங் களைப் பற்றியும், அந்த எழுத்தாளர்களைப் பற்றி யுமே குறிப்பிட்டிருக்கிறேன். காலம் சென்ற முனிதாச குமாரணதுங்க அவர்கள் சிருட்டி இலக்கிய கர்த்தா அல்லாதபோதிலும்கூட, அவ ரும் இங்கு குறிப்பிடத்தக்கவராவர். குமாரண துங்க, நவீன மொழியியல் துறையிலே விஞ் ஞான ரீதியான கொள்கை இல்லாத பன் மொழிக் கலைஞராவர். சுதந்திரமாகத் தான் கரு தியதைத் தெளிவுடன் எழுதும் ஆற்றல் அவருக் கிருந்தது. அவர், இலக்கணத்தை அறிஞர்களி டையே மாத்திரம் வைத்துக்கொள்ளத் தகுதி

வாய்ந்ததாக அமைத்த பிராமணப் பண்டிதர்கள் நிலைக்கு சிங்கள இலக்கணத்தைச் பாமர நிலையிலிருந்து உயர்த்திவிட்டார்.

குமாரணதுங்காவின் இலக்கிய பரம்பரையொன்று தோன்றியது. அதில் மூளைத்தவர் சிறந்த கவிஞரான ஆர். தென்னக்கோன் ஆவார்.

தற்பொழுது வாழும் நாவலாசிரியர்களில் மூன்று அல்லது நான்கு பேரை இங்கு குறிப்பிடுவது தகுதி என நினைக்கின்றேன். ஜி. பி. சேனநாயக்கா, டி. ஜி. டபிள்யு. டி. சில்வா, குணதாச அமரசேகரா, கே. ஜயதிலக்கா என்போர் குறிப்பிடத் தக்கவர்களாவர். ஜி. பி. சேனநாயக்கா இரு சிறு கதைத் தொகுதிகளையும், நாவல்–திறனாய்வு நூல்கள் சிலவற்றையும் எழுதியுள்ளார். இவர், சிறந்த சிறுகதை எழுத்தாளர். இவரது முதலாவது நூலில் தாம் எடுத்தாண்ட கருத்துக்களிலும் மொழியிலும் போதிய அளவு அனுபவ அறிவைக் காட்டியுள்ளார்.

குணதாச அமரசேகரா சிறந்த வளரும் எழுத்தாளராவார். இவர் மூன்று வருடகால எல்லைக்குள்ளே இரு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு நாவலையும் வெளியிட்டுள்ளார்.

டி. ஜி. டபிள்யு. டி. சில்வா சிறந்த வளரும் சிறுகதை எழுத்தாளராகத் தலைகாட்டியபோதிலும், பிற்காலத்தில், சுவையற்ற–அங்கதச் சுவையுள்ள கதைகளைச் சிருட்டிக்கத் தொடங்கியமையால் அவரது கதைகள் சிறப்படையவில்லை. அவர், 'நள்ளிரவு நங்கை' என்ற நாவலை எழுதியிருக்கிறார்.

டி. பி. இலங்கரத்தின, குணதாச அமரசேகராவுக்கு முன்பிருந்தே–பல வருடங்களுக்கு முன்பிருந்தே இலக்கியப் பணியில் ஈடுபட்டிருந்த போதிலும், அண்மையிலேயே இவர் ஒரு சிறந்த கதை சொல்லும் வீரராக வெளிவந்துள்ளார். அவர் எழுதிய இரு நாடகங்கள் அண்மையில் வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டன. 'கைத்தடி' என்னும் நாடகம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அவர் கடைசியாக எழுதியுள்ள நூல், 'நெருங்கிய நண்பர்கள்' என்பதாகும். அவர், மேலும் பல சிறந்த சிறு கதைகளை எழுதியுள்ளார். ★

சிறு கதை

எந்தவிதத்திலும், நமது நிம்மதியற்ற காலத்தை-அவ நம்பிக்கைகளை வெளியிடுவதற்கு நாவலையும், கவிதையையும் விடச் சிறந்த சாதனம் சிறு கதைதான்.

—எச். ஈ. பேட்ஸ்

★ ★ ★

வாழ்க்கைக் கதை

சில சமயங்களில் வாழ்க்கையே தன் கதையை எழுதிக்கொண்டு, அச்சுப் பக்கங்களில் மையைப் பூசிக்கொண்டு நிற்பது போலக் கூடத் தோன்றுகிறது. பறவை பறந்து போய்விட்டாலும், மரக்கிளை இன்னமும் ஆடுகிறது. நுட்பமான கவனிப்பும், வெளிப்புறத் தோற்றத்தை ஊடுருவிக் கொண்டு சென்று தேடப்பட்ட ஆழ்ந்த உண்மையும் தான் முக்கியமானவை. புதிய மராத்திச் சிறுகதை, அனுபவங்களின் அசாதாரணமான போக்குகளையும், குரல்களையும் பிரதிபலிக்கிறது. அதில் பொய்யானது எதுவுமில்லை, சிரமப்பட்டுப் புகுத்தப்படுவதும் ஒன்றுமில்லை.

—மராத்திய விமர்சகர்

இன்பத் தமிழ்

வண. தம்மரத்தின தேரோ

நான் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கிய காலத்தில் தமிழ் என்ற சொல்லின் பொருள் எனக்குப் புலப்படவில்லை. ஆனால் தமிழ் மொழியைக் கற்கக்கற்க அதன் இனிமையும் பழமையும் என் மனதைக் கவர்ந்தன. இத்தருணத்திலே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியிருக்கும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்குங் காணோம்" என்ற பாட்டடியைப் படிக்க நேர்ந்தது. பாரதியார் விளக்கியிருக்கும் கருத்தைத் தெளிவாக அறிய வேண்டி யான் ஒரு தமிழ்மொழி அகராதியைப் பார்த்தேன். அதில் 'தமிழ் என்னும் சொல்லுக்குப் பொருள் இனிமை' என்ற வசனத்தைப் பார்த்து மிக மகிழ்ந்தேன். பாரதியார் கருத்தும் உண்மையென்று அறிந்தேன். தொடக்கத்தில் நான் எண்ணிய எண்ணமும் பிழையில்லையென்று எனக்குத் தெரிந்தது. இதற்குப்பின் நான் மிகவும் ஆவலுடன் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கினேன்.

என் தாய்மொழியாகிய சிங்களத்தை நன்கு படித்து அதில் தேர்ச்சியடைந்தபின்தான் யான், யாழ்ப்பாணத்தையடைந்தேன். யாழ்ப்பாணத்துக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் சேர்ந்த யான் தமிழ்மொழியையும் ஆங்கிலத்தையும் ஒருங்கே கற்கத் தொடங்கினேன். ஆனால் தமிழ்மொழியெங்கே? ஆங்கிலம் எங்கே? என்னைத் தமிழ்மொழியே கவர்ந்துகொண்டது. தமிழில் என் ஆவலும்ஆர்வமும்அதிகரித்தன. இதன் பயனாகத்தான் ஒரு வருடத்துக்குள்ளே தமிழ்ப் பாலபண்டித சோதனையில் சித்தியடைய நான் எண்ணினேன். சங்க காலத்துக்குரிய தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய பெருங் காப்பியங்களையும், அகப்பொருள்பற்றியுள்ள அகநானூறு முதலிய நூல்களையும், புறப்பொருள் பற்றியுள்ள புறநானூறு முதலிய நூல்களையும், திருக்குறள் நாலடியார் முதலிய நீதி நூல்களையும் கூடிய சீக்கிரத்தில் கசடறக் கற்றுக்கொண்டேன். பிற்காலத்துக்குரிய தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி நூல்களையும், திருக்கோவையார், கலிங்கத்துப் பரணி, தஞ்சைவாணன் கோவை, கம்பராமாயணம்முதலிய நூல்களையும் மிக ஆர்வத்துடன் கற்றுக்கொண்டேன். பல பொருட்களைக் கொண்டு இயற்றப்பெற்றிருக்கும் இந் நூல்களை மிகவும் ஆவலுடன் படித்துக்கொண்டதனால்தான் ஒருவருடத்துக்குள்ளே தமிழ்ப் பாலபண்டித சோதனையில் சித்தியடைய முடிந்தது.

எவ்வளவு படித்துக்கொண்டாலும் தமிழின் மீதுள்ள என் ஆர்வமும் ஆவலும் கொஞ்சங் கூடத் தணியவில்லை. செந்தமிழ் பிறந்த நாடு யாழ்ப்பாணமாதலால், யாழ்ப்பாணம் என்ற சொல்லும் என் இதயத்தைக் கவரத் தொடங்கிற்று. சாகும்வரை யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்கவேண்டுமென்ற எண்ணத்தை என் மனதில் தோன்றச் செய்தது இன்பத்தமிழே! ஆனால் என்கதி என்னை வேறு வழியில் செலுத்தியது.

1950ம் ஆண்டில் யான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன். ஆனால் யாழ்ப்பாணமோ தமிழ் மொழியோ என் மனதைவிட்டு நீங்கி அகலவில்லை. பல்கலைக் கழகத்திலும் பீ. ஏ. (B. A.) சோதனைக்காக தமிழ்மொழி வரலாற்றுடன் நான் தமிழ்மொழியைக் கற்றுக்கொண்டேன்.

யாழ்ப்பாணத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் யான் பெற்றுக்கொண்ட தமிழ் அறிவு மூலம் ஏனையோருக்கும் தமிழ்இன்பத்தை ஊட்ட எண்ணினேன். அதற்காக தமிழ்மொழியைப் பற்றியும் தமிழர்களின் நாகரிகத்தைப் பற்றியும் பலவிடங்களில் பிரசங்கம் பண்ணினேன். பல கூட்டங்களில் பேசினேன். சிங்களத்துக்கும் தமிழுக்குமிடையிலுள்ள தொடர்பை இலங்கை வானொலி மூலம் எடுத்துக்காட்டினேன். என் முயற்சியின் பலனாகப் பலர் தமிழ் இன்பத்தை நுகர எண்ணினார்கள்; எத்தனித்தார்கள். ஆனால்

உண்மையான தமிழ் இன்பத்தையனுபவிக்க வியலாது பின்வாங்கிய சிலர், என்னைப் பரிகாசம் பண்ணினர். அப்பெரியார்கள் 'சிங்களத் தமிழன்' என்று என்னை அழைத்தனர். என் தமிழ் மோகத்துக்கு யான் பெற்ற நன்கொடை இப்பெயரே யென்று நான் மிக மகிழ்ந்தேன். என்னைத்தவிர தமிழ் இன்பத்தையனுபவித்த வேறொரு சிங்களவர் இல்லையென்று இப்பெயர் நன்ருய்க் காட்டுகின்றது.

நான் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டிருந்த காலத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடர்பைக் கண்டேன். பழங்காலத்திலுள்ள தமிழர்களின் ஒற்றுமைக்கும் சுதேசாபிமானத்துக்கும் மேற்கோளாகிய இத்தொடர்பை மிகவும் ஆவலுடன் கற்றுக்கொண்டேன். இங்ஙனமான பொருள் நிறைந்த வசனங்களுடைய தமிழ் நூல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து, மொழிக்கும் சமயத்துக்கும் சாதிக்கும் வீண் சண்டைகளைச் செய்யும் மக்களுக்கு தமிழ் இன்பத்தை ஊட்ட எண்ணினேன். தமிழ்மூலம் செய்யக்கூடிய தொண்டுகளுள் இதுவே முக்கியமானதென்று எனக்குப் புலப்பட்டது.

என் எண்ணத்தின்படி முதலில் மணிமேகலைப் பெருங் காப்பியத்தை 'மணிமேகலா சம்பு' என்ற பெயரால் சிங்களத்தில் மொழி பெயர்த்தேன். இதனால் தமிழ்மொழியைப் பற்றி ஒருவித மான உணர்ச்சியைப் பெற்றனர் பலர். அவர்கள் மேலும் மேலும் இப்படியான நூல்களை வாசிக்க விரும்புவதை நான் கண்டேன். அதன் பயனாகத் தான் **பத்தினி தெய்யோ** என்ற பெயரால் சிலப்பதிகாரத்தைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தேன். நான் எழுதிய நூல்களுள் இதுவே மிகவும் சிறப்புவாய்ந்தது. பல சிங்களவர் 'பத்தினி தெய்யோ' மூலம்தான் தமிழ் இன்பத்தையனுபவித்தனர். 'இளங்கோ அடிகள் தமிழர்களுக்கீந்த சிலப்பதிகாரமாகிய இலக்கியக் களஞ்சியத்தை தம்மரத்ன அடிகள் சிங்களவர்களுக்கீந்தனர்' என்று தமிழ்த்தோழர்கள் என்னைப் புகழ்ந்தனர். இப்பொழுது திருக்குறளாகிய அறவாழியைச் சிங்களத்தில் மொழிபெயர்க்கின்றேன்.

இத்தொண்டுகள் மூலம் சிங்களவர்களுக்குத் தமிழ் இன்பத்தையளிப்பதும் இவ்விரு சாதிகளுள்ளே ஒற்றுமையை நிலைநாட்டுவதுமே என் முக்கிய நோக்கமாகும். தமிழ் வாழ்க! ★

சண்டைக்காரன்

யாருடன் எதற்காகச் சண்டை போடுகிறோமென்ற தெளிவு இருந்தால் சண்டைக்காரனாயிருப்பதில் குற்றமில்லை.

— ஆஸ்டீராவ்ஸ்கி

★ ★ ★

குற்றவாளி

கடவுள் முன்னிலையில் அநீதி இழைப்பவன் மாத்திரம் குற்றவாளியல்ல; தோமையாய் அந்த அநீதியைச் சகித்துக் கொண்டு தன் ஆத்மாவை அவமானத்துக்குள்ளாக்குபவனும் குற்றவாளிதான்.

— தர்ஷக்

திறனாய்வு

இளங்கீரன்

பொருள், செயல் இவை இரண்டும் வாழ்க்கையோடு கலந்திருப்பவை. பொருள் என்கிறபோது இயற்கைப் பொருட்கள் மட்டுமன்றி செயற்கைப் பொருட்களும் அதனுள் அடங்கும். செயல் என்கிறபோது மனிதன், இயற்கை, பிற ஜீவராசிகள் முதலியவற்றின் செயல் அதனுள் அடங்கும்.

ரசனை என்பது மனிதனுக்கே சொந்தமான ஒரு நுண்ணிய உணர்வு. அவனுடைய இயற்கையான சுபாவங்களிலே அதுவும் ஒன்று. அதற்கேற்ப அவன் பொருளையும், செயலையும் கண்டும் கேட்டும் ரசித்தான். அவற்றை ஆராயவும், விமர்சிக்கவும் செய்தான். இதோடு நின்றுவிடாமல் தன் ரசனையையும், விமர்சனத்தையும் உருவகப்படுத்தி மனத்திருப்தி அடைவதற்காகவும், பிறருக்கு வெளியிட்டு மனக் களிப்படைவதற்காகவும் கலைகளையும், சிருஷ்டித்தான். கலைகள் தோன்றியவுடன் தன் சுபாவத்திற்கேற்ப அவற்றை ரசிக்கவும், விமர்சிக்கவும் செய்தான். எனவே, திறனாய்வு என்பது புதிய விஷயமல்ல.

வாழ்க்கை என்பது கஞ்சா போதையில் காணும் கனவுமல்ல; பிரபஞ்சக் கூட்டுக்கு வெளியேயுள்ள பிரமையுமல்ல; நடைமுறைக்குப் புறம்பான கற்பனையுமல்ல; வெறும் மயக்கமுமல்ல. அது இயற்கையையும், மனிதனையும், பிற ஜீவராசிகளையும் கொண்டு தன்னைத்தானே திரும்பத் திரும்ப புதிய கோலத்துடன் சிருஷ்டித்துக் கொண்டு நம்மை நவரச உணர்ச்சிகளிலும் மூழ்கி முழுக வைத்து, உணர்வித்து, அனுபவிக்கச் செய்யும் பிண்டப் பிரமாணமான யதார்த்தம். முழுமையின் சத்தியம். இச்சத்தியத்தின்—யதார்த்தத்தின்—கதையைக் கலை உணர்வு செழித்துக் கொழிக்க இனிமையும், அழகும் ரசமும் சொட்டச் சொட்டச் சொல்லவும், விமர்சிக்கவும் செய்கிற எழுத்தின் செயல்தான் இலக்கியம். இவ்வாறு வாழ்க்கையின் முழுத் தோற்றத்தையும், அதனுள் அடங்கியுள்ள ரசனையையும், ரகசியத்தையும் புலப்படுத்த வேண்டிய இலக்கியம், விமர்சிக்க வேண்டிய இலக்கியம் தன் தொழிலைச் சரிவரச் செய்திருக்கிறதா என்று பரிசீலனை செய்ய, அதன் குறை நிறைகளை ஆராய்ந்து எடைபோட முற்படும் முயற்சிதான் இலக்கியத் திறனாய்வு.

பழங்காலத்திலும் வாழ்க்கை ரசிக்கப்பட்டிருக்கிறது; விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் விளைவுகளில் ஒன்றுதான் பண்டைய இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் அக்காலத்திலும் திறனாய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

முன்பு முச்சங்கங்கள் இருந்ததையும் அக்காலப் புலவர்களின் நூல்கள் அச்சங்கங்களில் அரங்கேற்றப்பட்டு வந்ததையும் நாம் அறிவோம். ஆராய்ந்து பார்க்கும்போது ஒவ்வொரு அரங்கேற்றமும் ஒவ்வொரு விமர்சன விழாவாக இருந்திருக்கிறது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

திருக்குறளைப் பற்றிய கதை பலருக்குத் தெரிந்திருக்கும். வள்ளுவரின் குறள் அரங்கேற்றத்திற்கு வந்தபோது அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை யென்றும், சங்கப் புலவர்களுக்கிடையில் பலத்த சர்ச்சையை உண்டாக்கிவிட்டதென்றும், இறுதியில் சங்கப் பலகையில் வைத்துப் பரிசோதிக்கப்பட்டதாகவும், அப்பலகை திருக்குறளைத் தகுதியுடையது என்று ஏற்றுக் சொண்டதால் அந்நூல் அரங்கேற்றப்பட்டதாகவும் அக்கதை கூறுகிறது. இதன் உண்மை பொய் ஒரு புறமிருக்கட்டும். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் சங்கப் புலவர்கள் வள்ளுவரின் குறளைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள் என்பதுதான்.

அடுத்தது நக்கீரன் கதை. இக்கதையையும் பலர் அறிந்திருப்பர். ஒரு சமயம் நக்கீரன் பாண்டியன் அவையில் கடவுள் இயற்றிய பாடல் ஒன்

றைத் திறனாய்வு செய்தான். அதிலுள்ள குற்றங்களைப் பிளந்து காட்டி "இப்பாடல் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல" என்று கூறினான். சிவபெருமானுக்குப் பொறுக்கமுடியவில்லை. உடனே அவையில் தோன்றி நக்கீரனுடன் வாதிட்டார். நக்கீரன் தக்க சான்றுகளுடன் தன் கூற்றை நிரூபித்துக் காட்டியதும் மன்மதனை எரித்த மகேசனுக்குக் கோபம் உச்சிக்கு ஏறியது. உடனே நெற்றிக் கண்ணைத் திறந்து நக்கீரனைப் பயமுறுத்தினார். நக்கீரனோ "நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!" என்று சங்கநாதம் எழுப்பித் தனது விமர்சன உரிமையை நிலைநாட்டினான்.

இக்கதை உண்மையோ பொய்யோ என்பது வேறு விஷயம். ஆனால் இக்கதையும் இலக்கியத் திறனாய்வு அக்காலத்திலும் இருந்திருக்கிறது என்ற உண்மையைப் பறை சாற்றுகிறது. ஆக தமிழ் இலக்கியத்திற்குத் திறனாய்வு புதியதல்ல.

வாழ்க்கையையும், சமுதாயத்தையும் இயக்கும் உயிர் மூச்சுள்ள சக்திகள் என்றும் தேங்கி நிற்பன அல்ல. அவை காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வருவன. இவை மாறுதலுறும் போது வாழ்க்கையும் மாறுகிறது. சமுதாயமும் அதன் சித்தாந்தங்களும் கூட மாறுதலடைகின்றன. இவ்வகையில் வாழ்க்கையையும், சமுதாயத்தையும், அதன் சித்தாந்தங்களையும் கலை வடிவில் நகலெடுக்கும் இலக்கியங்களும் இவ்வடிப்படை விதிக்கு உட்பட்டு மாறுதலடைகின்றன. ஒரு குறிப்பிட்ட வரை விலக்கணங்களுக்குள் நிற்காமல் அவற்றையும் மீறிப் புதிய புதிய உருவங்களோடும் புதிய புதிய உள்ளடக்கங்களோடும் சித்தாந்தங்களோடும் மாறுதல் பெற்று வளர்கின்றன. இலக்கியத் திறனாய்வும் அப்படியே.

இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மூல நூல்களுக்குத் தோன்றிய உரை நூல்களும் சிறந்த திறனாய்வுதான். ஒவ்வொரு உரை ஆசிரியரும் மூல நூல்களில் பிரதிபலிக்கும் வாழ்க்கைச் சித்தாந்தங்களையும் சமூகப் பண்பையும் தான் வாழ்ந்த காலத்தின் வாழ்க்கைச் சித்தாந்தங்களோடும், சமூகப் பண்போடும் பொருத்திப் பார்த்திருக்கிறார். விமர்சனத் துறையின் சிறப்பு மிக்க அம்சமான ஒப்புநோக்கு (Comparative Study) செய்திருக்கிறார்; தன் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இந்த வகையில் ஒவ்வொரு உரையாசிரியரும் சிறந்த விமர்சகராகத் திகழ்கிறார்.

இன்றுள்ள திறனாய்வு இன்றைய இலக்கிய சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இன்றையத் திறனாய்வைப் பரிசீலனை செய்வதற்கு முன்பு தற்கால இலக்கிய சித்தாந்தங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய இலக்கிய உலகில் இருவகை இலக்கிய சித்தாந்தங்கள் இருந்து வருகின்றன. ஒன்று உருவவாத சித்தாந்தம். மற்றது யார்த்த வாத சித்தாந்தம்.

உருவவாத சித்தாந்தம் இலக்கியத்தின் உருவ அமைப்பைத்தான் முக்கியத்துவப் படுத்துகிறது. உள்ளடக்கத்தை அசட்டை செய்கிறது. ஒரு இலக்கியம் தான் எடுத்துக் கொள்ளும் விஷயத்தைப் பற்றி அதிகம் அக்கறை செலுத்த வேண்டியதில்லை. அது தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்ற வகையில் எந்த ஒரு விஷயத்தையும் கருப் பொருளாக எடுத்துக் கொள்ளலாம். அது யதார்த்தமானதாயுமிருக்கலாம்; புறம்பானதாயுமிருக்கலாம். எவ்விதமான விஷயத்தையும் எடுத்துக் கொள்ள அதற்குப் பூரண உரிமையுண்டு. அதன் உரிமையில், சுதந்திரத்தில் தலையிடக் கூடாது. இலக்கியத்தின் நோக்கம் ரசனையை அளிப்பதே தவிர, பயனை அளிப்பதல்ல. ஆதலால் எப்படிச் சொல்ல வேண்டும் என்பதுதான் அதற்கு முக்கியமே தவிர, எதைச் சொல்ல வேண்டுமென்பதல்ல. இந்நோக்கத்தின் படி இலக்கியத்திற்கு உள்ளடக்கம் பிரதானமல்ல. உருவம்தான் பிரதானம். ஒரு இலக்கியத்தின் உருவம் ரசிக்கத்தக்கதாயும், கட்டுக்கோப்புள்ளதாயும், வியக்கத்தக்கதாயும் இருக்க வேண்டும் என்று வாதிக்கிறது. அதாவது கலை கலைக்காக இருக்க வேண்டுமென்பதுதான் உருவவாத சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம்.

யதார்த்த வாத சித்தாந்தம் இக்கருத்துக்களை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் உருவவாத சித்தாந்தத்தின் சில கோட்பாடுகளை அப்படியே அங்கீகரிக்கிறது. இலக்கியம் ஒரு கலை என்பதை யதார்த்தவாத சித்தாந்தம் ஏற்றுக் கொள்வதால் உருவ அமைப்பை அது அலட்சியம் செய்யவில்லை. உருவ அமைப்பில்லாத இலக்கியத்தை அது கலைச் சிருஷ்டியாகவே மதிப்பதில்லை. இன்னும் ஒரு படி மேலே சென்று ஒரு இலக்கியம் அதன் கலை அம்சத்தை அரைகுறைப் படுத்தக் கூடாது. இலக்கியத்தில் கலை அம்சங்கள் அழுத்தம் பெற்று அதன் பூரண வடிவத்தையும் கொண்டுவர

வேண்டும். நூற்றுக்கு நூறு அதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று விதிக்கிறது. அதே சமயத்தில் உள்ளடக்கம் பற்றிய உருவ வாத சித்தாந்தத்தின் கருத்துக்களை, இலக்கிய சம்பந்தமான அதனுடைய கோட்பாட்டை யதார்த்தவாத சித்தாந்தம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. வாழ்க்கை, இலக்கியத்தில் பிண்ட உருவெடுத்து இனிமையும், எழிலும் ஏறி நிற்கப் புது மெருகுடன் காட்சியளிக்கிறது. அது, வாழ்க்கை போதிக்கிற உண்மைகளையும், தத்துவங்களையும் புறக்கணித்து விட்டுப் பிறப்பதில்லை. அதனால் தான் இலக்கியம் வாழ்க்கையின் சாதனங்களில் ஒன்றாக இருக்கிறது. வாழ்க்கையைச் சிருஷ்டிப்பதில் சமுதாயத்திற்குப் பிரதான பங்கு இருப்பதால் இலக்கியம் சமுதாயத்தின் சாதனமாகவும் இருக்கிறது. அது வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் முக்கிய பாத்திரம், கேந்திர ஸ்தானம் வகிக்கிறது. ஆதலால் இலக்கியம் கலைக்காக மட்டுமின்றி வாழ்க்கைக்காகவும் இருக்க வேண்டும். இலக்கியத்தின் நோக்கம் ரசனையைப் அளிப்பதோடு பயனையும் அளிப்பதாகும். அதற்கு, எப்படிச் சொல்ல வேண்டு மென்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு எதைச் சொல்ல வேண்டுமென்பதும் முக்கியம். எனவே இலக்கியம் உருவத்தில் காட்டும் அக்கறையளவு உள்ளடக்கத்திலும் காட்ட வேண்டும்.

இலக்கியத்திற்கு எதையும் சொல்ல, சித்தரிக்க உரிமையுண்டு என்ற போதிலும் அந்த உரிமையின் காரணமாக வாழ்க்கைக்குப் புறம்பான வெறும் வரட்டுக் கற்பனையை, கஞ்சாக் கனவுகளைச் சித்தரிக்கக் கூடாது. அவ்வாறு சித்தரித்தால் அதன் உரிமையில் பயனில்லாது போய்விடும். சமுதாய வாழ்க்கையிலும் சரி, தனி மனித வாழ்க்கையிலும் சரி உள்ளும் புறமும் தழுவி நிற்க இலக்கியத்திற்குப் பரிபூரண உரிமையுண்டு. தழுவி நிற்கவும் வேண்டும். அது சமுதாயத்தினது மட்டுமல்ல, தனி மனித வாழ்க்கையின் அந்தரங்கங்களைக் கூடத் திரை விலக்கிக் காட்ட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால் இந்த உரிமை துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடாது. உரிமை இருக்கிறதே என்பதற்காகப் படுக்கை அறைச் சம்பவங்களை அம்மணமாக்கிக் காட்டக்கூடாது. அதாவது விரசத்தையும், ஆபாச உணர்ச்சியையும் தூண்டுவதற்காகவே—அதை நோக்கமாகக் கொண்டே—இலக்கியத்தின் விஷய அடக்கம் இருக்கக் கூடாது. அவ்வாறு சித்தரித்தால், இலக்கியம் வாழ்க்கையின் சாதனமாக, சமுதாயத்தின் சாதனமாக இயங்கும் நிலை சிதறடிக்கப் பட்டுவிடும். பதிலாக அதைச் சதை உணர்ச்சிக்கு, காமக் குரோதங்களுக்குத் தீனி போட்டு உள்ளத்தை வெறும் ஆபாசக் கிடங்காக்கிக் கொள்ள ஏதுவாகிவிடும். இது கொக்கோகத்தின் உரிமையே தவிர, இலக்கியத்தின் உரிமையல்ல. கொக்கோகத்தின் உரிமையை இலக்கியத்தில் அப்பட்டமாகவும், பலாத்காரமாகவும் திணித்து அதையும் கொக்கோகமாக்கி விடக்கூடாது. இலக்கியத்தின் உரிமை மகத்தான இலட்சியங்களை முழக்குவதற்கு, உணர்ச்சிகளை மேலே உயர்த்திச் செல்வதற்குப் பயன் படல் வேண்டும். இந்நோக்கத்தை அடிநிலையாகக் கொண்டதாய் இலக்கியத்தின் நோக்கம் இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாமல் உள்ளடக்கத்தில் சோடையான ஒரு இலக்கியம், யதார்த்த வாழ்வைத் திரித்து, மறைத்து, விரசப்படுத்திச் சித்தரிக்கிற இலக்கியம் உருவ அமைப்பில் என்னதான் சிறந்திருந்த போதிலும் அது காத்திரமான, என்றும் நிலைத்து நிற்கிற சிரஞ்சீவி இலக்கியமாக இருக்க முடியாது. அது உண்மையான இலக்கியமல்ல, போலி. அது அலங்காரம் செய்யப்பட்ட பிணத்திற்கு ஒப்பானதாகும் என்று யதார்த்த வாத சித்தாந்தம் வாதிக்கிறது.

இவ்விரு இலக்கிய சித்தாந்தங்களைத்தான் இன்றைய சிருஷ்டி இலக்கியங்களும், அவை பற்றிய திறனாய்வுகளும் பிரதிபலிக்கின்றன. உருவ வாத சித்தாந்தத்தை ஆதரிக்கிற திறனாய்வு ஒரு இலக்கியத்தை திறனாய்வு செய்கிறபோது அதன் அழகு நுகர்ச்சி, மொழி நயம், ரசபாவங்கள், விஷயத்தைச் சொல்லும் விதம், அழுத்தம். கனம், திருப்பங்கள் முதலிய உத்திகளையும், இலக்கிய வடிவத்தின் சேர்மானங்களையும்தான்—அதன் கலை அம்சங்களைத்தான்—பரிசீலனை செய்கிறது. அதாவது உருவத்திற்கு முக்கியத்துவம் அளித்து விமர்சனம் செய்கிறது; எடை போட்டுத் தனது தீர்ப்பைக் கூறுகிறது.

யதார்த்த வாதத்தை ஆதரிக்கிற திறனாய்வு ஒரு இலக்கியத்தின் உருவ அமைப்பைப் பரிசீலனை செய்வதோடு உள்ளடக்கத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறது. கவிதையாகவோ, கட்டுரையாகவோ இருந்தால் அவற்றின் விஷயத்

தையும் அலசுகிறது. அவ்விஷயம் வாழ்க்கையை எதிரொலிக்கிறதா? பயன் தரத்தக்கதா? யதார்த்தத்திற்கு முரணாக இருக்கிறதா என்றெல்லாம் ஆராய்கிறது. நாடகமாகவோ நாவலாகவோ, சிறுகதையாகவோ இருந்தால் அதில் உள்ள கதையம்சம், வரும் பாத்திரங்கள், சம்பவங்கள் உரையாடல், கருத்துக்கள் முதலியன யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றனவா? வாழ்க்கையின் இயல்புகளைப் போதிக்கின்றனவா? தோன்றி நிற்கும் பிரச்னைகளை நேருக்கு நேர் கொண்டு வந்து நிறுத்துகின்றனவா? தனி மனித வாழ்விலும் சமுதாயத்திலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் பழைய சக்திகள் தேய்ந்து வருவதையும், ஊடே ஏற்பட்டுவரும் சமூக மாற்றங்களையும், கருத்து மாற்றங்களையும், மாறி வரும் வாழ்க்கை முறைகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றனவா? மறைந்து கிடக்கும் கசப்பான உண்மைகளையும் அம்பலப் படுத்துகின்றனவா? பொருட் செல்வத்தை மட்டுமின்றி அருட் செல்வத்தையும் படைக்கின்ற மனிதனின் மகத்துவத்தையும், அவனுள் புதைந்து கிடக்கின்ற மகோன்னதமான ஆக்க சக்தியையும் அவனுக்கே உரித்தான உணர்ச்சிகளையும் வாழ்க்கையின் மீது அவனுக்குள்ள பிடிப்பையும் நேசத்தையும் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றனவா? அந்தரங்க உணர்ச்சிகளை விரசமில்லாமல் சித்திரிக்கின்றனவா என்றெல்லாம் பரிசீலனை செய்து தான் தர நிர்ணயஞ் செய்கிறது.

இவ்விரு திறனாய்வுகளிலும் எது சரி எது பிழை? எது தரமானது, எது மட்டமானது? என்பது ஒருபுறமிருக்கட்டும். ஆனால் இங்கே கவனிக்க வேண்டியது என்ன வென்றால் இன்றையச் சிருஷ்டி இலக்கியங்களின் மொத்தப் பரப்பில் உருவவாத சித்தாந்தங்களைக் கொண்ட இலக்கியங்களும் திறனாய்வுகளும் தான் மிகுதி என்பதைத்தான். இன்னும் கொஞ்சம் அலசிப் பார்த்தால் உருவவாத சித்தாந்தங்களின் கோட்பாடுகளைக்கூட இன்றைய சிருஷ்டி இலக்கியங்களும், திறனாய்வுகளும் பூர்ணமாக பிரதிபலிக்க வில்லை யென்பதையும் காணக் கூடியதாயிருக்கிறது.

இனித் தமிழ் இலக்கியத்தின் மொத்தப் பரப்பிலிருந்து ஈழத்தின் திறனாய்வைப் பிரித்து அதை ஆராய்வோம்.

பொதுவாகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத்தின் பங்கு தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது; வருகிறது. (சங்க காலத்தில் புலவராக விளங்கிய ஈழத்துப் பூதந் தேவனார் இதற்கு உதாரணம்) இதை ஒட்டித் திறனாய்வுகளும் நடந்திருக்கக்கூடும். ஆனால் நாவலர் காலம் வரை (1822—1879) இத்துறையில் வரிசைப் படுத்தக் கூடிய தகவல்கள் திட்டவட்டமாகக் கிடைக்க வில்லை. ஆனால் அக்காலம் வரை இருந்த உரையாசிரியர்கள் சிலரைக் குறிப்பிட முடியும். "உரையாசிரியர்களும் சிறந்த திறனாய்வாளர்கள்" என்று மேலே கண்டோம். அதன்படி இவர்களும் திறனாய்வாளர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்கள்தான்.

கிடைக்கக்கூடிய தகவல்களை வைத்துக் கொண்டு பார்க்கிறபோது முதலாவதாக வருகிறவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியைச் சேர்ந்த **ஞானப்பிரகாச சுவாமிகள்** ஆவர். இவர் வடமொழியில் பல நூல்களை இயற்றிய வித்தகர். தமிழிலும் புலமை மிக்கவர்.

சைவ சித்தாந்த சாஸ்திரங்களுள் தலை சிறந்து விளங்குவதாகக் கருதப்படும் 'சிவஞான சித்தியாருக்கு'ப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் ஞானப்பிரகாசர் எழுதிய உரையும் ஒன்று. இவ்வுரையைப் பற்றி இதன் பதிப்பாசிரியரான இணுவில் சித்தாந்தப் பேராசிரியரான நடராசையர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"சொல்லி னூலிற் றுரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடும்
செல்லும் மெய்வரு ணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப்ர காசன் நலிந்துரை"

அடுத்து வருபவர் கூழங்கைத் தம்பிரான். இவர் நன்னூலுக்கு உரை எழுதியிருக்கிறார். பின்னால் நாவலர் அவர்கள் பல மாற்றங்களோடும், புதிய திருத்தங்களோடும், பதிப்பித்து வெளியிட்ட 'நாவலர் நன்னூற் காண்டிகை உரை' என்னும் நூல் இதுதான்.

இவரை அடுத்து வருபவர் பெரிய புராணத்திற்கு அரியதோர் உரை எழுதிய ஆறுமுகத் தம்பிரான் அவர்கள்.

நாவலர் காலம் வரை இம்மூவரையுந்தான் குறிப்பிடக்கூடியதாயிருக்கிறது. இவர்களுக்குப் பிறகு நாவலரிலிருந்துதான் ஈழத்துத் திறனாய்வாளரை வரிசைப்படுத்த வேண்டியிருக்கிறது.

பொதுவாக தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சரி, சிறப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சரி நாவலரின் காலம் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். ஆங்கிலேயரின் ஆட்சி ஸ்திரமாகி சமயத் துறையில் கிறிஸ்துவமும், மொழித் துறையில் ஆங்கிலமும் ஆதிக்கம் செலுத்தத் துவங்கிய காலம் அது. இந்நிலைக்குப் பல காரணங்கள் இருந்த போதிலும் மொழி இலக்கியத் துறைகளும் காரணங்களாக இருந்தன.

நாவலர் காலம் வரை தமிழில் வசன இலக்கியம் சிருஷ்டிப்பது வழக்கில் இல்லாமலிருந்தது. பழைய இலக்கியங்களுக்கு அடியார்க்கு நல்லார், நச்சினர்க்கினியர், இறையனுர் உட்பட இன்னும் ஒருசிலர் எழுதிய உரை நூல்கள்தான் வசன இலக்கியங்களாக இருந்து வந்தன. அக்காலத்தில் கடிதங்கள் கூட பாவினுல் தான் எழுதப்பட்டு வந்தன. மிக அரிதாக ஒரு சில நூல்கள் எழுதப்பட்டிருந்தாலும் அவை பெருவாரியான சாதாரண ஜனங்களுக்கு விளங்காத கடின நடையிலிருந்தன. அத்தோடு சைவ சமய இலக்கியங்களும் பாடல் வடிவிலேயே இருந்ததால் சாதாரண ஜனங்களால் அவற்றைப் படித்துப் புரிந்து கொள்ள, கற்று ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இக்காரணங்களால் தமிழ் மொழியும் இலக்கியமும் சாதாரண மக்கள் மத்தியில் வளர்ச்சி குன்றியும், பலவீனமுற்றுமிருந்தன.

கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இப்பலவீனத்தையும் நன்கு பயன்படுத்தி சைவ சமயத்தை இழித்தும், பழித்தும் நையாண்டி செய்தும் கூட்டியும் குறைத்தும் பிரசாரம் செய்து வந்ததோடு கிறிஸ்தவ சமயத்தின் மேன்மையையும் போதித்து வந்தனர். பல காரணங்களோடு இதுவும் சேர்ந்து சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் பாதிக்கச் செய்தன. இதைத் தடுத்து நிறுத்த எண்ணினர் நாவலர். கிறிஸ்துவ மதத்தின் குறைபாடுகளையும் அதன் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் விமர்சித்து பாதிரிமார்களின் எதிர்ப்பிரசாரங்களை முறியடிக்கவும், சைவ சமயத் தத்துவங்களைப் பொது மக்களுக்கு விளக்கிக் காட்டி அவர்களுக்குச் சமயப் பற்றை உண்டாக்கவும் விரும்பினர். அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குச் சொற்பொழிவு மட்டும் செய்தால் போதாது; வசன இலக்கியங்களும், கட்டுரைகளும் எழுத வேண்டுமென்றும் எண்ணினர். எண்ணத்தைச் செயலாக்க வசன நூல்கள் எழுதுவதிலும், கட்டுரைகள் வரைவதிலும் ஈடுபட்டார். முதலில் அவர் கிறிஸ்துவ மதத்தை விமர்சித்தே கட்டுரைகள் எழுதினர். எனவே, ஈழத்தின் முதற் கட்டுரை இலக்கியமே விமர்சன இலக்கியம் என்று சொல்லலாம். வேறு வார்த்தையில் விமர்சனத்திலிருந்துதான் ஈழத்தின் வசன இலக்கியம் பிறந்தது என்று கூறலாம்.

இவ்வரலாற்றிலிருந்து ஈழத்தின் முதல் திறனய்வு இலக்கியங்கள் ரசனையின் பொருட்டு எழுந்தவையல்ல, தேவையின் பொருட்டு எழுந்தவை என்பது புலனுகும். அதோடு ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ந்து கொண்டிருந்த சமய, சமூக, வாழ்க்கை மாற்றங்களோடு பொருதிக் கொண்டும், பின்னிக் கொண்டும் எழுந்தன. எனவே, ஈழத்தின் விமர்சனத்துறை இலக்கிய ரீதியானது மட்டுமல்ல, சரித்திர ரீதியானதும் கூட என்பதும் புலனுகும். இது மிகவும் உரமும், முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

நாவலரின் விமர்சனங்களை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

ஒன்று: சமயம். இரண்டு: இலக்கியம். மூன்று: சமூக வாழ்க்கையும், அரசியலும்.

முதலில் சமயத்துறையை எடுத்துக் கொள்வோம்.

சைவ சமயத்திற்கு எதிராக எழுந்த பிரசாரங்களை மறுத்தும், கிறிஸ்துவ மதத்தை விமர்சித்தும், சைவ சமயத் திரிபுகள் என்று தான் கருதியவற்றைத் திறனய்வு செய்தும் (உதாரணமாக, இராமலிங்க அடிகளாரின் அருட்பாவைச் சாடியது) நாவலர்கள் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் சைவ சமய தூஷண பரிகாரம், சுப்பிரபோதம் மத்தியவாத நிரசனம், போலி அருட்பா மறுப்பு, நல்லறிவுச் சுடர் கொளுத்துதல், யாழ்ப்பாணச் சமய நிலை முதலியன முக்கியமானவையாகும்.

ஒரு திறனய்வு, அது எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பாதித்து விளைவை உண்டாக்கி விட்டால் அத்திறனய்வுக்கு ஒரு சமூகத் தன்மையும், கேந்திர ஸ்தானமும் ஏற்பட்டு வருகின்றன. நாவலரின் விமர்சன நூல்கள் இத்தகையன. உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் காட்டுவாம்.

நாவலரின் 'சைவ தூஷண பரிகாரம்' என்ற நூலைப்பற்றி வெஸ்லியன் திருச்சபையின் 1855-ம்

ஆண்டு அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'இவ்வாண்டின் மகத்தான சம்பவம் சைவ பரிகாரம் என்ற தமிழ் நூல். அது அசாதாரண இலக்கியம். கிறிஸ்து மதத்தை எதிர்த்து ஆணித்தரமாகச் சைவக் கோட்பாடுகளை நிலை நிறுத்தும் நூல். அது முற்றிலும் புதிய தந்திரங்களைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகிறது. அது கிறிஸ்துவ சமயம் முறையற்றது, பயனற்றது என்று சொல்லவில்லை. சைவச் சடங்குகளைத் தூக்கிப் பேசவில்லை. இரண்டிற்கும் நடுவே, இரு சமயங்களையும் எதிரெதிரே வைத்து கிறிஸ்துவ ஆகமத்திற்குச் சரியான சைவாகமங்களைக் காட்டி அதற்கு இது குறைவொன்றுமில்லையே? சைவத்தை விடக் கிறிஸ்துவ மதத்தில் என்ன விசேஷம் இருக்கிறது? என்பதை எடுத்து அலசுகிறது. முழுக்கு, தீர்த்தம், பிரார்த்தனை, விரதம், யாத்திரை, விங்காராதனை எல்லாம் நம்மிடம் உண்டு என்று பைபிள் ஆதாரத்துடன் காட்டுகிறது. இருபது விஷயங்களை அது அலசுகிறது. முதல்தரமான மூளைதான் இதை எழுதியிருக்க வேண்டும். இந்நூல் நமக்குப் பெருங் கெடுதல் செய்கிறது."

அடுத்தது இலக்கியம்.

இதிகாச புராணங்கள், இலக்கணம், மொழி ஆகியவற்றிலும் அவருடைய கண்ணோட்டம் சென்றது. அவர், அக்காலத்தில் பிரசுரிக்கப்பட்ட காப்பியங்களைத் திறனய்ந்து மறுப்பு எழுதினர். உதாரணமாக, "வில்லிபுத்தூராழ்வாரின் பாரதம்; என்னும் காப்பியத்தை வைணவர்கள் சேர்ந்து சிவபெருமானைப் புகழ்ந்து ஆங்காங்கு செய்யப்பட்டுள்ள அருஞ் செய்யுட்களை யெல்லாம் நீக்கிப் பிரசுரித்த காலத்து அக்குறையை வெளிப்படுத்தி உள்ளவாறே பதிப்பித்தார் என்று வித்வான் நா. கதிரைவேற்பிள்ளை குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. கூழங்கைத் தம்பிரான் நன்னூலுக்கு எழுதிய உரையை விமர்சித்து அதைப் பல மாற்றங்களோடும், புதிய திருத்தங்களோடும் வெளியிட்டார். தமிழ் மொழியைப் பற்றி கட்டுரைகளும், உரை நூல்களும் வகுத்தார். அவர் வெளியிட்ட சூடாமணி நிகண்டுகூட விமர்சனத்தின்பாற் பட்டதுதான்.

மூன்ருவது, சமூக வாழ்க்கை, அரசியல் துறைகளையும் நாவலர் விமர்சித்தார். இவற்றில் புகுந்திருந்த ஊழல்களையும், குறைபாடுகளையும் வன்மையாகவும் காரசாரமாகவும் விமர்சித்தார். ஒரு சமயம் கவர்னருக்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் அவர் செய்துள்ள விமர்சனத்தின் ஒரு சிறு பகுதியை உதாரணமாகக் காட்டுகிருேம்.

"வேலை தரும் விஷயத்தில் சலுகையுடன் லஞ்சமும் தலைவிரித்தாடுகிறது. தக்காருக்கு இடமேயில்லை. வேலைக்காரரை ஏஜண்டு தன் கைப்பாவையாக ஆட்டி வைக்கிருர். ஜன சம்மதத்தை மதிப்பதில்லை. குலாமிகளின் உறவினர்களுக்கெல்லாம் வேட்டைதான். சில இடங்களில் உறவினரே நொத்தேருமாகி அட்டுழியம் செய்கிருர்கள். பத்திரப் பதிவுகளில் படுமோசம் நடக்கிறது.......

பத்திரிகைகளைக்கூட நாவலர் விட்டுவைக்கவில்லை. ஈழத்தின் முதல் தமிழ்ப் பத்திரிகையான 'உதயதாரகை'யைப் பின்வருமாறு விமர்சித்தார்.

"உதயதாரகையே! நீ சனங்களுடைய பணத்தினலேதானே இவ்வளவு காலம் நிலை பெற்றிருந்தாய்! பத்திரிகையின் கடமை அறிந்தாயா? சனங்களுக்குப் பொது நன்மை செய்வது பத்திரிகையின் கடன். நீ என்ன செய்கிருய்?.........சனங்களுடைய பணங் கொண்டு நடாத்தப்படுகிற உதயதாரகை இதிலே தன் கடமையைச் செய்கிறதா? இல்லை......பொது சனங்களுக்கு மாருகப் பொய் பேசுகிறது...... வெகுசனத் துரோகியாகிய உதயதாரகையை இப்போதும் சனங்கள் வாங்குகிருர்களா?

நாவலரின் விமர்சனங்கள் துணிச்சல் மிகுந்தவை. காரசாரமானவை. அதனுல் அவை 'கண்டன நூல்கள்' என்ற பெயரையும் பெற்றிருக்கின்றன. அக்கால சூழ்நிலையையும், நாவலரின் சரித்திர ரீதியான பாத்திரத்தின் சமூகத் தன்மையையும் ஆராய்ந்து பார்த்தால் அவருடைய திறனய்வுகளில் 'கண்டனத் தொனி' மிகைந்திருப்பதில் வியப்பில்லை. இந்த அம்சங்கள்தான் நாவலரின் விமர்சனங்களிலுள்ள சிறப்பியல்புகளையும், குறைபாடுகளையும் எடுத்துக் காட்டக் கூடியதாயிருக்கின்றன.

சிறப்பியல்புகளாவன :

ஆழ்ந்த பொறுப்புணர்ச்சி, நேர்மை, வியக்கத்தக்க துணிச்சல், விஷய அழுத்தம், தெளிவு, தர்க்கரீதி, புலமை முதலியன.

குறைகளாவன:

கன்டனப் பண்பு. தன் மதச் சார்புவாதம், அப்போதைய நிலமானிய (நிலப் பிரபுத்துவ). சமுக அமைப்பின் கோட்பாடுகளில் உள்ள இறுக்கமான பிடிப்பு, புதுமை எதிர்ப்பு, கருத்து முதல்வாதக் கண்ணோட்டம் முதலியன.

நாவலருக்குப் பிறகு அவர் விட்டுச்சென்ற வழியில் நின்று இதிகாச, புராண, சமய, மொழி, இலக்கண ஆராய்ச்சிகளிலும், உரை நூல்கள் எழுதுவதிலும்·நிகண்டு, அகராதி முதலியவற்றை இயற்றுவதிலும் ஈடுபட்டுத் தமிழ்த் தொண்டு செய்த அறிஞர் பெருமக்கள் பலர். இவர்களில் நாவலரின் மருகரான வித்துவ சிரோண்மணி பொன்னம்பலம்பிள்ளை, மட்டுவில் வேற்பிள்ளை, மகா வித்வான் சாவகச்சேரி பொன்னம்பலம் பிள்ளை, மகா வித்துவசிரோண்மணி கணேசையர் ஆகியோர் விமர்சனத் திறன் படைத்த உரையாசிரியர்கள். குறிப்பாக கணேசையர் அவர்கள் உரை நூல்கள் எழுதியதோடு நின்றுவிவிடல்லை. 'கவியின்பம்' எனனும் தலைப்பில் அரசகேசரியார் இயற்றிய 'இரகுவம்சம்' என்னும் காவியத்தையும், 'ஒரு செய்யுட் பொருளாராய்ச்சி' என்னும் தலைப்பில் சிறுபாணாற்றுப் படையில் ஒரு பகுதிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையையும், கம்பர் காவியத்தையும் விமர்சித்துக் காத்திரம் மிகுந்த கட்டுரைகள் எழுதியுள்ளார். 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையில் இலக்கண-இலக்கிய விஷயமாகவும் பல விமர்சனக் கட்டுரைகள் வரைந்துள்ளார்.

இவர்களைவிட கரோல் விசுவநாதபிள்ளை (சுப்பிரதீபம்) முத்துக்குமாரகவிராயர் (ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம்) தாமோதரம் பிள்ளை (சைவ மகத்துவம், சைவ மகத்துவதிக்கார மகத்துவம்) குமாரசாமிப் புலவர் (சைவ கண்டன பரிகாரம்) சங்கரப் பண்டிதர் (சைவ மகத்துவபானு, சைவ மகத்துவதிக்கார நிக்கரகம்) சிலம்புநாத பிள்ளை (அஞ்ஞானக் கும்மி மறுப்பு) சபாபதி நாவலர் (யேசுமத சங்கற்ப நிராகரணம்) த. கைலாசபிள்ளை (யேகோவா, கிறிஸ்துவர் ஆக வேண்டியதில்லை) குறிப்பிட வேண்டியவர்கள்.

இவர்கள் எழுதி வெளியிட்ட இந்நூல்கள் கிறிஸ்துவ சமயத்தையும், சைவ சமயத்தையும் ஒப்புநோக்கியும், மறுத்தும், கண்டித்தும் விமர்சித்திருக்கின்றன. இந்நூல்களின் விமர்சன வடிவம் கண்டன ரூபத்திலிருப்பதால் இவை கண்டன நூல்கள் என்று கருதப்படுகின்றன. அக்காலச் சூழ்நிலை இவ்வகையான விமர்சனத்திற்குத்தான் இடம் தந்தது.

மேலே குறிப்பிட்ட ஆசிரியர்களையும், நூல்களையும் பரிசீலனை செய்கின்றபோது இரண்டு விஷயங்கள் புலப்படுகின்றன. ஒன்று நாவலர் காலத்திலும், அவருக்குப் பிறகும் அதாவது 19-ம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து கடைசிவரையுள்ள காலக் கட்டத்தில் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் போன்ற நவீன இலக்கியங்கள் தமிழில் தோன்றவில்லை. (ஒன்றிரண்டைத் தவிர) எனவே, அக்காலத் தமிழறிஞர்களின் விமர்சனப் பார்வை பழைய இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் விழுந்து உரை நூல்களாகவும், நய விளக்க நூல்களாகவும், இலக்கண் ஆராய்ச்சி ஏடுகளாகவும் மலரச் செய்தன. இரண்டாவது, புதிதாக நுழைந்த கிறிஸ்துவ சமயம் சைவ சமயத்தையும் பாதிக்கச் செய்தது. எனவே சமய விமர்சனத்தையும் அவர்கள் செய்ய வேண்டியிருந்தது. இவ்விரண்டும் சரித்திரத்தின் அன்றையத் தேவையாகவும் இருந்தன. ஆதலால், விமர்சன இலக்கியத்தில் இந்நூல்களுக்கு முக்கியத்துவம் உண்டு.

20-ம் நூற்றாண்டு தோன்றியதும் புதிய மாறுதலுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப இலக்கிய முயற்சிகளும் திசை திரும்பத் துவங்கின. எனவே, நாவலரைப் பின்தொடர்ந்து வந்த இந்தப் பரம்பரையினரின் சரித்திர ரீதியான கடமையும் முடிவுற்றது. அந்தப் பரம்பரை 20-ம் நூற்றாண்டில் வளர்ந்து பெருகாமல் விட்டதற்கு இதுதான் காரணம்.

இன்று இப்பரம்பரையின் வாரிசாக இருப்பவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்தான். தமிழ்ப் புலமைமிக்கப் பண்டிதமணி அவர்கள் தேர்ந்த இலக்கிய ரசிகர். சிறந்த திறனாய்வாளர். பண்டிதமணி அவர்கள் நாவலர் பரம்பரையினரின் வாரிசாக இருந்த போதிலும் அவருடைய விமர்சன நோக்கு இன்றைய மாறுதலை ஒட்டி பிற சமயக் கண்டனங்களிலிருந்து ஒதுங்கி முழுக்க முழுக்க இலக்கிய ரீதியாகவும் தன் சமயச்சார்பாகவும் அமைந்திருக்கிறது. அவர் இலக்கியங்களை எந்த வழிநின்று. எந்தக் கண்ணோட்டத்தில் நின்று கற்ருரோ அவ்வழி நின்று இலக்கியங்களை ஆராய்கிருர்; விமர்சிக்கிருர். அவருடைய விமர்சனம் ரசமானது. நாம் அதுவரை படிக்காத ஒரு காவியத்தை பண்டிதமணி விமர்சித்தாரென்ருல் அவருடைய விமர்சனம் நம்மை முற்ருக மயக்கி அவர்விமர்சித்த காவியத்தை உடனே படிக்க நம்மைத்தூண்டும். அவருடைய விமர்சனத் திறனுக்கு 'பாரதநவமணிகள்' தக்கதோர் சான்று.

பண்டிதமணி பழைய இலக்கியங்களில் மட்டுமல்ல, தற்கால இலக்கியங்களிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்· இவற்றையும் விமர்சிக்கிறவர். சுருங்கச் சொன்னல் இன்று வாழும் ஈழத்து விமர்சகர்களில் பண்டிதமணி குறிப்பிடத்தக்கவர்.

மற்ருெரு வரிசையை எடுத்துக் கொண்டால் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கலாநிதி. வித்தி

யானந்தன், விரிவுரையாளர் செல்வநாயகம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இம்மூவரும் இலக்கியத் தேர்ச்சிமிக்கவர்கள். விமர்சனத் திறன் படைத்தவர்கள். ஆயினும் இவர்கள் இதற்கு முன்னிருந்து வழிவந்த மரபை ஒட்டித்தான் இலக்கிய விமர்சனம் செய்கிறார்கள். எனவே, இவர்களின் திறனாய்வுகள் இன்றைய இலக்கிய வளர்ச்சிக்கும், விமர்சனப் பார்வைக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாயில்லை. இம்மூவரும் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுவதால் இத்துறையில் இன்னும் காத்திரமாக ஈடுபடுவதற்குவெளியில் இருப்பவர்களை விட வாய்ப்பும், வசதியும் அதிகம் பெற்றிருக்கிறார்கள். இவற்றைத் துணைக்கொண்டும், தமது புலமை, திறமை ஆகியவற்றைப் பயன்படுத்தியும் பல சிறந்த இலக்கிய விமர்சனங்களைச் செய்ய முடியும். இதுவரை அவர்கள் செய்திருக்கும் திறனாய்வுகள் அவர்களுடைய தகுதிக்கும், தரத்திற்கும், திறனுக்கும் போதாது. இனிமேலாவது இம்முயற்சியில் வேகமாக ஈடுபட்டு ஈழத்தின் தமிழ் விமர்சன இலக்கியத்தை வளர்க்க வேண்டுமென்று இலக்கிய ஆர்வமுள்ளவர்கள் விரும்புகிறார்கள்.

ஈழத்தின் சிருஷ்டி இலக்கியம் 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்ற ஆரம்பித்த தென்றாலும் ஈழகேசரியின் காலக் கட்டத்தில் தான்— அதாவது 1930-க்குப் பிறகுதான் - புதிய உருவமும், மலர்ச்சியும், வளர்ச்சியும் பெற ஆரம்பித்தது என்று கூறலாம்.

ஈழகேசரி சிருஷ்டி எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியது போல விமர்சகர்களையும் உருவாக்கியது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சோ. சிவபாதசுந்தரம் அவர்கள்.

சிவபாதசுந்தரம் ஈழத்தில் தோன்றிய சிருஷ்டி இலக்கியங்களை மாத்திரமல்ல, தமிழ் நாட்டில் வளர ஆரம்பித்த இலக்கியங்களையும் விமர்சித்தார். அவருடைய விமர்சனத் திறனுக்கும், அரும்பு கட்டி நின்ற அக்கால விமர்சன நோக்கிற்கும் அவர் எழுதியுள்ள கட்டுரைகள் சான்றாக நிற்கின்றன. அவர் இலக்கிய உலகிலிருந்து நெடு நாட்களுக்கு முன்பே பிரிந்துவிட்டார். இப்போது ஈழநாட்டிலிருந்தும் பிரிந்து விட்டார். அவருடைய துறவு ஈழத்தின் விமர்சன இலக்கியத்திற்கு நஷ்டந்தான்.

'ஈழகேசரி'க்குப் பிறகு அதாவது 1940—1950 ஆகிய பத்து வருஷங்களில் தோன்றிய விமர்சகர்களில் அ. ந. கந்தசாமியும், கனக செந்திநாதனும் முக்கியமானவர்கள்.

அ. ந. கந்தசாமி ஒரு காலத்தில் வேகமும், துடிப்பும் மிகுந்த விமர்சகராகக் காட்சியளித்தார். நவீன கண்ணோட்டமுடைய அவர் பத்து வருடங்களுக்குமுன் ''பண்டிதர் திருமலைராயர்'' என்ற புனைப்பெயரில் சிலப்பதிகாரத்தைப் பற்றிச் செய்த திறனாய்வு அப்போதைய இலக்கிய உலகில் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது. இடைக்காலத்தில் இலக்கிய உலகிலிருந்து 'ஓய்வு' பெற்றிருந்த அவர் மீண்டும் பழைய ஆர்வத்தோடும். வேகத்தோடும் இலக்கிய உலகில் பிரவேசித்திருக்கிறார். அவர் 'ஓய்வுக்கு'ப் பின், தினகரனில் தொடர்ந்து வெளிவந்த 'நான் விரும்பும் நாவலாசிரியர்' வரிசையில் எமிலி ஜோலாவைப் பற்றி எழுதிய கட்டுரையும் ஒரு விமர்சனம்தான். திரு. கந்தசாமியின் விமர்சனத்தில் தர்க்கரீதியான அம்சங்களும், காரண காரிய விளக்கங்களும் ஆட்சிசெலுத்தும். ஈழநாட்டின் விமர்சகர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவராக இருக்கும் அவர் இன்னும் அதிகமாக இத்துறையில் ஈடுபட்டு உழைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

கனக செந்திநாதன் தேர்ச்சிமிக்க இலக்கிய ரசிகர். கவிதையில் அவருக்கு எந்த அளவு ஈடுபாடு உண்டோ அந்த அளவு விமர்சனத்திலும் ஈடுபாடு உண்டு. அவருடைய திறனாய்வில் ரசிகத்தன்மை முக்கியத்துவம் பெறுகிற அளவு விஷய நோக்குப் பெறுவதில்லை. ஒரு இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு விஷயச் சேர்க்கையாக இருக்கும் பௌதீக அம்சங்களின் மீது விமர்சனத்தின் பார்வை அழுந்திப் பதிய வேண்டியது முக்கியமானதொன்று. இந்த அழுத்தம் செந்திநாதனின் விமர்சனத்தில் அதிகம் இல்லை என்ற போதிலும், தனக்கே உரித்தான சில 'தனித்துவங்கள்' விரவியிருக்கும். ஈழகேசரியில் இலங்கை எழுத்தாளர்களை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் கனக செந்திநாதன் தான். அவர் எழுதிய ''ஈழத்துப் பேனா மன்னர்கள்'' என்னும் கட்டுரைத் தொடர் ஓரளவு விமர்சனத்தொனி உடையதாகும். அவருடைய இலக்கிய சித்தாந்தமும், விமர்சனக் கண்ணோட்டமும் எப்படியிருந்த போதிலும் ஈழத்தின் விமர்சன இலக்கியத்திற்குத் தன் பங்கையும் தொடர்ந்து செய்து வருகிறார் என்பது மறுக்கமுடியாதது.

1950-க்குப் பிறகு ஈழத்து இலக்கியத்தில் ஒரு பெரிய மாறுதலும் திசை திருப்பமும் ஏற்பட்டு இன்றும் அதே கதியில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. இந்த பன்னிரண்டு வருட காலத்திற்குள் தான் இலக்கியத்தைப் பற்றிய சித்தாந்த ரீதியான சிந்தனை தோன்றி உருவாகிவளர்ந்தது. இது விமர்சனத்திலும் எதிரொலித்தது. இந்த எதிரொலிகளின் சின்னமாகத்தோன்றியவர்கள் தான் க. கைலாசபதி கா. சிவத்தம்பி, எச். எம். பி. முகிதீன் ஆகியோர். இவர்கள் மூவரும் கிட்டத்தட்ட ஒரே இலக்கிய சித்தாந்தத்தையும், விமர்சனக் கண்ணோட்டத்தையும் படைத்தவர்கள். இவர்க

ளின் திறனாய்வுகள் ரசிகத் தன்மையோடு ஆழமான விஷய நோக்குமுடையவை. இம்மூவரினதும் விமர்சனங்களில் ஒருமைப்பாடு அதிகம். எனினும் சில தனித்துவமான அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

திரு. கைலாசபதியின் திறனாய்வு மிகவும் அமைதியானது, உணர்ச்சிப் பிரவாகங்களுக்கு இடம் கொடுக்காதது. ஆடம்பரமான வார்த்தை ஜாலங்களோ, விமர்சன வர்ணனைகளோ அதில் இடம் பெறுவதில்லை. சில விமர்சனங்கள் செய்வது போல பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டு வாசகனைத் திகைக்கச் செய்யவோ குழப்பமடையவோ செய்யாமல் மிகவும் நேராகவும், சுருக்கமாகவும், எளிதில் புரிந்துகொள்ளத் தக்க வகையிலும் அமைந்தது. அவர் புதிய இலக்கியங்களையும், பழைய இலக்கியங்களையும் விமர்சிப்பதில் ஆர்வமுடையவர். ஈழத்து இலக்கியகர்த்தாக்களின் முந்திய தலைமுறையினரின் படைப்புகளை இனம் கண்டு கொள்ளத் தக்க வகையில் முக்கியமான சில விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அதோடு, 'சாந்தி, யில் அவர் எழுதிய ஈழத்து எழுத்தாளர்களைப் பற்றிய விமர்சனமும், "வீரகேசரி"யில் எழுதிய தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிய விமர்சனமும் பூர்ணத்துவமுடையதாயில்லாவிட்டாலும், குறிப்பிடத் தக்கன என்பதில் ஐயமில்லை. அவர் எழுதியுள்ள விமர்சனங்களில் முக்கியமானது, "மகாகவி கண்ட மகாகவி" யாகும். தினகரனில் தொடர்கட்டுரையாக வெளிவந்த இது "ஒப்பு நோக்கு" (Comparative Study) விமர்சனமாகும். இரு மகா கவிகளான தாகூரையும், பாரதியாரையும் இவ் விமர்சனத்தில் பல கோணங்களில் நின்று ஆழமாக அலசியிருக்கிறார். இத் தொடர்கட்டுரை விரைவில் புத்தக உருவம் பெற இருக்கிறது. 'கலைச் செல்வி'யில் அவர் எழுதிய 'பொருள் மரபும் விமர்சனக் குரல்களும்' என்னும் கட்டுரையும், தினகரனில் சில படைப்பிலக்கியங்களுக்கு எழுதிய விமர்சனங்களும், 'மரதகத்தில்' எழுதிவரும் விமர்சனங்களும் குறிப்பிடத்தக்கன. சுருங்கச் சொன்னால் கைலாசபதி அவர்கள் தனது இலக்கியப் புலமைக்கும், விமர்சன ஆற்றலுக்கும் ஏற்ப இன்னும் எவ்வளவோ செய்ய முடியும். ஈழத்தின் தலை சிறந்த விமர்சகர்களில் ஒருவராகக் கருதப்படும் அவர் இதற்குத் தகுதியானவர். அவரிடம் ஈழத்து விமர்சன இலக்கியம் நிறைய எதிர்பார்த்து நிற்கிறது.

திரு. கா. சிவத்தம்பியின் விமர்சனம் வேகமும், கூர்மையுமுடையது. அவருடைய விமர்சனங்களில் புரட்சிகரமான கருத்துக்கள் விரவிக் கிடக்கும். நகைச் சுவை இழையோடி நிற்கும். மற்றவர் போகாத சுவட்டில் போக விரும்பும் சிவத்தம்பியின் விமர்சனம் துணிச்சல் மிகுந்தது. பழங்கால இலக்கியத்தைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகளையும், அபிப்பிராயங்களையும் தகர்த்தெறிந்து புதிய கருத்தினை சிருஷ்டித்து நிற்கும் விமர்சனம். அதில் ஆதார பூர்வமான அம்சங்களும் தன் கருத்தினை வலியுறுத்திக் கூறுவதில் அழுத்தமும் அதிகம் காணப்படும். பண்டித மனப்பான்மைக்கு எதிராகச் செல்லும் அவருடைய விமர்சனமும் 'பண்டிதப் பண்பு' கொண்டது தான் என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும். 'எழுத்து' வுக்குப் பதிலாகச் சமீபத்தில் 'புதுமை இலக்கியத்'தில் அவர் எழுதியுள்ள 'பொருளும் விமர்சனமும்' என்னும் கட்டுரை குறிப்பிடத்தக்கதொன்று. காத்திரம் மிகுந்த இந்த விமர்சனக் கட்டுரையைப் போன்றதொன்று இதுவரை ஈழத்தில் வெளிவந்ததில்லை என்று துணிந்து கூறலாம். மரகதத்'தில் தொடர்ந்து எழுதிவந்த 'திரை வளர்த்த கவிதை' விமர்சனமும் குறிப்பிடத் தக்கதொன்று.

இலக்கியத்தில் மட்டுமல்லாது, பிறகலைகளையும் திறனாய்வு செய்வதில் அதிக ருசியும்சிரத்தையும் முள்ளவர் சிவத்தம்பி ஆற்றல் மிகுந்த அவர், விமர்சனத்துறையில் இன்னும் எவ்வளவோ சாதிக்க முடியும், சென்ற காலம் போகட்டும் நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும் நிறையச் சாதிப்பார் என்று நம்புகிறேன்.

இலக்கியத்தில் மட்டுமல்லாது, அரசியல் சமூக, சமயத்துறைகளிலும் தனது பார்வையைச் செலுத்தும் சிறந்த விமர்சகர் எச். எம். பி. முகிதீன். அவருடைய திறனாய்வுகள் பெரும்பாலும் ஒப்புநோக்கு விமர்சனங்களாகும். 'இக்பாலும் கம்பனும்' 'வள்ளுவனும்' பாரதியும்', 'இக்பாலும் வள்ளுவனும் என்ற தலைப்புகளில் 'தாரகை'யில் விரிவான விமர்சனக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவருடைய விமர்சனங்கள் பெரும்பாலும் இலக்கியக் கர்த்தாக்களின் கருத்து ஒருமைப்பாட்டைச் சுட்டிக் காட்டுவன. அவருடைய 'தமிழ் சினிமாவில் ஹாஸ்யம்' என்னும் விமர்சனம் தமிழ் இலக்கியத்திற்கே புதிது என்று சொல்லலாம். தமிழ் சினிமாவில் நகைச் சுவை வளர்ச்சி பற்றியும், அதன் குறைநிறைகளை

யும் பற்றியும் 'வீரகேசரி'யில் அவர் இத்தலைப்பில் எழுதிய பதினறு கட்டுரைகளும் ஒரு சிறந்த விமர்சனமாகும்.

இம்மூவரையும்விட மற்றெரு முனையில் நிற்கும் இரு விமர்சகர்களையும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஒருவர் சில்லையூர் செல்வராசன், மற்றெருவர் எஸ். பொன்னுத்துரை. இருவரும் காரசாரமான, சர்ச்சைக்குரிய விமர்சனங்களைச் செய்கிறவர்கள். இவ்விருவரின் திறனய்வுகளில் சிலேடையும், குத்தலும் காணப்படுவதோடு சிறிது கண்டனநெடியும் வீசும். விமர்சனத்திற்கென கூர்மையான வார்த்தைப் பிரயோகங்களை ஆள்கிறவர்கள். ஒரு சிருஷ்டியை விமர்சிக்கும்போது அதை அக்குவேறு ஆணிவேருகப் பிரித்துத் தனித்தனியாக அலசத் துவங்கிவிடுவார்கள். பழைய இலக்கியங்களை விமர்சிப்பதில் இவர்களுக்கு ஈடுபாடு மிகக் குறைவு. தற்கால சிருஷ்டி இலக்கியங்களைத் திறனய்வு செய்வதில்தான் ஆர்வம் அதிகம். துணிச்சல் மிகுந்த இவ்விமர்சகர்களின் ஆய்வுகளில் கூர்மையான வார்த்தைப் பியோகங்களும் சூடான குணமும் இருந்தபோதிலும் ருசி மிகுந்தவை; பிடிப்பும் சத்துமுள்ளவை என்பதைச் சொல்லித்தானகவேண்டும்.

திரு. செல்வராசன் இலக்கியத்தில் எல்லாப் பிரிவுகளையுமே விமர்சிப்பதில் வல்லவர்,

'கல்கி' நடத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற கதைகளைப் பற்றி 'மரகதத்'தில் வெளிவந்த பொன்னுத்துரையின் விமர்சனம் குறிப்பிடத்தக்கதொன்று.

இப்போது புதிதாக ஒருவர் விமர்சன அரங்குக்கு வந்திருக்கிருர். அவர்தான் எ. ஜே. கனகரட்ன. ஆங்கில இலக்கியங்களிலேயே அதிக பரிச்சியமும், ஈடுபாடுமுடைய கனகரட்ன சமீபகாலமாகத் தமிழ் இலக்கிய விமர்சனத்திலும் அதிக ஆர்வமும், அக்கறையும் காட்டிவருகிருர். 'எழுத்து'வில் 'மௌனி வழிபாடு' என்ற தலைப்பில் எழுதிய திறனய்வு அவருடைய விமர்சனத் திறனை நன்கு புலப்படுத்துகிறது. அவருடன் சிறிது நேரம் உரையாடினலும்சரி அதற்குள் உலக இலக்கியங்களை ஒரு சுற்றுச்சுற்றி விமர்சித்துவிடுவார். அவர் பேசுவதோடு மட்டும் நின்றுவிடாது எழுதவும் வேண்டும். இத்துறையில் அவரும் பிரகாசிக்கக் கூடிய எதிர்காலம் இருக்கிறது. ஈழத்தின் தமிழ் விமர்சன இலக்கியத்திற்கு அவரும் கணிசமாகத் தன் பங்கைத் தரமுடியும். அவர் அதைச் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஈழத்து விமர்சகர்களைப் பற்றிய இக்குறிப்புகள் போக, இன்னென்றையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். டாக்டர் மு. வரதராசன் அவர்களின் நாவல்களைப் பற்றியும் ஈழத்தில் விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவ்விமர்சனத்தில் மேலே குறிப்பிட்டவர்கள் கலந்துகொள்ளாததோ, அல்லது இவ்விமர்சனம் அறைகுறையானதோ என்பதல்ல பிரச்னை. ஆனல் தமிழகம்கூடமு.வ.வின் நாவல்களை இத்தகைய துணிச்சலுடன் விமர்சனம் செய்ய முயன்றதில்லை என்பதுதான் இங்கு கவனிக்கவேண்டியதாகும்.

மேற்கூறிய விஷயங்களிலிருந்து ஈழமும் தமிழ் இலக்கிய விமர்சனத்திற்குக் கணிசமான பங்கை அளித்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும். மேலும் தொடர்ந்து அளித்துவரும் என்பதில் சந்தேகம் இல்லை.

இறுதியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. நாவலர் காலத்திலிருந்து இன்று வரையுள்ள விமர்சன இலக்கியத்தைப் பரிசிலனை செய்துபார்த்தால் இரண்டு அம்சங்கள் குறிப்பிடத் தகுந்தவையாகும். ஒன்று ஈழத்து விமர்சனத்தில் துணிச்சல் மிகுதி. பூஜா உணர்ச்சி, முதுகு சொரிதல், தாட்சண்யம் பார்த்தல்–முதலிய விமர்சனத்திற்குப் புறம்பான தன்மைகள் மிகக் குறைவு. இரண்டாவது அம்சம் இலக்கிய உருவத்தை மாத்திரம் பரிசீலிப்பதோடு நின்றுவிடாது உள்ளடக்கத்திலும் அதிக அக்கறை காட்டுவதாகும். சுருங்கச்சொன்னல் ஈழத்துத் திறனய்வில் உருவவாதசித்தாந்த நோக்கின் அழுத்தத்தைவிட, யதார்த்தவாத சித்தாந்த நோக்கின் அழுத்தம் அதிகம். ★

எழுத்தாளன் - விமர்சகன்-வாசகன்

எஸ். பொன்னுத்துரை

எழுத்தாளனின் கடமை என்ன?

வாசகன் எதை வாசிக்கவேண்டும்?

—இப்படிச் சில கூறுபட்ட பல்லிவால் கடாக்கள் கிளப்பி, அவற்றின் சிக்கல்களையும் முடிச்சுகளையும் அவிழ்க்கும் பிரயத்தனத்தில் சுவையும் பயனுமிருக்கின்றது.

அதற்கு மூலமந்திரமாக, மக்கள் எதை விரும்பி வாசிக்கின்றார்கள் என்ற குட்டையைத் துழாவுவோம். எல்லா மக்களும் எல்லாவற்றையும் விரும்பி வாசிப்பதுமில்லை; அதற்கான அவகாசமும் வசதியும் . மனித வாழ்க்கையின் ஆயுளில் கிடைப்பதுமில்லை. பொதுவாக, வெள்ளாட்டின் மனோபாவத்துடன், பல ரகத்தில் நுனிப்புல் மேயும் குணம் இயல்பாக வாசகர்களுக்கு இருந்தாலும், அவர்கள் பெரும்பாலும் விரும்பி வாசித்து இன்புறுபவை குறுகிய வட்டத்தின் விளைச்சல்கள். மனப்பாங்கிற்கும், சுவைக்கும் ஏற்ப வாசகர்களை ரகவாரியாகப் பிரித்துக் கொள்ளலாம். இன்றைய நவீன அச்சியந்திரங்களின் பரிணாம வேகத்திற்கு ஏற்பப் பெருகி வளர்ந்திருப்பது, இலேசான வாசிப்பு உள்ளடக்கத்தை நாடும், பத்திரிகை வாசிப்பாளர் கூட்டம். இக்கூட்டத்தின் அங்கத்தினர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்-பெண் இருபாலாரும். நடுத்தர வர்க்கத்தின் மேல்தட்டில் அதிகமாகப் பெண்களும், கீழ்த்தட்டில் அதிகமாக ஆண்களும் இவ்வட்டத்தில் இருக்கின்றார்கள். துப்பறியும் கதைகளையும் மர்மக் கதைகளையும் விரும்பி வாசிக்கும் ஒரு வட்டமும் இருக்கின்றது. இவர்களுள் பெருந்தொகையினர் அடித்தட்டிலுள்ளவர்களும், இலக்கியக் குழந்தைகளுமாவர். மச்ச வாடை வீசும் நூல்களை, சிற்றின்ப விவகாரத்தின் நுனிக் கரும்பினை, (நேரிய வழியிலோ அல்லது கோணல் வழியிலோ) சுவைக்கத் தொடங்கிக் களைக் கூத்தாடுபவர்கள், மனம் புதைத்து வாசிக்கின்றனர். பற்றி, அல்லது புல்லுருவி இலக்கியப் பித்தர்களும் வாசிப்பாளர்களுள் ஒரு ரகம். 'கலை கலைக்காக' என்று ஓய்வு நேரச் சாய்வு நாற்காலிச் சித்தாந்தம் பேசுபவர்கள், புத்தகங்களை வாங்கும் அளவிற்கு வாசிப்பது கிடையாது. இவர்கள் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைப்பதிலேயே அதிகம் ரஸனை பெறுகின்றனர். இவர்களத்தனை பேரும் இலட்சியப் பெருநோக்கற்ற இலக்கியக் கூத்தாடிகள்; ஏதோ குமைச்சல்களில் அம்மானையாடுகிறார்கள். இலக்கியத்தை வர்க்கப் போராட்ட வளர்ச்சிக்கு ஓர் ஆயுதமாக உபயோகிக்க நினைப்பவர்கள், மேற்கூறிய ரகங்களுக்கு முற்றாக மாறுபட்டவர்களென்பது தெளிவு. இப்படியாக வாசகர்களை ரகவாரியாகப் பிரித்துக்கொண்டு, மக்களிலக்கியத்திற்கு விளக்கம் காண முனைவது ஆழமான ஆராய்ச்சி விவகாரம்.

இப்பொழுதெல்லாம், 'மக்கள் இலக்கியம்' என்ற சொல் மிக மலிவாக உபயோகிக்கப்படுகின்றது. எனவே, அதன் நுணுக்கங்களை அல்லது இலட்சணங்களை அறிந்துகொள்வது நல்லது.

'மக்களினால் (எழுத்தாளர்), மக்களுக்காக (வாசகர்), மக்களின் (மானிட ஜந்துக்களின்) வாழ்க்கையினை விமர்சனம் செய்வதுதான் மக்கள் இலக்கியம்' என்று வார்த்தைகளில் கிளியந்தட்டாடி, இலக்கணத்தைச் சூத்திரபாணியில் அடைத்துவிட முடியுமா? இவ்வகையான சூத்திரத்தின் மூலம் மக்களிலக்கியத்தின் அடிமுடியை அறியமுடியாது. இலக்கணம் ஜடப்பொருள், முள்வேலி. இலக்கியம் உயிர்த்துடிப்புடன் அசுரவேகத்தில் வளரும்பொழுது, இவ்வேலி தகர்த்தெறியப்படுகின்றது. பின்னர் மீறிவிட்ட இலக்கியத்தைக் கட்டுப்படுத்த இலக்கணம் இயற்றும் விவஸ்தை நடத்தப்படுகின்கின்றது. சூத்திரப் பொறிக்கு விவகாரம் சிக்குப்படாவிட்டாலும், அதை இனங்கண்டு கொள்ளுமளவிற்கு விஸ்தரிக்கலாமல்லவா?

'மக்களிற் பெருந்தொகையினர் வாசிப்பது மக்கள் இலக்கியம்; ஏனையோர் வாசிப்பது சொத்தை இலக்கியம்' என்று சொல்வது மத்தியஸ்தமான தரகுப் பேச்சாக அமைந்துவிடுமா? அப்படியாயின், பத்திரிகைகளுள் வாராவாரம் அதிகம் பிரதிகள் விற்பனையாகும் குமுதம், ஆனந்தவிகடன், கல்கி ஆகியனவே மக்கள் இலக்கியச் சேவையைச் செவ்வனே செய்கின்றன என்பதை ஒப்புக்கொண்டாகவேண்டும். ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு மன்மதன்: அந்த ஒரே ஒரு மன்மதன் ஒரேயொரு ரதியைக் கண்டான்' என்ற வகையிலும், 'காதலிலே வெற்றி பெற்றான் காளையொருவன்' 'காதலிலே தோல்வியுற்றாள் கன்னி ஒருத்தி' என்ற ரீதியிலேயும்; அக்கிரஹாரத்து அம்மாமித் தத்துவம் பேசும் வாக்கிலேயும் அறுவடையாகும் ஒரு வார ஆயுசு பெற்ற குறைமாசப் பிண்டங்களையும், கர்ப்பச் சிதைவுகளையுந்தான் நாம் மக்கள் இலக்கியம் என்று கொள்ளவேண்டியிருக்கும். உருவ அமைப்பிற்கு அழுத்தம் கொடுத்து, லா, சா. ராவும் மௌனியும் ஊமைக்குழல் ஊதும் வாக்கில் சிருஷ்டித்துத்தரும் கதைகளை மக்களுட் பெருந்தொகையினர் வாசிப்பது கிடையாது. இதற்காக, இலக்கிய அரங்கம் என்ற வெளிச்சத்தையே பார்க்கத் தகுதியற்ற 'வம்புப் பிள்ளைகள்' என்ற லிஸ்டில் இவர்களுடைய இலக்கிய சிருஷ்டிகளைச் சேர்த்துக்கொள்வதா? இந்த இழிநிலை எதனால் வந்தது? பேடுகூவிப் பொழுது விடியும் சமாச்சாரத்தைப் போல, வாசகனின் விருப்பங்களுக்குத் தலையாட்டும் எழுத்தாளரின் நபுஞ்சகத்தனத்தால் வந்த வினை. இதிலிருந்து சிலந்தி நூலிழை அறுந்துவிடாமலே இன்னொரு கேள்வி தொங்குகின்றது. இலக்கியத்தின் பெறுமானத்தை எப்படி அளவிடுவது? வாசகரின் தலைகளை எண்ணிக்கை செய்துவிட்டு, அதன் தாரதம்மியத்தை நிர்ணயித்துக் கொள்ளும் முறை மிகவும் சோரம்போன சங்கதியென்பதை இலக்கியப் பரிச்சயத்தில் ஆரம்பக் கட்டத்திலிருக்கும் 'பாற்குடியனும்' ஒப்புக்கொள்ளுவான். அதன் மதிப்பு ஒரு நூலின் அல்லது பத்திரிகையின் விற்பனை விலைக்குச் சமம் என்ற ரீதியில் கணித வாய்ப்பாடு தயாரிக்கவும் முடியாது. மனதின் சப்தஜால வளர்ச்சிக்கு இலக்கியம் தேவைப்படுகின்றது; சிந்தனைக்குளிகையாக, இலட்சியக்கனவை விரிவுபடுத்தத் தேவைப்படுகின்றது; வாழ்க்கை நாகரிக வளர்ச்சியின் அளவுகோலாகத் தேவைப்படுகின்றது; முன்னேற்றப் பாதையில் மனித சமுதாயத்தை நம்பிக்கையுடன் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகத் தேவைப்படுகின்றது; என்று ஒவ்வொரு அம்சத்தையும் புட்டுப் பார்த்தால், இலக்கியம் நான்முக வேடம் புனைந்திருப்பதை அவதானிக்கலாம். ஆகவே, அதன் தரத்தை வேறோர் உரைகல்லில் உரைத்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது. வாசகனுக்கும் எழுத்தாளனுக்கும் ஜோடிப் பொருத்தம் பார்த்து முடிச்சுப்போட மூன்றாவது பேர்வழியான விமர்சகன் என்ற தரகனைக் கூப்பிடவேண்டியிருக்கின்றது. ஆனால், இந்த 'சர்ச்சை' பேர்வழி ஒரு கண்ணில் வெண்ணெயும், மறுகண்ணில் சுண்ணம்பும்வைத்துப் பேசாமல்இருக்கவேண்டும். இதனையும், மக்கள் இலக்கியம் என்ற இலட்சியத்தை இன்னமும் நாம் உருபிக்கவில்லையென்ற உண்மையையும் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். இதனால், மக்கள் இலக்கியம் என்ற பண்டம் இலக்கியத்தில் கிடையாது என்று சலித்துக் கொள்வது தாழ்வு மனப்பான்மையின் எதிரொலியாகவும், விரக்தியின் வயிற்றெரிச்சலாகவுமே அமையும். தொட்டந் தொட்டமாக, சிந்தனையின் கயிற்றரவு நிலையிலேயோ, அல்லது பிரசவத்தின் சுயபிரக்ஞையற்ற நோக்காட்டிலேயோ, மக்களிலக்கியத்தின் சில சாமுத்திரிகா இலட்சணங்களுடன் இலக்கியம் படைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கொரு ஸ்தூல வடிவம் கொடுப்பது, இன்றைய காலகட்டத்தின் தேவை.

மக்களின் வாழ்க்கையை ஒவ்வொரு காலகட்டத்; திலும் விமர்சித்து, அதன் வளர்ச்சியைப் பிரதிபலித்து; அவர்களின் வாழ்க்கையின் குறை-நிறைகளை, தர்ம-அதர்மங்களை, இவற்றுடன் புரையோடிக் கிடக்கும் நன்மை-தீமைகளை, அரோகண-அவரோகணங்களை; எழுச்சி-வீழ்ச்சிகளை, அபிலாஷைகள்-ஆசாபாசங்களை அவற்றின் குரூர-வசீகரக் களங்களில், தெளிந்த தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில்; யதார்த்தம் அல்லது பிரத்தியட்சப் பிரமாணம் என்ற உள்ளடக்கத்தில், அல்லது கருவில் முளைகொள்ளச் செய்து, மண்வளத்தின் பண்புடமைக்கு ஏற்ப வளர்த்து, கலையழகு பொருந்திய கற்பனைச் செறிவு மிக்க உருவம் கொடுத்து, மக்களின் கலைநுகர்வுக்கும் இலட்சியக் கனவுகளுக்கும் ஈடுகொடுக்கும் வாக்கிலேயே, உள்ள வளர்ச்சிக்கு உணவளித்து, சிந்தனையைத் தூண்டும் சில உண்மைகளைப் புலப்படுத்தி; சீரிய வாழ்வின் தடத்தினைக்கோடிகாட்டி நம்பிக்கையூட்டி இன்னொரு கட்டத்திற்கு முன்னேறச் செய்யும் இலக்கியத்தை, மக்களிலக்கியம் எனக்கொள்ளலாம்.

இந்த விளக்கத்தைச் சூத்திரமென்று பிரமை கொள்ளத் தேவையில்லை. இலக்கிய விவகாரத்தில் இலக்கண வகுப்பே சுலுவான காரியமல்ல; சூத்திரத்தின் பூட்டிற்குள் சிக்குப்படாது நழுவி விடும் தன்மை அதற்கு உண்டு. மேலும் இலக்கண வகுப்பு, இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்து விரிவும் மாறுதல்களும் அடையும் தன்மையுள்ளது. ஆகவே, மேற்கூறப்பட்டுள்ள விளக்கம், நாம் வாழும் காலகட்டத்தில், சுயஇச்சைக் கற்பனைக் குதிரைக்குக் கடிவாளமிட்டு, மாயமான் வேட்டையில் இறங்காது, ஒரு உண்மையைத் தொடர்ந்து செல்ல வழிகாட்ட உதவுமென்ற அளவில் பிரயோசனமுள்ளதாக இருக்கும்.

இவ்விளக்கத்தினை அசையிட்டு, ஜீரணித்துப் பார்த்தால், இன்றைய காலகட்டத்தில், வாசகன் விரும்பும் இலக்கியம் வேறு, வாசகனுக்கு ஊட்டப்படவேண்டிய இலக்கியம் வேறு என்ற உண்மை துலாம்பரமாகப் புலப்படும். இதனால் எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் சிண்டுமுடிக்கும் கைங்கர்யத்தில் ஈடுபடவேண்டியிருக்கிறது.

இலக்கியப் பிரக்ஞையற்ற வாசகனுக்கு அளவுக்கு அதிகமான 'கெட்டிக்காரத்தனத்தை' நாம் கொடுக்கத் தேவையில்லை. பத்திரிகைப் படிப்பாளனாகிய இவன் குமுதம்-ஆனந்தவிகடன்-கல்கி ஆகியவற்றின் பக்கங்களான வெளுப்புக் காகிதங்களை அடைத்திருக்கும் கறுப்பு மசியை எல்லாம் இலக்கியமென்று மருளுகின்றானென்றால், அவனிடம் எப்படி அதிகம் புத்திசாலித்தனத்தை எதிர்பார்க்க முடியும்? அதே சமயம், 'வாசகன் இதைத்தான் விரும்பி வாசிக்கின்றான்' என்ற நாடி ஓட்டத்தை வைத்தியன் மோஸ்தரில் பார்த்து, அந்த வாசகரஸனைக்கு மட்டும் ஏற்ப ஓர் எழுத்தாளன் எழுதுவது சிருஷ்டியாகாது. இது பட்டப்பகலில் நடத்தப்படும் பச்சை விபசாரத்தின் பாற்பட்ட சுத்த அயோக்கியத்தனம். எழுத்தாளன் தன்னைத் தானாகத் தோன்றித் தவத்தால் கொடியுயர்த்திய வரப்பிரசாதியென்றோ, அவதார புருஷனென்றோ கொள்ளத் தேவையில்லை. ஆனால், அதே சமயம், வாசகனிலும் பார்க்கத் தான் எவ்வளவோ உயர்ந்த ஸ்தானத்திலிருக்கின்றான் என்ற திண்மை ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் இருக்கவேண்டும். வாசகனுக்கு தன் ஆயுளுக்கு அப்பாற்பட்ட சிருஷ்டிகளை வாசித்தின்புறும் வாய்ப்பில்லை. அவனுக்குத் தீர்க்கதரிசனமும் பூஜ்ஜியம். ஒரு நல்ல எழுத்தாளனுக்கு வருங்காலத்தை உள்ளுணர்வில் ஊடறுத்துப் பார்க்கும் தீர்க்கதரிசனம் வேண்டும். இத்திட்சண்யத்தின் பெறுபேறாக, தன்னைப் போற்றி முகஸ்துதி பாடிக்கொண்டிருக்கும் ஒரு வாசக கூட்டத்திற்கு எழுதுவதுடன், காலத்தின் சுழற்சியை இரட்டைக் கடவை மனோவேகத்தில் தாண்டி வருங்காலத்திற்குள் புகுந்து, வருங்கால வாசகர்களுக்கும் சிருஷ்டிகளைச் சேமிக்கிறான். அநித்திய வாழ்வு என்ற தன் எல்லைக்குள், அமரத்துவமான வாசக கூட்டத்தைப் படைக்கும் சக்தி எழுத்தாளனுக்கு இருக்கின்றது.

வாசகனின் ரஸனை மாற்றமடையா நிரந்தரத்துவம் பெற்றதல்ல. ஒரு வாசகனின் வயதின்-சூழலின்-அறிவின் வளர்ச்சிகளுடன் இது மாறுபடுகின்றது என்பதுடன், கால முன்னேற்றத்திற்கு இயைய வாசகனின் சுவையும் தரமும் மேன்மைப்படுகின்றன. இல்லாவிட்டால், வை. மு. கோவுக்கும், ஆரணிக்கும், வடுவூருக்கும் அன்றிருந்த மார்க்கெட் ஏன் இன்றில்லாது போயிற்று? வாசகனின் ரஸனைத்தரம் உயர்ந்துவிட்டமையே அதற்குப் பிரதான காரணமாக இருக்கலாம். வாசகனின் சுவை மாறிக்கொண்டிருக்கும் காலவேகத்திலும் பார்க்க, அவனை நல்ல இலக்கிய நுகர்விற்கு அழைத்துச் செல்வதும் எழுத்தாளனின் கடமை.

ஒரு நல்ல வாசகன், சிறந்த சிருஷ்டி இலக்கியகாரனினால் பிடித்துவைக்கப்பட்ட பொம்மை என்று சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கின்றது. மக்களிலக்கியத்தைப் பற்றிப் பூரண கொள்கைத் தெளிவுடனும் பிரக்ஞையுடனும், அதன் சுவட்டிலேயே வாசகர்களுடைய சுவையைத் திருப்பும் திறமையும், திராணியும் இக்காலகட்டத்தில், எழுத்தாளருக்கு நிச்சயம் தேவை. இதற்கு, சிருஷ்டி இலக்கிய காரரின் அல்லது இலக்கிய சிருஷ்டிகாரரின் ஏகோபித்த சக்தியும் மூச்சும் ஒருமுகப் படுத்தப்படவேண்டும். இச் சக்திகள், ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் ஒரு முக்கிய காலகட்டத்தில், பிரிந்து சின்னாபின்னப்பட்டிருப்பது வேதனைக்குரியது. சிறுசிறு கோஷ்டிகளாகப் பிரிந்து நின்று தங்கள் கோஷ்டியினருக்கு முதுகு சொறிவதன் மூலம், அவர்களது சிந்தனை ஆற்றல்களைப் பூஞ்சணம் பிடிக்கச் செய்வதும், மாற்றுக் கோஷ்டியினர் மீது வசை புராணம் பாடி அவர்களது தன்நம்பிக்கைகளை உடைத்தெறியச் செய்வதும், நேர விரயத்தின் பாற்பட்ட குரங்குச் சேஷ்டைகளே தவிர, இன்றைய இலக்கிய வளர்ச்சியின் தேவைகளைப்

பூர்த்தி செய்வதற்கு எவ்வகையிலும் ஆக்கமும் ஊக்கமும் தரும் செயலாக அமையாது. இதனால் விமர்சனம் தேவையில்லை என்று அர்த்தமில்லை.

விமர்சகன், வாசகன் எழுத்தாளனாகிய இரு சம்பந்திகளுக்கு முடிச்சுப்போடும் தரகர் என்று தன்னைக் கற்பித்துக் கொள்ளக் கூடாது. மேல்நாட்டு இலக்கியப் புத்தகங்களின் புற மட்டைகளில் இருக்கும் குறிப்புத் துணுக்குகளை வாசித்துவிட்டு, மேல்நாட்டினர் பாணியில் விமர்சனம் செய்யப் புகுந்துள்ளதாக விரல் சூப்பித் திரியத் தேவையில்லை. 'அட, நம்ம பயல்' என்று சிரங்குகுத்தவும்; 'நம்மை மிஞ்சுகிறான் பயல், மட்டந்தட்டிக் காட்டுகிறேன்' என்று மாமியார் ஸ்தானத்தில் வேண்டாத மருமகன்மீது கோள் குண்டணி சுமத்தவும், விமர்சகன் தயாராகக் கூடாது. ஒரு நல்ல இலக்கியத்தைக் கண்டு அதனை வாசகருக்குப் பரிட்சயப்படுத்தி வைக்கும் நல்லெண்ணமும்; அதே சமயம் நெல்லிலிருந்து பதரைத் தூற்றிக் கழிக்கும் திராணியும் விமர்சகனுக்கு இருக்க வேண்டும். கால கட்டத்தையும், இலக்கிய வளத்தையும், அதன் முன்னேற்றத்தையும் மனதில் கொண்டு, மேநாட்டு ஆசிரியர்களின் பெயர்ப் பட்டிகயல்லைக் குழப்பியடித்துப் பொம்மலாட்டத்தில் ஈடுபடாமல், நமது மண்ணின் பண்புடைமைக்கு ஏற்பக் குறை நிறைகளைச் சொல்லி, வாசகனின் ஆவலைத் தூண்டுவதுதான் விமர்சகனின் தலையாய கடமை என்பதை மனதில் கொள்ள வேண்டும். இலக்கிய முன்னேற்றத்தை மனதில் கொண்டு, காலத்திற்குக் காலம் கணக்கெடுப்பும், தயவு தாட்சண்யமும், பாராபட்சமும் அற்ற ஆக்கபூர்வமான விமர்சனமும் நடத்தப்படவேண்டும். ஈழத்தில் சிருஷ்டி இலக்கியம் வளர்ந்துள்ள அளவிற்கு விமர்சன இலக்கியம் வளராததும் ஒரு சாபக்கேடு.

எழுத்தாளனின் புனிதப்பணி நல்லிலக்கியத்தைப் படைப்பதே. மக்கள் இலக்கியமே, காலத்தையும் எதிர்நீச்சல் செய்து, வாழும் வலுப்பெற்றது. சீஸன் சரக்குகள் இரண்டே நாட்களில் குப்பையில் வீசப்படுகின்றன. பற்றி இலக்கியம் அல்லது புல்லுருவி இலக்கியம், மக்களிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டுவிட்ட சிலரின் ஓய்வு நேரச் சீட்டாட்டமாக இருக்கட்டும். 'சொந்த ஆத்ம திருப்தி'க்காக இலக்கியம் படைப்பதாகக் கனவுகாணும் மாஜி இலக்கியப் பயில்வான்கள் தங்களுடைய சுய மன உளைச்சல்களுக்கு உருவம் கொடுக்கும் குறைமாசப் பிண்டங்களைப் பெற்றெடுக்கட்டும். ஆனால் எழுத்தாளர்கள், சிருஷ்டிக்களத்தில் மிகப் பெரியதும், விழுமியதுமான பணி இருக்கின்றதென்ற ஞானத் தெளிவும், உள்ளுணர்வு வேட்கையும் பெற்றவர்கள், புதுத் தென்புடனும் உற்சாகத்துடனும் மக்கள் இலக்கியம் என்ற தடத்தில் நிதானமாக முன்னேறத் தொடங்கட்டும்.

வளர்ச்சிப் பாதையின், இன்றைய கட்டத்தில், ஈழத்து எழுத்தாளர் 'எல்லாவற்றையும் சாதித்துவிட்டோம்' என்ற எக்களிப்பில், கருத்தால் ஒன்றுபடாத எவரும் செயற்கையான முறையில் கோஷ்டிகள் பிரிந்து நிற்க வேண்டாம். துர்நாற்றமெடுக்கும் புலமைக் காய்ச்சலில் சிக்குண்டு, சிண்டுபிடித்து மல்லுக்கட்டி நிற்கவும் வேண்டாம். ஈழத்து எழுத்தாளர் தம்மையும், ஈழத்து இலக்கியத் தரத்தையும் ஒரு தடவை ஆத்ம பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

ஈழத்து எழுத்தாளருக்கு இமயம் போன்று நெடிதுயர்ந்த பணி இருக்கிறது. எத்தனையோ துறைகளில் விரிந்த அளவில் பரிசோதனைகள் செய்து பார்க்கவேண்டிய நிர்ப்பந்தமிருக்கின்றது. எதார்த்தம் என்ற உள்ளடக்கத்திற்கு ஜீவனூட்டவும், கற்பனையின் மனோதர்ம உருவத்திற்கு அழகூட்டவும் மிகமிக ஒறுப்பாகவே பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. பரிசோதனை என்று சொல்லவந்தால், அதில் வெற்றியும் கிட்டலாம், தோல்வியும் கிட்டலாம். இரண்டிற்கும் தயாரான சமரச நிலையில் ஈடுபடவேண்டும். இலக்கியத்தை நல்ல இலக்கியமென்றும், கூடாத இலக்கியமென்றும் வகுக்கலாம். ஆகவே, மேனாட்டினர் வளர்ச்சிக்கு ஈடுஜோடாக வாழ்வின் நெளிவு சுளிவுகளிலும் பரிசோதனைகள் செய்து பார்ப்பதில் தவறில்லை. 'மரபு' 'இலக்கணம்' என்ற எல்லைகள் காலத்தால் விரிவு படுகின்றன. நல்லிலக்கியச் சிருஷ்டி வேட்கையின், 'மரபு' வேலிகளைத் தாண்டிக் கூட மக்களிலக்கியம் என்ற பூங்காவில், புதுப்புது மலர்களைப் புஷ்பிக்கும் புதிய பரிசோதனைகளில் ஈடுபடவேண்டும். உடனடியாக, வாசகனின் ஆதரவு கிடைக்கவில்லையே யென்று மனச் சோர்வு அடையத் தேவையில்லை. ஆக்கபூர்வமான விமர்சனத் தராசில் நிறுத்தப்பட்டு, தரமான இலக்கியம், மக்கள் இலக்கியம் என்ற பூங்காவிலே தான் கொய்யப்படுகிறது என்ற பரிட்சயத்தையும் நிதர்சனத்தையும் வாசகனை உணரச் செய்தால், மிகக் குறுகிய காலத்தில், வாசகனின் ரஸனைத்தரம் உயர்த்தப்பட்டு, இலக்கியமும் வளம் பெறும்.

எழுத்தாளர் கடமை என்ன?

சிரஞ்சீவியாக வாழவல்ல, வாழ்விக்கவல்ல மக்களிலக்கியம் படைக்க முயல்வது.

வாசகன் எதை வாசிக்க வேண்டும்?

அவனுடைய ரஸனையின் தரம் உயர்த்தப்பட்ட போத நிலையில், மக்கள் இலக்கியத்தை இந்த லட்சிய ஜயஸ்தம்பத்திற்கு வாசகர்களை எழுத்தாளரெல்லோரும் ஒன்றுபட்டு அழைத்துச் செல்லத் தயாராகிவிட்டோமா?

இந்த வினமுன் விடையில் நமது முன்னேற்றம் தங்கியிருக்கின்றது! ★

ஈழத்திலே பூதந்தேவனார் தொட்டு, ஆறுமுக நாவலன் உள்ளிட்டு, இன்றுவரை ஒரு இலக்கிய மரபும், தனித்துவம் வாய்ந்த ஒருஇலக்கியப் பாரம்பரியமும் தொடர்பறுந்துபோகாமல் வரலாற்று இழையோடி வந்த போதிலும் நமது இலக்கியத்தின் மீதும், பண்பாட்டின் மீதும் வெளிப்புற சக்திகளின் தாக்கமே சென்ற பல காலமாகத் தலையெடுத்து ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது.

ஏறத்தாள இரண்டரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நமது மண்ணில் அந்நிய அரசியல் ஆதிக்கம் கோலோச்சியத்தால் அதன் கலாசார, இலக்கிய, ஆத்மீக ஊடுருவல்களும், தாக்கங்களும், வீச்சுக்களும் நமது இலக்கியத்தின் மீதும், பண்பாட்டின் மீதும் ஏற்பட்டன.

அந்நியராட்சிக்கு அனுசரணையாக மாறியவர்கள், அந்நிய கலாசார மோகத்தில் மருண்டு மயங்கியவர்கள் சொந்த மண்ணின் பண்பையும், பண்பாட்டையும், இலக்கியப் பெருஞ் செல்வங்களையும் துச்சமாகக் கருதினர். தேசியப் பண்பும், தேசிய மரபும் வேரறுக்கப்பட்டு அந்நியப் பண்பாடு, நமது தேசத்தின் விளைநிலத்தில் காலூன்றி வளராத பரதேச நாகரிகம் நமது மக்களின் மேல், மத்திய தட்டுப் பகுதியினர் மத்தியில் செல்வாக்குப் பெற்றது.

இந்தப் பகுதியினரின் சீரழிவுப் பாதையையும், திரிபையும், பண்பாட்டுச் சோரத்தையும் எதிர்த்து நாவலப் பெருந்தகையும், அவருக்கு முன்னும், பின்னுமிருந்த தேசபக்தர்களும், மொழியபிமானிகளும் எதிர் நீச்சல் போட்டனர்.

அந்நிய ஆதிக்கம் ஏற்பட்ட நாள் தொட்டு அதற்கு ஆதரவாக அதன் பாதாரவிந்தம் தழுவி நின்ற 'நம்மவரும்', அதன் அரசியல், கலாசார ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்திய நம்மவரும் ஏககாலத்தில் தொடர்ந்து இருந்தே வந்திருக்கின்றனர்.

இந்த இரு முரண்பட்ட சக்திகளுக்கிடையில் நடந்த போராட்டத்தில், இயக்கத்தில் தேசிய உணர்வின் கொடுமுடியாகத் தோன்றினார் ஆறுமுகநாவலர்.

பறங்கியரின் செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடி வந்த ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு, அதே வேளையில் தமிழகத்தின் தாக்கத்திலிருந்தும் தன்னைத் தற்காத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழின் தாய்ப் பூமி தந்த பண்டைப் பெரும் இலக்கிய ஏடுகளைப் புதுக்கியும், திருத்தியும் வெளியிட்டு, தமிழ் இலக்கியத்தின் பொதுப் பரப்பைத் தனது அந்நிய ஆதிக்க எதிர்ப்புப் போரில் ஒரு ஆயுதமாக உபயோகித்த நாவலர், அதே வேளையில் ஈழத்து இலக்கியப் படைப்புகளை அவமதித்த, ஈழத்துத் தமிழறிஞர்களை அவமதித்த, யாழ்ப்பாணத் தமிழை அவமதித்த 'சென்னை மாகாணச் செருக்கர்களை எதிர்த்து கடும் போர் தொடுத்தார். ஈழத்திற்கென ஒரு இலக்கிய மரபும், தனித்துவம் பெற்ற ஈழத்துப் பாரம்பரியமும் இருக்கிறது என்பதை அறைந்து கூறி, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வெற்றிக் கொடியை உயரப்பிடித்தார்.

நாவலர் பரதேச மொழி, பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துத் தமிழுக்காகவும், தமிழ்ப் பண்பாட்டிற்காகவும் நடத்திய போராட்டம், தமிழகத்தின் செருக்கையும், செல்வாக்கையும் எதிர்த்து யாழ்ப்பாணத் தமிழின் சிறப்புக்காகவும் நடத்திய போராட்டம் சரித்திரத்தின் தேவையாகவும், வரலாற்றின் இயக்க நியதியாகவும் இருந்த அதே வேளையில், தேசிய இலக்கியத்தின், ஈழத்து மரபின் அடிநாதமாகவும் அமைந்தது.

நாடு சுதந்திரம் பெற்று, விடுதலைப் பாதையில் முன்னடந்து செல்கின்ற இன்று கூட நாவலர் எந்தப் பிரச்னைகளுக்கு, பிரச்னைகளின் தாக்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததோ அதே பிரச்னைகளுக்கே நாமும், நமது இலக்கியமும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால் இப்பிரச்னைகளின் வெளிப்பாடும், வீச்சுத்தன்மையும் மாறுபட்டு, புதிய உருப்பெற்றிருக்கலாம்.

'தமிழுக்கு உரிமை, அன்னை மொழிக்காக அறப்போர்' போன்ற கோஷங்கள் முழங்கப்படும் இன்று கூட நமது மக்களின் ஆங்கிலம் படித்த பகுதியினர் மத்தியில் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் பழித்து ஒதுக்கும் போக்கே நிலவுகிறது. அந்நிய பண்பாடுகளையும், இலக்கியங்களையும் பாவனை செய்யும் போக்கே நீடிக்கிறது.

நமது தேசிய எழுச்சியின், தேசிய கலாசார இலக்கிய விழிப்பின் பரம சத்துருவாக இன்னமும் இந்தப் போக்கே உள்ளது.

இந்த விதேசி மனோபாவத்தை, தேசிய விரோதப் போக்கை எதிர்த்து முற்றாக மாய்த்தொழிக்குமட்டும் தமிழ் இலக்கியத்தின் பரவலான வளர்ச்சி சாத்தியமில்லை.

ஏனென்றால் இந்தப் பகுதியினர் சமுதாயத்தில் ஆதிக்கமும், செல்வாக்கும் வகிக்கும்

பகுதியினராகும். காரியங்களைச் சாதிக்கக் கூடிய வாய்ப்புகளை இந்தப் பதிகு பெற்றிருப்பதுடன் இதன் மனப்போக்குகளும், சிந்தனை முறைகளுமே சமூகத்தில் ஊடுருவி மேலாதிக்கம் செலுத்துகின்றன. இதன் விதேசிப் பற்று, அந்நிய மோகம், சொந்தப் பண்பாட்டை துச்சமாகக் கருதுவது போன்ற தன்மைகள் இதன் செல்வாக்கு வட்டத்துக்குள் வரும் மக்கள் மத்தியிலும் இயல்வாகவே ஏற்படுகின்றது. இந்தப் பகுதிகள் மத்தியிலிருந்து வரும் எழுத்தாளர்களும், இந்தப் பகுதியினரின் இலக்கியத் தேவையைத் திருப்தி செய்ய எழுதும் எழுத்தாளர்களும் இந்த தேசிய விரோதச் சகதியிலேயே புதைந்து விடுகிறார்கள். இவர்கள் சிருஷ்டிக்கும் இலக்கியமும் நமது பண்பாட்டு மரபில் வராது, அந்நியச் சாயல் பெற்று நமது மக்களுக்கும், நமது இலக்கியத்திற்கும் புறம்பானதாகவே அமைகிறது.

ஆகவே அந்நிய கலாசார, ஆத்மீக செல்வாக்கை எதிர்த்து தேசிய கலாசார, ஆத்மீக முத்திரை பதிந்த தேசியப் பற்றும், மொழிப் பற்றும் நமது மக்களின் சகல பகுதியினர் மத்தியிலும், சகல எழுத்தாளர்கள் மத்தியிலும் பூரணமாகச் சுடர்விடுவது நமது இலக்கிய வளர்ச்சிக்கான முன் தேவையும், முதல் நிபந்தனையுமாகும். தேசிய கலாசாரத்திற்கும், தேசிய இலக்கியத்திற்குமான போராட்டம் இலக்கிய வளர்ச்சிப் பணியில் முதல் ஸ்தானத்தைப் பெறுகிறது.

இதை அடுத்து, தமிழ்நாட்டின் இலக்கியத் தாக்கத்தை எதிர்த்துச் சமாளிக்கும் பிரச்சினை மது இலக்கியத்தின் முன்னுள்ளது. தமிழ், பண்பாடு என்ற பற்றுக் கோடுகளால் தமிழகத்துடன் நாம் ஆத்மார்த்த ரீதியாகப் பிரிக்கப்பட முடியாது ஒன்றித்து நிற்கின்றோம் என்ற அதே வேளையில் தமிழ் நாட்டிலிருந்து இங்கு கணக்கின்றி இறக்குமதியாகும் சஞ்சிகைகளும், வெளியீடுகளும் நமது இலக்கியத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளன. தென் இந்திய புத்தக-சஞ்சிகை வர்த்தகத் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் ஈழத்தில் தரமான இலக்கிய சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவர முடியாத, வெளியீட்டு நிறுவனங்கள் நிலைத்து நிற்க முடியாத, கவலைக்கிடமான நிலை நீடிக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்டுமட்டும் நமது நாட்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி கனவுகூடக் காணமுடியாது.

தமிழகத்து நல்ல இலக்கியப் படைப்புகளிலிருந்து நமது மக்களோ அல்லது எழுத்தாளர்களோ எந்தக் காரணத்தைக் கொண்டும் துண்டு பட்டுப் போகமுடியாது, போகக் கூடாது. ஆனால் தமிழ் நாட்டிலிருந்து வந்து குவியும் சோதா இலக்கியங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். நமது நாட்டுப் புத்தக, சஞ்சிகைச் சந்தையில் தமிழகத்து சஞ்சிகைகளும், வெளியீடுகளும் ஏகபோகம் வகிப்பதற்கு முடிவுகட்டியாக வேண்டும். இந்தியாவில் இன்று அமுலிலிருக்கும் 'கோட்டா' முறை போன்ற ஒரு சட்ட ரீதியான ஏற்பாட்டைக் கொண்டுவர நாம் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும்.

தமிழகத்து வர்த்தகப் போட்டியிலிருந்து நமக்குத் தக்க, சட்டரீதியான பாதுகாப்பு இல்லாதிருக்குமட்டும் ஈழத்தில் நல்ல தரமுள்ள சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருவதும், பரவலாக வெளியீட்டு நிலையங்கள் தோன்றி இயங்குவதும் சாத்தியமற்றதாகும்.

தமிழகத்துப் புத்தக, சஞ்சிகைப் போட்டிக்கும், ஏகபோகத்திற்கும் முடிவு கட்டுவது மட்டும் போதாது. இந்த ஆரோக்கியமான சாதகமான சூழ்நிலையைத் தொடர்ந்து ஈழத்தில் இலக்கிய சஞ்சிகைகளும், வெளியீட்டு நிலையங்களும் பரவலாகத் தோன்ற வேண்டும்.

ஈழத்துச் சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் தனித்தொகுப்புக்கள் தொடர்ச்சியாக வெளிவரவேண்டும். வருடா வருடம் அந்தந்த வருடத்தின் சிறந்த சிறுகதை படைப்புக்களைக் கொண்ட தொகுப்புக்களும் வெளிவர வேண்டும்.

ஈழத்து நாவல்கள் பெரும்பாலும் நூல் வடிவு பெறுமலே இருக்கின்றன. பத்திரிகைகளில் வெளிவரும் தரமான தொடர் நாவல்களை நூல்களாக்குவதுடன், வெளியீட்டிற்கான முழுமையான நாவல்களின் ஆக்கத்திலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். இன்றைய சகாப்தத்தில் இலக்கிய வெளிப்பாட்டின் பிரதான வடிவம் நாவல் என்பதை ஈழத்து இலக்கிய உலகும் நன்கு உணர்வது அவசியம்.

நமது நாட்டில் தரமுள்ள ஏராளமான கவிஞர்கள் உள்ளனர். இவர்களின் படைப்புகள் பெரும்பாலும் நூல் வடிவு பெறவில்லை. இந்தக் குறை உடனடியாக நீக்கப்படவேண்டும். தனிக் கவிதைகளின் தொகுப்புக்களும்' காவியத் தொகுப்புக்களும் வெளிவரவேண்டும்.

உணர்வு இலக்கிய வெளிப்பாடுகளைப் போலவே, நேரடியான அறிவு வளர்ச்சிச் சாதனமாக உள்ள கட்டுரை இலக்கியத்தின் வளர்ச்சியிலும் அதிக சிரத்தை காட்டப்படு

வது அவசியம். இலங்கையில் கட்டுரை இலக்கியம் தரமான முதிர்ச்சி பெற்றிருந்த போதிலும் கட்டுரைத் தொகுப்புக்கள் வெளிவருவது குறைவாகவே உள்ளது.

நமது இலக்கியத்தின் முக்கியமான பிரிவுகளில் ஒன்று குழந்தை இலக்கியம். முதிர்ச்சி பெற்ற ஈழத்து இலக்கிய அரங்கம் இந்த இலக்கியத் துறைக்கு அதன் உரித்தான ஸ்தானத்தையும், ஆர்வத்தையும் அளிக்கவில்லை. குழந்தை இலக்கியங்கள் பரவலாக வெளிவருவது மிகமிக அவசியம்.

கிராமிய இலக்கியம், அறிவியல் துறைஇலக்கியம், மனோதத்துவ இலக்கியம் நகைச்சுவை இலக்கியம், மற்றும் இலக்கியத் துறைகளின் வெளிப்படுகளிலும் அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய இலக்கியத் துறைகளில் தரமான படைப்புகளை ஆக்கித் தரக்கூடிய எழுத்தாளர்கள் நம் நாட்டில் உள்ளனர். இவர்களை எழுதத் தூண்டக் கூடிய சாதனங்களை உருவாக்குவதே நம் முன்னுள்ள பிரதான பணி.

இந்தப் பணியை நிறைவேற்ற நமது நாட்டில் பரவலாகப் பதிப்பகங்கள் தோன்ற வேண்டும். எழுத்தாளர் சங்கங்கள், எழுத்தாளர்களின் கூட்டுறவுகள், தனியார் நிறுவனங்கள் இந்தப் பெரு முயற்சியில் ஈடுபடலாம்.

இதற்கு இந்த முயற்சிகள் வெற்றியீட்டக்கூடிய உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். அரசாங்கம் தேசிய கல்லூரிகளுக்காகவும், நூல் நிலையங்களுக்காகவும், ஜனசமூக நிலையங்களுக்காகவும் தரமான நூல்களையும், சஞ்சிகைகளையும் ஒழுங்காக வாங்கும் ஒரு ஏற்பாடே இந்த உத்தரவாதத்தை அளிக்கக்கூடியது.

இந்த ஒரு ஒழுங்கை ஏற்கச் செய்ய நாம் அரசினரை நிர்ப்பந்திக்க வேண்டும்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதையும், இலக்கியம் பல்கிப் பெருகுவதற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்குவதையும் தொடர்ந்து அதாவது இலக்கியத்தின் லௌகீக வளர்ச்சிக்கான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதைத் தொடர்ந்து, இரண்டாவது பிரச்னை, அதாவது இலக்கியத்தின் ஆத்மீக வளர்ச்சி பற்றிய பிரச்னை இயல்பாகவும், தவிர்க்கப்பட முடியாத நியதியாகவும் தோன்றுகின்றது.

மேற் குறிப்பிட்ட இலக்கியத்தின் இந்த லௌகீக வளர்ச்சி ஏன்? இந்த வளர்ச்சி மூலம் நாம் எதைச் சாதிக்க வேண்டும்? இலக்கிய வளர்ச்சியின் நோக்கம் என்ன? நமது தேசிய இலக்கியத்தின் முன்னுள்ள கடமைகளும், பணிகளும் என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கேள்விகளுக்கு விடை காண முனையும் போதுதான் இலக்கியம் பற்றிய கருத்துப் போராட்டம் தோன்றுகிறது. இது தவிர்க்கப்படமுடியாத காலத்தின் தேவை, வரலாற்றின் நியதி. ஏனென்றால் மேற்கண்ட கேள்விகளுக்கு விடை காண விழையும் முனைப்பில் இரண்டு போக்குகள், இரண்டு பார்வைகள் தோன்றுகின்றன.

ஒன்று, இலக்கியத்தை வெறும் அழகுணர்ச்சிப் பொருளாக மட்டும் கருதுகிறது. இலக்கியத்தில் வடிவத்திற்கு, உருவத்திற்கு மட்டும் இது முக்கியத்துவம் கொடுக்கிறது. இலக்கியம் இலக்கியத்திற்காகவே என்பதே இதன் பிரதான சித்தாந்தம்.

இலக்கியத்திற்கு எந்தவிதமான இலட்சியங்களும் தேவையில்லை, நோக்கங்களும் இருக்கவேண்டியதில்லை, அது மக்களின் வாழ்வையோ, வாழ்க்கைப் பிரச்னைகளையோ தொட்டு நிற்கப்படாது, தேசத்தின் பொதுப் பிரச்னைகளுக்கும், காலத்தின் பிரச்னைகளுக்கும் இலக்கியத்திற்கும் எவ்வித ஒட்டுறவுமிருக்கப்படாது, தேசியக் கடமைகள், மக்களின் தேவைகள் என்பன இலக்கியத்தைப் பொறுத்தளவில் 'புறம்பான விவகாரங்கள்'. இலக்கியத்தில் அரசியல், சமுதாய, ஆத்மீகப் பிரச்னைகளைப் புகுத்தப்படாது என்பனவே இந்தப் போக்கின் முக்கிய தன்மைகள்.

இதற்கு நேர்மாறான கருத்தோட்டத்தை இரண்டாவது போக்கு முன்வைக்கிறது.

இலக்கியத்தில் உருவம் முக்கிய பாத்திரம் வகிக்கிறது என்ற போதிலும் இலக்கியத்தின் ஜீவகோளமாக அடிநாதமாக இலக்கியத்தின் உள்ளடக்கம் இருக்கவேண்டுமென்று இந்தப் போக்கு வலியுறுத்துகிறது.

இலக்கியத்திற்கு உயர்ந்த இலட்சியங்களும், நோக்கங்களும் இருக்க வேண்டும், அது மக்களின் வாழ்வோடும் வாழ்க்கைப் பிரச்னைகளோடும் தொட்டு, தொடர்புறுது நிற்கவேண்டும், தேசத்தின் பொதுப் பிரச்னைகளுடனும், காலத்தின் பிரச்னைகளுடனும் அது இரண்டறக் கலந்து ஐக்கியப்படவேண்டும். தேசிய கடமைகளின், மக்களது தேவைகளின் பிரதிபலிப்பே இலக்கியம், இலக்கியம் அரசியல், சமுதாய, ஆத்மீகக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த இரண்டாவது போக்குக் கூறுகிறது.

ஆகவே, இந்த இருபோக்குகளையும் சற்று விசாலமாகப் பார்ப்பது அவசியம்.

இலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும் என்ற பிரச்னையைப் பொறுத்த மட்டில் இது நூறுண்டு நூறுண்டு காலமாக இலக்கியத்துறையில் நடைபெறும் ஒரு போராட்டமாக இருந்த போதிலும், சற்றுச் சிக்கலானது என்ற மலைப்பை ஆரம்பத்தில் கொடுத்த போதிலும் உண்மையில் இது இலகுவில் முடிச்சவிழ்க்கக் கூடிய ஒன்றே.

இலக்கியத்தில் உருவம் வகிக்கும் முக்கிய பாத்திரத்தை யாரும் மறுப்பதோ, குறைத்துப் பார்ப்பதோ கிடையாது. ஒரு கதா வஸ்து, அல்லது இலக்கியக் கரு இலக்கிய உருவத்தைப் பெறும்போது தான் அது இலக்கியம் என்ற அந்தஸ்தை அடைகிறது. எனவே இலக்கிய உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் இலக்கியத்தில் உருவத்தின் முக்கிய பாத்திரத்தை எந்த நிலையிலும் சிறுமைப்படுத்துவது கிடையாது. இலக்கிய உருவத்தைப் பெற்ற ஒரு உள்ளடக்கம், அல்லது இலக்கிய வஸ்துத்தான் இலக்கியம் என்ற வட்டத்துள் வரக்கூடியது எனும் நிலையிலிருந்தே அவர்கள் மேலே செல்கிறார்கள். ஆகவே இலக்கியத்தில் உள்ளடக்கம் பற்றிப் பேசுபவர்களுக்கு இலக்கிய உருவத்துடன் எவ்வித சச்சரவும் கிடையாது.

இதற்கு மாறாக இந்தப் பிரச்னையை சிக்கல் படுத்தி, குழப்பிய தற்கான முழுப் பழியும் இலக்கிய உருவவாதிகளையே சாரும். ஏனென்றால் இவர்கள் இலக்கியத்தில் உருவத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இலக்கியத்தில் உள்ளடக்கம் வகிக்கும் பாத்திரத்தை ஓங்கி நிராகரிக்கிறார்கள்.

இலக்கியச் சடல (உருவ) வாதிகளின் இந்தப் போக்கு இலக்கியம் பற்றிய தனிமையான ஒரு பார்வையிலிருந்து எழும் ஒன்றா? இது தற்செயலானதா? சுத்த சுயம் பிரகாசமான 'இலக்கிய' வாதமா? இல்லை. அதற்கு மாறாக இந்தப் போக்கு இந்தச் சடலவாதிகளின் அரசியல், பொருளாதார, சமூகத் தேவைகளிலிருந்தே எழுகிறது.

மனித சமுதாயத்தின் வரலாறு சமுதாயத்தின் முரண்பட்ட சக்திகளுக்கிடையில் நடைபெற்ற போராட்டத்தின் வரலாறே என்று சமுதாயம் பற்றிய விஞ்ஞானக் கணிப்புக் கூறுகிறது. இது போலவே இலக்கியத்தின் வரலாறு மனித சமுதாயத்தின் வரலாறாக, மனித சமுதாயத்தின் முரண்பட்ட சக்திகளுக்கிடையில் நடந்த போராட்டத்தின் பிரதிபலிப்பாவே இருந்துள்ளது.

மனித சமுதாயத்தின் வரலாறு தெரிந்த யாரும், உலக இலக்கியங்கள் அத்தனையினதும் அடிநாதமாக ஓடும் இலக்கியத்தின் அடிச்சரடு தெரிந்த யாரும் இந்த சரித்திர உண்மையை மறுக்கமாட்டார்கள்.

உலகம் இதுவரை கண்ட புரட்சிகளின், மாற்றங்களின் முன்னோடிகளாக மாபெரும் இலக்கியங்கள் தோன்றின. 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பது போல பிரஞ்சுப் புரட்சி, தொழிற் புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போர், அக்டோபர் புரட்சி, இந்திய விடுதலைப் போர் ஆகியவற்றின் முன்னோடிகளாக மாபெரும் இலக்கிய சிருஷ்டி நாதர்கள் திகழ்ந்துள்ளார்கள்.

வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்திய சக்திகளினதும், வர்க்கங்களினதும் சாவுமணியாக இலக்கியம் இருந்து வந்துள்ளது. தர்மத்தின் ஆவேசக் குரலாகவும், நீதியின் போர்க்கீதமாகவும், உண்மையின் ஓங்கார ஒலியாகவும், சரித்திரத்தின் முன்னடப்பு நாதமாகவும், மக்களின் மனச்சாட்சியாகவும் இலக்கியம் எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கிறது.

நீதிக்கும் தர்மத்திற்குமான போராட்டத்தில் மக்களைத் திரட்டும் அற்புத ஆற்றல் மிகு சக்தியாக இலக்கியம் இருப்பதைக் கண்டு பயந்து நடுநடுங்கிய அநீதிக்காரர்களும், அதர்மக்காரர்களும், தமது நீச வாழ்க்கையும், நெறிகெட்ட வர்க்க ஆதிக்கமும் இலக்கியத்தின் சாபம் பெற்று அழிவதைத் தடுப்பதற்காக இலக்கியத்தை மக்களிடமிருந்து பறித்துத் தனிமைப்படுத்த தமது சொந்த தத்துவங்களைக் கண்டுபிடித்தார்கள்.

இந்தத் தத்துவ வெளிப்பாடுகள்தான் இலக்கியம் இலக்கியத்திற்காக என்பதும், இலக்கியத்தில் உள்ளடக்கத்தை நிராகரித்து உருவம் மட்டுமே முக்கியம் என்பதும், இலக்கியத்திற்கு சமூக, வாழ்க்கைப் பிரச்சினைகள் புறம்பானவை என்பதும்.

இலக்கியத்தின் உள்ளடக்கத்தையும், அதன் தேசிய, சமூகப் பணிகளையும், தார்மீகப் பெருங் கடனையும் மறுப்பவர்கள் உண்மையில் நமது மாபெரும் இலக்கியங்களினதும், உலக இலக்கியங்களினதும் பாரம்பரியத்தை மறுப்பவர்களாகும். இவற்றின் உன்னதமான அடி ஒட்டி வர மறுப்பவர்களாகும்.

நமது மாபெரும் இலக்கியங்கள் அனைத்தும் அவை எழுந்த காலத்தின் குரலாகவும், தமது காலத்து வாழ்வின் பிரதிபலிப்பாகவும், தமது மக்களின் உயர்ந்த ஆசை அபிலாஷைகளையும், இலட்சியத் துடிப்புக்களையும், ஜனநாயக உணர்வோட்டங்களையும் சித்திரிப்பனவாகவுமே இருந்

துள்ளன. கபிலர் முதல் நக்கீரர் வரை சங்க இலக்கியம் படைத்த நல்லிசைப் புலவர் பெருமக்கள் தமது காலத்து வாழ்க்கையையும், தமது காலத்தில் சமுதாயத்தில் தோன்றிய கருத்தோட்டங்களேயுமே தமது இன்னிசைப் பாடல்களில் கொலுவேற்றிஞர்கள். இலக்கண மாமேதையான தொல்காப்பியனே மக்களின் வாழ்க்கை முறைக்குத் தனது பொருளதிகாரத்திலே சூத்திர வரையறுப்பு அளித்தான். வான் புகழ் கொண்ட வள்ளுவனே சமூக, அரசு, வாழ்வு பற்றிய நல்லறக் கருத்துக்களேயே தனது குறளில் வைத்தான். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமோ 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்'ருகத் தோன்றியது. அறத்தின் வெற்றிக்குக் காவியம் பாடிய கவிக் கடலான கம்பனே உடையாரும் இல்லாருமற்ற ஒரு சமுதாயக் காட்சியையே தனது பேரிலக்கியத்தில் முன்வைக்கிருன். 'சாதி இரண்டொழிய வேறில்லே' என்ற சமத்துவத்தின் நீதிக் குரலாகத் திகழ்ந்த தமிழின் அன்னேயாம் அவ்வைப் பிராட்டியோ 'நாலாவான் அரசே அரசு' என்று சூத்திரர்களின் – உழைப்பாளர்களின் அரசுக்கு இலக்கியத்தில் நல்வரவு கூறிப் போந்தாள். தேவாரம், திவ்வியப் பிரபந்தம், பள்ளு, பலவகைச் சிந்து ஆகிய அனைத்தும் காலத்தின் குரலேயே, தர்மத்தின் ஆவேசக் குரலேயே, வாழ்வின் விழுமிய குரலேயே ஒலிகின்றன. புரட்சிப் பாவலன் பாரதியோ தனது சகாப்தத்தின்தேசிய, சமுதாய, அரசியல் தேவைகளேயே 'பாட்டுத் திறத்தாலே' பாலித்தான். நமது நாவலப் பெருந்தகையோ அந்நிய கலாசார ஆத்மீக எதிர்ப்புப் போராட்டத்தின் கேடயமாக இலக்கியத்தை உபயோகித்தார்.

இவை அனைத்தும் நமது மாபெரும் இலக்கிய சம்பத்துக்கள் கருத்திற்கு, உள்ளடக்கத்திற்கு அழுத்தமும், வலுவும் கொடுத்து வந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. காலத்தின் குரலாக, அறத்தின் தர்மாவேசமாக, சமுதாயத்தின் பிரதிபலிப்பாக, லட்சிய வாழ்வைக் கோடி காட்டி நிற்கும் வரைவிலக்கணமாகவே இலக்கியத்தை சங்ககாலச் சான்ருேர் முதல் பாரதி ஈருக நமது நல்லிலக்கியப் பெரும் புலவர்கள் கருதி, கையாண்டு வந்துள்ளார்கள்.

இலக்கியத்தைக் காலத்தின் குரலாகவும் காலத்தின் தேவையைப் பிரதிபலிக்கும் கருவியாகவும், சமுதாயத்தை மாற்றி அமைக்கும் சாதனமாகவும், வாழ்வைச் செம்மைப் படுத்தும் ஆயுதமாகவும் கருதும் இந்த எமது சொந்தப் பண்பாட்டின் பாரம்பரியத்தில் நின்று நமது தேசிய இலக்கியத்தின் கடமைகளேப் பார்ப்போம்.

இந்தக் கடமைகளே நிறைவேற்ற மேற்கூறிய நமது இலக்கியப் பாரம்பரியத்திற்கு விரோதமாக எழும் போக்குகளே முறியடிக்க வேண்டும். இலக்கியத்தை அறத்திலிருந்து, வாழ்விலிருந்து, சமுதாயப் பணியிலிருந்து துண்டாட முனையும் இலக்கியத் திரிபு வாதங்களேயும், கலாவதியாகிவிட்ட பொய்மைக் கருத்துக்களேயும், வழிமறிச்சான் போக்குகளேயும் எதிர்த்துப் போராடி, மாய்த்தொழிக்க வேண்டும்.

நமது மரபு வழி வரும் நல்லிலக்கியத்திற்கான இந்தக் கருத்துப் போராட்டம் மிக மிக முக்கியமானது.

ஏனென்ருல் இதில்தான் நமது இலக்கியங்கள் அறத்தின் பாற்பட்டவையாக, வாழ்வில் பற்றுக்கோடுடையவையாக, மனிதனை நேசிக்கும் மனிதாபிமானத் ததும்பு ஏறியவையாக, காலத்தின் தேவைகளே நிறைவேற்றுபவையாக இருக்கப் போகின்றனவா இல்லேயா என்பது தங்கியுள்ளது.

இலக்கியத்தின் இந்தப் பெரு நோக்கங்களே நமது இலக்கியம் எவ்வாறு நிறைவேற்றப் போகிறது? நிறைவேற்ற முடியும்? நிறைவேற்ற வேண்டும்?

இங்குதான் தேசிய இலக்கியம், யதார்த்த இலக்கியம், ஜனநாயக யதார்த்த இலக்கியம், சோஷலிஸ யதார்த்த இலக்கியம் என்ற இலக்கியக் கோட்பாடுகள் தோன்றுகின்றன.

இலக்கியத்தைக் காலத்தின் குரலாகவும், தேசத்தின் பிரச்சினேகளுடன் ஐக்கியப்பட்டு தேசிய பணிகளே நிறைவேற்றும் கருவியாகவும் கையாளும்போது இலக்கியம் தேசிய உருவையும், உள்ளடக்கத்தையும் பெறுகிறது. காதல், தாய்மை, தார்மீகம், வீரம் போன்ற பொதுப் படையான சில உணர்ச்சிகளினதும், மற்றும் பொதுமையான சில மனித ஆசாபாசங்களினதும்வெளிப்பாடாகமட்டுமேஇலக்கியம்இருக்கும் நிலேயிலிருந்துவிலகி,தேசிய வாழ்வையும், தேசத்தின் பொதுப் பிரச்சினேகளேயும் இலக்கியக் கதாவஸ்தாக்கும் முனைப்பிலே தேசிய இலக்கியம் பிறக்கிறது.

நாடு பாரார்க்கு அடிமைப்பட்ட நிலேயிலும், அல்லது அடிமைத் தளேயை அறுத்தெறிந்து தேசிய சுதந்திரத்தைப் பூரணப்படுத்தப் போராடிக் கொண்டிருக்கும் நிலேயிலும் தேசிய உணர்வின் வெளிப்பாடாக மட்டுமல்லாமல், தேசியப் பிரச்சினேகளின் வெளிப்பாடாகவும் இலக்கியம் அமைவது காலத்தின் தேவையாகிறது.

சொந்த நாட்டின் தனித்துவ பாரம்பரிய-மரபு முத்திரையை இலக்கியத்தில் அழுத்தமாகப் பதிக்கவும், தேசியத் தேவைகளின் பிரதிபிம்பமாக இலக்கியத்தை உயர்த்தவும் இந்தக் கோஷம் அவசியமாகிறது. அப்பொழுது தான் மரபு வழியின் அடியொற்றி வந்து மக்

களின் பாரம்பரிய உணர்வுடன் கலந்தும், தேசியப் பிரச்சினைகளை தொட்டு மக்களின் தேவைகளை ஈடுசெய்துமே இலக்கியம் வளர முடியும்.

தேசிய உருவைப் பெருத இலக்கியம் மக்களுக்கு அந்நியமானதாக, மக்களுடன் ஆத்மார்த்த ரீதியாக ஐக்கியப்பட முடியாததாகவும்; தேசிய உள்ளடக்கத்தை கொண்டிராத இலக்கியம் தேசத்திற்கும், மக்களுக்கும் பயன்படாததாக, தேசியக் கடனை நிறைவேற்ருததாகவும் அமையும்.

இது இலக்கியத்தை தேசத்தினதும். தேசத்து மக்களினதும் வாழ்விலிருந்து பிரித்தெறியும். இதன் மூலம் ஒரு இலக்கியம் அது உருவாகும் காலகட்டத்தில் நிறைவேற்றவேண்டிய புனிதமான கடமையை நிறைவேற்ருது போய்விடும்.

ஆகவே இலக்கியம் அது உருவாகும் காலகட்டத்தில் அதன் சரித்திர, தார்மீகக் கடனை நிறைவேற்ற வேண்டுமானல் அது தேசிய வடிவையும், தேசிய உள்ளடக்க வலிவையும் பெற்றுருப்பது மீறமுடியாத அவசியமாகிறது.

சொந்த மண்ணின் வாசனையுடன், சொந்த மரபின் வழி நின்று தேசத்தினதும், தேசத்து மக்களினதும்,பிரச்சினைகளையும், தேவைகளையும் ஆசை அபிலாஷைகளையும் இலக்கியம் பிரதிபலிப்பதற்கு தேசிய இலக்கியம் என்ற சிந்தனையினதும், சிந்தாந்தத்தினதும் தேவை வரலாற்றின் விதியாக எழுகிறது.

இந்த கோஷத்தின் தவிர்க்கமுடியாத, தர்க்கரீதியான அடுத்த கட்டமாக யதார்த்த இலக்கியம் என்ற இலக்கியக் கோட்பாடு உதயமாகிறது.

தேசிய இலக்கியம் தேசியப் பிரச்சினைகளையும், மக்களின் வாழ்வையும் பிரதிபலித்து நிற்கும் இலக்கியமாகும். தேசியப் பிரச்சினைகளையும். மக்களின் வாழ்வையும் பிரதிபலிக்கிற இலக்கியம் அதன் தேசியக் கடமையை நிறைவேற்ற தேசிய வாழ்வையும், மக்களின் வாழ்வையும் உண்மையின் பகைப்புலத்தில் வைத்து நேர்மையாகவும், நிதர்சனமாகவும் சித்திரிக்கவேண்டும். இலக்கியம் வாழ்வைச் சித்திரிக்கும்போது பொய்மையின் பிரதிபலிப்பாக அது இருக்கமுடியாது. இலக்கியத்தில் கற்பனைத் திறனும், சிந்தனை வளமும் அவசியம் என்ற போதிலும் இந்தக் கற்பனையும், சிந்தனையும் சத்தியத்திற்குப் புறம்பானதாக, உண்மையின் புரட்டாக, பொய்மையின் வெளிப்பாடாக அமையப்படாது.

உண்மை என்ற சத்திய ஒளியின் வெளிச்சத்தில் நேர்மையுடன் வாழ்வைச் சித்திரிக்கும் போது யதார்த்த இலக்கியம் பிறக்கிறது.

பொய்யர்கள், புரட்டர்கள், உண்மையைக் காண முடியாத அந்தகர்கள் தவிர உண்மையையும், சத்தியத்தையும் விரும்பும் நேர்மையாளர்கள் இலக்கியத்தில், வாழ்வின் நேர்மைப் பிரதிபலிப்பான யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வர்.

வாழ்வின் பிரதி''லிப்பே இலக்கியம் என்ற நிலையில், யதார்த்த இலக்கியம வாழ்வை முழுமையாகவும், நேர்மையாகவும், கூர்மையாகவும் பிரதிபலிக்கிறது. சமுதாய வாழ்வின் சகல முனைகளையும், முனைப்புகளையும்; சமூக அமைப்பின் சகல வடிவங்களையும்; மனித வாழ்வின் சகல உணர்வு வெளிப்பாடுகளையும் யதார்த்த இலக்கியம் சித்திரிக்கிறது. மனிதனதும், சமூகத்தினதும் சுகதுக்கங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், ஆசை அபிலாஷைகளையும், ஆசாபாசங்களையும், இன்பதுன்பங்களையும், எழுச்சி வீழ்ச்சிகளையும், ரசபாவங்களையும் உண்மையுடனும், நேர்மையுடனும், தீட்சண்யத்துடனும், பண்புடனும் சித்திரிப்பதே யதார்த்த இலக்கியம்.

இலக்கியம் தேசிய முத்திரை பதிந்து, தேசியப் பிரச்சினைகளினது வெளியீடாக அமையவேண்டும் என்ற சிந்தனையின் ஒரு தர்க்கவிதியான, தொடர்ச்சியான முடிவு அல்லது தேவையே யதார்த்த இலக்கியம் என்ற கோஷம்.

தேசிய வடிவுபெற்று தேசியப் பிரச்சினைகளின் வெளிப்பாடாகவும், சமுதாய முத்திரை பதிந்து உண்மையின் பிரதிபலிப்பாகவும் இலக்கியம் அமைவதுடன் அதன் புனிதமான பணி, சரித்திர ரீதியான கடமை நிறைவேறிவிடுகிறதா? ஒரு பிரச்சினையை தொட்டுக்காட்டுவதன் மூலம் அதற்கு தீர்வு கிடைத்துவிடாது. ஒரு உண்மையை சுட்டிக் காட்டுவதன் மூலம் அதற்கு விடிவு பிறந்துவிடாது.

தேசியப் பிரச்சினைகளை, சமூகப் பிரச்சினைகளை, மனிதப் பிரச்சினைகளை தொட்டுக்காட்டும் இலக்கியம், அந்தப் பிரச்சினைகளை யதார்த்தமாகச் சித்திரிப்பதுடன், அவற்றிற்கு தீர்வு காணும், விடிவுகாணும் வழி மார்க்கத்தையும் காட்டவேண்டும்.

தீண்டாமையின் அக்கிரமத்தை நெஞ்சையள்ளும் விதத்தில் இலக்கியம் வர்ணித்துவிடுவதால் நசுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை கிடைத்துவிடாது. விதவையின் உணர்ச்சிகளை உள்ளம் கொதிக்க இலக்கியத்தில் விவரிப்பதால் அவளுக்கு வாழ்வு கிடைத்துவிடாது. ஒரு ஏழையின் துன்பத்தை நெஞ்சையுருக்கும் வகையில் சித்திரிப்பதால் அவனின் கண்ணீர்

துடைபட்டு விடாது. தொழிலாளியின் துயரை வர்ணிப்பதால் அவனது வர்க்கம் வளம்பெற்றுவிடாது. பணக்காரர்களின் முதலாளிகளின், அக்கிரமங்களைப் படம் பிடிப்பதால் மட்டும் இந்தச் சமுதாய விரோதிகளின் அநியாயம் மாய்ந்துவிடாது.

அதற்கு மாறாக தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்கும் எதிராக இழைக்கப்படும் சகல கொடுமைகளையும், அநீதிகளையும் எதிர்த்து விடுதலைக்காகவும், விடிவுக்காகவும் போராட இலக்கியம் மக்களைச் செயலுக்குத் தூண்ட வேண்டும். மனிதனும், சமூகமும் சகல விதமான அடிமைத் தனத்திலிருந்தும், சுரண்டலிலிருந்தும், ஒடுக்க முறையிலிருந்தும் விமோசனம் பெற, சகலவிதமான சமுதாயத் தீம்புகளுக்கும், அதர்மங்களுக்கும் முத்தாய்ப்பு வைக்க, மனிதனின், மானிதத்தின் வெற்றிக் கீதத்தை முழக்கி மனிதனுக்கு போராட உந்துவதும், இத்தப் புண்ணிய போரில் வெற்றியீட்ட வழி காட்டி நிற்பதுமே இலக்கியத்தின் தார்மீகக் கடன்.

இந்தக் கடனை நிறைவேற்ற இலக்கியம் முனையும் போது சோஷலிஸ யதார்த்த இலக்கியம் காலத்தின் தேவையாகிறது.

மனிதனின் பூரண விடுதலைக்கு, சமுதாயத்தின் இறுதி விமோசனத்திற்கு, வாழ்வின் முழுமையான மலர்ச்சிக்கு, மானிதத்தின் வெற்றிகுப் புதிய சமுதாயத்தைச் சமைக்க மனிதனைத் தூண்டும் இந்த இலக்கியக் கோட்பாடு அவசியமாகிறது.

தேசியப் பிரச்னைகளைத் தொட்டு, யதார்த்த வாழ்வைச் சித்திரித்து உதயமாகும் தேசிய, யதார்த்த இலக்கியம் மனிதனின் விமோசனத்துக்குக் கோடிகாட்டி நிற்கும் சோஷலிஸ யதார்த்த இலக்கியமாகப் பரிணமிக்கிறது.

ஆனல் தேசிய, யதார்த்த இலக்கியம் தவிர்க்கப்பட முடியாது, தர்க்க நியதியாக சோஷலிஸ யதார்த்த இலக்கியக் கட்டத்திற்கு வருவது சரித்திர விதியாக இருந்த போதிலும், நாட்டுக்கு நாடு அந்சந்த நாட்டின் சூழ்நிலைக்கும், தேவைக்கும் ஏற்ப இலக்கியத்தின் பணியும் அமைவது அவசியமாகிறது.

சுதந்திரத்திற்குப் போராடுகிற, அல்லது வென்றெடுத்த சுதந்திரத்தைப் பூரணப் படுத்த முனைகிற இலங்கை உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகளது இலக்கியம் தேசிய ஜனநாயகக் கடமையையே நிறைவேற்ற வேண்டியுள்ளது. வாழ்வோடும், தேசியக் கடமைகளோடும் ஐக்கியப்பட்டு நிற்கும் இலகிக்யம் அந்தந்தக்காலகட்டத்தின்தேசியத்தேவைகளையும், கடமைகளையுமே பூர்த்தி செய்யக் கடப்பாடுடையது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் சோஷலிஸத்திற்கு முந்திய கட்டமான, தேசிய ஜனநாயகப் பணிகளை நிறைவேற்றுவதே முன்னிற்கிறது. இலக்கியமும் இந்த நியதிக்கு உட்பட்டதே.

ஆகவே தேசிய, ஜனநாயகப் பணிகளை நிறைவேற்றும் கடமையைக் கொண்ட நமது இலக்கியம் ஜனநாயக யதார்த்த இலக்கியக் கோட்பாட்டையே சாரும்.

இந்த நமது தேசத் தேவையை ஒட்டிய கோட்பாட்டிலிருந்து நமது இலக்கியத்தின் முன்னுள்ள மிக முக்கிபமான கடமைகளைப் பார்ப்போம்.

ஒன்று, பெற்ற தேசிய சுதந்திரத்தை பூரணப்படுத்த நமது இலக்கியம் மக்களைத் தூண்டவேண்டும். அதாவது பொருளாதார, அரசியல், கலாசார துறைகளில் நீடிக்கும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் எச்சசொச்சங்களையும் ஒழித்துக்கட்டி தேசிய சுதந்திரத்தை சகல துறைகளிலும் முழுமைப்படுத்த மக்களை முன்னடத்த வேண்டும்.

இரண்டு, நிலப் பிரபுத்துவத்தின் எஞ்சியுள்ள ஆதிக்கத்திற்கும், அதன் வெளிப்பாடான பிற்போக்குச் சமுதாய கண்ணோட்டங்களுக்கும் முடிவு கட்ட முனைவது.

மூன்று, மிலேச்சனத்தின் சின்னமாக இன்னமும் நீடிக்கும் சாதி அமைப்புக்கு, தீண்டாமைக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்க மக்களைத் தட்டி எழுப்புவது.

நான்கு, பெண் அடிமைத் தனத்தை அதன் சகல வடிவங்களிலும் ஒழித்துக்கட்டத் தூண்டுவது.

ஐந்து, வேலையில்லாத் திண்டாட்டம், வீடில்லாத் திண்டாட்டம், சமூகப் பாதுகாப்பற்ற அவலம், போன்ற சமூகப் பிரச்னைகளை சித்திரிப்பது.

ஆறு, மக்களுக்கு மத்தியில் பிரிவினைக் குரோதத்தை வளர்க்கும் வகுப்புவாதத் திரிபுகளைச் சாடி தேசிய ஒற்றுமை உணர்வை வளர்ப்பது.

ஏழு, தேசிய அபிவிருத்தி முயற்சிகளை இலக்கியத்தில் சித்தரித்து தேசிய நிர்மாணத்தில் மக்கள் சக்தியை உந்துவது.

எட்டு, சமுதாயத்தின் சகல துறைகளிலும் ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்த மக்களுக்கு உணர்வூட்டிச் செயலுசகுத் தூண்டுவது.

நமது இலக்கியம் நமது காலத்தின் தேவையை, நமது நாட்டின் தேசியத் தேவையை, நமது சரித்திரத்தின் வரலாற்றுத் தேவையைப் பிரதிபலிக்கும் மேலே கண்ட இலக்கியக் கோட்பாடுகளில் அடி ஒற்றி இலககியம் செய்யும் பொதுப் பணியைத் தனக்கு முன்னல் கொண்டிருக்கும் அதே வேளையில், நமது இலக்கியம் மனிதனின் ஏனைய உணர்வுகளேயும், ஏனைய தேவைகளேயும் பிரதிபலிக்கவும் வேண்டும். தேசிய, யதார்த்த, ஜனநாயக யதார்த்த, சோஷலிஸ யதார்த்த இலக்கியச் சித்தாந்தங்கள் நமது இலக்கிய வளர்ச்சிப் போக்கை வழி நடத்துகிற அதே வேளையில், இவையே இலக்கியத்தின் பிரதான கடமைகளாக அமைகிற அதே வேளையில் இலக்கியத்தினதும், வாழ்வினதும் ஏனைய அம்சங்களும், துறைகளும் நமது இலக்கியத்தில் இடம் பெறவேண்டும். அதாவது மனித வாழ்வின் எதிர்காலத்திற்குக் கோடி காட்டி நிற்கும் அதே வேளையில், மனித உணர்ச்சிகளின் பல்வேறு வெளிப்பாடுகளை பிரதிபலித்தும் இலக்கியம் வாளிப்பாக வளர வேண்டும்.

இலக்கியப் பரப்பிலே தினைமணிகளை அறுவடை செய்வதுடன் ரோஜா மலர்களேயும் முகர்வோம்.

நமது இலக்குயப் பூங்காவிலே ஆயிரம் பூக்கள், பலவர்ணமும், வண்ணமும், மணமுமுள்ள பூக்கள் பூத்து மலரட்டும்.

நமது இலக்கியப் பூங்காவை விரிவுபடுத்தி, விஸ்தாரமாக்கி, வளப்படுத்தி, வண்ணப்படுத்துவது நம்மனைவரினதும் பொதுப் பணியாக இருக்கட்டும்.

"யானை" மார்க் அஸ்பெஸ்டாஸ்

சிமிந்தி கூரைத் தகடுகள்

★ சிக்கனமானது

★ நீடித்துழைப்பது

★ நெருப்பினால் சேதப்படாதது

மூன்று மாதிரிகளில் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

பெரிய இடை வெளி நெளிவு
சிறிய இடைவெளி நெளிவு
அரை — நெளிவு

உற்பத்தி செய்கிறவர்கள்:

அஸ்பெஸ்டாஸ் சிமிந்தி இண்டஸ்ட்ரீஸ் லிமிட்.

175, ஆர்மர் வீதி, கொழும்பு-12.

குருண்டிக்

ரேடியோக்கள், ரேடியோ கிராம்கள், ரேப் றெக்கார்டுகள்

டோஷிபா

குளிர்ப்பெட்டிகள், மின் விசிறிகள், ஸ்திரிக்கைப்பெட்டிகள்
மற்றும் உபகரணங்கள்

ஸென்ட் அந்தனி ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டட்

156. ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-11

குருண்டிக் ஷோ ரூம்,
வை. எம். பி. ஏ. கட்டடம்,
கோட்டை..

இதோ ஈழத்து இலக்கியத்தைப் படியுங்கள்!

மேடும் பள்ளமும் – நீர்வை பொன்னையன் எழுதியது	2-00
தண்ணீரும் கண்ணீரும் - டொமினிக் ஜீவா எழுதியது	2-00
மத்தாப்பு - ஐவரின் படைப்பு	1-00
ஒரே இனம் - செ. கணேசலிங்கன்	2-00
கதைப் பூங்கா - { பன்னிருவர் சிருஷ்டி பல்கலை வெளியீடு }	1-50
குழந்தை ஒரு தெய்வம் - காவலூர் ராசதுரை எழுதியது	1-50
கயமை மயக்கம் - வரதர் ”	2-00
சிலம்பொலி - நாவற்குழியூர் நடராசன் எழுதியது	2-00
தங்கத்தாத்தா - செ. நடராசா	-50
இளங்கோவின் கனவு - இணுவையூர் செ. நடராசன் எழுதியது	2-25
தமிழன் எங்கே? - மு. கணபதிப்பிள்ளை எழுதியது	1-25
ஈழத்துச் சிதம்பரம் - சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் எழுதியது	2-50
திருமணக் காட்சி - நா. முத்தையா ”	1-50
கனவுக் கன்னி - தில்லைச்சிவன் ”	1-00
கவிதைச் செல்வம் - யா. த. இ. மன்றம்	-75
ஈழத்தில் நான் கண்ட சொற்செல்வர்கள்	1-25
சங்கமம் - செ. கணேசலிங்கன்	2-00
வானமரன் - நவயுக வெளியீடு	-20
கேட்டதும் நடந்ததும் - தேவன் -யாழ்ப்பாணம் எழுதியது	3-00
வான வெளியிலே - ”	1-00
தீ - பொன்னுத்துரை ”	2-50

மற்றும் இந்தியாவில் வெளிவரும் முற்போக்கு இலக்கிய நூல்கள் - சஞ்சிகைகள் யாவற்றுக்கும் எம்மிடம் வாருங்கள்.

நூல்நிலையம் - வியாபாரிகள் யாபேருக்கும் கமிஷன் உண்டு.

விபரங்களுக்கு

...பாலசிங்கர் புத்தகசாலை

பெரியகடை, யாழ்ப்பாணம்

- சீனச்சட்டி
- இரும்பு
- உருக்கு
- அலுமினியம்
- பித்தளை

ஆகிய உலோகங்களாலான

உடைந்த உறுப்புக்களை உத்தரவாதத்துடன் மின்சார சக்தியில் ஒட்டிக்கொடுப்பவர்கள்.

நாகரிக யன்னல், கேற்று ஆகியவைகள்

குறைந்த விலையில், உறுதியான விதத்தில் தயாரித்துக் கொடுக்கப்படும்.

★

ஸ்ரார் கராஜ்

டானியல்—சிறில் (சகோதரர்கள்)

ஸ்ரான்லி றோட்
(வெலிங்டன் சந்தியின் கிழக்கு வீதி)
யாழ்ப்பாணம்

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி!

ஜெகஜோதி பற்பொடியே பல்லுக்குறுதி!

ஜெகஜோதி பற்பொடியையே

பாவித்து உங்கள் பற்களைக் காப்பாற்றுங்கள்

இன்று பற்களைக் காப்பாற்றத் தவறின் நாளை வருந்துவீர்கள்

ஜெகஜோதி பற்பொடி கிடைக்குமிடம்:

ஜெகஜோதி அன் கோ.,

குருதேனியா.

கிளை: திருகோணமலை வீதி, கண்டி — தொலைபேசி: 7281

33, 303, 3003

[redacted]

ஊது பத்திகள்

தம்மை எரித்துச் சாம்பராக்கி உங்கள் வீடுகளுக்கு நறுமணம் ஊட்டும்
தியாகத் தன்மை வாய்ந்த இவ்

ஊதுபத்திகளையே வாங்குங்கள்

வீடுகளில் நறுமணம் பரப்புங்கள்

முழு வினியோக உரிமையாளர்:

ஜெகஜோதி அன் கோ.,

குருதேனியா

கிளை: திருகோணமலை வீதி, கண்டி — தொலைபேசி: 7281

சோவியத் சினிமா விழா!

சவோய் தியேட்டரில்

மே மாதம் 10-ம் திகதி தொடக்கம் 16-ம் திகதி வரை

பார்க்கத் தவறுதீர்கள்!

வியாழன் 10-ம், ஞாயிறு 13-ம் திகதிகளில் கிளியர் ஸ்கை
வெள்ளி 11-ம் சனி 12-ம் திகதிகளில் அண்டர் ஸீ மஜிஸன்
திங்கள் 14-ம் செவ்வாய் 15-ம் திகதிகளில் அன்சென்ற் லெட்டர்
புதன் 16-ம் திகதி ஸ்றகிள் போ லவ்

தினமும் மாலை 3-30, 6-30, 9-30 மணிக்கு

மூன்று காட்சிகள்

சனி 12-ம் திகதி, ஞாயிறு 13-ம் திகதிகளில் காலை 10-30 மணிக்கு விசேஷக் காட்சிகள்
"கோறியோ கிருபிக் மினியேச்சேஸ்"

52517

அன்பார்ந்த நேயர்களே!

குறைந்த விலையில், கூடிய விரைவில்
குணமாக்கிக் கொடுக்கப்படும்

தீராத நோய்கள், நாள்பட்ட புண்கள்,
முறிவு, தறிவு, நெறிவு, கண் வைத்தியம்,
பைத்திய வைத்தியம்,
சிறுபிள்ளைகள் வைத்தியம், பிரசவ வைத்தியம்
போன்ற எண்ணற்ற நோய்களுக்கு
சிகிச்சை அளிக்கப்படும்.

இன்றே வருக நன்றே பெறுக!

அம்பிகாபதி மருத்துவ மனை
பிரதான வீதி, பண்டத்தரிப்பு

சகல வித புத்தகங்களும் தினசரிகள்
மாத இதழ்கள், வார இதழ்கள்
இந்தியா, இலங்கையில் வெளிவரும்
சகல பத்திரிகைகளும்
சினிமா புத்தகங்களும்
அறிவு நூல்களும்

இங்கே விற்கப்படும்

செந்தமிழ்ச் செல்வி நூலகம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

4